

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்

ரஹ்மத் ராஜகுமாரன்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் (2019 JUNE -AUG)

என்கிற இந்த ஆய்வு மிக நீளமானது
மரணத்திற்குப் பின் ஆன்மாக்களின் நிலை " என்று ஆரம்பித்து
108 வது பதிவு வரை வந்துள்ளது.
மரணத்திற்குப் பின் ஆன்மாக்களின் நிலை "

கபறுக்குள்ளே

அலாமத்துல் கியாமா (இறுதி நாளின் அடையாளங்கள்),

கியாமா (இறுதி நாள்)

ஹஷ்று (எல்லா படைப்புகளையும் ஒன்றிணைத்தல்)

மௌகிபு (விசாரணை)

கிஸாஸு (குற்றத்தை உறுதிப்படுத்தல்)

ஹிஸாபு (நன்மை தீமை கணக்கு வழக்கு விசாரணை)

மீஸான் (நன்மை ,தீமை நிறுக்கும் தராசு)

அலாமத்துல் கியாமா (இறுதி நாளின் அடையாளங்கள்),

கியாமா (இறுதி நாள்)

ஹஷ்று (எல்லா படைப்புகளையும் ஒன்றிணைத்தல்)

மௌகிபு (விசாரணை)

கிஸாஸு (குற்றத்தை உறுதிப்படுத்தல்)

ஹிஸாபு (நன்மை தீமை கணக்கு வழக்கு விசாரணை)

மீஸான் (நன்மை ,தீமை நிறுக்கும் தராசு)

ஸ்ிராத்துல் முஸ்தகீம் என்கிற கடக்கிற பாலம்

ஹௌளு - தண்ணீர்த் தடாகம்

சுவர்க்கம்

ஜஹன்னம் – நரகம்

ஷபாஅத் - மன்றாட்டம்

உரூஸ் - திருக்கல்யாணம்

லியாபத்து - விருந்து

லிகா - தரிசனம் .....

இத்தனை பதிவுகள் இன்ஷா அல்லாஹ் இன்னும் இத்தொடரில் பதிக்கப்பட உள்ளது .

🖎 ரஹ்மத் ராஜகுமாரன்

+919486909903 /// **+919360181033**



பதிவைப் பற்றி சில தெளிவுரைகள்

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 120 பதிவுகளுக்கும் அதிகமானதை சுருக்கி 108 ஆக குறைத்திருக்கிறேன் .
காரணம் ...

(உ-ம்) சொர்க்க--நரக பதிவுகளில் என்னென்ன நன்மைகளை செய்தவர்களுக்கு எந்த வகையான சொர்க்கம் என்பதையும் என்னென்ன தீமைகளை செய்தவர்களுக்கு எந்த வகையான நரகம் என்பதையெல்லாம் நடுநிசியில் எழுதி அதிகாலைப் பொழுதில் அதுகளைப் பதியாமல் அழித்திருக்கிறேன் காரணம் ...

(உ-ம்) பனீ இஸ்ரவேலர்களில் விபச்சாரம் செய்யும் ஒரு பெண் தாகத்தால் சிரமப்பட்ட நாயிக்கு குறைவான நீர் உள்ள கிணற்றிலிருந்து நீரை இறைக்க தன் உடையை கழற்றி கிணற்றில் விட்டு கிணற்று நீரில் உடையை நனைத்து நாயின் வாயில் விட அவளுக்கு சொர்க்கம் .

வணக்கசாலியான ஒரு பெண் பூனையை கட்டிப் போட்டு அதற்கு உணவையோ குடிப்பையோ கொடுக்க மறந்ததால் , அவளுக்கு நரகம் .
இதை எப்படி எடுத்துக் கொள்வார்கள் ,

விபச்சாரம் மாதிரி பெரிய பாவத்தையெல்லாம் செய்தால் கூட ஏதோ சிறு நன்மை செய்தாலும் சொர்க்கம் உண்டு என்று இறை ஆதரவை பெரியதாக எடுத்துக் கொண்டு பாவத்திலே முழ்கி விட நம் பதிவுகள் காரணமாகி விடுமோ ?
வேண்டாம் இந்தப் பதிவு வேண்டாம் .சரி
இதை எப்படி சொல்ல ? தெரியவில்லை

வணக்கசாலிப் பெண்ணுக்கு ஒரு சின்ன பூனையால் நரகமா என்று இறை அச்சத்தால் , ' நாம செய்த பாவம் கொஞ்சம் நஞ்சமல்ல நமக்கு மன்னிப்பே கிடையாது ' என்று அல்லாஹ்வின் மீது நிராசையாகி விட்டால் ?

வேண்டாம் இந்த பதிவையும் அழித்து விடுவோம் என்று பதியாமல் தவிர்த்திருக்கிறேன்.

ஈமான் என்பது இறை அச்சத்திற்கும் , இறை ஆதரவுக்கும் மத்தியில் உள்ளது . எனவே நம் பதிவுகளிலும் இந்த நடுநிலையைப் பேணப்பட வேண்டும் என்பதை எனக்கு நானே வகுத்த நியதியாக்கிக் கொண்டேன் .

அடுத்து, நபிகளாரிடம் அளவுக்கு அதிகமாக நிறைய கேள்விகளை கேட்டுக் கொண்டு வந்து , இறுதியில் , "என் பெற்றோர்கள் சொர்க்கத்தில் இருக்கிறார்களா ? நரகத்தில் இருக்கிறார்களா ? என்று கேட்க, "நரகத்தில் " என்று பதில் கிடைக்கிறது .

எனவே சில ஹதீஸ்களைத் துருவித் துருவி ஆராயாமல் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அப்படியே சொல்லி இருக்கிறேன்
அதில் என் ஆய்வுப் புத்தியைக் காட்டி அதிகப்பிரங்கித்தனம் செய்ய விரும்பவில்லை . இப்படியெல்லாம் பதிவுகளைப் பார்த்து பார்த்து...

இதனால் 120 - 108 யாகி விட்டது !

மரணத்திற்குப் பின் ஆன்மாக்களின் நிலை
(இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாடுகள்1)



ஒரு முறை ஸல்மான் பார்ஸி (ரலி) அவர்களும் அப்துல்லாஹ் இப்னு ஸலாம் (ரலி) ஆகிய இருவரும் சந்தித்து பேசிக் கொண்டனர் . "எனக்குமுன் நீர் இவ்வுலகை விட்டு மறைந்தால் அங்கே என்ன நடந்தது என்பதை நீர் எனக்கு வந்து சொல்ல வேண்டும் "

" என்ன உயிரோடு இருப்பவரும் மறைந்து போனவரும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள முடியுமா?
" ஆன்மாக்கள் ஜும்ஆடைய இரவன்று விடுவிக்கப்படுகின்றன. இன்னும் அவைகள் பரவுகின்றன. முதலில் தனது கப்ருக்கு வருகின்றது .பின்பு தனது வீட்டுக்கு வருகின்றது .
- கிதாபு: கஸானதுர் ரிவாயாத்

ஹஜரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
" ஈத் பெருநாள், ஜும்மா, ஆஷூராவுடைய நாள் மற்றும் ஷபே பராஅத்துடைய நாட்கள் வந்தால் இறந்தவர்களின் ஆன்மாக்கள் தங்கள் வீட்டு வாசல்படியில் நின்று " எங்களை நினைப்பவர்கள் யாராவது
இருக்கிறார்களா ? எங்கள் மீது இரக்கப்படுவர்கள் யாராவது இருக்கிறார்களா ? எங்களின் இயலாமையை எண்ணிப் பார்ப்பவர்கள் யாராவது இருக்கிறார்களா ? எனக் குரல் கொடுக்கின்றன.
கிதாபு : கஸானதுர் ரிவாயாத்

மேற்கூறியவாறே ஆன்மாக்கள் ஈனக் குரலில் , " எனது வீட்டாரே ! எனது பிள்ளைகளே ! எங்கள் மீது தர்மத்தைக் கொண்டு முத்திரை வையுங்கள் எங்களை நினைவில் வையுங்கள் மறந்து விடாதீர்கள் .எங்களின் இயலாமை மீது இரக்கம் காட்டுங்கள் "
திடனாக முஸ்லிம்களின் ஆன்மாக்கள் பூமியிலுள்ள **" பர்ஸக் "** என்னுமிடத்தில் இருக்கின்றன .அவைகள் எங்கே செல்ல விரும்புகின்றனவோ அங்கே செல்கின்றன. இவ்வாறே ஈமான் கொள்ளாத ஆன்மாக்கள் '**ஸிஜ்ஜீன்** ' என்னுமிடத்தில் முடக்கப்பட்டுள்ளன.

- அல்லாமா இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் எழுதிய கிதாபுஸ் ஸுஹ்த்

اَوَمَنْ كَانَ مَيْتًا فَاَحْيَيْنٰهُ وَجَعَلْنَا لَهٗ نُوْرًا يَّمْشِىْ بِهٖ فِى النَّاسِ كَمَنْ مَّثَلُهٗ فِى الظُّلُمٰتِ لَـيْسَ بِخَارِجٍ مِّنْهَا‌ كَذٰلِكَ زُيِّنَ لِلْـكٰفِرِيْنَ مَا كَانُوْا يَعْمَلُوْنَ
(வீழ்ச்சி அடைந்து) மரணித்தவர்களாக இருந்தவர்களில் எவரை நாம் உயிர்ப்பித்து மனிதர்களுக்கிடையில் நடமாடுவதற்குரிய ஒளியையும் கொடுத்திருக்கின்றோமோ அவர், இருளில் சிக்கி அதிலிருந்து வெளியேற முடியாமலிருப்பவனுக்குச் சமமாவானா? இவ்வாறே நிராகரிப்பவர்களுக்கு அவர்களுடைய (தீய) செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன.
(அல்குர்ஆன்: 6:122)
ர.ரா

Rahmath Rajakumaran
அண்டவெளியில் மரணித்த ஆத்மாக்களால் சலனத்தை ஏற்படுத்த முடியும் என்பது மட்டும் அல்லாமல் உயிருடன் இருக்கும் நம்முடைய ஆன்மாக்களும் அண்ட வெளியில் சலனத்தை ஏற்படுத்துகிறது .
உமர் (ரலி) அவர்கள், அலீ (ரலி) அவர்களிடம் " ஹஸனின் தந்தையே ! ஒருவர் கனவு கண்டால் சில உண்மையாகவும் , சில பொய்யாகவும் ஆகிவிடுகின்றனவே , இது பற்றி தங்கள் கருத்து என்ன ?
" ஆம் , இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூற நான் செவியுற்றிருக்கின்றேன் . அதாவது தூங்கக் கூடிய ஆண் , பெண்களின் ஆன்மாக்கள் அல்லாஹ்வின் அர்ஷு வரை சென்று பின்பு விழிப்படைகிறதோ அந்த ஆன்மா கண்ட கனவு விஷயங்களனைத்தும் நிச்சயம் நடந்தேறும் . இன்னும் எவர் ஆன்மா அர்ஷு வரை செல்லாத நிலையில் விழிப்படைகிறதோ அந்த கனவு பொய்க் கனவாக ஆகிவிடுகிறது
ஆதாரம் - முஸ்தத்ரக் ஹாகிம் .
ர.ரா

ரூஹா..? உயிரா..? ஆன்மாவா..?
நஃப்ஸா..?
(இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாடுகள் 2)



وَيَسْـَٔـلُوْنَكَ عَنِ الرُّوْحِ قُلِ الرُّوْحُ مِنْ اَمْرِ رَبِّىْ وَمَاۤ اُوْتِيْتُمْ مِّنَ الْعِلْمِ اِلَّا قَلِيْلًا
(நபியே!) ரூஹைப் பற்றி (யூதர்களாகிய) அவர்கள் உங்களிடம் கேட்கிறார்கள். அதற்கு நீங்கள் "அது எனது இறைவனின் கட்டளையால் ஏற்பட்டது. (அதைப் பற்றி) வெகு சொற்ப ஞானமேயன்றி உங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. (ஆதலால், அதன் நுட்பங்களை நீங்கள் அறிந்துகொள்ள முடியாது)" என்று கூறுங்கள்.
(அல்குர்ஆன்:17:85)
.
இப்படி ஒரு கேள்வியை யூதர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள் .இதற்குரிய பதிலை இறைவன் மேற்கண்ட வசனத்தை வஹியாக அருளப்பட்டது .
நீங்கள் இப்போது சொல்லுங்கள் .

உயிர் அல்லது ஆன்மா அல்லது **ரூஹ் நஃப்ஸ்** இதில் எது உடலை விட்டுப் பிரிந்து போகிறது ? யோசிக்கிறீங்களா ?
மேற்கண்டவற்றில் ஏதோ ஒன்று உடலை விட்டுப் பிரிந்து விட்டால் மனிதன் மரணித்துவிடுகிறான். அது மனிதனுடன் சேர்ந்திருக்கும் வரை உயிருடன் இருக்கிறான் என்பதைத் தவிர , ஆன்மா என்பது இன்னதுதான் - அதன் அந்தரங்கம் இப்படி இப்படிதான் என்று தக்க சரியான ஆதாரத்துடன் இதுவரை ஒருவரும் நிரூபிக்கவில்லை என்பதாக **"அல்கவாஷீ "** என்ற கிதாபில் கூறப்பட்டுள்ளது.

ஆன்மீகவாதிகள் உயிரைப் பற்றி ...
"ஆன்மா என்பது ரூஹுல் சுல்தானி என்றும் **ரூஹுல் ஹைவானி** என்னும் இரு வகைப்படும். ரூஹுல் சுல்தானி என்பது ஆலமுல் அம்ர் என்னும் கட்டளை உலகைச் சேர்ந்தது . இது உடலை விட்டுப் பிரியக் கூடியது. ஆதலால் இதற்கு
அல் முஃபாரிக் (பிரியக் கூடியது) என்று பெயர். இது பூத உடலுடன் அதிகாரம் செலுத்துதல் , உடலை நடத்தி வைத்தல் என்ற முறையில்தான் சம்பந்தப்படுகிறது. இது உடல் அழிந்தாலும் அழிய மாட்டாது. உடலிலுள்ள அவயவங்களில் அதற்குரிய அதிகாரம் மட்டும்தான் அழிகிறது. இது இருக்க வேண்டிய இடம் கல்பு என்னும் இருதயமாகும். கல்பு என்னும் இதயம் ஆலமுல் மலக்கூத்தைச் சேர்ந்தது. (ஆலம் என்றால் உலகம்)

ரூஹுல் ஹைவானி என்பது ஆலமுல் கல்க் என்னும் சிருஷ்டி உலகைச் சேர்ந்தது. இதற்கு கல்பு என்றும் நஃப்ஸு என்றும் , அக்லு என்றும் பெயர் கூறப்படுகிறது. இது உடலிலுள்ள அங்கங்களில் கலந்திருக்கிறது. என்றாலும், இதனது அதிகாரம் உதிரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறது. இது இருக்க வேண்டிய இடம் மூளை . இது ரூஹுல் சுல்தானி உடலுடன் சம்பந்தப்பட்ட பிறகுதான் உண்டாகிறது. இது ரூஹுல் சுல்தானியின் பிரதிபிம்பம் எனலாம்.அதுதான் செய்கைகளுக்கும் , அசைவுகளுக்கும் ஆரம்ப இடம். ஏனெனில் ஜீவியம் என்பது மறைவான காரியம். உயிருடன் இருப்போரில் அது மறைக்கப்பட்டிருக்கிறது .உணர்வு , அசைதல் , அறிவு , நாட்டம் முதலிய அறிகுறிகளை அல்லாமல் அது அறியப்படுவதில்லை . இந்த ஆன்மா இல்லாதிருப்பின் மனிதனின் பற்பல விதமான தன்மைகள் வெளியாக மாட்டா.
தாத்துடன் ஸிஃபத்துகள் ஒன்று சேர்வதால் உண்டாவது போல ரூஹுல் சுல்தானி , ரூஹுல் ஹைவானியுடன் சேருவதால் மனித செய்கைகள் உண்டாகின்றன .

இறைவனது பரிபூரணமாக தெய்வீகத் தன்மைகள் , இந்தச் செய்கைகளும் ஆதாரங்களும் உண்டாவதற்கு முன்னர், அஹதிய்யத்தாகிய தாத்தின் மறைவினுள் இருந்தது போல , ரூஹுல் சுல்தானி இந்த பூத உடலுடன் சம்பந்தப்படுவதற்கு முன்னர் அதன் அகத்தினுள் ரூஹுல் ஹைவானி இருந்து கொண்டிருந்தது .இந்த விஷயத்தை நீங்கள் நன்கு விளங்கிக் கொண்டால், "அன்பியாக்கள் , அவுலியாக்கள் மரணிப்பதில்லை. என்றாலும் , ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டுக்கு மாறுகிறார்கள் " என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய கருத்தை விளங்கிக் கொள்வீர்கள் .

.....இப்படி ஒரு உரத்த சிந்தனையைக் கொடுக்கிறார்கள் ஆன்மீகவாதிகள் .
அடுத்து , தத்துவஞானிகள் உயிரைப் பற்றிய கருத்துக்கள் வித்தியாசமாக இருக்கிறது.
ரூஹ் என்பது "உயிர்" (Life) ஆகும் ."நஃப்ஸ்" என்பது "உயிருள்ளது" அல்லது " உயிரி " **(Life Fore)** ஆகும் .

உயிர் மட்டும் தனியாக இருந்தால் அதை "ரூஹ்" என்போம் . உடலுடன் உயிர் காக்கும் போது அதை " நஃப்ஸ் " என்போம் .
நல்ல உயிர் , கெட்ட உயிர் என்பதெல்லாம் உடலுடன் இருக்கும் போது அது நடந்து கொள்ளக் கூடிய நடைமுறையைப் பொருத்ததாகும் .
அவ்வாறு உயிரியில் ஏற்படும் இன்பம் - துன்பம் , சுகம் - துக்கம் ,வலி - வலியின்மை ஆகியவையெயல்லாம் உடலுக்குள் ஊடுருவி இருக்கும் உயிரின் அனுபவங்களாகும் . உயிரற்ற உடலுக்கு இவை எதுவும் தெரியாது. இருப்பினும் உயிருக்கே "நஃப்ஸ்" என்றும் , உயிரினத்திற்கே "ரூஹ்" என்றும் சொல்லப்படுவதுண்டு.இது உரு வழக்கு ஆகும் .

اَللّٰهُ يَتَوَفَّى الْاَنْفُسَ حِيْنَ مَوْتِهَا وَالَّتِىْ لَمْ تَمُتْ فِىْ مَنَامِهَا فَيُمْسِكُ الَّتِىْ قَضٰى عَلَيْهَا الْمَوْتَ وَ يُرْسِلُ الْاُخْرٰٓى اِلٰٓى اَجَلٍ مُّسَمًّى اِنَّ فِىْ ذٰ لِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ
"மனிதர்கள் இறக்கும்பொழுதும், இறக்காமல் நித்திரையில் இருக்கும்பொழுதும் அல்லாஹ்வே அவர்களுடைய உயிரைக் கைப்பற்றுகிறான். பின்னர், எவர்கள் மீது மரணம் விதிக்கப்பட்டதோ அவர்களுடைய உயிரை(த் தன்னிடமே) நிறுத்திக் கொள்கிறான். மற்றவர்க(ளின் உயிர்க)ளை, குறிப்பிடப்பட்ட காலம் வரையில் வாழ அவன் அவர்களிடமே அனுப்பி விடுகின்றான். சிந்திக்கக் கூடிய மக்களுக்கு, நிச்சயமாக இதில் பல படிப்பினைகள் இருக்கின்றன" .
(அல்குர்ஆன்: 39:42)

இந்த வசனத்தை மேற்கோள் காட்டினர்கள் தத்துவஞானிகள் .
விஞ்ஞானிகள் உயிரைப் பற்றி செய்த ஆய்வு நம்மை வியப்படையச் செய்கிறது .

நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது நம்முடைய ஆன்மாவானது ஊர் சுற்றிப்பார்ப்பதற்கான நம்முடைய உடலைவிட்டு வெளியே புறப்பட்டுச் செல்லுமாம். நாம் இப்போது இருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டு என்பது விஞ்ஞானங்களால் நிறைந்த உலகம். அதனால், அஞ்ஞானம் மறைந்து போயிற்று என்று அர்த்தமில்லை. நீங்கள் இந்த உலகத்தை உற்றுப் பார்த்தால் உங்களுக்கே நன்றாகப் புரியும்.ஆழ்ந்த உறக்கத்தில் நம்முடைய ஆன்மா ஊர் சுற்றிப்பார்க்க புறப்பட்டுச் செல்லுமாம்...!

ஒருகாலத்தில் கடவுள் மறுப்பாளர்கள் ஒரு பக்கம் தங்கள் கருத்துக்களை ஊர்கூட்டி, சொல்லிக் கொண்டிருந்தார்கள். இப்போது எந்த அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கிறதோ அதே அளவுக்கு கடவுள் நம்பிக்கையும் ஒருபக்கம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கிறது.
கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதையும் தாண்டி, நம்மைச் சுற்றிலும் நம்மை மீறிய ஏதோ ஒரு சக்தி இருப்பதாக நாம் உணர்கிறோம். அதை எல்லோருமே பாரபட்சமின்றி

ஏற்றுக்கொள்கிறோம். அப்படி ஒரு ஏதோவொரு அதீத திறன்கொண்ட சக்தியாகத் தான் நாம் கனவைப் பார்க்கிறோம்.

அதனால்தான் நாம் கனவில் நடப்பதைப் பற்றிய யோசனையில் மூழ்குகிறோம்.ஆராய்ச்சி நாம் ஆழ்மனதில் என்ன நினைக்கிறோமோ அதுவே கனவாக வருகிறது என்று சொல்லப்படுகிறது.அதையே நாமும் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதுபற்றி சிக்மண்ட் பிராய்டு தொடங்கி, ஏராளமானோர் ஆராய்ச்சியும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதைத்தாண்டி இன்னொரு விஷயமும் அதில் இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆன்மா என்று சொல்லப்படுவதைத் தான் நாம் உயிர்,ஆவி, என்றெல்லாம் வேறுவேறு பெயர்களில் சொல்லுகிறோம். அந்த ஆன்மாவானது நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்பொழுது நம்முடைய உடலைவிட்டு ஆன்மா வெளி உலகத்தைச் சுற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

இது மாயையா? உண்மையா?
ஒருவருடைய இறந்து போன தந்தை அவருடைய கனவில் வந்தார். அவருடன் பேசினார். அவருக்கு இருக்கும் பிரச்னைக்கு சில வழிகாட்டுதல்கள் தந்தார். அதன்படி நடந்து கொண்டதால் அவருக்கு அந்த பிரச்னைகளெல்லாம் தீர்ந்தது என்று யாராவது சொல்லக் கேட்டிருப்போம். அதெப்படி இவருடைய தந்தை இவருடைய கனவில் வரமுடியும். இருவரும் கலந்துரையாட முடியும். ஏனென்றால் இருவருடைய ஆன்மாவும் சந்தித்துக் கொண்டன. ஒன்றின் பிரச்னைக்கு மற்றொரு ஆன்மா வழிகாட்டியது என்றுதான் அர்த்தம். இப்போது தூங்கும்போது ஆன்மா வெளியே போகும் என்ற நம்பிக்கை கொஞ்சமாவது வந்துவிட்டதா?
இப்படி நாம் காணும் கனவுகளில் சில அப்படியே நடக்கும். இதற்கு முன்பாக நாம் செல்லாத சில இடங்களுக்குப் புதிதாகப் போகும்போது நாம் கனவில் பார்த்த அதே இடத்தை அச்சு அசலாக எந்த மாற்றமும் இல்லாமல் பார்க்க நேரிடும். இப்போது நம்புகிறீர்களா நம்முடைய ஆன்மா அந்த இடங்களில் எப்போதோ உலவியிருக்கிறது என்று. அது நாம் விழித்திருக்கும்போது சாத்தியமில்லை. அதனால் நிச்சயம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது தான் அது நடந்திருக்கும்.

நாம் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்போது நம்முடைய ஆன்மாவானது ஊர் சுற்றிப்பார்ப்பதற்கான நம்முடைய உடலைவிட்டு வெளியே புறப்பட்டுச் செல்லுமாம். அதனால் தான் ஒருவர் தூங்கும்போது அவசரமாக அவரை எழுப்பக்கூடாது என்று சொல்கிறார்களாம்
அப்படி நல்ல ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பவர்களை தட்டி எழுப்பும்போது உடலைவிட்டு, வெளியுலகத்தில் சுற்றும் ஆன்மாவானது பல லட்சம் கிலோமீட்டர் வேகத்தில் மீண்டும் உடலுக்குள் புகுந்து கொள்ளும் என்று ஆத்ம சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.
தூக்கத்தில் இருப்பவர்களை தட்டி எழுப்பக்கூடாது என்று மருத்துவர்களும் குறிப்பிடுவார்கள். அவ்வாறு அடிக்கடி தூக்கத்தில் இருப்பவர்களை அப்படி அடிக்கடி வேகமாகவோ திடீரெனவோ தட்டி எழுப்பினால், அவர்களுக்கு மனநிலை பாதிக்கப்படக்கூடும் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

என்ன இப்போதாவது நம்புகிறீர்களா....? ஆன்மாவுக்கும் நம்மை மாதிரியே ஊர் சுத்துகின்ற பழக்கம் இருக்கின்றது என்பதை.....!
ஆக ரூஹ் , நஃப்ஸ், உயிர் இதுவெல்லாம் சொற்களுக்கான பொருள் விளக்கங்களே தவிர இதுவே இலக்கணங்கள் அல்ல . ஏனெனில் , உயிர் என்பதன் இலக்கணம் வரையறுக்கப்படவில்லை .அல்லது கண்டறியப்படவில்லை . உயிர் காற்றைப் போன்றது என்கிறோமே தவிர , காற்றை அல்ல .. இல்லையேல் , சடலத்தில் காற்றை (ஆக்ஸிஜனை) நிரப்பினால் உயிர் பிழைக்க வேண்டும் .ஆக அதைப் போன்றது உயிர் இதைப் போன்றது உயிர் என்று உவமை கூற முடிகிறதே தவிர , உயிர் என்றால் என்ன எனும் இலக்கணத்தைக் கூற இயலவில்லை .

மனித வாழ்வும் மரணமும் எதற்கு இறைவா ?

ٱلَّذِىْ خَلَقَ الْمَوْتَ وَالْحَيٰوةَ لِيَبْلُوَكُمْ اَيُّكُمْ اَحْسَنُ عَمَلًا وَهُوَ الْعَزِيْزُ الْغَفُوْرُۙ
உங்களில் மிகத்தூய்மையான உயர்ந்த செயல்களைச் செய்பவர்கள் யார் என்று சோதிப்பதற்காகவே, அவன் மரணத்தையும், வாழ்க்கை யையும் படைத்திருக்கின்றான். அவன் (அனைவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்புடையவன். (அல்குர்ஆன் : 67:2)
(இது மீள் பதிவு)

பேய் , பிசாசுகள்
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 3)



"ஆன்மீக சிகிச்சை "என்று சொல்லக் கூடிய தல்சுமாத் என்னும் அஸ்மா வேலையில் ரூஹானியத்தைப் பற்றி நிறைய சொல்லப்படுகிறது இந்த ரூஹானியத் கெட்டவர்களின் ஆத்மாக்களினால் உண்டாகிறது

உடல் அழிந்தாலும் , ஆத்மா அழியாதல்லவா ? அந்த ஆத்மா பூமியில் வாழ்ந்த காலத்தில் தான் செய்த கெட்ட வினையின் காரணமாக அதற்கேற்ற கெட்ட உருவத்தை எடுத்துக் கொண்டு கெட்ட ஆத்மாவாகவே வாழும். இந்த கெட்ட ஆத்மாக்கள் மனிதர்களின் வாழ்வில் குறுக்கிட்டு தன் கெட்ட வினையை செய்து அவர்களை நிம்மதி இழக்கச் செய்யும் .

கடவுளாகிய இயேசு கிறிஸ்த்துவை பிசாசு 40 நாள் சோதித்ததாக பைபிள் கூறுகிறது. (மத்தேயு-4:1) இயேசு கிறிஸ்து பேயோட்டிய சம்பவத்தையும் பைபிளில் காணலாம். (மத்தேயு-12:24)
இதுகளைப் பற்றி பரஞ்ஜோதி மஹான் என்னும் பெரியார் " பூதலோகம் " என்ற கிதாபு எழுதி உள்ளார் .
"பூதலோகம் " என்றதோர் உலகம் உண்டு நம் பூமிக்குச் சிறிது அப்பால் உள்ளது. இந்த லோகத்தில் இறந்தவர்களின் என்றுமே அழிவே இல்லாத ஆத்மாக்கள் சுமார் ஒன்னரை பனை உயரத்திற்கு அதாவது 80 அடியில் இருந்து 90 அடி உயரத்திற்குள் உலாவுவார்கள் .
இது மனித சரீரங்கள் ஆகி வெகுகாலத்திற்குப் பின், அறிவின் அபிவிருத்திக்கிடையிலும், ஆசையின் பற்றுதலுக்குப் பின்னும் ஏற்பட்டது. மனித சரீரம் எடுத்து இறந்த பின்னர், கொடிய குணத்தின் சூக்கும சரீரம் இந்த பூதலோகத்தில் தங்குகிறது.

இவைகளுக்கு பேய், பிசாசு , முனி , சாத்தான் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது .இவைகளில் படிப்படியாய் தாழ்வு, உயர்வு உண்டு.
இவைகளின் கூட்டத்திற்கு தலைவர்கள் உண்டு. தலைவர்கள் சொற்படி கூட்டத்தினர் காரியங்களை முடிப்பர் .
மனித சரீரத்தில் இருக்கும்போது கொடிய நயவஞ்சக துரோகிகளாயிருத்தவர்களும் , அநேக பொருள்களை அநியாயமாக சம்பாதித்து அவைகளை அனுபவிக்காமல் புதைத்து மறைத்து வைத்திருந்தவர்களும் ,
தம் மனமார சரீரத்தில் , மனம் கேட்டப் படி இச்சையிருந்தும் , அதை அனுபவியாமல் இறந்தவர்களும் ,
தற்கொலை செய்து கொண்டவர்களும். அநேக பேருக்கு மன ஹிம்சை செய்தவர்களும் , வன்னெஞ்சத்தவர்களும், ஒரு வஸ்துவின் பேரில் அழுத்தமான மாறாத இச்சை வைத்திருக்கும் சிறு மனதுடையவர்களும் ,
பெரும் படிப்பாளிகளாகி அதில் நயவஞ்சகத்தவர்களும் , மக்களை ஏமாற்றி தின்பவர்களும் , உறுதியிலே நிலைத்து, அவ்வுறுதிக்கு மேல் உறுதியடையாமல் மாறிக் கொள்ளும் சலனப்புத்தியுடையவர்களும் .
ராஜ விசுவாசத்தில் பேதழித்த போர் வீரர்களும் , அசந்தர்ப்பமாய் வெட்டுப்பட்டு அபாயமாய் இறந்தவர்களும் , பேத குண சச்சரவு உள்ள பெண்களுமாகிய இவர்களே பேயாகவும் , பிசாசுகளாகின்றனர் .
பிசாசு என்பது சரீரம் உள்ளபோது செய்த சேட்டைகளை தன் அரூபா ரூப வாயிலாக சிறிது காலம் செய்து முடிப்பதேயாகும் .

இவைகளின் சரீரம் ஊதா , மயில் துத்தம் போன்ற நிறமுடையது. இதிலும் கொஞ்சம் நல்லவர்கள் சிறிது வெள்ளை நிறமாக இருப்பார்கள் .

இவர்களுடைய உடம்பில் கால் தெரிய வராது. பூமிக்குச் சுமார் 1 அடி முதல் 4 அடி உயரத்திற்கு மேல் உலாவுவார்கள் .
இவர்கள் உடையோடு இருப்பதாக தெரிந்தாலும் இவர்களுக்கு உடை கிடையாது . இவர்கள் தோன்றினால் மூன்று நிமிஷங்களிலிருந்து கால் மணிக்கு மேல் நிலைக்க மாட்டர்கள் .
நல்லடியார்கள் , கண்கள் இமையாமல் விழித்த பார்வையுடையவர்கள் , பக்தர்கள் , திட துணிவுள்ளவர்கள் , சக்கரங்கள் உள்ள ஓடும் வாகனங்களில் செல்பவர்கள் ... இப்படிப்பட்டவர்கள் முன்பு இவர்கள் பயந்து தோற்றமளிக்க மாட்டார்கள் . ஆனால் மற்றவர்களை பயப்படுத்துவார்கள்.

பூ , சாம்பிராணி , புகை , மாமிசத்தின் சுவைகள் , மற்றும் பதார்த்தங்களின் சுவைகள் , பெண்கள் மீது மோகம், முதலியவைகளில் இவைகளுக்குப் பிரியம் அதிகம்.
இவர்கள் எல்லா இடங்களிலும் உலாவுவார்கள் .இவர்களுடைய நேரம் ,நடு இரவிலிருந்து விடிவெள்ளி தெரியும் வரையிலும் , சூரியன் அஸ்தமனமாகி ஒன்னரை நாழிகை வரையிலும் , நடுப்பகலிலிருந்து இரண்டரை மணி வரைக்கும் இவர்கள் தோன்றி பயமுறுத்துவார்கள் .
இந்த ரூஹானியத்களையும் வைத்து சிலர் காரியங்களை செய்து முடிப்பர். இவைகளிடம் கொஞ்சம் ஏமாந்தால் அவர்களையும் கொன்று தங்கள் கூட்டத்தில் சேர்த்துக் கொள்வார்கள் .
பிசாசு பயத்தில் அகப்பட்டவர்களின் கதி பலவாறு இருக்கின்றது. அதைச் சொன்னால் விரியும்.
(பேய் , பிசாசுகளின் குணங்களான மீதியை பின்னூட்டத்தில் சொல்றேன்)

பெரும் ஆசாபாசக்தில் இறந்தவர்களாக இருந்தால் , சரீரத்தை விட்டு ஒரு கெஜத்திற்கு மேல் ஊதா பளிங்கு நிறமாக இதுகளைப் பார்க்கலாம்.
பார்க்க விரும்புவோர் சிறிது தொலைவில் இருந்து இமையாதபடி கூர்ந்து கவனித்தால் தெரியவரும் .
அவைகளின் சரீரத்தைக் கொண்டு போகும் பெட்டி ,தேர் இவைகள் கூடவே சமீபத்தில் வருவதைக் காணலாம்.
புதைக்கும் போதும் அல்லது சுடும் போதும் விலகி நிற்கும்.

பின் மரணித்த இடத்தில் 40 நாட்கள் வரை இருக்கும் . ஆகையால் அவ்விடத்தில் விளக்கு இருப்பது நல்லது .

நல்ல ஆத்மாக்கள் அவ்விடத்தில் 3 நாளைக்கு மேல் இருக்காது.
மிக நல்ல ஆத்மாக்கள் அக்ஷணமே விலகி சூக்கும யோகம் போய் விடும்.

ஆதார நூல் : பரஞ்ஜோதி மஹான் எழுதிய " பூதலோகம் "
திடனாக முஸ்லிம்களின் ஆன்மாக்கள் பூமியிலுள்ள " பர்ஸக் " என்னுமிடத்தில் இருக்கின்றன .அவைகள் எங்கே செல்ல விரும்புகின்றனவோ அங்கே செல்கின்றன. இவ்வாறே ஈமான் கொள்ளாத ஆன்மாக்கள் 'ஸிஜ்ஜீன் ' என்னுமிடத்தில் முடக்கப்பட்டுள்ளன.
- அல்லாமா இப்னு முபாரக் (ரஹ்) அவர்கள் எழுதிய கிதாபுஸ் ஸுஹ்த்

பெரியோர்களின் கை, கால்களை முத்தமிடல்
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 4)



புனித வியாழன்று இந்து மற்றும் இஸ்லாமியர்களின் பாதங்களை கழுவி போப் பிரான்சிஸ் முத்தமிட்டார்.
ஏசுபிரான் உயிர் துறக்கும் முன்பு, தனது 12 சீடர்களுக்கு சேவை புரியும் விதமாக அவர்களது பாதங்களை கழுவி முத்தமிடும் நிகழ்வு புனித வியாழனாக கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளில் 12 கிறிஸ்தவர்களின் பாதங்களை கழுவி போப் பிரான்சிஸ் முத்தமிடுவது வழக்கம்.
ஆனால் இந்த முறை அகதிகள் முகாமிற்குச் சென்ற போப், அங்கிருந்த இஸ்லாமியர், இந்து உள்ளிட்ட மதங்களைச் சேர்ந்த 12 பேரின் பாதங்களை கழுவி முத்தமிட்டார். அப்போது பேசிய அவர், மக்கள் பல்வேறு மதங்கள், கலாச்சாரங்களை பின்பற்றினாலும் அனைவரும் சகோதரர்கள்தான் என்று கூறினார். பிரஸ்சல்ஸ் வெடிகுண்டு தாக்குதலுக்கும் போப் பிரான்சிஸ் கண்டனம் தெரிவித்தார்.

பெரியோர்களின் கை , கால்களை முத்தமிடுவது குறித்து இஸ்லாம் சொல்வது என்ன ?
"திடனாக ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து ' அல்லாஹ் தங்களுக்கு மக்காவை வெற்றியாக்கி தந்தால் நான் பைத்துல்லாஹ்வுக்கு சென்று அதன் வாசல்படியை முத்தமிடுவதாக நேர்ச்சை செய்துள்ளேன் ' என்று கூற ,
அது கேட்ட நபியவர்கள் , " நீர் உமது தாயுடைய இரண்டு பாதத்தையும் முத்தமிட்டுக் கொள்ளும் .உமது நேர்ச்சை நிறைவேறும் " என்று கூறினார்கள்
(நூல்: உம்தத்துல் காரி பாகம் - 2, பக் - 82)

அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தன்னைவிட வயதில் முதிர்ந்தவர் என்ற ஒரு நோக்கத்துக்காக அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கையையும் இரு காலையும் முத்தமிட்டார்கள்.
(நூல்: இமாம் புஹாரியின் அதபுல் முப்ரத் பக்கம் 976)

இரு யஹூதிகள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சில கேள்விகள் கேட்டு பதில் கிடைத்தவுடன் திடுக்கிட்டு நாயகத்தை நபியாக ஏற்று நபிகளாரின் கையையும் கால்களையும் முத்தமிட்டனர்.
(நூல்: திர்மிதீ, பாடம்: சூரத் இஸ்ரா விளக்கவுரை)
முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் மகளாகிய அன்னை பாதிமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டுக்கு சென்றால் அவர்கள் தன் தந்தை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கையை முத்தமிடுபவளாக இருந்தார்கள
கஃப் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு என்ற ஸஹாபி அல்லாஹ் மன்னித்து விட்டதாக நாயகம் ஸல்லலாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்த போது அந்த ஸஹாபியவர்கள் உடனே வந்து நாயகம் ஸல்லலாஹூ அலைஹி வஸல்லம் அவர்களின் கையை முத்தமிட்டார்கள்.
(நூல்: துர்ருல் மன்தூர் பாகம் 4, பக்கம் 314)
அப்துல் கைஸ் தூது குழுவினர் கூறினார்கள் : நாம் மதீனாவுக்கு வந்த போது நபிகள் நாயகம் ஸல்லலாஹூ அலைஹி வஸல்லம் அன்னவர்களின் கை மற்றும் கால் பாதத்தை எங்களில் யார் முதலில் முத்தமிடுவது என்பதற்காக ஓடுவோம்.
(நூல்கள்: அபூதாவூத் 5206, ஸூனன் பைஹகீ, முஸ்னத் பஸ்ஸார்)

சில யூதர்கள் நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் கைகள், கால் பாதத்தை முத்தமிட்டார்கள்.
(நூல்: இப்னு மாஜா 3705)
அப்துல்லாஹ் பின் ஸஃதில் அப்தீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:
"நாங்கள் நாயகம் (ஸல்) அவர்களின் திருச்சபைக்கு வந்தோம். அப்போது நான் நபியவர்களை நெருங்கி அவர்களின் திருக்கரத்தை முத்தமிட்டேன் "
(நூல்: தாரீகுல் கபீர் , பாகம் 8 , பக் 31)
இமாம் புகாரி (ரஹ்) அவர்களைக் குறித்து கூறும் போது , " இமாம் முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ் (ரஹ்) - (ஸஹீஹ் முஸ்லிமின் ஆசிரியர்) அவர்கள் இமாம் புகாரி (ரஹ்) அவர்களை வந்து சந்தித்த போது அவர்களை நோக்கி, " என்னை விட்டு விடுங்கள் .அதாவது தங்களின் முபாரக்கான பாதத்தை முத்தமிடுவதற்கு அனுமதியுங்கள் " என்று கேட்டனர்
- (அப்துல்ஹக் முஹத்தில் தெஹ்லவி (ரஹ்) அவர்கள் எழுதிய அஷ்அத்துல்லம் ஆத் பக் 9)

மறைவான ஞானம் _(இல்முல் கைப்)
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 5)



" கைப் "என்பது மறைவு எனப்படும். எந்தப் பொருளை மனிதன் தனது ஐம்புலன்களான மெய் , வாய், கண் , மூக்கு , செவி.. போன்ற இந்த ஐம்புலன்களால் அறிந்து கொள்ள முடியாதோ அல்லது எந்தவொரு ஆதாரமும் இன்றி தெரிந்து கொள்ள முடியாதோ அதற்கு 'கைப்' என்று சொல்லப்படும் .

மறைவு இரு வகைப்படும் .
1) எந்தப் பொருளைக் குறித்து ஆதாரத்தைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டு மறைவானதை அறியப்படுமோ அது
(உ-ம்) சொர்க்கம் நரகம் , இறைவனுடைய தாத் மற்றும் ஸிபாத்துக்கள் மற்றும் அகிலத்திலுள்ள இதரவகைப் பொருட்கள் போன்றவைகளாகும். இவைகளை குர்ஆனுடைய வசனங்களை பார்வையிடுவதைக் கொண்டு தெரிந்து கொள்கிறோம்.

2) எந்தவொரு ஆதாரத்தைக் கொண்டும் மறைவானதை அறியப்பட முடியாதோ அது
(உ-ம்) உலகம் எப்போது அழியும்? மனிதன் எப்போது இறப்பான் ? ஒரு பெண்ணின் வயிற்றிலிருப்பது ஆணா அல்லது பெண்ணா ? பிறக்கும் குழந்தை ஸாலிஹானதா ? சத்ருவா ? தற்குரியா ? என்பை போன்ற ஆதாரங்களைக் கொண்டும் அறிந்து கொள்ள முடியாது இப்படிப்பட்ட மறைவுகளை குர்ஆன் "மஃபாதீஹுல் கைப் " என்று கூறுகிறது .

நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களின் மறைவான ஞானம்

"மண்ணறையின் வேதனைக் குரலை நான் என் செவிகளால் கேட்பதே போன்று நீங்களும் கேட்பீர்களாயின், இனிமேல் எந்த ஜனாசாவையும் நல்லடக்கம் செய்யாதிருந்து விடுவீர்களோ என நான் அஞ்சுகிறேன். அத்தகைய அச்சம் எனக்கு இல்லையாயின் உங்களுக்கும்

புதைகுழிகளில் இருப்பவர்களின் அவலக்குரலைச் செவியேற்க வைக்குமாறு பிரார்த்தனை செய்திருப்பேன்" என உத்தம நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அன்னவர்கள் உரைத்தார்கள்.
ஹழ்ரத் ஸைத் பின் ஸாபித் (ரலியல்லாஹு அன்ஹு)
முஸ்லிம், மிஷ்காத் – 25

ஒரு சமயம் அண்ணல் நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அன்னவர்கள் எங்களுக்கு அறிவுரை பகர்ந்துகொண்டிருக்கும்போது சிருஷ்டிகளின் உற்பத்தியிலிருந்து சுவர்க்கவாதிகள் சுவர்க்கத்திலும், நரகவாதிகள் நரகத்திலும் நுழைவது வரையிலான சகல விடயங்களையும் கூறிக்காட்டினர்கள். அவற்றைப் பாடமிட்டவர்கள் பாடமிட்டுக் கொண்டனர். ஏனையோர் மறந்துவிட்டனர்.
ஹழ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு)
புகாரி, மிஷ்காத் - 506

நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் (ஒருமுறை) எங்களிடையே மிம்பரில் எழுந்து நின்று, படைப்பின் ஆரம்பத்தைக் குறித்து எங்களுக்குச் செய்தி அறிவித்தார்கள். (எதுவரை என்றால் படைப்பின் தொடக்கம் முதல் மறுமை வாழ்வு வரை) சொர்க்கவாசிகள் (சொர்க்கத்தில்) தாம் தங்குமிடங்களில் புகும் வரையும் நரகவாசிகள் (நரகத்தில்) தாம் தங்குமிடங்களில் புகும் வரையும் நரகவாசிகள் (நரகத்தில்) தாம் தங்குமிடங்களில் புகும் வரையும் அறிவித்தார்கள். அதை நினைவில் வைத்தவர் நினைவில் வைத்துக் கொண்டார். அதை மறந்தவர் மறந்துவிட்டார்.

ஹழ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு)புகாரி 3192
நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் மதீனாவின் கோட்டைகளில் ஒரு கோட்டையின் மீதிருந்து நோட்டமிட்டார்கள். பிறகு, 'நான் பார்ப்பதை நீங்கள் பார்க்கிறீர்களா? நான் உங்கள் வீடுகள் நெடுகிலும் (வருங்காலத்தில்) குழப்பங்கள் விளையக் கூடிய இடங்களை மழைத்துளிகள் விழும் இடங்களைப் (பார்ப்பதைப்) போன்று பார்க்கிறேன்!" என்று கூறினார்கள்.
ஹழ்ரத் உஸாமா (ரலியல்லாஹு அன்ஹு) புகாரி 1878


வலிமார்களின் மறைவான ஞானம்
மரணத்தருவாயிலிருந்த அபூபக்கர் ஸித்தீக் (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் என்னிடம் கூறினார்கள்: "ஆயிஷாவே! நான் விட்டு செல்கின்ற வராஃதத் சொத்துகளை நீயும் உனது இரு சகோதரர்களும் மற்றும் இரு சகோதரிகளும் இறைவன் குர்ஆனில் கூறியபடி பங்கு பிரித்துக் கொள்ளுங்கள்.
நான் கேட்டேன்: "எனது அருமை தந்தையார் அவர்களே! இரு சகோதரிகள் என்றீர்களே! அஸ்மா என்ற ஒரு சகோதரி தானே எனக்கு உள்ளார். இன்னொரு சகோதரி யார்? (ஆயிஷாவே!) எனது மனைவியார் பின்து காரிஜா கர்ப்பமாக உள்ளார். அவர் பெண் குழந்தையை ஈன்றெடுப்பார். (எனவே தான் உனக்கு இரு சகோதரிகள் என்றேன்).
அவர்கள் கூறியது போன்று பின்து காரிஜா அவர்கள் உம்மு குல்தூம் என்ற பெண் குழந்தையை ஈன்றெடுத்தார்கள்.
அன்னை ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) முஅத்தா எண் 1242, பைஹகீ எண் 12267

திண்ணமாக உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஒரு படையை மதீனாவிலிருந்து நிஹாவந்த் என்னும் இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். ஸாரியா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களை அப்படைக்கு தளபதியாக நியமித்தார்கள். (மதீனாவில்) சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் 'யா ஸாரியா! அல் ஜபல்!' (ஸாரியாவே! மலையை கவனித்து சண்டையிடுங்கள்) என சப்தமிட்டார்கள்.
பிறகு படையிலிருந்து ஒரு தூதர் வந்து சொன்னார். அமீருல் முஃமினீன் அவர்களே! எங்கள் எதிரிகளோடு நாங்கள் போர் புரிந்தபோது அவர்கள் எங்களை விரட்டியடித்தார்கள். அப்போது 'யா சாரியா அல் ஜபல்' என்று சத்தம் கேட்டது. பின்னர் மலையை எங்களுக்கு பின்புறமாக ஆக்கி கொண்டு போர் செய்தோம். அல்லாஹ் அவர்களை விரட்டி விட்டான்.
ஹழ்ரத் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹு)
நூல் – பைஹகீ (தலாயிலுந் நுபுவ்வா) – 2655
ர.ரா

Rahmath Rajakumaran

நபிகள் நாயகம் ﷺ அன்னவர்களுக்கு மறைவான ஞானம் இல்லை என்பதற்கு ஆதாரமாக குர் ஆனின் நிறைய வசனங்களை சுட்டிக் காட்டுகிறார்கள் .
குறிப்பாக நபி (ஸல்) அவர்களுக்கும் மறைவானவற்றை சுயமாக அறிகின்ற ஆற்றல் இல்லை.
(நபியே! நீங்கள் அவர்களை நோக்கி) "அல்லாஹ்வுடைய பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கிறதென்று நான் உங்களுக்குக் கூறவில்லை. மறைவானவற்றை நான் அறியவும் மாட்டேன். உண்மையாகவே நான் ஒரு மலக்கு என்றும் நான் உங்களிடம் கூறவில்லை. எனினும், எனக்கு வஹீயின் மூலம் அறிவிக்கப் பட்டவைகளை அன்றி (வேறொன்றையும்) நான் பின்பற்றுவது இல்லை" என்று கூறி, "குருடனும், பார்வையுடையவனும் சமம் ஆவார்களா? (இவ்வளவு கூட) நீங்கள் சிந்திக்க வேண்டாமா?" என்றும் கேளுங்கள்.
(அல்குர்ஆன் : 6:50)
இதில் நன்கு கவனிக்க வேண்டிய விஷயம் " அல்லாஹ் அறிவித்தால் " மறைவான ஞானத்தைப் பெறுவேன் என்றுதானே அர்த்தம்.
" வஹி " என்னும் இறை செய்தி அன்னவர்களுக்கு வந்து கொண்டே இருக்கிறது . வஹி என்பதே மிகப் பெரிய "மறைவான ஞானம்தானே ?
நபியவர்கள் பிறந்தது புனித இறை இல்லத்தின் எல்லைக்குள் , அவர்கள் மறைந்த இடத்தை புனித நகரமாகவே ஆக்கினான் .
நபியவர்களின் வீட்டிற்கும். மிம்பருக்கு இடையே உள்ள பூமியை சுவனப் பூமியின் ஒரு துண்டாக்கினான் .
ஏறக்குறைய நபியவர்கள் அடங்கியிருக்கும் பூமியே சுவனம்தான். நமக்கு சுவனம் மறைவாக இருக்கும் போது , சுவனத்திலேயே இருக்கும் நபியவர்களுக்கு மறைவான ஞானத்திற்கு என்ன குறைவு வந்து விடப்போகிறது ?

"ஷபாஅத்" என்னும் பரிந்துரை (சிபாரிசு)
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 6)



322. அல்லாஹ்வின் தூதர் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்:
அல்லாஹ் மறுமை நாளில் மக்களை ஒன்று கூட்டுவான். அப்போது அவர்கள் "(அமளிகள் நிறைந்த) அந்த நாளைப் பற்றி (அதிலிருந்து விடுபடும் வழிவகை குறித்து) கவலையோடு யோசிப்பார்கள்"

அல்லது "அது குறித்த எண்ணம் அவர்களது உள்ளத்தில் ஏற்படுத்தப்படும்". ஆகவே, அவர்கள் "(அதி பயங்கரமான) இந்த நிலையிலிருந்து நம்மை விடுவிக்க நம் இறைவனிடம் பரிந்துரைக்கும்படி (யாரையாவது) நாம் கேட்டுக்கொண்டால் நன்றாயிருக்குமே!" என்று கூறியவாறு (ஆதி மனிதரும் ஆதித் தூதருமான) ஆதம் (அலை) அவர்களிடம் வருவார்கள்.
அவரிடம் "நீங்கள்தாம் மனித குலத்தின் தந்தை ஆவீர்கள்; அல்லாஹ் தனது கையால் உங்களைப் படைத்தான். தன்(னால் படைக்கப்பட்ட) உயிரை உங்களுக்குள் அவன் ஊதினான். மேலும், தன் வானவர்களுக்கு அவன் கட்டளையிட, அவர்கள் உங்களுக்குச் சிரம்பணிந்தனர். ஆகவே, இந்த(ச் சோதனையான) கட்டத்திலிருந்து எங்களை விடுவிப்பதற்காக உங்கள் இறைவனிடத்தில் எங்களுக்காகப் பரிந்துரை (ஷஃபாஅத்) செய்யுங்கள்" என்று கூறுவார்கள்.

அதற்கு ஆதம் (அலை) அவர்கள், "(நீங்கள் நினைக்கும்) அந்த இடத்தில் நான் இல்லை" என்று கூறியவாறு, (உலகில்) தாம் புரிந்துவிட்ட தவறை நினைத்துப் பார்த்து தம் இறைவனுக்கு முன் அதற்காக வெட்கப்படுவார்கள். பிறகு, "நீங்கள் (எனக்குப் பின் முக்கிய) முதல் தூதராக இறைவன் அனுப்பிவைத்த நூஹ் (அலை) அவர்களிடம் செல்லுங்கள்" என்று கூறுவார்கள்.

உடனே மக்கள், நூஹ் (அலை) அவர்களிடம் செல்வார்கள். அன்னாரும் "(நீங்கள் நினைக்கும்) அந்த இடத்தில் நான் இல்லை" என்று கூறி, (உலகில்) தாம் புரிந்துவிட்ட தவறை நினைத்து அதற்காகத் தம் இறைவனுக்கு முன் வெட்கப்படுவார்கள். மேலும், "அல்லாஹ் தன்னுடைய உற்ற நண்பராக்கிக் கொண்ட (நபி) இப்ராஹீம் (அலை) அவர்களிடம் நீங்கள் செல்லுங்கள்" என்று கூறிவிடுவார்கள்.
உடனே மக்கள், இப்ராஹீம் (அலை) அவர்களிடம் செல்ல, அவர்களும் "(நீங்கள் நினைக்கும்) அந்த இடத்தில் நான் இல்லை" என்று கூறி, தாம் புரிந்துவிட்ட தவறை நினைத்து அதற்காகத் தம் இறைவன் முன் வெட்கப்படுவார்கள். மேலும், "நீங்கள் அல்லாஹ் உரையாடிய, தவ்ராத் (வேதத்)தையும் வழங்கிய (நபி) மூசா (அலை) அவர்களிடம் செல்லுங்கள்" என்று கூறிவிடுவார்கள்.

உடனே மக்கள், மூசா (அலை) அவர் களிடம் செல்வார்கள். அன்னாரும் "(நீங்கள் நினைக்கும்) அந்த இடத்தில் நான் இல்லை" என்று கூறி, தாம் புரிந்துவிட்ட தவறை நினைத்து அதற்காகத் தம் இறைவனுக்கு முன் வெட்கப்படுவார்கள். மேலும், "நீங்கள் அல்லாஹ்வின் ஆவியும் அவனுடைய வார்த்தையுமான (நபி) ஈசாவிடம் செல்லுங்கள்" என்று கூறி விடுவார்கள்.
உடனே மக்கள், அல்லாஹ்வின் ஆவியும் அவனுடைய வார்த்தையுமான (நபி) ஈசாவிடம் செல்ல, அவர்களும் "(நீங்கள் நினைக்கும்) அந்த இடத்தில் நான் இல்லை" என்று கூறிவிடுவார்கள். "எனவே, நீங்கள் முன் பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட அடியாரான (நபி) முஹம்மத் (ஸல்) அவர்களிடம் செல்லுங்கள்" என்று கூறிவிடுவார்கள்.

உடனே மக்கள், என்னிடம் வருவார்கள். அப்போது நான் என் இறைவனிடத்தில் அனுமதி கேட்பேன். எனக்கு அனுமதி அளிக்கப்படும். இறைவனை நான் கண்டதும் சிரம் பணிந்தவனாக (சஜ்தாவில்) விழுந்துவிடுவேன். அவன் நாடிய நேரம்வரை (அப்படியே) என்னை விட்டுவிடுவான். பிறகு (இறைவனின் தரப்பிலிருந்து) "முஹம்மதே! உங்கள் தலையை உயர்த்துங்கள். சொல்லுங்கள்; செவியேற்கப்படும். கேளுங்கள்; உங்களுக்குக் கொடுக்கப்படும். பரிந்துரை செய்யுங்கள்; உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்" என்று கூறப்படும்.
உடனே நான் எனது தலையை உயர்த்தி என் இறைவன் எனக்குக் கற்றுத்தரும் புகழ்மொழிகளைக் கூறி அவனைப் புகழ்வேன். பிறகு, நான் பரிந்துரை செய்வேன். அப்போது இறைவன் (நான் யார் யாருக்குப் பரிந்துரை செய்யலாம் என்பதை வரையறுத்து) எனக்கு வரம்பு விதிப்பான். பின்னர் அவர்களை நான் நரகத்திலிருந்து வெளியேற்றி சொர்க்கத்திற்கு அனுப்பிவைப்பேன்.

பின்னர் மீண்டும் நான் (இறைவனிடம்) சென்று சிரம்பணிந்து விழுவேன். இறைவன் தான் நாடும் நேரம்வரை (அப்படியே) என்னை விட்டுவிடுவான். பிறகு "முஹம்மதே, உங்கள் தலையை உயர்த்துங்கள். சொல்லுங்கள்; செவியேற்கப்படும். கேளுங்கள்; அது உங்களுக்குத் தரப்படும். பரிந்துரை செய்யுங்கள்; உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்" என்று சொல்லப்படும்.
நானும் அவ்வாறே என் தலையை உயர்த்தி, என் இறைவன் எனக்கு அப்போது கற்றுத்தருகின்ற புகழ்மொழிகளைக் கூறி அவனை நான் புகழ்வேன். பிறகு நான் பரிந்துரைப்பேன். (நான் யார் யாருக்குப் பரிந்துரைக்கலாம் என்பதை வரையறுத்து) எனக்கு அவன் வரம்பு விதிப்பான். பிறகு அவர்களை நான் நரகத்திலிருந்து வெளியேற்றி, சொர்க்கத்திற்கு அனுப்பிவைப்பேன்.
(இதைப் போன்றே மூன்று அல்லது நான்கு முறை நடக்கும்.)

அறிவிப்பாளர் கூறுகிறார்: மூன்றாவது முறையிலா, அல்லது நான்காவது முறையிலா என்று தெரியவில்லை; நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "என் இறைவா! குர்ஆன் தடுத்துவிட்டவர்கள் -அதாவது நிரந்தர நரகம் கட்டாயமாகிவிட்டவர்(களான இறைமறுப்பாளர்கள் மற்றும் நயவஞ்சகர்)களைத் தவிர வேறு யாரும் நரகத்தில் எஞ்சியிருக்கவில்லை" என்று கூறுவேன்.

இதை அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர்தொடர்களில் வந்துள்ளது. அவற்றில், இப்னு உபைத் (ரஹ்) அவர்களது அறிவிப்பில் (பின்வருமாறு) கூறப்பட்டுள்ளது: கத்தாதா பின் திஆமா (ரஹ்) அவர்கள், "குர்ஆன் தடுத்துவிட்டவர்களைத் தவிர" என்பதற்கு விளக்கமாக "நிரந்தர நரகம் கட்டாயமாகிவிட்டவர்களைத் தவிர" என்று கூறினார்கள்.
ஸஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் : 1. இறைநம்பிக்கை
அனைத்து நபிமார்களுக்குமே நபிகள் நாயகம் ﷺ அவர்களின் ஷபாஅத் தேவைப்படும் போது ... நாம் எம்மாத்திரம் ..?
ர.ரா

Rahmath Rajakumaran

எவராவது புனித மதீனாவில் மரணிப்பதற்கான பாக்கியத்தைப் பெற்றிருப்பாராகில் அவர் அங்கேயே மரணிக்கட்டும். ஏனென்றால் அங்கு மரணிப்பவர்களுக்கு நிச்சயமாக நான் பரிந்துரைப்பேன்.
(திர்மிதி, அஹ்மத், மிஷ்காத் 240, இப்னு மாஜா 3112)


Rahmath Rajakumaran

அல்லாஹ்வுடனும் அவனது நேசர்களுடனுமான தம் தொடர்பைத் துண்டிக்காதவர்களுக்கே ஷபாஅத் பெறும் பாக்கியம் உண்டு. இதனடிப்படையில், ஷபாஅத் செய்யப்படுவதற்கான தகுதி பெறுவதற்கும் சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவை, மனிதர்களது செயற்பாடுகளுடனும் எண்ணங்களுடனும் தொடர்புடை யவையாகும்.'அவன் பொருந்திக் கொண்டவரைத் தவிர, (வேறெவருக்கும்) இவர்கள் பரிந்துரை செய்ய மாட்டார்கள்." (குர்ஆன் - 21:28)

Rahmath Rajakumaran

இந்த ஹதீஸ் ஷபாஅத் செய்வதன் தத்துவத்தை மிக அழகாகவும் தெளிவாகவும் உணர்த்துகின்றது.
நபிமார்கள் அனைவரும் குறிப்பாக பெருமானார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அவர்கள், மறுமை நாளில் பாவிகளில் சிலருக்காக அல்லாஹ்விடம் பரிந்துரை செய்யும் அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால், இதுவும் அல்லாஹ்வின் அனுமதியுடன் தான் நடைபெறும் என்பது கவனிக்கத் தக்கது.
அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது:''அல்லாஹ்வின் அனுமதியைப் பெற்ற பின்பே தவிர எந்தவொரு சிபாரிசு செய்பவருமில்லை.'
(குர்ஆன் - 10:03)

வஸீலா - உதவி தேடுதல்
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 7)



வஸீலா என்பதன் பொருள் சாதனம். கடலில் பயணம் செய்ய கப்பல் வஸீலாவாக – சாதனமாக உள்ளது என்பர். அதைப் போல் அல்லாஹ்வின் பால் நெருங்குவதற்கான சாதனமாக பொறுமை தொழுகை

(" நீங்கள் பொறுமையைக் கைக்கொண்டு, தொழுது இறைவனிடத்தில் உதவி தேடுங்கள். (அல்குர்ஆன் : 2:45)

இன்ன பிற வணக்கங்கள் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளன தவிர ஒரு நபர் மூலம் அல்லாஹ்வை நெருங்கலாம் என்று எந்த இடத்திலும் கூறப்படவில்லை என்பதாக இஸ்லாமிய அடிப்படை சித்தாந்தாங்கள் தெரியாதவர்கள் வஸீலாவிற்கு தன் மனம் போக்கில் உளறி வருகின்றனர் . ஆனால் வஸீலாவைக் குறித்து நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்
628. தொழுகை அறிவிப்பாளரின் அறிவிப்பை நீங்கள் செவியுற்றால் அவர் கூறுவதைப் போன்றே நீங்களும் கூறுங்கள். பின்பு என்மீது ஸலவாத் சொல்லுங்கள். ஏனெனில், என்மீது யார் ஒருமுறை ஸலவாத் சொல்கிறாரோ அதன் காரணத்தால் அவருக்குப் பத்து முறை அல்லாஹ் அருள்புரிகின்றான்.

பின்பு எனக்காக அல்லாஹ்விடம் வஸீலாவைக் கேளுங்கள். வஸீலா என்பது சொர்க்கத்திலுள்ள (உயர்) பதவியாகும்; அல்லாஹ்வின் அடியார்களில் ஒருவருக்குத்தான் அது கிடைக்கும். அந்த ஒருவர் நானாகவே இருக்க விரும்புகிறேன். எனவே, எனக்காக அந்தப் பதவியை (அல்லாஹ்விடம்) கேட்பவருக்கு (மறுமை நாளில்) எனது பரிந்துரை அவசியம் கிடைக்கும். இதை அப்துல்லாஹ் பின் அம்ர் பின் அல்ஆஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
இந்த ஹதீஸ் இரு அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.
ஸஹீஹ் முஸ்லிம் அத்தியாயம் : 4. தொழுகை

ياايها الذين آمنوا اتقو الله وابتغوا اليه الوسيله
எனதடியார்களே! அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ்வளவில் ஓர் வஸீலாவை (உதவியாளரைத்) தேடிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 6:35)

என்று நேரடியாகவே நீங்கள் வஸீலா தேடிக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ்வே சொன்னபிறகு, அதை ஷிர்க் என்று சொல்வது திருக்குர்ஆனை மறுப்பது ஆகுமல்லவா?
அப்தால்கள் ஷாம் நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் நாற்பது பேர்களாகும். அவர்களில் ஒருவர் மரணிப்பார்களேயானால் மற்றொருவர் அவர் இடத்தில் நியமனம் செய்யப்படுகிறார். அவர்களின் பொருட்டினாலேயே மழை பொழிகிறது என்றும், அவர்களின் வஸீலாவைக் கொண்டே விரோதிகளிடமிருந்து வெற்றி கிடைக்கிறது என்றும் அவர்களினால்தான் ஷாம் தேசத்திற்கு வேதனை இறங்காமலிருக்கிறது என்றும் கூறினார்கள்.
அறிவிப்பாளர்: ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு
(மிஷ்காத் 582-3)

மதீனாவில் மழைப் பஞ்சம் ஏற்பட்டால் உமருப்னுல் கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் பொருட்டைக் கொண்டு மழை இறக்கித் தர இறைவனிடம் வேண்டுவார்கள். அவர்கள் சொல்வார்கள், இறைவா! நாங்கள் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வஸீலாவாக்கி-பொருட்டாக்கி மழையைத் தேடினோம். மழை இறக்கினாய். இப்பொழுது அண்ணலின் பெரிய தந்தை அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பொருட்டாக்கி மழை கேட்கிறோம். மழை அருள்வாய் எனக் கூறுவாhகள். இப்படி துஆக் கேட்டால் உடனே மழை பொழியும்.
அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ரலியல்லாஹு அன்ஹு நூல்: புகாரி பாகம் 1 பக்கம் 138.

இறைவா! உனது நபியின் பொருட்டாலும் எனக்கு முன்னாள் உள்ள நபிமார்களின் பொருட்டாலும் என் தாயார் பாத்திமா பின்த் அஸத் அவர்களின் பாவங்களை மன்னித்து அவர்களின் மண்ணறையை விசாலப்படுத்துவாயாக என்று நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அன்னவர்கள் துஆச் செய்தார்கள்.
நூல்: தப்ரானி 2 – 22

நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தான் செய்த ஒன்றை ஏற்றுக்கொண்ட பின் யா அல்லாஹ்! முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டால் என்னை மன்னித்திடுவாயாக! எனப் பிரார்த்தித்தார்கள்.
அல்லாஹ் நபியவர்களை நோக்கி, ஆதமே! நீ எப்படி நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அறிந்தாய்? இன்னும் நான் அவர்களை படைக்கவும் இல்லை எனக் கூற,
நபியவர்கள், எனது இரட்சகா! நீ உனது கரத்தால் என்னைப் படைத்து எனக்குள் ரூஹை அனுப்பிய சமயத்தில் நான் என் சிரசை உயர்த்தி அர்ஷைப் பார்த்தேன். அங்கே " லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மத் ரஸூலுல்லாஹ்" என உன் பெயருடன் மற்றுமோர் பெயரையும் இணைத்திருந்தாயல்லவா? இதனால் நான், நீயே உன் பெயருடன் மற்றொருவரின் பெயரைச் சேர்த்திருக்கிறாய் என்றால், நிச்சயமாக அவர் உன்னிடத்தில் சகல சிருஷ்டிகளையும் விட மிகப் பிரியத்திற்குரியவராக இருக்கும் என்று நினைத்தேன் என்றார்கள்.

அதற்கு அல்லாஹ் ஆதமே! நீர் கூறியது உண்மைதான். அவர் சகல படைப்புகளை விடவும் என்னிடத்தில் மிக மிக நெருக்கமானவரே! எனவே அவரின் பொருட்டால் நீர் என்னிடம் பிழை பொறுக்கக் கேட்டதால் நான் உம்மை மன்னித்து விட்டேன் எனக் கூறிய அல்லாஹ் அவரை நான் படைத்திடாவிட்டால் உம்மையும் படைத்திருக்க மாட்டேன் என்றான். இதன் சனத் ஸஹீஹானதாகும். (அல் முஸ்தத்ரக், கிதாபுத் தாரீக் 2:615)

இன்னும், நிச்சயமாக அவர்கள் தமக்குத் தாமே அநீதமிழைத்துக் கொண்டு உம்மிடம் வந்து, பின்னர் அல்லாஹ்விடம் அவர்கள் மன்னிப்புக்கோரி, அவர்களுக்காக அல்லாஹ்வுடைய தூதரும் பாவமன்னிப்புக் கோரியிருந்தால், தவ்பாவை ஏற்பவனாகவும் மிகக் கிருபையுடையவனாகவும் அல்லாஹ்வை அவர்கள் கண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 04:64)

ர.ரா

Rahmath Rajakumaran

ياايها النبيّ انااارسلنك شاهدا ومبشرا ونذيرا وداعياالى الله باذنه

நபியே! நாம் உங்களை சாட்சி சொல்வோராகவும், சுபச் செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்வதற்காகவும், அல்லாஹ்வின் உத்திரவு கொண்டு அவன்பால் அழைப்பதற்காகவும் அனுப்பினோம். (அல்குர்ஆன் அஹ்ஸாப் 45,46)

சில நண்பர்கள் இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாட்டைப் பற்றிய என் பதிவுகளைப் பார்த்து நிறையவே அட்வைஸ் எனக்கு செய்றாங்க . போனில் தங்கள் பேர் சொல்லியே பேசுறாங்க . நீங்களா இப்படி ?



முதல்ல நீங்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் . ரூஹானியத்தைப் பற்றி ஆய்வு செய்த பரஞ்ஜோதி மஹானைப் பற்றியும் அவரது ஈமானைப் பற்றியெல்லாம் நிறைய கேள்வி என்னிடம் கேட்கிறீர்கள் . அது அவருக்கும் அவரைப் படைத்த ரப்புக்கும் உள்ள விஷயம் . முதல்ல நம்ம ஈமான் என்ன நிலையில் என்ன நிறத்தில் என்ன உருவத்தில் இருக்கிறது என்பதை பரிசோதித்தோமா ? உள்நோக்கிப் பார்த்தால் உண்மை விளங்கும் .

அறிவியல் கட்டுரை எழுதும் போது குர்ஆன் வசனத்திற்கு விளக்கமாக விஞ்ஞானத்தையும் அதன் கோட்பாட்டாளரான யூத விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீனைப் பற்றி நான் எழுதிய போது நீங்கள் ஒன்றுமே சொல்லவில்லை .

ஆல்பர்ட் சிறுநீர் கழித்து சுத்தம் செய்வாரா ...? அவரின் விஞ்.விளக்கம் குர்ஆனுக்கு அத்தனை அவசியமா.... என்றெல்லாம் நீங்கள் என்னிடம் எந்த கேள்வியும் கேட்கவே இல்லை . அவரின் சொந்த வாழ்க்கையைப் பற்றியும் நீங்கள் என்னிடம் விமர்சிக்கவே இல்லை. ஆனால் பரஞ்சோதியை சொன்னதும் பாய வருகிறீர்கள் . பரஞ்சோதி ரூஹானியத்தின் ஒரு நல்ல ஆய்வாளராகத்தான் எனக்குத் தெரிகிறார். அவ்வளவே.

வஹ்ஹாபிய கொள்கையை நேரடியாகவோ , அல்லது மறைமுகமாக அல்லது அய்க்கி நக்கியாகவோ ஏற்றுக் கொண்ட பலஹீனமான
ஈமான்தாரிகள் என்னுடைய இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாட்டு சித்தாந்த பதிவுகளை தவிர்த்துவிடுங்கள் , அல்லது கடந்து விடுங்கள் . அல்லது மௌனித்து விடுங்கள் .நீங்கள் ஒன்றும் ஞான அறிவுரை சொல்லி நான் கேட்க வேண்டிய அவசியம் எனக்கில்லை . என் சற்குரு அஹ்லே பைத் சுபைர் தங்ஙள் ஜலாலில் புகாரி (ரஹ்) எனக்கு சற்று அதிகவே ஞானப்பாலை

ஊட்டியுள்ளார்கள் இன்னும் ஊட்டிக் கொண்டே இருக்கிறார்கள் .எனவே ஞான அறிவுரை எனக்கு சொல்வதை விட்டு, உங்களது ஈமானை அதோ அடிக்கிற ஆடிக் காற்று சேலை நழுவி விலகலோடு பறக்க விட்டு விடாதீர்கள் . இன்று போய் நாளை வாருங்கள் .
ர.ரா

கபுறு (மண்ணறை வாழ்க்கை) 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 8)



கபுறு என்பது பிரேதக்குழி , அது இறந்து போனவருடைய சடலம் பிறருடைய பார்வைக்கு மறைவாய்த் தங்கும் இடம் .
இது தரையிலோ , மலையிலோ , கடலிலோ அல்லது மீன், கழுகு ,புலி போன்ற காட்டு விலங்குகளின் இரப்பையிலோ அமையலாம்.
மனிதனுடைய சடலம் எதில் தங்குகின்றதோ அதிலிருந்துதான் மறுமைக்கு அவன் எழுப்பப்படுவான் அதுவரை அங்கிருந்து அவன் மீளமாட்டான்.

ஒருவன் இறந்து அவன் சடலம் கபுறில் அடக்கிய பின் அவன் நல்லவனாக (ஸாலிஹ்) இருந்தால் அவன் ரூஹு
" இல்லீனில் " போய்ச் சேரும். கெட்டவனாக (பாஸிக்) இருந்தால் , அவன் ரூஹு சிஜ்ஜீனில் " போய்ச் சேரும்.
கியாமத் நாள் வரை சடலம் கபுறில் தரிப்பட்டிருக்கும் . இருந்தாலும் நல்லவனான ஸாலிஹுடைய ரூஹு மற்ற எல்லா இடங்களுக்கும் போய் வரும் . கெட்டவனாக பாஸிக் ரூஹு அங்கிருந்து சற்று இடம் பெயரக்கூட முடியாமல் கைதியாக அங்கே அடைபட்டு கிடக்கும் .

மண்ணறை என்பது ஒருவன் சுவர்க்கத்திற்கோ , நரகத்திற்கோ போகிற வழியில் கடக்க வேண்டிய இடம் கபுறு என்கிற இந்த மண்ணறை . இந்த மண்ணறை உலகத்தை "பர்ஸக் உலகம்" எனப்படும் . ஏதோ பார்ப்பதற்கு 6 அடிக்கு 3 அடி , 4 அடி ஆழம் கொண்டதாக இருந்தாலும் ஆன்மா என்கிற ரூஹ் வாழும் பர்ஸக் உலகிற்கு இந்த மண்ணறை தலைவாசலாகிறது .

பர்ஸக் உலகம் ஏழு பூமிகளுக்கும் கீழாக உள்ளது.
பர்ஸக் உலகம் இந்த துன்யாவைப் பார்க்கிலும் மிகப் பெரியது. ஒருவன் தாய் வயிற்றிலிருந்து துன்யாவில் பிறந்தவுடன் அந்த கர்ப்பப்பையும் வயிறும் அவனுக்கு எவ்வளவு சிறியதாகக் காணப்படுகிறதோ , அதைப் போல் மரணித்து பர்ஸக் உலகத்திற்கு போனதும் அவன் வாழ்ந்த இந்த துன்யா வாழ்க்கை மிக மிகச் சிறியதாய்க் காணப்படும் .

இந்த பர்ஸக் உலகத்தில் ரூஹுகள் ஒன்றையொன்று சந்தித்துச் பேசிக் கொள்ளும் .முன்னாள் மரணித்த ரூஹு அடுத்து மரணித்த ரூஹுவிடம் துன்யாவைப் பற்றியும் விசாரிப்பதும் உண்டு.
ஒருவன் மரணித்து அவனது சடலம் உருக்குலைந்து , இல்லாமல் போனாலும் அவனது புத்தியும் , அறிவும் அவனது ரூஹைப் போல் அழியாது. ரூஹைப்போல் அந்த உடலும் இன்ப துன்பங்களை அனுபவிக்கும் .
மரணித்தவனுக்கு உயிரோடு இருப்பவனுடைய எல்லாக் காரியங்களும் தெரிவிக்கப்படும் . மண்ணறைக்கு அருகில் நடக்கும் எல்லா காரியத்தையும் அவன் கண்டறிவான். உயிரோடு இருக்கிற பிரியமுள்ள ஒருவன் தன் மண்ணறைக்கு வந்தால் அவனை மண்ணறையில் இருப்பவன் கண்டு மகிழ்வான் .

1374. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஓர் அடியான் கப்ரில் அடக்கம் செய்யப்பட்டு அவனுடைய தோழர்கள் திரும்பிச் செல்லும்போது, அவன் அவர்களின் செருப்பின் ஓசையைச் செவியேற்பான்.
மண்ணறை வாழ்க்கை என்பது மண்ணோடு மண்ணாக உடல் மக்கிப் போனாலும் ரூஹ் வாழ்ந்து கொண்டே இருக்கும் இடம் அது .

Rahmath Rajakumaran

1379. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
உங்களில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் தங்குமிடம் அவருக்குக் காலையிலும் மாலையிலும் எடுத்துக் காட்டப்படும். அவர் சொர்க்கவாசியாக இருந்தால் சொர்க்கத்திலிருப்பதாகவும் நரகவாசியாக இருந்தால் நரகத்திலிருப்பதாகவும் (எடுத்துக் காட்டப்படும்.) மேலும், அல்லாஹ் மறுமை நாளில் உன்னை எழுப்புகிற வரை இதுவே (கப்ரே) உன்னுடைய தங்குமிடம் என்றும் கூறப்படும்.'
அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி) அறிவித்தார்.

அப்துல் ஹக்கீம் சிந்தாமணி

மவ்த்தை ஞாபகப்படுத்தும் பதிவு.நம் அனைவருக்கும் வல்ல அல்லாஹ் நல்ல மவ்த்தைத் தந்து "பர்சக்" உலகில் சிறந்து வாழ தவ்ஃபீக் செய்வானாக.அர்த்தமுள்ள பதிவுகள் பல தங்களிடம் இருந்து வர வல்ல இறைவன் ஆயுளை நீட்டித்துத் தருவானாக.

கபுறு (மண்ணறை வாழ்க்கை) 02
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 9)

ஒருவன் இறந்தவுடன் அங்கு நடக்கும் காரியங்கள் அனைத்தும் சடலமாய் இருப்பவனுக்கு நன்றாகத் தெரியும். யாரெல்லாம் அவனை குளிப்பாட்டுகிறார்கள். யார் யார் அவனைப் பற்றி என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பது உட்பட அவனுக்கு நன்றாகத் தெரியும்.
அவனை குளிப்பாட்டி கபன் செய்யப்பட்டு கபறில் அடக்கப்பட்டவுடன் , மரணித்த போது பிரிக்கப்பட்ட ரூஹு அந்த சடலத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டு உயிர்ப்பிக்கப்படும் .
முதன்முதலாக அவனின் கபுறு அவனிடம் பேசும். நல்லவனாக இருந்தால் வந்தனம் சொல்லும். கெட்டவனாக இருந்தால் அது அவனை சபிக்கும் . பின் " ரூமான் " என்னும் வானவர் மலக்கு அவனிடம் வருவார் வந்து அவனிடம் ....,

" நீ உலகத்தில் செய்த நன்மை தீமைகளை பட்டியலிட்டு எழுது " என்பார்
" இங்கு மையும் எழுதுகோலும் , காகிதமும் இல்லையே .. எப்படி நான் எழுத முடியும் ? "
" உன் வாயிலுள்ள உமிழ்நீரே மை உன் கை விரலே எழுதுகோல், உன் கபன் துணியே காகிதம் " என்று கூறி கபன் துணியில் ஒரு துண்டைக் கிழித்து எழுதக் கொடுப்பார்.

எழுதப் படிக்கத் தெரியாதவனாக இருந்தாலும் ,தான் செய்த நன்மை ,தீமைகளை ஒன்று விடாமல் எழுத வரும். அதில் கூட்டியோ , குறைத்தோ அவன் ஆத்மா எழுதாது. ஏனெனில் அவன் ஆத்மா மேல் உலகத்தைச் சேர்ந்தது. அது என்ன நடந்ததோ அந்த உண்மையை அப்படியே அப்படியே ஒன்று விடாமல் எழுதும் .

அப்படி எழுதப்பட்ட அந்த கபன் துணியின் துண்டை ,மடக்கிச்சுருட்டி அவன் கழுத்தில் மாலை மாதிரி கட்டிவிட்டு ,ரூமான் என்கிற இந்த மலக்கு அவனின் கபறை விட்டு போய்விடுவார்.
அவன் சடலத்தை கபறில் அடக்கப்பட்டு மண்ணை மூடியதும், பள்ளிவாசல் இமாம் "தல்கீன் " ஓதுவார் . (இப்போது நவீனத்துவவாதிகளால் தல்கீன் ஓதுவதை தடை செய்திருக்கிறார்களாம்)
துனியாவில் மார்க்கத்தைப் பற்றி அறியாமல் வாழ்ந்தவனுக்கு , தல்கீனில் சொல்லப்படும் சேதியை மிக வேகமாக கேட்டறிந்து கொள்ள நினைப்பான் . பள்ளிவாசல் இமாம் தல்கீன் ஓதி முடித்ததும் , அதுவரை கபறில் காத்திருந்த " முன்கர் - நகீர் " என்னும் இரண்டு வானவர் மலக்குகள் அவனிடம் வருவார்கள் . இவ்விரு வானவர்களுக்கும் தல்கீன் ஓதப்படுவதையும் , கபறில் உள்ளவன் பதறி பதறி அதை மனப்பாடம் செய்வதையும் கவனித்துக் கொண்டே இருப்பார்கள் .


'

நாமே கேட்கப் போகிற கேள்விகளுக்கு பதில் இந்த கப்றாளிக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது ' - என்று இரண்டு மலக்குகளும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்வார்கள்
.
ர.ரா

Rahmath Rajakumaran
பரீட்சை எழுத ஹாலுக்குள் போகும் மாணவனுக்கு பரீட்சை எத்தனை பயமாக இருக்குமோ அதை விட பல மடங்கு பயம்
கபுறாளிக்கு கபறில் இருக்கும் . இதற்கு தல்கீன் ஓதுவது சற்று ஆறுதலாக இருக்கும் .
சடலத்தின் மீது மண் அள்ளி போடுவதுமாதிரி , தல்கீன் ஓதுவதை நிறுத்த சொல்லி மண் அள்ளி வைத்து விடாதீர்கள்

Rahmath Rajakumaran
" மரணத்திற்கு பின் ஆன்மாக்களின் நிலை " என்று இத்தொடரின் முதல் கட்டுரை ஆரம்பித்து , தொடர்ந்து இ.அல்லாஹ் எழுத உள்ளேன் .
தல்கீன் மாதிரி விடுபட்ட சமச்சாரங்களுக்காக முழுமையாக பதிவுகள் எழுத உள்ளேன் .
உயிர் , ஆன்மா , ரூஹ் .... என்று இப்படியே மறைவானதையேப் பற்றி எழுதி ஆங்காங்கே கிதாபுகளின் ஆதாரங்களையும் கொடுத்து வருகிறேன்.
இத்தொடர் பதிவுகளில் கபுறில் சடலம் வைத்ததும் என்னென்ன நிகழும் என்பது பற்றி விஞ்ஞானம் கலக்காமல் சீரியஸ்ஸாக எழுதுகிறேன் .
விஞ்ஞானம் பிற்பாடு சொல்றேன் .

கபுறு (மண்ணறை வாழ்க்கை) 03
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 10)



" முன்கர் - நகீர் " என்னும் இரண்டு வானவர் மலக்குகள் நல்லடியாளரான கபுறாளிடம்
" மன் றப்புக்க " - (உன் இறைவன் யார்?)
" அல்லாஹு றப்பீ (அல்லாஹ் என் இறைவன்)
" வமா தீனுக்க " (உன் மார்க்கம் எது?)
"வல் இஸ்லாமுதீனி " (என் மார்க்கம் இஸ்லாம்)
" வமன் னபிய்யுக்க " (உன்னுடைய நபி யார்?)
" வ முஹம்மதுன்னபிய்யி " (என் நபி முஹம்மது (ஸல்))
" வமா கிபுலத்துக்க " (உன்னுடைய கிபுலா எது ?)
" வல்கஃபத்து கிபுவத்தி " (என்னுடைய
கிபுலா கஃபா)
"வமா இமாமுக்க " (உன் இமாம் யார் ?)
" வல்குர்ஆனு இமாமி " (என் இமாம் குர்ஆன்)
" வமா இருவானுக்க " (உன்னுடைய சகோதரர் யார்?)
" வல் முஸ்லிமூன இகுவானீ" (என்னுடைய சகோதரர் முஸ்லிம்கள்)
இவ்விதமாக மலக்குகள் கேட்ட கேள்விக்கு நல்லடியார் பதில் சொன்னதும் , " நீ இப்படிச் சொல்வாயென்று எங்களுக்குத்
தெரியும் "
உடனே அவனுடைய கபுறு என்ற மண்ணறை நாலாயிரத்துத் தொளயிரம் சதுர முழம் விஸ்தீரணமுள்ளதாக விரிவாக்கம் செய்யப்படும் .அதில் எங்கும் பிரகாசிக்கும்படியான ஒளிவும் உண்டாக்கப்படும்.

அப்போது அந்த இரு மலக்குகளும் அவனைப் பார்த்து , " நீ சுகமாய் படுத்திரு ! " என்று சொல்லிவிட்டு போய் விடுவார்கள்.

பிறகு முகவசீகரமும், நற்மணமும், அழகுமுள்ள உடையும் உடைய ஒருவர் வந்து அவனுக்கு நன்மாராயஞ் சொல்வார் . அவனும் அவருக்கு பதில் நன்மாராயஞ் சொல்லி ,
" நீ யார்? " என்று கேட்பான் அப்போது அவர், " நீ செய்த நல்ல அமல்கள் " என்று சொல்லுவார்
அப்போது....." சுவர்கத்து வாசல்களில் ஒன்றை அவனுடைய கபுறுக்கு நேரே திறந்து விடுங்கள் . சுவர்க்கத்து விரிப்புகளில் ஒன்றை இவன் கபுறில் விரியுங்கள் " என்று ஒரு சப்தம் உண்டாகும் .உடனே மலக்குமார்கள் அப்படியே செய்வார்கள் .
பாவியானவன் கபுறுக்கு , முன்கர் - நகீர் என்னும் இரு மலக்குகளும் , மிக்க கறுத்த மேனிகளையும் , நீல நிறமுள்ள பயங்கரமான கண்களையும், மின்னலைப் போலப் பளீரென்று கண்ணை பறிக்கும் பார்வைகளையும் உடையவர்களாய் , வளர்ந்து நீண்ட ரோமங்கள் தரையில் பட்டு இழுத்துக் கொண்டு வர , இடி இடிக்கும் பெரிய சத்தத்துடன் வந்து , பருத்து , நீண்ட தங்கள் பற்களால் பாவியின் கபுறைத் தோண்டி , மிக்க அமளியுடன் உள்ளே நுழைவார்கள் .

மிக்க பயந்துடன் நடுங்கிக் கொண்டிருக்கும் பாவியை அசைத்து , மேற்கண்ட அத்தனை கேள்விகளையும் கேட்பார்கள் .
எந்தக் கேள்விக்கும் சரியான பதில் சொல்லாமல், தாறுமாறாக பலவிதமாக உளறுவான். அப்போது அந்த இரு மலக்குகளும் அவனைப் பார்த்து , " நீ இப்படி உளறுவாய் என்று எங்களுக்குத் தெரியும் " என்பார்கள்.

உடனே அவனுடைய கபுறின் இருபுறங்களையும் நெருக்கும்படி உத்திரவு பிறக்கும்.
விலா எலும்பின் ஒரு புறம் மற்றொரு விலா எலும்புக்கிடையில் தைத்துக் கொள்ளும் .அந்த வேதனை கியாமத்து நாள் வரையிலும் கொஞ்சம் கூட குறையாமல் நீடித்து நிலைத்திருக்கும்.
பிறகு விகாரரூபமும் , துர்கந்தமும் அருவருப்புமுள்ள உடையையும் உடைய ஒருவர் அவனருகில் வந்து , துன்மாராயஞ் சொல்வார் .அவனும் அவருக்கு பதில் துன்மாராயஞ் சொல்லி,

" நீ யார்? " என்று கேட்பான்
" நான்தான் நீ செய்த கெட்ட அமல்கள் " என்று சொல்வார்.
அப்போது குருடும் , செவிடுமுள்ள ஒரு மிருகம் அவன் மீது ஏவி விடப்பட்டு, அது தன் கையில் இருக்கும் இரும்பு தடியால் அடிக்கும் அதனால் அவன் நொறுங்கி மண்ணோடு மண்ணாவான் .அவனுக்கு மீண்டும் உயிர் உண்டாகும்.

பின்னும் அந்த மிருகம் இரண்டு கண்களுக்கு இடையில் அடிக்கும்.அந்த அடியின் சப்தம் மனிதர்கள் தவிர , மற்ற படைப்புகள் அனைத்திற்கும் கேட்கும் .
உடனே " நரகத்து வாசல்களில் ஒன்றை அவன் கபுறுக்கு நேரே திறந்து விடுங்கள் நரகத்து அக்கினிப் பலகைகளில் இரண்டு பலகைகளைக் கொண்டு வந்து போட்டு அவனைக் கிடத்தாட்டுங்கள் " என்று ஒரு சத்தம் கேட்கும். அப்படியே செய்யப்படும் .

பின் " சுஜா அல் அறகு " என்னும் தொண்ணூற்றொன்பது
சட்டித்தலை பாம்புகளை அவன் மேல் ஏவிவிட்டு கடித்துக் கொண்டும், பிடுங்கிக் கொண்டும் இருக்கும்படி வேதனை செய்யப்பட்டு கியாமத் நாள் வரையும் அந்த வேதனைகளை பாவி அனுபவித்துக் கொண்டேயிருப்பான்.
ர.ரா

" ஜியாரத் "என்கிற ஆத்மார்த்ம சந்திப்பு
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 11)



இறந்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட மண்ணறைக்குச் சென்று ஜியாரத் என்கிற முறையில் அவர்களின் ஆன்மாவை சந்திப்பது அத்தனை அவசியமா ......?

"எவரொருவர் தமது தாய் தந்தையருடைய கபுறுகளை அல்லது அவ்விருவருள் ஒருவருடைய கப்றை
வெள்ளிக்கிழமைகளில் ஜியாரத்துச் செய்வாராயின் , அவர் ஹஜ்ஜு செய்தவரைப் போலாவார் "

"பெற்றோர்களின் கபுறுகளை ஜியாரத்து செய்வாராயின் அவருடைய பிழைகள் பொறுக்கப்படுவதுடன் அவர் நன்றியுடைய நல்லடியாராகவும் எழுதப்படுகிறார் " என்பதாக நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறியுள்ளதாக மிஷ்காத் ஷரீபில் கூறப்பட்டுள்ளது.

" யா ரஸூல்லா! சுவர்க்கத்து வாசற்படியையும் , ஹூருல்ஈன் பெண்ணையும் முத்தமிடுவதாக நான் சத்தியம் செய்து கொண்டேன் .இதற்குப் பரிகாரமென்ன ? "
" உனது தாயாருடைய காலையும், தகப்பனாருடைய முகத்தையும் முத்தமிட்டுக் கொள்! "
" தாயும் , தந்தையும் இல்லாவிட்டால் என்ன செய்வது ? "
" உனது தாய் தந்தையார்களுடைய கபுறுகளை முத்தமிடுவாயாக! "
"அவர்களுடைய கபுறுகளின் அடையாளங்கள் காணப்படாவிட்டால் என்ன செய்வது? "
" இரண்டு கோடுகளை நிலத்தில் கீறி அவற்றில் ஒன்றை தாயின் கபுறாகவும், மற்றொன்றை தந்தையின் கபுறாகவும் எண்ணிக் கொண்டு நீ முத்தமிடு! உமது சத்தியத்தை முறிக்காதீர் !
- நூல் : கன்ஜுல் - இபாது
(அப்போ .. கபுறை முத்தமிடலாம்)
நபி ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: உங்களை (முதலில்) கப்ருகளை ஜியாரத் செய்ய தடை செய்திருந்தேன். (தடை நீக்கப்பட்டது இனிமேல்) அவைகளை ஜியாரத் செய்யுங்கள் " - ஹழ்ரத் புரைதா ரலியல்லாஹு அன்ஹு
நூல்கள்: ஸஹிஹுல் முஸ்லிம் 3995, திர்மிதி, ஹாகிம், அபூதாவூத், இப்னு ஹிப்பான்
கப்றுகளை ஜியாரத் செய்யுங்கள். ஏனெனில், அவை மரணத்தை நினைவூட்டும்!' என்று கூறினார்கள்.
அறிவிப்பவர் : ஹழ்ரத் பூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் 1777

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: கப்ருகளை ஜியாரத் செய்யுங்கள். ஏனெனில் நிச்சயமாக அது இவ்வுலகத்தில் பற்றற்ற நிலையை உண்டாக்கி மறுவுலக வாழ்வைப் பற்றிய நினைவையும் ஏற்படுத்த வல்லது.
நூல்: இப்னு மாஜா-1569, மிஷ்காத் – 154
நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் ஷுஹதாக்களின் கப்ருகளை ஜியாரத் செய்பவர்களாக இருந்தார்கள். மேலும்

அபூபக்கர், உமர், உஸ்மான் (ரலியல்லாஹு அன்ஹும்) ஆகியோரும் அப்படியே செய்பவர்களாக இருந்தார்கள்.
ஆதாரம்: தபரானி 3 – 241

நபிகள் நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: என் தாயின் கப்ரை ஜியாரத் செய்ய என் இறைவனிடம் அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதியளித்துள்ளான். எனவே, நீங்களும், கப்ருகளை ஜியாரத் செய்யுங்கள். ஏனெனில், அது மரணத்தை நினைவுபடுத்தும்.
- ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு
நூல்கள்: முஸ்லிம், திர்மிதி, அபூதாவூது

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் "தமது மனைவிமார்களில் ஆயிஷா நாயகி (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களின் முறை வரும் பொழுதெல்லாம் நள்ளிரவின் கடைசிப் பகுதியில் (தஹஜ்ஜது நேரத்தில்) ஜன்னத்துல் பகீஉக்குச் சென்று ஜியாரத் செய்து அங்கு அடங்கியிருக்கக் கூடியவர்களுக்கு பிழை பொறுக்கத் தேடிவிட்டு வரும் பழக்கத்தை கொண்டர்வர்களாக இருந்தார்கள்".
நூல்: முஸ்லிம் 1 - 313, மிஷ்காத் 154

கண்மணி நாயகம் ஸல்லலாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: எவர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் தனது பெற்றோர்களில் இருவரையோ அல்லது ஒருவரையோ ஜியாரத் செய்து வந்தால் அவரின் பாவங்கள் பொறுக்கப்படுவதுடன் நல்லவர் என்றும் எழுதப்படும்.
நூல்: பைஹகி, மிஷ்காத் - 154

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் மதீனாவில் உள்ள கப்ருகளுக்கு அருகே சென்றார்கள். அப்பொழுது தங்களின் திரு முகத்தை கொண்டு கப்ருவாசிகளின் மீது முன்னோக்கி ஸலாம் கூறினார்கள்.
நூல்: மிஷ்காத் 2 – 407

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் தனது தாயாரின் கப்ரை ஜியாரத்து செய்தார்கள். மேலும் அவ்விடத்திலே அழுதார்கள். அவர்களின் அழுகையை பார்த்து சூழ இருந்த ஸஹாபாக்கள் கண்ணீர் சொரிந்தார்கள்.
நூல்: முஸ்லிம், மிஷ்காத் - 154


நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: எவராவது கப்ருஸ்தானக்களுக்கு சென்று சூரா யாசீன் ஓதினால் கப்ராளிகளை தொட்டும் வேதனை லேசாக்கப்படுகிறது. மேலும் ஓதியவருக்கு அந்த கப்ராளிகளின் எண்ணிக்கையளவு நன்மைகள் கிடைக்கின்றன.
அறிவிப்பாளர்: ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு
நூல்: மிஷ்காத் 4 – 382

அப்துல்லாஹ் பின் அபீ மலீகா ரலியல்லாஹு அன்ஹு கூறுகிறார் :ஒரு நாள் ஆயிஷா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் கப்ருகளை ஜியாரத் செய்து விட்டு வந்து கொண்டிருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் இறைநம்பிக்கையாளர்களின் தாயாரே நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள் என் சகோதரர் அப்துர் ரஹ்மான் பின் அபீ பக்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மண்ணறையிலிருந்து வருகிறேன் என்று பதிலளித்தார்கள். மண்ணறைகளுக்குச் சென்றுவரக் கூடாது என அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தடைசெய்யவில்லையா? என்று அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர்கள் ஆம் முதலில் தடைசெய்திருந்தார்கள். பிறகு அவற்றைச் சந்தித்துவருமாறு ஏவினார்கள் எனக் கூறினார்கள்.
நூல்: ஹாகிம் 1327
அன்னை பாத்திமா நாயகி ரலியல்லாஹுஅன்ஹா ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் ஹம்ஸா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஜியாரத் செய்து வந்தார்கள்.
நூல்: முஸ்னத் அப்துர் ரஸ்ஸாக் 3-572, முஸ்தத்ரக் 1- 377
ஆயிஷா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் புனித ரவ்லா ஷரீஃப் சென்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களையும், அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும் பர்தா அணியாமலேயே ஜியாரத் செய்பவர்களாக இருந்தார்கள். பின்னர் உமர்

ரலியல்லாஹு அன்ஹு அதில் அடக்கம் செய்யப்பட்டபோது பர்தா அணிந்து ஜியாரத்து செய்பவர்களாக இருந்தார்கள்.
ஆதாரம்: மிஷ்காத் – 154
அல்லாமா , முல்லா அலிகாரீ (ரஹ்) அவர்கள் எழுதிய " ஷரஹுஷ் - ஷிபா என்கிற கிதாபில் , " பொதுவாக கபுரு ஜியாரத்தை வேண்டாம் என விலக்குவதானது குப்ரை உண்டாக்கும்" எனக் குறிப்பிட்டுள்ளார்கள் .
ர.ரா

Rahmath Rajakumaran
வர்த்தகக் கூட்டமொன்று வியாபாரத்தை முன்னிட்டுப் பிரயாணப்படுவதற்கு முன்பு சற்குரு ஷைகு அபுல்ஹஸன் கிர்கானீ (ரஹ்) அவர்களிடம் சென்று ,
" நாங்கள் போகும் பாதை பயங்கரமான ஆபத்துக்கள் நிறைந்த இடம் .ஆகையால் பாத்திரமாகப் போய் வர துஆ செய்து அனுப்பும் படி சற்குருவிடம் பைஅத் வாங்கிய முரீது வேண்டினார் .
" உங்களுக்கு ஆபத்து நேரிடின் இந்த
அபுல்ஹஸனை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் " என்று கூறிப் பயணம் அனுப்பி வைத்தார்கள் .
சற்குருவின் இந்த வார்த்தை அவரது முரீது தவிர வர்த்தக கூட்டத்தின் மற்றையோருக்கு ஒரு மாதிரியாக , பெருத்தக் கேடாக நினைத்தனர் .
பல நாள் பிரயாணத்தில் ஒரு நாள் கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களை வழிமறித்துப் பொருள்களைச் சூறையாடினர் .
முரீது மட்டும் , ஷைகு அபுல்ஹஸன் கிர்கானி (ரஹ்) அவர்களை விளித்து உதவி தேடினார் . பொருளுடன் அவர் கொள்ளைக் கூட்டத்தாரின் பார்வையை விட்டும் தப்பினார் . மற்றவர்கள் இறைவனை விளித்து உதவி தேடினர் . அவர்களுடைய பொருள்கள் ஒன்று விடாமல் சூரையாடப்பட்டன .
எல்லோருடைய பொருளும் கொள்ளை போயிருக்க ஒரேவொருவருடைய பொருள் மாத்திரம் தப்பிப் பத்திரமாக இருப்பதையெண்ணி வர்த்தகர்கள் பேராச்சரியப்பட்டு , சற்குருவிடம் வந்தனர்.
" நாங்கள் அல்லாஹ்வைக் கூப்பிட்டு உதவி தேடினோம். பொருளை இழந்தோம் . ஒருவர் மட்டும் உங்களைக் கூப்பிட்டு உதவி தேடினார் . அவருடைய பொருள்கள் பாதுகாக்கப்பட்டது .இதன் காரணம் என்னவென்று நீங்கள் கூறுங்கள் " என்றனர்.
" உங்களை நீங்களே அறியாத போது , நீங்கள் அல்லாஹ்வையும் அறியாது ,
வாக்கு மனம் வேறுபட்டு வெறுமனே அவன் பால் உதவி தேடினீர்கள் . இந்த அபுல்ஹஸனோ தன்னை அறிந்து அதன் மூலம் தன் இறைவனை அறிந்து , வாக்கு மனம் ஒன்றுபட்டு அவன்பால் உதவி தேடினார் . அபுல்ஹஸனை ஞானப்படுத்தி உதவி தேடினால் உங்களுக்காக அபுல்ஹஸன் அல்லாஹ்வின் உதவி தேடுவார் .அவ்வமயம் உங்கள் காரியம் நிறைவேறும் . நீங்கள் அல்லாஹ்வை அறியாத புறத்தில் , என்றும் அவனைக் கூப்பிடும் வழக்கம் போல் ஆயிரம் முறை அழைத்தாலும் யாதொரு பயனுமில்லை"
என்பதாக சற்குரு ஷைகு அபுல்ஹஸன் கிர்கானீ (ரஹ்) அவர்கள் அறிவுறுத்தினார்கள் .
ஆதாரம் : மிர் அத்துல் கவுனைன்
பக்கம் 244
اَلَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ وَمَا بَيْنَهُمَا فِىْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ ۛ اَلرَّحْمٰنُ فَسْـــَٔلْ بِهٖ خَبِيْرًا
அவனே வானங்களையும், பூமியையும், அவற்றிற்கிடையிலுள்ளவற்றையும் ஆறு நாட்களில் படைத்தான்; பின்னர் அவன் அர்ஷின் மீது அமைந்தான்; (அவன் தான் அருள் மிக்க) அர்ரஹ்மான்; ஆகவே, அறிந்தவர்களிடம் அவனைப் பற்றிக் கேட்பீராக.
(அல்குர்ஆன் : 25:59)

கபுறை முத்தமிடலாமா ?
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 12)



முத்தமிடலாம் . ஆதாரம் சொல்றேன்.
ஹஜ்ரத் அமீருல் முஃமினீன் உமர் பாரூக் (ரலி) அவர்கள் , ஹஜ்ருல் அஸ்வத் கல்லை முத்தமிட்டுக் கொண்டு , பிறகு , " "சந்தேகமின்றி நீ ஒரு கல் , உன்னை முத்தமிடுவதால் , நீ நன்மை செய்வதுமில்லை , முத்தமிடாவிட்டால் நீ தீமை செய்வதுமில்லை.நபிகள் நாயகம் ﷺ அவர்கள் உன்னை முத்தமிடாதிருந்தால் , நான் உன்னை முத்தமிட்டிருக்க மாட்டேன் " என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் , " (மஹ்லன் ! யா உமர்) உமர் அவர்களே ! சற்று நிதானியுங்கள் ! நாவைப் பேணுங்கள் ! முத்தமிடுவதால் இந்தக் கல் நிச்சயமாகப் பிரயோஜனத்தைக் கொடுக்கின்றது ; முத்தமிடாவிட்டால் அது நஷ்டத்தைக் கொடுக்கின்றது ". என்று கூறினார்கள் .
அவர்களது அந்தக் கூற்றுக்கு விளக்கம் தரும்படியாக உமர் (ரலி) அவர்கள் கேட்கவே, அலி(ரலி) அவர்கள் ,
" இல்லா மனித்தகத -இன்தர் ரஹ்மானி - அஹ்தா " _ " ரஹ்மானிடம் அறுதிமானம் எடுத்துள்ள வனைத் தவிர " என்று குர்ஆனில் (7: 172) இறைவன் கூறியுள்ளதன் கருத்து யாதெனில் , ஆன்மா உலகில் (ஆலம் அர்வாஹ்வில்) நாம் அல்லாஹ்விடம் , அறுதிமானம் செய்த உறுதிப் பிரமாணம் இந்தக் கல்லின் வாயினுள் வைக்கப்பட்டிருக்கிறது .

அந்த அறுதிமான வார்த்தைப்பாடு , எழுதப்பட்டுள்ள சத்திய நாமாவையே நாம் முத்தமிடுகிறேமேயல்லாது கல்லை அல்ல , நாம் அங்கு காட்டுகின்ற மரியாதை ஒழுக்கம்யாவும் கல்லுக்காக அல்ல .
"ஹஜ்ருல் அஸ்வத் உலகில் அல்லாஹ்வின் கரம் (யமீனுல்லாஹி) என்பதாக நபிகள் நாயகம் ﷺ அவர்கள். திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள் .

"உமர் அவர்களே! இதற்குப் பிறகும் தாங்கள் இதை ஒரு சாதாரணக் கல்தானே என்றே எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் போலும் ! " என்று அலி (ரலி) விளக்கினார்கள் .
இவ்வகமியம் உமர் (ரலி) அவர்களுக்கு வெளிப்பட்டதும் , " அலி இல்லாவிட்டால் இந்த உமர் ஹலாக்காகி இருப்பார் " என்று உமர் (ரலி) அவர்கள் கூறினார்களாம் .
ஸஹீஹில் புகாரி பாகம் 4 பக் 608
அஷிஅத்துல் - லம் ஆத்- தர்ஜுமா மிஷ்காத் .

" கியாமத் நாளில் ஹஜ்ருல் அஸ்வத்துக்கு இரு கண்கள் இருக்கும். அவற்றைக் கொண்டு பார்க்கும்.நாவும் இருக்கும் .தன்னை முத்தமிட்டவர்களைப் பற்றி அது சாட்சி சொல்லும் " என நபிகள் நாயகம் ﷺ கூறினார்கள் என்பதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களைக் கொண்டு - இபுனுமாஜா (ரலி) பைஹக்கீ (ரலி) இருவர்களும் ரிவாயத்துச் செய்துள்ளார்கள்.
மேலும் " அது தன்னை முத்தமிட்டவர்களைப் பற்றி சாட்சி கூறி அவர்களுக்காக ஷபாஅத்தும் செய்யும் . என்பதாக ஆயிஷா (ரலி) - துஹ்பத்துஸ் - ஸாயிரீன் .
ஆகவே மானிட வர்க்கத்தின் அஹ்து நாமா , சத்திய உறுதிப்பாட்டு ரிக்கார்டை
தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் ஹஜ்ருல் அஸ்வத்தை முத்தமிடுவதை ஆதாரமாகக் கொண்டே , அந்தக் கல்லையும் விட மேன்மையான இன்ஸான் காமிலைத் தன்னகத்துள்ளே

அடக்கிப் பெற்றிருக்கக் கூடிய 'கபுறை ' பரக்கத்தை நாடி முத்தமிடுதல் ஆகுமான காரியமே என்பதுதான் ஆரிபீன்களுடைய சொல்லாகும்.

இக்கல்லைக் கொண்டு நன்மை, தீமை உண்டாக்க கூடியதாகயிருந்தால் , அவுலியாக்களின் கபுறுகளை நல்லெண்ணத்துடனும், தூய மனதுடனும் பரக்கத்தைக் கருதி முத்தமிடுவதில் பிரயோஜனம் இல்லாமல் இல்லை .
நபிகள் நாயகம் ﷺ அவர்கள் வீற்றிருந்து குத்பா ஓதிக் கொண்டிருந்த "மிம்பர்" படியை அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் தமது கையால் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள் "
என்பதாக ஷரஹுஷிபா 153 பக் சொல்லப்பட்டிருக்கிறது.
ர-ரா

Rahmath Rajakumaran
அராபிய பழங்குடிகள் பலப்பல கோத்திரங்களாக பிரிந்து , அவர்களுக்குள் ஏற்பட்ட போட்டி , பொறாமையின் காரணமாக என்றென்றும் சண்டையிட்டு இரத்தத்தை சிந்தாத பொழுதுகளாக அவர்களுக்கு என்றுமே விடியவில்லை .இருப்பினும் இறை இல்லம் கட்ட ஒன்றிணைந்தனர் .
ஆலயம் கட்டியெழுப்பட்டது .ஆனால் "ஹஜ்ருல் அஸ்வத் " என்ற சொர்க்கத்து கல்லை கஃபாவின் கிழக்கு மூலையில் பதித்திட , தாங்கள்தான் தாங்கள்தான் என்று அதுவரை அமைதியாக இருந்த கோத்திர வெறி தலைதூக்கியது . இதனால் கஃபாவைச் சுற்றி இரத்த ஆறு ஓடும் என்ற நிலை உருவானது .
இந்நிலையில் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்த மிக வயது முதிர்ந்த ஒருவர் " "நாளை அதிகாலைப் பொழுதில் கஃபாவின் இறைவனை வழுத்தி வணங்க வரும் முதல் நபரிடம் நம் பிரச்சனையைக் கூறுவோம் , அவர் சொல்லும் தீர்ப்பை ஏற்போம் " . என்று கூற மொத்த கோத்திரத்தாரும் ஒப்புக் கொண்டனர் .
இரவெல்லாம் கோத்திரத் தலைவர்கள் கண்காணித்துக் கொண்டு இருக்க ,
மிக அதிகாலைப் பொழுதில் ஒரு உருவம் கஃபா ஆலயத்தில் நுழைந்து இறையை வணங்கி வழுத்தியது.
கோத்திரத் தலைவர்கள் நொறுங்கி உற்று நோக்கி , " முஹம்மது " "முஹம்மது " என்று கூவியது . அத்தனை கோத்திரங்களும் சேர்ந்து அவருக்கு "அல் அமீன் " என்ற பட்டம் கொடுத்து கௌரவித்த அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அப்போதைய வயது 25 தான். தனது துண்டை கீழே விரித்து, ஹஜ்ருல் அஸ்வத் கல்லை கொண்டு வரச் சொல்லி ,அத் துண்டில் வைத்து அத்தனை கோத்திரங்களின் தலைவர்கள் தூக்கி தர நபிகளார் அதனை கஃபாவின் கிழக்கு மூலையில் பதிக்கிறார்கள் .
அன்றைக்கு அரபுலோகத்தில் உள்ள அத்தனை கோத்திரங்களும் ஒரே கூரையின் கீழ் அத் துண்டின் கீழ் ஒன்றிணைந்தனர் . முஹம்மது என்ற நபர் பிறக்கவில்லை என்றால் அரபிகள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மாண்டு போயிருப்பார்கள் என வில்லியம் மூர் போன்ற வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்கிறார்கள்
யா ரசூல்லாஹ்....! நாங்களும் ஆரம்பத்தில் நீங்கள் கொண்டு வந்த ஒரே சுன்னத்தின் அடிப்படியான ஒரே ஜமாத்தாக இருந்தோம் .குர்ஆனையும் , ஹதீஸையும் மன இச்சைப்படி பிரித்து பிரித்து தனித்தனி கொள்கை வகுத்து சிலர் எங்களுக்குள் பிரிவினை ஏற்படுத்தி நாங்கள் அரபு கோத்திரங்களை விட மோசமானவர்களாக ஆகி விட்டோம் .
யா ரசூல்லா...! எங்களை ஒரே சுன்னத்துல் ஜமாத் கொள்கையின் கீழ் இணைப்பீர்களாக !
" ஹஜ்ருல் அஸ்வத் " தைப் பார்க்கும் பொழுதெல்லாம் , மேற்கண்ட துஆவை கேட்பதையே என் மனம் நாடுகிறது.
ர.ரா

கலிமா
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 13)



கலிமா பற்றியும் எழுதுங்கள் என்று நண்பர் RameesDeen பின்னூட்டத்தில் கேட்டுக் கொண்டதற்கு
,
#RameesDeen இன்ஷா அல்லாஹ் . கலிமா வெறும் ஈரடிகள் கொண்ட மாதிரி சின்ன விஷயம் அன்று . அது மிகப் பெரிய விஷயம் . அதனால் இறைவன் குர்ஆனில் ,
اَلَمْ تَرَ كَيْفَ ضَرَبَ اللّٰهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِى السَّمَآءِۙ
(நபியே! "தவ்ஹீத் கலிமா" என்னும்) நல்ல வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு (மிக்க மேலான) உதாரணத்தைக் கூறுகிறான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? (அவ்வாக்கியம்) வானளாவிய கிளைகளையும் (பூமியில்) ஆழப்பாய்ந்த வேரையும் உடைய ஒரு நல்ல மரத்திற்கு ஒப்பாக இருக்கிறது.
(அல்குர்ஆன்: 14:24)

பொதுவாக அரபிச்சொற்களில் புள்ளி (நுக்தா) உள்ள எழுத்துக்கள் கலந்தே வரும் . ஆனால் இதயத்தின் கரும் புள்ளிகளைப் போக்கும் மாமருந்தாகிய மூவெட்டு எழுத்துக்களைக் கொண்ட கலிமாவில் புள்ளியுள்ள எழுத்துக்களே இடம் பெறவில்லை. இது நம்மை சற்று சிந்திக்க வைக்கிறது.

ஷரியத் , தரீக்கத் . அகீகத் , மஃஹ்ரிபத் ஆகிய 4 நிலைகளில் கலிமா பார்க்கப்படுகிறது .இது அசாதாரணமானது. சிந்திக்க ஏதுமில்லாத வெறும் நம்பிக்கை மட்டும் அடிப்படையாகக் கொண்டது . சிந்தனைகள் இல்லா சிந்தனை .இதை எப்படிச் சொல்வது ? இதனால்தான் இதை புரிய வைக்க முடியாது. புரிய வைக்க முற்பட்டால் தப்பர்த்தம் கொள்ள பல வழிகள் பிறக்கும் . அதனால்தான் " பைஅத் " தில் மானசீகமாக சொல்லி தரப்பட்டு, 'ஆயுளில் 1 லட்சம் தடவையாவது ஓதிக் கொள் ' என்று அவரின் குருமார்கள் வழிகாட்டி , வழிவிட்டு ஒதுங்கிக் கொள்கிறார்கள் .

வெளிப்படையான இந்த கலிமாவை ஏன் மானசீகமாக ரகசியமாக செய்குமார்கள் போதிக்க வேண்டும் ?
அதனை சற்று மறைத்து ரகசியமாக போதிக்கும் போது அதன் பொருள் விரியும் . விரிந்த பொருளால் எல்லையில்லாத பெருவெளியில் ஆன்மா ஆனந்தம் பெறும்
இறக்கை முளைத்த பிறகு தாய்ப்பறவை இல்லாமல் ஏகாந்த வானத்தை குஞ்சு ஏறிட்டு பார்த்து பறந்து கொள்ள வேண்டியது அதனதன் ஆற்றலைப் பொறுத்து .
பொது தளத்தில் எழுதுவதற்கு சற்று யோசிக்க வேண்டும் . சில கேள்விகளுக்கு பதில் சொன்னாலும் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது .கூடாது .அது உணர வேண்டிய விஷயங்கள் .

கலிமாவின் கட்டமைப்புகள் வித்தியாசமானவை .
அதன் சொல் அமைப்பை ஒருமைப்பட்டோடு உச்சரித்ததும் உணரும் நிலை பரவசமானது.
ஏகாந்த நிலையில் காணும் காட்சிகளுக்கு மொழியில் வார்த்தைகள் இல்லை . காரணம் கண்ட காட்சி கண்களால் அல்ல ; ஆன்மாவால் . இதனால்தான் இதனை விவரிக்க முடியவில்லை .
பய பக்தியுடையோர்கள் மறைவானவற்றை உண்டென்று ஈமான் கொள்வார்கள் (குர்ஆன்)
இவங்களுக்குத்தான் உணர்த்த முடியும் . அதுவும் எழுதி சொல்ல முடியாது.

இக் கலிமாவினை நாவினால் உச்சரிக்கின்ற போது இதழ்களைக் குவிக்கவோ , மூடவோ தேவையில்லை.

இதழ்கள் கூட இயங்காத மரண வேளையில் கூட இதனை மொழிவதற்கு ஏற்ற முறையில் இறைவன் இக் கலிமாவின் சொற்றொடர்களை கட்டமைத்துக் கொடுத்துள்ளான் .
உடல் ஆரோக்கியமாக ஒருமித்த மனோ நிலையில் இறைவனின் ஒரு சில திக்ரியாத்துக்களை தியானித்துக் கொண்டிருக்கும் பரவச ஐக்கிய நிலையில் 'இப்போது மரணித்தால்தான் என்ன ' என்று ஆன்மா யோசிக்க வைக்கும் .
அந்த வகையில் " லாயிலாஹ இல்லல்லாஹ் " என்ற இந்த கலிமா விற்கு அந்த உணர்வு ஏற்படும் .
எனவேதான் மரணப்படுக்கையில் இருப்பவர்களுக்கு இதனை ஓதிக் காண்பிக்கப்படுகிறது.
ர.ரா

ஈஸால் ஸவாப் என்றால் என்ன?
இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 14)



ஈஸால் ஸவாப் என்பது உயிரோடுள்ளவர்கள் மரணித்தவர்களுக்காச் செய்கின்ற நல்லமல்களின் நன்மை அவனைச் சென்றடைதல், நன்மையை சேர்த்து வைத்தல் தொடர்பாக தர்மம், நோன்பு, ஹஜ், உம்ரா, திருக்குர்ஆன், கத்தம், பாதிஹா, துஆ போன்றவற்றின் நன்மைகளை மரணித்து கப்ராளிகலாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் பக்கம் சேர்த்து வைப்பதாகும்.

"கத்தம்" என்ற சொல் "கத்ம் " அல்லது "கத்முன் " என்ற சொல்லின் மருவிய சொல்லாகும். இதைச் சரியாக சொல்வதென்றால் " கத்ம் கத்ம் " என்றால் "முடித்தல் முடித்தல் "என்று பொருள். "கத்முல் குர்ஆன் " என்றால் குர்ஆனின் 30 பாகங்களையும் ஓதி முடித்து பின் அதன் நன்மையை மரணத்தவர்களுக்கு சேர்த்து வைப்பதாகும் .
இஸ்லாத்தின் பார்வையில் "ஈஸால் ஸவாப்" எனும் உயிரோடுள்ளவர்கள் இறந்தவர்களுக்காகச் செய்கின்ற நல்ல அமல்களின் நன்மைகள் அவர்களுக்குப் போய் சேருமா?
உயிரோடுள்ளவன் மரணித்தவனுக்காகச் செய்கின்ற நல்லமல்களின் நன்மை அவனைச் சென்றடைதல் தொடர்பாக தர்மம், நோன்பு, ஹஜ், துஆ, போன்றவற்றின் நன்மை அவனைச் சென்றடையும் என்பதை ஏற்றுக்கொள்ளும் வஹ்ஹாபிகள் திருக்குர்ஆன், கத்தம், பாதிஹா போன்றவற்றின் நன்மை மாத்திரம் அவனைச் சென்றடையாதென்று கத்தம் பாத்திஹா பித்அத் என்று கூறுவது விந்தையயானதாகும்.

உயிரோடுள்ளவர்கள் இறந்தவர்களுக்காகச் செய்கின்ற நல்லமல்களின் நன்மைகள் அவர்களுக்குப் போய் சேரும் என்பதற்காக ஆதாரங்கள்
நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள் :

"ஒரு முஃமினான மனிதன் கற்பித்த கல்வியும், (எழுத்து மூலம் நூல்வடிவில் உலகெங்கும்) அவன் பரப்பிய கல்வியும், அவன் விட்டுச்சென்ற ஸாலிஹான பிள்ளைகளும், (பள்ளிவாசல்கள், மத்ரஸாக்களுக்கு) வாரிஸாக்கிய குர்ஆன் ஷரீபும், அவன் கட்டிக்கொடுத்த பள்ளியும், வழிப்போக்கர்களுக்கு அவன் அமைத்துக் கொடுத்த தங்கும் விடுதியும், அவன் வாய்க்கால் வெட்டி ஓடச்செய்த ஆறும், அவன் இப்பூவுலகில் வாழும்போது கொடுத்து உதவிய தானங்களும் கண்டிப்பாக அவனின் மௌத்துக்குப் பிறகும் அவனைப் போய்ச்சேரும் "
ஹழ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு
நூல்கள்: இப்னுமாஜா 242, பைஹக்கி 3448, ஷுஅபுல் ஈமான், மிஷ்காத் 254

ஒரு மனிதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து யா ரஸூலல்லாஹ் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் பெற்றோர்கள் மரணித்த பின்பு அவர்களுக்காக பிள்ளைகளாகிய நாங்கள் செய்ய வேண்டிய நன்மைகள் ஏதேனும் இருக்கிறதா ? என்று கேட்டார்.
அப்போது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் ஆம் இருக்கிறது அவர்களுக்காக தொழுது, நன்மை சேர்த்தல், அவர்களுக்காக பிழைபொறுக்கத் தேடுதல், அவர்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றுதல், அவர்களின் சுற்றத்தினர்களுடன் சேர்ந்து நடந்து கொள்ளுதல், அவர்களின் தோழர்களுக்கு சங்கை செய்தல் என்று கூறினார்கள்.
நூல்கள்: ஆபூதாவூத் , இப்னு மாஜா , மிஷ்காத் பக்கம் - 420 , பாபுல் பிர்ரி வஸ்ஸிலா

நிச்சயமாக அல்லாஹு தஆலா ஒரு மனிதனுக்கு அவன் பிள்ளை செய்யும் இஸ்திஃபார் மூலம் அவரின் அந்தஸ்த்தை சுவனத்தில் உயர்த்துகிறான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.
நூல்: இப்னுமாஜா ஹதீஸ் எண் 3660, மிஷ்காத் ஹதீஸ் எண் 2354

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒரு மனிதன் வந்து 'நாயகமே! எனது தாயார் (எது குறித்தும்) வஸிய்யத் செய்யாமல் திடீரென மரணம் அடைந்து விட்டார்கள். அவர்கள் பேசி இருந்தால் ஏதேனும் தானதர்மங்கள் செய்திருப்பார்கள். ஆகையால் அவர்களுக்காக நான் ஸதக்கா செய்தால் அவர்களுக்கு நன்மை உண்டா?' என்று கேட்டார்.
அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறினார்கள் என்று ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள்.
நூல்கள்: புகாரி ஹதீஸ் எண்: 1388, 2760, முஸ்லிம் ஹதீஸ் 1004 அபூதாவூத் ஹதீஸ் எண் 2881

ஸய்யிதுனா ஸஃது இப்னு உபாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாயார் வபாத்தான நேரத்தில் ஸஃது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியூர் சென்றிருந்தார்கள்.
எனவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து 'நாயகமே! நான் வெளியூர் சென்றிருந்த வேளையில் எனது தாயார் மரணமடைந்து விட்டார்கள். அவர்களைத் தொட்டும் நான் ஸதக்கா செய்தால் அது அவர்களுக்கு பயன் அளிக்குமா? என்று கேட்டார்கள்.
'ஆம். பயனளிக்கும்' என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அப்போது 'நிச்சயமாக எனது தோட்டம் அவர்களுக்காக ஸதக்காவாக இருக்கும் என்று தாங்களை சாட்சியாக்குகிறேன்' என்று ஸஃது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் என்று இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

நூல்கள்: புகாரி ஹதீது எண்: 2756, 2762, 2770, 2761, நஸாயி பாகம் 6 பக்கம் 250 பாபு இதா மாத்த அல் புஜ்அத்த ஹல் யுஸ்த்தஹப்பு லி அஹ்லிஹி....கிதாபுல் வஸாயா
ஒரு பெண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நாயகமே! எனது தாயார் ஹஜ் செய்யாத நிலையில் மரணமடைந்து விட்டார்கள். அவர்களைத் தொட்டும் நான் ஹஜ்ஜு செய்யலாமா? என்று கேட்டார்.
ஆம். செய்யலாம். அவர்களுக்காக நீர் ஹஜ்ஜு செய்வீராக!' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
ஹழ்ரத் புரைதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்
திர்மிதி ஹதீஸ் எண்: 667 பாபு மா ஜாஅ பில் முதஸத்திகி கிதாபுஸ்ஸகாத்

ஒரு மனிதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நாயகமே! எனது சகோதரி ஹஜ் செய்வதற்கு நேர்ச்சை செய்திருந்தாள். ஆனால் அவள் மரணித்து விட்டாள் என்று கூறினார்.
அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களின் மீது கடன் இருந்தால் நீர் அதை நிறைவேற்றுவீரா? என்று கேட்டார்கள். அதற்கு ஆம் என்று அவர் பதில் கூறினார்.

அப்படியானால் அல்லாஹ்வுக்கு (செலுத்த வேண்டிய கடனை) நிறைவேற்றிவிடுவாயாக. அவன் நிறைவேற்றப்படுவதற்கு மிகவும் தகுதியானவன் என்று கூறினார்கள்.
நூல்: புகாரி ஹதீஸ் எண்: 6699 பாபு மன் மாத்த வஅலைஹி நத்ருன் கிதாபுல் அய்மானி வந்நுதூரி

நிச்சயமாக ஒரு மனிதர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்து நாயகமே! எனது தாயார் இறந்து விட்டார்கள். அவர்கள் மீது ஒரு மாத நோன்பு (நிறைவேற்றப்பட வேண்டியது) இருக்கிறது. அவர்களைத் தொட்டும் நான் அதை நிறைவேற்றலாமா? என்று கேட்டார்.
அப்போது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மனிதரைப் பார்த்து 'உனது தாயார் மீது கடன் இருந்தால் நீர் அதை அவர்களைத் தொட்டும் நிறைவேற்றுவீரா? என்று கேட்டார்கள். அதற்கு 'ஆம்' என்று பதில் கூறினார். அப்படியானால் அல்லாஹ்வின் கடனாகிறது நிறைவேற்றப்படுவதற்கு மிக ஏற்றமாக இருக்கிறது என்று கூறினார்கள்.
ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு
நூல்: முஸ்லிம் ஹதீஸ் எண்: 1148-155 பாபு கலாயிஸ் ஸியாமி அனில் மய்யித்தி கிதாபுஸ் ஸியாம்

ஒருவர் மீது கடமையான நோன்பு இருக்கும் நிலையில் அவர் மரணித்துவிடுவாராயின் அவரைத் தொட்டும் அவரின் பொறுப்பாளர் நோன்பு வைக்க வேண்டும் என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.
நூல்: முஸ்லிம்,ஹதீஸ் இலக்கம்– 1147,பாடம் - கிதாபுஸ்ஸியாம்

ஸய்யிதினா அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருமுறை இரு ஆடுகளை குர்பானி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.
அதைக் கண்ட ஸய்யிதினா ஹனஷ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து ஏன் இரண்டு குர்பானி கொடுத்தீர்கள் என்று கேட்டார்கள்.
அதற்கு அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்னிடம் தமக்காக ஒரு குர்பானி கொடுக்குமாறு வஸிய்யத் செய்திருந்தார்கள். ஆகையால் இவ்விரண்டில் ஒன்று அவர்களுக்கும் எனக்கும் என்று கூறினார்கள்.
அபூதாவூத் ஹதீது எண்: 2790, திர்மிதி ஹதீது எண்: 1495 , மிஷ்காத் ஹதீது எண்: 1462

யாரேனும் வந்து காப்பாற்ற மாட்டார்களா? என்ற எண்ணத்தில் நீரில் மூழ்கியவன் தத்தளிப்பது போல கப்ரில் மரணித்த மய்யித்து தனது தந்தை அல்லது தனது தாய் அல்லது சகோதரன் அல்லது நண்பன் ஆகியோரிடமிருந்து துஆவை எதிர்பார்க்கிறது.
அப்படி ஏதேனும் ஒரு துஆ அந்த மய்யித்தை சென்றடையுமானால் அதை துன்யா மற்றும் அதில் உள்ளவற்றை விட மிகப் பிரியமாக கருதுகிறது.

நிச்சயமாக அல்லாஹு தஆலா பூலோகவாசிகளின் பிரார்த்தனை மூலம் கப்ருவாசிகளுக்கு மலைகளைப் போன்று ரஹ்மத்துகளை நுழைவிக்கிறான். இறந்தவர்களுக்காக பிழைபொறுக்கத் தேடுவது உயிரோடு இருப்போர் மரணித்தவர்களுக்காக வழங்குகின்ற சன்மானமாகும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக செய்யிதினா இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.
நூல்கள்: பைஹகி ஹதீது எண் 7904, மிஷ்காத் ஹதீது எண் 2355 பக்கம் 206 பாபுல் இஸ்திஃபார், அத்தத்கிரா பாகம் 1 பக்கம் 103 பாபு மா ஜாஅ பீ கிராஅத்தில் குர்ஆனி இந்தல் கப்ரி ஹாலத்தத் தபனி வ பஃதஹு

யாராவது ஒருவன் மையவாடிக்கு பக்கத்தால் சென்று 11 தரம் ஸூறதுல் இக்லாஸ் – குல்ஹுவல்லாஹு அஹத் என்ற அத்தியாயத்தை ஓதி அதன் நன்மையை மரணித்தவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவானாயின் அவனுக்கு மரணித்தோரின் எண்ணிக்கப்படி நற்கூலி வழங்கப்படும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதாக ஸெய்யிதுனா அலீ (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.
நூல்: கன்சுல்உம்மால்,பக்கம் 2059, ஹதீஸ் இலக்கம்-42596

கப்ருக்குச் சென்றால் பாத்திஹா சூராவையும் முஅவ்வித்தைனியையும் குல் ஹுவல்லாஹு அஹதையும் ஓதி அதன் நன்மையை கப்ராளிகளுக்குக் சேர்த்து வையுங்கள் . கண்டிப்பாக அது அவர்களை சென்றடையும் என்று அஹமத் இப்னு ஹம்பலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூற நான் கேட்டேன் .
அறிவிப்பவர் : ஹழ்ரத் அஹ்மதுல் மரூஸி

நூல்: மிர்காத் - பாகம் - 2 , பக்கம் - 381 . இஆனா பாகம் 2 (பஸ்லுன் பிஸ் ஸலவாத்தி அல ல் மய்யித்தி)

கண்மணி நாயகம் ஸல்லலாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: உங்களில் மௌத்தானவர்களுக்கு சூரத்துல் யாசீனை ஓதுங்கள்.
நூல்கள்: அபூதாவூத், இப்னு மாஜா, பைஹகி, மிஷ்காத் - 141

கண்மணி நாயகம் ஸல்லலாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: உங்களில் யாரேனும் மரணம் ஆகிவிட்டால் அவரை அடக்குவதில் தாமதம் செய்யாதீர்கள். அவரது தலை மாட்டில் சூரத்துல் பகராவின் ஆரம்பத்தையும், அவரது கால்மாட்டில் பகராவின் கடைசி ஆயத்தையும் ஓதுங்கள்.
ஹழ்ரத் உமர் (ரலியல்லாஹு அன்ஹு)
நூல்கள்: மிஷ்காத் - 149, பைஹகி, ஷுஹ்புல் ஈமான்

கண்மணி நாயகம் ஸல்லலாஹு அலைஹிவஸல்லம் அன்னவர்கள் கூறினார்கள்: எவராவது கப்ர் ஸ்தானங்களுக்கு சென்று யாசீன் சூராவை ஓதினால் கப்ராளிகளை தொட்டும், வேதனை லேசாக்கப்படுகிறது. மேலும் அவருக்கு அந்த கப்ராளிகளின் எண்ணிக்கை அளவுக்கு நன்மைகள் கிடைக்கின்றன. (நூல் மிர்காத் 4 - 382)

ஆகவே இதுவரை கூறப்பட்ட ஆதாரங்கள் மூலம் இறந்துவிட்ட பெற்றோர்களுக்கு பிள்ளைகள் செய்கின்ற நற்காரியங்களும், இறந்து போன பிள்ளைகளுக்காக பெற்றோர்கள் செய்கின்ற நற்காரியங்களும், இறந்து விட்ட தனது உடன் பிறந்த சகோதரனுக்காக அவனுடைய உடன்பிறந்த சகோதரன் செய்யும்' நற்காரியமும், இறந்துவிட்ட ஒரு நண்பனுக்காக அவன் நண்பன் செய்யும் நற்காரியமும், ஓர் இறந்து விட்ட முஃமினான சகோதரருக்காக மற்றொரு முஃமினான சகோதரர் (அவ்விருவருக்கிடையே எவ்வித உறவு மற்றும் நட்புமின்றி) செய்யும் நற்காரியமும், ஒரு மரணித்துவிட்ட மார்க்க அறிஞருக்காக (அவரிடம் பயின்ற மாணவர்கள் மற்றும் அவருடைய நல்லுபதேசதைக் கேட்டு அதன்படி நடந்து வந்த பொதுமக்கள் மூலம்) அவர் கற்பித்த கல்வியின் பயனும் அவர்களைப் போய் சேரும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ள எல்லாம் வல்ல கிருபையாளன் நல்லுதவி புரிவானாக ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்.
" செத்தவனுக்கு கத்தம் எதற்கு? "

ஈஸால் தவாப் பற்றி ஓர் ஆய்வு
- அல்ஹாஜ் A. அப்துர் றஊப் மிஸ்பாஹீ_ பஹ்ஜீ - இலங்கை
இறைநேசர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களின் வாரிசா ?
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 15)



அல்லாஹ்வின் கட்டளைகளையும் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் போதனைகளையும் சிரமேற்கொண்டு "தீன்" எனும் சன்மார்க்க நெறியில் பிறழாமல் நடந்து , ஷரீஅத் - தரீகத் - ஹகீகத் எனும் படித்தரங்களைப் படிப்படியாக கடந்து, இறுதியில் மஅரிபத் எனும் சாசுவத

பேரின்ப வீட்டையடைந்து , நித்திய ஜீவனைப் பெற்றவர்களே அல்லாஹ்வின் அவுலியாக்கள் என்கிற இறை நேசர்கள் ஆவார்கள்.

" நான் கல்வியின் பட்டணம், அலி அதன் தலைவாயில் " என்பதாக நபிகள் நாயகம் ﷺ தங்களது வாரிசாக செய்யிதுனா அலி (ரலி) அவர்களைச் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.
" அறிஞர்களே நபிமார்களின் வாரிசுகள்" என்பதாக நபிகள் நாயகம் ﷺ அவர்களின் வாக்கியம்.
" என்னுடைய சமூகத்தார்களிலுள்ள அறிஞர்கள் பனீ இஸ்ராயீலுள்ள நபிமார்களைப் போன்றவர்களாவர் " என்பதாக நபிகள் நாயகம் ﷺ கூறியுள்ளார்

"எனது ஸஹாபாத் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றுள்ளார்கள் அவர்களுள் எவரைக் கொண்டு பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழி பெற்றவர்களாவீர்கள் " என்பதாகவும்
நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் .


நபிகள் நாயகம் ﷺ அவர்களின் வாரிசாகவும், மெஞ்ஞான அறிவின் தலை வாயிலாகவும் திகழக்கூடிய செய்யிதுனா (அலி) அவர்கள் , மற்றும் ஸஹாபாக்கள் , இன்னும் வேறு பல பெரியார்களில் நின்றும் ஆரம்பமான ஆன்ம சந்ததியாகிய " ஸில்ஸிலாவின் ' என்னும் சங்கிலித் தொடர்பு கொண்டு ,அனுபவ வழிகளைப் பற்றிய மார்க்கங்களைத் தெரிந்தொழுகிய காரணத்தால், **" இல்முல்லத்துன்னீ "** எனும் இறை சார்பிலிருந்து அருளப்படும் மெஞ்ஞானபாக்கியம் பெற்றவர்கள்.
நபிமார்கள் ' **முஃஜிஸாத்து** ' எனும் பேற்புதங்களை காண்பித்ததைப் போல் இவர்கள் **'கறாமாத்து '** எனும் அற்புதங்களைச் செய்து காட்டினார்கள் .

நபிகள் நாயகம் ﷺ அவர்களின் தீனை உலகெங்கும் கொண்டு சென்றவர்கள் அவுலியா என்ற இவர்களே .இவர்களே
நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உண்மை வாரிசுகள் .பிரதிநிதிகள்
" உமது இறைவன் புவியில் நிழலை எவ்வாறு பரப்பியிருக்கின்றான் என்பதை நீர் பார்க்கவில்லையா"
- குர்ஆன் (25: 45) எனவும் ,
" பூமியை நாம் விரிப்பாக்கி அதில் மலைகளை முளைகளாய் ஆக்கவில்லையா?
குர்ஆன் (78 : 6, 7) இதில் நிழல் (ளில்லு) எனவும் மலை (ஜிபால்) எனவும் குர்ஆனில் கூறுவது இந்த அவுலியாக்களைப் பற்றிய குறிப்பே ஆகும் .
(ரூஹுல் பயான் 4 வது பாகம் 199 பக், 10-வது பாகம் பக் 293)
"எனது அடியான் நபிலான வணக்கங்களையும் விருப்புடன் பேணிச் செய்பவனாக நீங்கா வண்ணமாகி எனது முடுகுதலைப் பெறும் வண்ணம் என்னை சதா நெருங்கி நெருங்கி நான் அவனே நேசிக்கும் அளவிற்கு ஆகிவிடுகிறான்.

நான் அவனை நேசித்து விட்டேனேயானால் , அவன் கேட்கும் காதாகவும் – பார்க்கும் கண்ணாகவும் – பிடிக்கும் கரமாகவும் – நடக்கும் பாதமாகவும் நானே ஆகிவிடுகிறேன் “
என்று அல்லாஹு தஆலா கூறுவதாக ஹதீது குத்ஸியில் வந்துள்ளது .
(ஸஹீஹுல் புகாரி)

பர்லான வணக்கங்களைச் செய்வதுடன், நபிலான வணக்கங்களைக் கொண்டும் , அவன் மீது பிரியம் வைத்து கலப்பற்ற வணக்கமாக அவனளவில் பனாவாகி இரண்டற்ற ஒன்றாகி விட்ட நிலையில் , அவருடைய செவி, கண், மூக்கு, நாக்கு, கை, கால் இன்னும் இதர உறுப்புகளோடு அவரது உடல் அனைத்தும் அவனுள்ளாகி விட்ட பின் அவரிடம் அவனது சொல் , செயல் வெளியாகும் தளங்களாகின்றன .
இந்த நிலையுடைய மனிதரின் இறப்புக்கு பின் கபறின் மண் அவரை அரித்து அவரை மண்ணோடு மண்ணாக்கி விடுமா என்னே ?
இப்பேர்பட்ட இறைநேசர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களின் வாரிசாக பரிணமிப்பதில் சந்தேகம்தான் உங்களுக்கு உண்டா ?

மரணத்திற்குப் பிறகும் உயிர் வாழ்வு
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 16)



وَلَا تَقُوْلُوْا لِمَنْ يُّقْتَلُ فِىْ سَبِيْلِ اللّٰهِ اَمْوَاتٌ بَلْ اَحْيَآءٌ وَّلٰـكِنْ لَّا تَشْعُرُوْنَ
அன்றி, அல்லாஹ்வுடைய பாதையில் போர் புரிந்து (எதிரி களால்) வெட்டப்பட்டவர்களை இறந்தவர்கள் எனக் கூறாதீர்கள். மாறாக, (அவர்கள்) உயிரோடு இருக்கிறார்கள். ஆனால் (அதை) நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள்.
(அல்குர்ஆன்: 2:154)

ஹிஜ்ரி 1350 துல் ஹஜ் மாதம் 1932 ஏப்ரல் மாதம் ஈராக் நகரில் நபித்தோழர்களான ஹுதைபா (ரலி) , ஜாபிர் (ரலி) அவர்களின் புனித உடல்கள் தோண்டி எடுக்கப்படுகிறது .
காரணம் மண்ணறையில் தஜ்லா நதி வெள்ளம் உட்புகுவதாக முதலாம் பைசல் மன்னர் கனவிலும் தலைமை முஃப்தீ கனவிலும் நபித்தோழர்கள் சொன்னதாக இருவரும் கூற 1400 வருடத்திற்கு முந்தைய கபர்களை தோண்டிய பொழுது அவ்வுடல்கள் சற்று முன் அடக்கப்பட்டதாக இருந்தது அவ்விருவரையும் பாக்தாத்திலிருந்து 40 மைல் தொலைவில் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் அடக்கஸ்தலத்திற்கு பக்கத்தில் மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்டது .இந்த நிகழ்ச்சியை 5 லட்சம் பேர் பார்த்ததாக மஆரிஃப் மாத இதழ் ஜன 79 . ஆஜம்கட் உ . பி
இப்போது யூதர்களின் கைக்கூலியாக சில நவீனத்துவக் கொள்கைக்காரர்களால் நபித் தோழர்களான ஸஹாபிகளின் கபறுகளை தரைமட்டமாக்க துணிந்தனர் . அப்படி நபித்தோழர்களின் மண்ணறை உடைத்தபோது , அந்த கபுறுகளில் துயில் கொண்டிருப்பதை காணமுடிந்தது

1) sahabi e Rasool a.s - Hajr bin Adi (R.a) grave and body distry by Yazzdi Fores
(ஹஜ்ரத் ஹஜ்ர் பின் அதீத் (ரலி) அவர்கள்
2) Hazarat Zubair bin Qais (RA) சுபைர் பின் கைஸ் (ரலி) அவர்கள்
1400. வருடங்களுக்கு முன்னால் புதைக்கப்பட்டவர்கள்
இவ்விருவர்களின் மக்ஃபூ ராவை உடைத்து அவர்களின் உடலை சேதப்படுத்தியதை மேற்கண்ட வலைதளத்தில் பார்க்கவும்

இது பற்றி குர்ஆனில் அல்லாஹ் ,
"அல்லாஹ்வின் பாதையில் போரிட்டு கொல்லப்பட்டவர்களை இறந்தவர்கள் என நீங்கள் ஒரு போதும் எண்ண வேண்டாம் அவர்தம் இறைவனிடத்தில் நிச்சயமாக உயிரோடு இருக்கின்றார்கள் அன்றி அவர்களுக்கு உணவும் அளிக்கப்படுகிறது. தன் அருள் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள்"
திருக்குர்ஆன் (3:169, 170)

அல்லாஹ்வுடைய பாதையில் வெட்டப்பட்டவர்கள் மட்டும் அல்ல, தம்முடைய நப்ஸுடன் ஆத்மார்த்தமாக போர் செய்து அதை வீழ்த்தினாலும் சரி இரண்டுமே ஷஹீதுதான் (இறந்தவர்கள் அல்ல) நபித் தோழர்கள் மட்டுமல்ல மிகச் சாதாரணமாக வாழ்ந்த அல்லாஹ்வின் நல்லடியார்களின் உடலை மண் தின்னாமல் பாதுகாக்கிறான் என்பதற்கு சாட்சியாக

வங்கதேசத்தில் ரங்க்பூர் மாவட்டம் கஷ்மார்கா என்ற கிராமத்தைச் சேர்ந்த பாட்டி ஆயிஷா காத்தூன் 1997 ஆம் ஆண்டில் 106 வயதில் இறந்தார் 6 வருடம் கழித்து தன் 3 மகன்களின் கனவில் தனித்தனியாக தோன்றி , " ஆற்றில் வெள்ளம் வரும் போது நான் இருக்கும் இடத்தில் தண்ணீர் புகுந்து ஓடுகிறது எனவே என்னை இடம் மாற்று " என்று சொல்ல , மகன்கள் தத்தம் கனவில் தாயார் சொல்ல , ஊர் ஜமாத்தார்கள் முன்னிலையில் தாயார் அவர்களின் புனித உடலை மேட்டுப்பாஙகான இடத்தில் மாற்றியமைக்கப்பட்டது .ஆதாரம் : தினமலர் 4.9. 2003.

" (வீழ்ச்சிஅடைந்து) மரணித்தவர்களாக இருந்தவர்களில் எவரை நாம் உயிர்ப்பித்து மனிதர்களுக்கிடையில் நடமாடுவதற்குரிய ஒளியையும் கொடுத்திருக்கின்றோமோ அவர் , இருளில் சிக்கி அதிலிருந்து வெளியேற முடியாமலிருப்பவனுக்குச் சமமாவானா ? இவ்வாறே நிராகரிப்பவர்களுக்கு அவர்களுடைய தீய செயல்கள் அழகாக்கப்பட்டு விட்டன "
திருக்குர்ஆன் (6 : 122)

(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 17)



நமது பூமி 14 கோடியே 89 லட்சத்து 40 ஆயிரம் சதுர கி.மீ நிலப்பரப்பும் ,
36 கோடியே 11 லட்சத்து 32 ஆயிரம் சதுர கி.மீ நீர்ப் பரப்பும் கொண்ட பெரிய பூமி என்று நாம் நினைத்துக் கொண்டாலும், பர்ஜக் என்ற கபுறுடைய உலகம் பூமியை விடவும் பெரிது !
பர்ஜக் என்கிற பெரிய உலகத்தின் வாயில் 'கபுறு ' என்ற சின்ன மண்ணறையில் இருந்துதான் துவங்குகிறது !
" நபிமார்கள் ஜீவனுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் கபுறுகளில் தொழுது கொண்டுயிருக்கிறார்கள் " என்று அனஸ் (ரலி) அவர்கள்
நூல் : பைஹகீ
"மூஸா (அலை) அவர்கள் செம்மை நிறமான மேட்டின் மீதுள்ள கபுறில் நின்று தொழுது கொண்டிருந்ததை மிஃராஜ் உடைய இரவில் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கண்டார்கள்
நூல் : முஸ்லிம்
" நபிமார்கள் ஷுஹதாக்கள் அவுலியாக்கள் ஆகியோர்கள் ஹயாத்தானவர்கள் அவர்களுடைய கபுறுகளில் அவர்கள் தொழுது கொண்டும், ஹஜ்ஜு செய்து கொண்டும் இருக்கிறார்கள் !
- அல்புதூஹாத்துல் அஹ்மதிய்யா
90-வது பக்கம்

மிஹ்ராஜின் போது இஸ்ரா என்கிற நிலத்திற்கு இணையான பயணத்தின் போது , நபி மூஸா (அலை) அவர்கள் காதில் கையை வைத்து தல்பியாச் சொல்லிக் கொண்டு அர்ஜுக் ஒடையை கடந்து கொண்டிருப்பதையும் ,

நபி யூனுஸ் (அலை) அவர்கள் சென்னிற ஒட்டகையில் ஷாஷாலுபத் என்னுமிடத்தில் ஓடையைக் கடந்து சென்று கொண்டிருப்பதைக் கண்டதாக நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் .

ஆதாரப்பூர்வமான ஹதீஸ் நூலான தாரிமியில், இமாம் அபூ முஹம்மத் அப்துல்லாஹ் தாரிமீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பின்வருமாறு எழுதுகிறார்கள்:

'ஹர்ரா யுத்த வேளையில் மூன்று தினங்கள் தொடர்ந்து மதீனா பள்ளியில் பாங்கு ஒலிக்கவில்லை. அப்போது ஸஈத் இப்னு முஸைய்யப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பள்ளியில் தங்கி இருந்தார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கப்ரிலிருந்து கேட்ட சப்தத்தை வைத்து தொழுகையின் நேரங்களை அவர்கள் அறிந்து கொண்டார்கள்.
தாரிமியில், இமாம் அபூ முஹம்மத் அப்துல்லாஹ் தாரிமீ ரலியல்லாஹு அன்ஹு
இப்றாஹீம் இப்னு ஷைபான் ரலியல்லாஹு அன்ஹு சொல்கிறார்கள்: ஹஜ்ஜை முடித்துக் கொண்டு, மதீனா சென்று திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்கருகில் நின்று சலாம் சொன்ன போது, கப்ரிலிருந்து 'வஅலைக்குமுஸ்ஸலாம்' என பதில் வந்ததை செவியுற்றேன்.

ஜுபைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'தாபிதுல் பன்னான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களை கப்ரில் வைத்தேன். என்னுடன் ஹுமைது தவீலாவும் உடனிருந்தார். நாங்கள் அடக்கம் செய்துவிட்டு திரும்பும் போது கப்ரின் பலகை இடிந்து விழுந்தது. அதனைச் சரி செய்வதற்காக நான் சென்ற போது தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கப்ருக்குள்ளிருந்து தொழுவதைப் பார்க்க முடிந்தது.
அறிவிப்பாளர்: அபூ நுஐம் (ரஹ்)

அபூநுஐம் மற்றும் இப்னு கரீத் ஆகியோர் இப்றாஹீம் அல்முஹல்லப் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றனர். 'நள்ளிரவில் தாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களது கப்ரு வழியாக சுண்ணாம்பு கொண்டு சென்றவர்கள் கப்ரிலிருந்து குர்ஆன் ஓதுவதைக் கேட்டதாக என்னிடம் தெரிவித்தனர்.'
இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து இமாம் திர்மிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஸஹாபி ஒருவர் கப்ரு என்று அறியாமல் தனது மேலங்கியைக் கழற்றி அதன் மீது வைத்தார்கள். அப்போது கப்ருக்குள்ளிருந்து ஸூரத்துல் முல்க் முழுவதும் ஓதப்படுவதை செவியேற்றார்.
இதனைத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் தெரிவித்த போது சொன்னார்கள்: 'ஸூரத்துல் முல்க் எல்லாத் தீங்குகளையும் தடுக்கும். கப்ர் தண்டனையிலிருந்து காப்பாற்றும்.' இந்த ஹதீதை திர்மிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹஸன் என்கிறார்கள்.

நஸஈ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், ஹாகிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஆகியோர் அறிவிக்கின்றனர்:
பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதாக அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்:
'நான் சுவனத்தில் இருப்பதாக கனவு கண்டேன். அங்கே ஒருவர் குர்ஆன் ஓதுவதைக் கேட்டு, 'யார் இவர்?' என வினவினேன்.
சுவனவாசிகள், அவர் ஹாரிஸ் இப்னு நுஃமான்' என்றனர். அதுதான் நற்செயலின் பயன். ஹாரிஸ் தனது தாயாருக்காக அதிக பணிவிடைகள் செய்திருந்தார்கள்.' என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.

ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து இப்னு அபீதுன்யா அறிவிக்கிறார்கள்:
'திருக்குர்ஆன் மனனமில்லாத நல்லவர் ஒருவர் மவ்த்தாகிவிட்டால் அவருக்குக் குர்ஆனை கற்பிக்க மலக்குகளிடம் ஏவப்படும். கியாமத் நாள் வரை அவர் குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பார்.'
யஸீத் தகாஷியிடமிருந்தும் இதேபோல் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்னு ஸீரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களிடமிருந்து அப்னு அபீ ஷைபா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:
'இப்னு ஸீரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், மய்யித்திற்கு நல்ல கஃபன் துணி அணிவிக்க வேண்டுமென விரும்புவார்கள். இறந்தவர்கள் தங்கள் கஃபன் ஆடைகளைக் குறித்து தங்களுக்குள் பேசிக் கொள்வர் எனவும் இப்னு ஸீரீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சொல்வார்கள்'. ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து நேரடியாக (மர்ஃபூஉ) இப்னு உஸாமா அவர்கள் தமது முஸ்னதில் பதிவு செய்துள்ளார்கள்.

'உங்களில் யாராவது மய்யித்தின் காரியங்களை நடத்துபவராக இருந்தால் நல்ல கஃபன் ஆடையை அணிவியுங்கள்' இந்த நபிமொழியை இமாம் முஸ்லிம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளார்கள்.
திர்மிதி, இப்னு மாஜா, முஹம்மத் பின் யஹ்யல் ஹமதானி ஆகியோர் அபூகதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து அறிவிக்கும் ஹதீது இப்படி வருகிறது: 'நீங்கள் மய்யித்தின் காரியங்களை நடத்துபவராக இருந்தால் நல்ல கஃபன் அணிவியுங்கள். ஏனெனில் இறந்தவர்கள் கஃபன்களைப் பற்றி கப்ருகளில் கருத்துச் சொல்வார்கள்.'

ராஷித் இப்னு ஸஃதிடமிருந்து இப்னு அபீதுன்யா அறிவிக்கிறார்கள்:
'ஒரு ஸஹாபியின் மனைவி மவ்த்தானார்கள். பின்னர் அவர் சில பெண்களை கனவு கண்டார்கள். அக்கூட்டத்தில் அவரது மனைவியைக் காணவில்லை. மனைவியைக் குறித்து அப்பெண்களிடம் கேட்க, நீங்கள் அவருடைய கஃபன் ஆடையை மோசமாக்கியதால் எங்களுடன் வர வெட்கப்பட்டார்கள்' என்றனர்.

ஸஹாபி அவர்கள் இதனை நபிமணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் சொல்ல, திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தார்கள்: 'அந்த வழியாகச் செல்லும் நம்பிக்கைக்குரிய நபரைப் பற்றி விசாரியுங்கள்.'

மரணத்தறுவாயில் இருக்கும் ஒரு நபித் தோழரின் வீட்டிற்கு அந்த ஸஹாபி சென்ற போது, அன்ஸாரியான நபித் தோழர் 'இறந்தவர்களுக்கு ஏதேனும் கொடுத்தனுப்ப விரும்புவோர் என்னிடம் ஒப்படையுங்கள்' எனச்' சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்கிறார்.

அத்தோழர் மவ்த்தான போது அவரது கஃபன் ஆடையுடன் இன்னொரு கபனும் வைத்து அடக்கம் செய்தோம். பின்னர் அந்த கஃபன் ஆடையை அணிந்தவராக தனது மனைவியை பெண்களுக்கிடையில் அந்த ஸஹாபி கண்டார்கள்.
இப்னு அபீ துன்யா அபூ காலிபிடமிருந்து அறிவிக்கிறார்கள்: சிரியாவில் ஒரு இளைஞரை கப்ரில் அடக்கிய போது நானும் கப்ரில் இறங்கினேன். அடக்கம் முடிந்த போது கப்று மீதிருந்த பலகை கீழே விழுந்து விட்டது. அதனை மீண்டும் சரி செய்வதற்காக மீண்டும் கப்ரில் இறங்கிய அவரது சாச்சா பயந்து போய் வெளியேறினார். கப்ரு ஒளியால் நிறைந்திருந்தது. பார்வை எட்டா தொலைவுவரை அவ்வொளி பரவியிருந்தது.
'நஜ்ஜாஷி அரசர் மவ்த்தான போது அன்னாரது கப்ரில் ஒளி சூழும் எனச் சொல்லியிருந்தோம்' என்று அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் சொன்னதாக அபூதாவூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.
'நான் அஹ்னஃப் இப்னு கைஸ் அவர்களின் கப்ர் அடக்கத்தில் பங்கெடுத்தேன். கப்ருக்குள் இறங்கியவர்களுள் நானும் ஒருவன். அடக்கம் முடிந்த பின்னர் கப்ர் மிக விசாலமாக இருப்பதைக் கண்டேன். இச்செய்தியை மக்களிடம் தெரிவித்த போது அவர்களும் பார்த்தார்கள். ஆனால் அவர்களால் அதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.
அறிவிப்பவர்: அப்துற் றஹ்மான் இப்னு உமாரா நூல்: இப்னு அஸாகிரின் தாரீக்.
பர்ஜக் உலகம் இந்த பூமியைக் காட்டிலும் மிகப் பெரிய உலகம்.
ர.ரா

கியாமத் நாளின் அடையாளங்கள் .
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 18)



தஜ்ஜால் இனிமேல் பிறப்பவன் அல்ல. ஏற்கனவே பிறந்தவன் ஆவான். அவன் தற்போதும் இருந்து வருகிறான். ஸஹாபாக்களில் ஒருவரான தமீமத்தார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நேரில் ஏதேச்சையாக கண்டுள்ளார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் (தொழுகைக்கான) அழைப்பாளர் 'அஸ்ஸலாத்து ஜாமிஆ' (தொழுகைக்கான நேரம் வந்துவிட்டது) என்ற அறிவித்தார். இதைக் கேட்ட நான் பள்ளிவாசலுக்குச் சென்றேன். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களுடன் தொழுதேன். தொழுது முடிந்ததும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் சிரித்துக் கொண்டே மிம்பரில் அமர்ந்தார்கள். 'அனைவரும் தொழுத இடத்திலேயே அமருங்கள்' என்று கூறிவிட்டு 'நான் உங்களை ஏன் கூட்டினேன் என்பதை அறிவீர்களா? என்று கேட்டார்கள், 'அல்லாஹ்வும் அவனின் தூதருமே நன்கறிந்தவர்கள்' என்று நாங்கள் கூறினோம்.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக, உங்களை அச்சுறுத்தவோ ஆர்வமூட்டவோ உங்களை நான் ஒன்று கூட்டவில்லi. தமீமுத்தாரி முன்பு கிருத்தவராக இருந்தார். அவர் வந்து இஸ்லாத்தில் இணைந்து விட்டார். தஜ்ஜால் பற்றி உங்களுக்குச் கூற வந்ததுக்கேற்ப அவர் ஒரு செய்தியை என்னிடம் கூறினார். (அவர் என்னிடம் கூறியதை நீங்களும் கேளுங்கள்).

லக்ம், ஜுகாம் ஆகிய சமூகத்தில் முப்பது நபர்களுடன் கப்பலில் நான் பயணம் செய்தேன் (புயல் காரணமாக) ஒரு மாதகாலம் அலைகளால் அலைகழிக்கப்பட்டோம். சூரியன் மறையும் சமயம் ஒரு தீவில் ஒதுங்கினோம். கப்பலில் வைத்திருந்த சிறு தோணிகள் மூலம் அந்த தீவில் நுழைந்தோம். அப்போது உடல் முழுவதும் மயிர்கள் நிறைந்த ஒரு பிராணி எதிர் கொண்டது. அதிகமான மயிர்கள் காரணமாக அதன் மலஜலம் பாதைகளை (உறுப்புக்களைக்) கூட அவர்களால் அறிய இயலவில்லை.

அந்தப் பிராணியிடம் அவர்கள், 'உனக்கு ஏற்பட்ட கேடே நீ என்ன பிராணி?' என்று கேட்டனர். **'ஜஸ்ஸாஸா'** என்று அது கூறிவிட்டு, 'நீங்கள் இதோ இந்த மடத்தில் உள்ள மனிதனிடம் செல்லுங்கள், அவர் உங்களைக் காண்பதில் ஆர்வம் காட்டுவார்' என்றும் அப்பிராணி கூறியது. அந்த மனிதனின் பெயரையும் கூறியது. அந்தப் பிராணி ஒரு பெண் ஷைத்தானாக இருக்குமோ என்று பயந்தோம்.
நாங்கள் அந்த மடத்தை நோக்கி விரைந்தோம். அங்கு சென்றதும் ஒரு மனிதனைக் கண்டோம். அவனைப் போன்ற ஒரு படைப்பை இதுவைர நாங்கள் பார்த்ததே இல்லை. இரண்டு கரண்டை கால்களுக்கும் முட்டுக்கால்களுக்கும் இடையே தலையைச் சேர்த்து கழுத்தில் இரும்பால் கட்டப்பட்டிருந்தான், 'உனக்கு ஏற்பட்ட கேடே! ஏனிந்த நிலை' என்று கேட்டோம்.
அதற்கு அந்த மனிதன் '(எப்படியோ) என்னைப் பற்றி அறிந்து விட்டீர்களே! நீங்கள் யார்? எனக் கூறுங்கள்' என்றான். 'நாங்கள் அரபியர்கள். ஒரு கப்பலில் நாங்கள் பயணம் செய்தபோது, ஒரு மாதம் கடல் அலையால் அலைகழிக்கப்பட்டோம். இப்போது தான் இந்த தீவிற்கு வந்தோம். அடர்ந்த மயிர்கள் நிறைந்த ஒரு பிராணியைக் கண்டோம். அது, நான் ஜஸ்ஸாஸா, இந்த

மடத்தில் உள்ள மனிதரைப் பாருங்கள்' என்று கூறியது. எனவே உம்மிடம் விரைந்து வந்தோம்' என்று கூறினோம்.

'பைஸான் என்ற இடத்தில் உள்ள பேரீத்தம் மரங்கள் பயனளக்கிறதா? என்று கூறுங்கள்' என அந்த மனிதன் கேட்டான். நாங்கள் ஆம் என்று கூறினோம். அதற்கு அம்மனிதன் 'விரைவில் அங்குள்ள மரங்கள் பயனளிக்காமல் போகலாம்' என்றான். 'சூகர் எனும் நீருற்றில் தண்ணீர் உள்ளதா? அங்குள்ளவர்கள் அத்தண்ணீரை விவசாயத்திற்கு பயன் படுத்துகிறார்களா? என்று கேட்டான். அதற்கு நாங்கள் ' ஆம், தண்ணீர் அதிகமாகவே உள்ளது. அங்குள்ளோர் அத்தண்ணீர் மூலம் விவசாயம் செய்கின்றனர்' என்று கூறினோம்.

'உம்மி சமுதாயத்தில் தோன்றக்கூடிய நபியின் நிலை என்ன? என்பதை எனக்குக்கூறுங்கள்' என அம்மனிதன் கேட்டான். 'அவர் மக்காவிலிருந்து புறப்பட்டு, தற்போது மதீனாவில் உள்ளார்' என்று கூறினோம். 'அரபியர்கள் அவருடன் போர் புரிந்தார்களா?' என்று அம்மனிதன் கேட்டான். ஆம் என்றோம். 'போரின் முடிவு எப்படி இருந்தது?' என்று கேட்டான். 'அவர் தன் அருகில் வசித்த அரபியரையெல்லாம் வெற்றி கொண்டு விட்டார்' என்று கூறினோம். 'அவருக்கு அவர்கள் கட்டுப்படுவதே சிறந்தது' என்று அவன் கூறினான்.

நான் இப்போது என்னைப் பற்றிக் கூறுகிறேன். நான்தான் தஜ்ஜால். நான் (இங்கிருந்து) வெளிறே வெகு சீக்கிரம் எனக்கு அனுமதி தரப்படலாம். அப்பேது நான் வெளியே வருவேன். பூமி முழுதும் பயணம் செய்வேன். நாற்பது நாட்களில் எந்த ஊரையும் நான் அடையாமல் விட மாட்டேன். மக்கா, மதீனா இரு ஊர்களைத் தவிர. அந்த இரு ஊர்களும் எனக்கு தடுக்கப்பட்டுள்ளன. அந்த இரண்டு ஊர்களுக்குள் நான் நுழைய முயற்சிக்கும் போதெல்லாம் தன் கையில் வாளுடன் ஒரு வானவர் என்னை எதிர் கொண்டு தடுப்பார். அதன் வழிகள் அனைத்திலும் அதைக் காண்கானிக்கின்ற வானவர்கள் இருப்பர்' என்று அம்மனிதன் கூறினான்.
இவ்வாறு தமீமுத்தாரீ ரழியல்லாஹு அன்ஹுதன்னிடம் கூறியதாகக் கூறிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம் கைத்தடியை மிம்பரில் தட்டிவிட்டு, 'இது (மதீனா) தூய்மையான நகரம், தூய்மையான நகரம்' என்று கூறினார்கள். 'இதே செய்தியை நான் உங்களிடம் கூறி இருக்கிறேன் தானே' என்று மக்களிடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கேட்டதும், மக்கள் 'ஆம்' என்று பதில் கூறினர்.

அறிந்து கொள்க! நிச்சயம் அவன் ***சிரியா*** நாட்டின் கடல் பகுதியில் உள்ளான். அல்லது ***யமன்*** நாட்டின் கடல் பகுதியில் உள்ளான். இல்லை, இல்லை! அவன் கிழக்குத் திசையில் இருக்கிறான் என்று மூன்று முறை கூறினார்கள்.
அறிவிப்பாளர் : பாத்திமா பின்த் கைஸ் ரழியல்லாஹு அன்ஹு நூல் – முஸ்லிம்.

தஜ்ஜால் ஓர் அரபிச்சொல். பொய் என்பது அதன் பொருள் . எல்லா சக்திகளும் கொடுக்கப்பட்ட யூதன் .
யூத பெண்ணுக்கும் , ஜின்னுக்கும் பிறந்தவன் தஜ்ஜால் என்கிறது ஒரு வரலாறு .
நபி (ஸல்) அவர்களிடம் , "தஜ்ஜால் ஆதமின் மைந்தனா ? அல்லது இப்லீஸின் மகனா ? "
" அவன் ஆதமின் மகன்தான் ஆனால் அவனது தாய் இப்லீஸின் பிள்ளைகளில் ஒருவர் . நவாஸ் இப்னு ஸம்ஆன் رَضِيَ اللهُ عَنْهُஅறிவிக்கின்றார்கள்:

வழி கெடுக்கக் கூடிய தஜ்ஜால் என்னும் ஒற்றைக்கண்ணன், மக்கள் அனைவரும் குழப்பத்தில் ஆழ்ந்திருக்கும் காலத்தில் கீழ்த்திசையில் தோன்றுவான். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) நூல்: அஹ்மத்
மேற்கில் உள்ள குராஸான் என்ற பகுதியிலிருந்து தஜ்ஜால் வெளிப்படுவான் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள். நூல் : திர்மிதீ 2163

இஸ்பஹான் தேசத்தில் **'யஹூதிய்யஹ்'** என்ற கிராமத்தில் மல்ஊன் தஜ்ஜால் தோன்றுவான். பிறிதொரு ஹதீஸியின் படி கிழக்கில் குறாஸான் என்ற ஊரில் தோன்றுவான் என்றும் சொல்லப்படுகின்றது.
'நிச்சயமாக அல்லாஹ்வைப் பற்றி உங்களுக்குத் தெரியும், அல்லாஹ் ஒரு கண் ஊனமானவன் அல்லன், ஆனால் தஜ்ஜாலின் வலது கண் திராட்சை போன்று சுருங்கி இருக்கும்' என்ற நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள். அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இன்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு நூல்கள் – புகாரீ, முஸ்லிம்.

ஊனமடைந்த கண், மூக்கை ஒட்டிய ஓரத்தில் கடினமாக சதைக் கட்டி ஒன்று தொன்படும் என்றும் நபி ஸல்லலல்லாஹு அலைஹி வஸல்லம்கூறி உள்ளனர் : நூல்கள் – முஸ்லிம், அஹ்மத்.

'ஊனமடையாத கண், பச்சை நிறக் கண்ணாடிக் கற்கள் போல் அமைந்திருக்கம்' (அஹ்மத்).
'அவன் வெள்ளை நிறத்தவனாக இருப்பான், அவனின் உடலமைப்பு கவர்ச்சியாக அமைந்திருக்கும்' (அஹ்மத்).
'சற்று குண்டான உடலுடையவனாக இருப்பான்' (முஸ்லிம்).
'பின்புறத்திலிருந்து பார்த்தால் அவனின் தலைமுடி அலை அலையாய் இருப்பதாகத் தெரியும் (அஹ்மத்).
'பரந்த நெற்றியுடையவனாக இருப்பான்' (பஸ்ஸார்)
'குள்ளமாகவும் கால்கள் இடைவெளி அதிகம் உள்ளவனாகவும் இருப்பான்' (அபூதாவூத்).
'தஜ்ஜாலின் நெற்றிக்கிடையே 'காஃபிர்' என்று எழுதப்பட்டிருக்கும். எழுதத் தெரிந்த, எழுதத் தெரியாத அனைத்து மூஃமின்களும் அதைப் படிப்பார்கள்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஹுதைபா ரழியல்லாஹு அன்ஹு நூல்

'அவன் நாற்பது நாட்கள் பூமியில் வாழ்வான். அனைத்து இடங்களுக்கும் அவன் செல்வான். ஆனால் மஸ்ஜிதுல் ஹராம், மதீனா பள்ளிவாசல், தூர் மஸ்ஜித், பைத்துல் முகத்தஸ் ஆகிய நான்கு பள்ளிவால்களையும் அவனால் நெருங்க இயலாது' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் (அஹ்மத்).
'மதீனா நகருக்கு தஜ்ஜால் பற்றிய பயம் தேவை இல்லை. அன்றைய நாளில் மதீனாவுக்கு ஏழு நுழைவு வாயில் (பாதைகள்) இருக்கும். ஒவ்வொரு பாதையின் நுழைவாயிலிலும் இரண்டு (வானவர்கள்) இருப்பார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹுநூல் – புகாரீ.

தஜ்ஜால் கீழ் திசையிலிருந்து மதீனாவை குறிக்கோளாகக் கொண்டு புறப்பட்டு வருவான். அப்போது மலக்குகள் அவனது முகத்தை 'ஷாம்' பகுதியை நோக்கித் திருப்புவார்கள். அங்கேதான் அவன் அழிவான் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு நூல்கள் – புகாரீ, முஸ்லிம்.

'பமிரிகனாத் என்னும் இந்த உவர் நிலங்களுக்கு தஜ்ஜால் புறப்பட்டு வருவான். அப்போது அதிகமான பெண்கள் அவனைப் பின்பற்றிச் செல்வார்கள். எந்த அளவுக்கெனில், (அன்று) ஒவ்வொரு ஆணும் தனது மனைவி, தாய், மகள், சகோதரி, மாமி ஆகியோரிடம் சென்று அவர்கள் தஜ்ஜாலைப் பின்பற்றிச் சென்று விடக் கூடாது என அஞ்சி, அவர்களைக் கயிற்றினால் கட்டி வைப்பான்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு நூல் – அஹ்மத்.

கஸ்பஹான் பகுதியல் வாழும் யூதர்களில் ஒருவனாக தஜ்ஜால் புறப்பட்டு வருவான். மதீனாவை நெருங்கி, அதன் எல்லையில் இறங்குவான். அன்றைய தினம் மதீனாவுக்கு ஏழு நுழைவுப் பாதைகள் இருக்கும். ஒவ்வொரு நுழைவு பாதையிலும் இரண்டு மலக்குகள் இருப்பார்கள். அவனை நோக்கி (மதீனாவில் உள்ள) தீய மக்கள் புறப்பட்டுச் செல்வார்கள். பாலஸ்தீன் நகரின் 'லுத்' எனும் வாசலுக்கு அவன் புறப்பட்டுச் செல்வான். அங்கே ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறங்கி அவனைக் கொல்வார்கள். அதன்பின் நாற்பது ஆண்டுகள் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இந்த பூமியில் நேர்மையான தலைவராக, சிறந்த நீதிவானாகத் திகழ்வார்கள் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் கூறினார்கள்.
அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹு நூல்- அஹ்மத்.
மதீனா மூன்றுமுறை துளும்பும், அப்போது அதில் வாழ்ந்த முனாபிகீன்கள் அழிந்து விடுவர்.
பின் தஜ்ஜால் பாபில் என்ற நகரில் நுழைவான் அங்கு கழிர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனை எதிர் கொள்வார்கள். அவர்களிடம் நான்தான் "றப்புல் ஆலமீன்" என்று தஜ்ஜால் சொல்வான். அதற்கு கிளுறு அலைஹிஸ்ஸலாம் நீ பொய் சொன்னாய். நீதான் பொய்யனான தஜ்ஜால் றப்புல் ஆலமீன் என்பவனே வானங்களையும் பூமியையும் படைத்தவன். அவன் உன்னைப் போன்ற பொட்டைக் கண்ணன் அல்லன் என்பார்கள்
இது தஜ்ஜாலுக்கு கோபத்தை ஏற்படுத்தவே அவர்களை கொலை செய்து விடுவான். பின் மக்களைப் பார்த்து நான் கொன்று விட்டேன். இவர் சொல்வதுபோல் இரு இறைவன் இருப்பின் இவரை உயிர்ப்பிக்கட்டும் பார்ப்போம் என்பான்.
உடன் அல்லாஹ் தஆலா அவரை அதேவேளை உயிர்பிப்பான். உயிர்பிக்கப்பட்ட கிளுறு அலைஹிஸ்ஸலாம் எழுந்து நின்று தஜ்ஜாலே எனது இறைவன் என்னை உயிர்பித்து விட்டான் என்பார். அவரை அறுப்பதற்கு தஜ்ஜால் முனைந்தபோது கிளுறு அலைஹிஸ்ஸலாம் அவர்கள்

மீது செம்பால் ஒரு கவசத்தை இறைவன் ஏற்படுத்துவான். அவனால் அவரை அறுக்க முடியாமல் போகவே தஜ்ஜால் தோல்வியடைவான்.
இதுபற்றி ஷெய்குல் அக்பர் முஹ்யித்தீன் இப்னு அறபி (றழியல்லாஹு அன்ஹு) அவர்கள் சொல்கையில் அறுக்கப்பட்டு உயிர் பெறுபவர் கிளுறு அலைஹிஸ்ஸலாம் அல்ல. அவர் ஈமான் நிரம்பப் பெற்ற ஒரு வாலிபராவார். அவரை கஷ்புடையவர்கள் கண்டு கொண்டுள்ளனர் என்றார்கள்.

பின் தஜ்ஜாலின் தாக்குதலால் பிரிந்துசென்ற முஸ்லீம்கள் பைத்துல் முகத்தஸில் ஒன்று சேர்வார்கள். தஜ்ஜாலின் படைகளுடன் போர் தொடுப்பதற்கு தம்மைத் தயார் செய்யுமாறு மஹ்தீ அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வேண்டிக் கொள்வார்கள்.
உடன் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் படைகளைத் தயார் செய்து தாமும் சென்று தஜ்ஜாலுடன் கடும் சமர் புரிவார்கள்.

இச்சமயத்தில்ல் காபீர்களில் ஒரு இலட்சம் பேரும் முஸ்லீம்களில் முப்பதாயிரம் பேரும் கொல்லப்படுவார்கள் . மஹ்தீ அலைஹிஸ்ஸலாம்அவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் தொடர்ந்து போராடுவது கஷ்டமாக இருக்கும், அதனால் பைத்துல் முகத்தஸில் நுழைந்து அதன் வாயில்களை மூடிக்கொள்வார்கள்.
தஜ்ஜாலும் அவனது படைகளும் பைத்துல் முகத்தஸை அடையும்போது அங்கு காவலில் நிற்கின்ற மலக்குகள் அவர்களைத் துரத்தியடிப்பார்கள் உடன் மஹ்தீ (அலைஹிஸ்ஸலாம்) அவர்களும் தோழர்களும் இறை பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள்
யா அல்லாஹ்! தஜ்ஜாலின் பித்னஹ்விலிருந்தும், அவனது சூழ்ச்சியிலிருந்தும் காப்பாற்றுவாயாக என்று.

அப்போது இறைவனிடமிருந்து பின்வரும் செய்தி வரும் " முஸ்லீம்களே! உங்களை இரட்சிப்பவரும், உதவி செய்பவரும் உங்கள் இறைவனிடமிருந்து வந்து விட்டார்" என்று இதைக் கேட்ட முஸ்லீம்கள் மகிழ்ச்சியடைவார்கள்.
இஸ்ரேலின் தலைநகரான டெல் அவிவ்வுக்கு அருகில் உள்ள லுத்து என்னும் இடத்தில் வைத்து மர்யம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகன் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனைக் கொல்வார்கள்.
ர.ரா

Rahmath Rajakumaran
கிருத்துவம்
அந்தி கிருத்து என தச்சாலை கிருத்துவம் அழைக்கின்றது. ஆர்ப்பரிக்கும் அலையில் இருந்து இவன் தோன்றுவான் என விவிலியம் கூறுகின்றது. இவன் பாவத்தின் மகன் என்றும் இவனது வருகை உலக அழிவின் அடையாளங்களில் ஒன்று எனவும் இயேசு கூறியதாக பைபிள் பதிவு செய்துள்ளது
இந்து மதம்
இந்து மதத்தில் தஜ்ஜாலை ஒன்றிய அந்தாக் ஆசர் என்பவனை பற்றிய குறிப்பு உள்ளது. அந்தாக் ஆசர் எனும் சமசுகிருத சொல்லுக்கு இறுதியில் வரும் ஒற்றைக்கண்ணன் என்பது பொருளாகும். இவன் வன்மம் மிகுந்தும் ஆயிரம் கைகள், ஆயிரம் தலைகள், இரண்டாயிரம் பாதங்கள் மற்றும் இரண்டாயிரம் கண்களை கொண்டவனாகவும் இருப்பான். இவன் மந்தார் பர்வதத்தில் நுழைய முற்படும்போது கொல்லப்படுவான் .

கியாமத் நாளின் அடையங்களில் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டங்கள்
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 19)



யஃஜூஜ், மஃஜூஜ் என்னும் கூட்டத்தார் நபி நூஹு (அலை) குமாரர்களில் ஒருவராகிய "யாபிது" என்பவரின் வமிசத்தில் உள்ளவர்கள்.
யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தாரில் ஒரு கூட்டம் ஒரு ஜாண் அளவு சதுரமான வகையினரும், ஒரு முழ அளவு சதுரமான வேறொரு வகையினரும் , நூற்றிருபது முழ உயரமான மற்றொரு வகையினரும் என 3 வகையினர் உண்டு

அவர்களின் தொகையை அல்லாஹ்வே அறிவான் . இத்தனை பெரிய கூட்டத்தாரில் மிகவும் பலஹீனமானவன்
தன்னை விட 60 மடங்கு பாறைக் கல்லைத் தூக்கி எறிவான்.
இக்கூட்டத்தார்கள் சூரியன் உதயமாகும் ஸ்தலத்தின் பக்கத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் . அவர்களுக்கு பாதையான இருமலைகளுக்கு இடையில் உள்ள கணவாயை சுல்தான் ஸிக்கந்தர் துல்கர்னைன் அவர்கள் இரும்பு பாளங்களை அடுக்கி , அதன் மீது செம்பையும் உருக்கி வார்த்து அவர்கள் அதன் வழியே வராமல் அடைத்து வைத்திருக்கிறார்கள். இது பற்றி குர்ஆனில்.....
اٰتُوْنِىْ زُبَرَ الْحَدِيْدِ حَتّٰۤى اِذَا سَاوٰى بَيْنَ الصَّدَفَيْنِ قَالَ انْفُخُوْا حَتّٰۤى اِذَا جَعَلَهٗ نَارًا ۙ قَالَ اٰتُوْنِىْۤ اُفْرِغْ عَلَيْهِ قِطْرًا
“நீங்கள் இரும்புப் பாளங்களை என்னிடம் கொண்டு வாருங்கள்” (அவைகளைக் கொண்டு இருமலைகளுக்கிடையிலுள்ள பள்ளத்தை நிரப்புங்கள்) முடிவாக இருமலைகளுக்கிடையில் (உச்சிக்கு) அவை சமமாகும்போது ஊதுங்கள்” என்றார், அதனை நெருப்பாக ஆக்கியதும் (உருக்கிய செம்பை) என்னிடம் கொண்டு வாருங்கள், (அந்த) உருக்கிய செம்பை நான் அதன்மேல் ஊற்றுவேன்” என்று கூறினார்.
(அல்குர்ஆன்: 18:96)

கியாமத் நாளின் முன்பாக இச்சுவர் இடிந்து விழுந்து போகும். அதன் வழியே
யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் ஹோன்னு புறப்பட்டு வெள்ளம் போல் ஓடி வருவார்கள் .

மக்கா , மதீனா , பைத்துல் முகத்திஸ் , தூர் ஸினா மலை இந் நான்கு இடங்கள் தவிர, பூமியெங்கும் போய் எல்லா ராஜ்யங்களையும் , தங்கள் வசமாக்கிக் கொண்டு, ' நாம் பூமியை கைப்பற்றிக் கொண்டோம் .இனி வானத்தையும் பிடித்துக் கொள்ளுவோம் ' என்று சொல்லிக் கொண்டு, ஆகாயத்தில் அம்புமாரி பொழிவார்கள். அந்த அம்புகளெல்லாம் அல்லாஹூ தஆலாவின் கட்டளைப்படி ரத்தக்கடலில் தோய்த்து அவர்களிடம் திருப்பி எறியப்படும் .அதைக் கண்டு அவர்கள் வானத்தையும் நாங்கள் கைப்பற்றிக் கொண்டோம் ' என்று சந்தோஷப்படுவார்கள் .
அவர்கள் பூமி முழுவதும் பரவியிருந்து நபி ஈஸா (அலை) அவர்களை தூர் ஸினா மலையில் வைத்து முற்றுகையிடுவார்கள். இவர்கள் பண்ணும் அமளியைப் பொறுக்க மாட்டாமல் நபி ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்தஆலாயிடம் அவர்களை நாசமாக்கும்படி துஆ கேட்பார்கள் .
உடனே அல்லாஹ்தஆலா ஒரு வித கிருமிகளை அந்தக் கூட்டத்தார் மீது அனுப்புவான்.

அந்த கிருமிகள் அக்கூட்டத்தார் ஒவ்வொருவர் பிடரியிலும் ஒவ்வொன்றாக மொய்த்துக் கொள்ளும் அதனால் அவர்கள் எல்லோரும் ஒரே காலத்தில் ஒருமித்து மடிந்து போவார்கள் .

பூமி முழுவதும் அவர்களின் பிணத்தால் மூடப்பட்டிருக்கும் . பிறகு அல்லாஹ்தஆலா ஒரு பெருமழையை பொழியச் செய்து , அந்த மழை வெள்ளம் பிணங்களையெல்லாம் வாரிக் கொண்டு கடலில் தள்ளும்.

அதன் பின் முஃமீன்கள் சந்தோஷப்படுவார்கள் . அதற்கு பிறகு நபி ஈஸா (அலை) அவர்கள் தூர் ஸினா மலையிலிருந்து பைத்துல் முஹத்திஸ்க்கு வருவார்கள் .
நபி ஈஸா (அலை) அவர்கள் பூமியில் இறங்கின நாற்பதாம் வருஷம் மக்காவில் ஹஜ்ஜு செய்து விட்டு , மதீனாவிற்கு வருவார்கள் . மஸ்ஜித் நபிவியில் , அல்லாஹ்தஆலாவின் கலாவான அஜல்முடுகி, தொழுகையில் ஸுஜூதில் இருக்கும் போது , வபாத்தாய், நபிகள் நாயகம் ﷺ அவர்களின் புனித ரவ்ளாவிற்குப் பக்கத்தில் அடங்கப்படுவார்கள் .
ர. ரா

Rahmath Rajakumaran

உலகம் அழியும் காலம் நெருங்கும்போது வெளிப்படும் கூட்டத்தினர் தான் யஃஜூஜ் மஃஜூஜ் ஆவர். உலகம் அழிவதற்கு முன்னர் நடக்கவுள்ளதாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்த பத்து அடையாளங்களில் யஃஜூஜ், மஃஜூஜ் எனும் கூட்டத்தினரின் வருகையும் ஒன்றாகும். இது குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர்.
இந்தக் கூட்டத்தினர் நீண்ட காலமாகவே அவர்கள் இருந்து வருகின்றனர். மலைகளால் சூழப்பட்ட பகுதியில் வசிக்கின்றனர். அம்மலைகளுக்கிடையே இரும்புப் பாளங்களை அடுக்கி செம்பு உருக்கி ஊற்றப்பட்டுள்ளது. அதைத் தாண்டி அவர்களால் வரவும் முடியாது. அதைக் குடைந்து வெளியே வரவும் முடியாது. யுகமுடிவு நாளின் நெருக்கத்தில் அந்தத் தடை உடைக்கப்பட்டு அவர்கள் வெளிப்பட்டு வருவார்கள். ஒருவருடன் ஒருவர் முட்டி மோதிக்கொள்ளும் அளவுக்கு அவர்களின் எண்ணிக்கை பெருமளவில் இருக்கும்
இறுதியில் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் திறந்து விடப்படுவார்கள். உடனே அவர்கள் (வெள்ளம் போல் ஒவ்வொரு மேட்டிலிருந்தும்) விரைந்து வருவார்கள் குர்ஆன் 21:96
அப்போது அல்லாஹ் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரை அனுப்புவான். அவர்கள் ஒவ்வொரு மேட்டிலிருந்தும் விரைந்து வருவார்கள். அவர்களில் முதலில் வருபவர்கள் தபரிய்யா என்ற ஏரியின் தண்ணீரைக் குடிப்பார்கள். பின்னால் வருபவர்களுக்குத் தண்ணீர் இருக்காது. அந்த நேரத்தில் ஈஸா நபியும், அவர்களின் தோழர்களும் இக்கூட்டத்தினால் முற்றுகையிடப்படுவார்கள். அன்று ஒரு மாட்டின் தலை இன்றைய நூறு தங்கக் காசுகளுக்குச் சமமாகத் தோன்றும் அளவுக்கு முற்றுகை நீடிக்கும். ஈஸா நபி அல்லாஹ்விடம் இறைஞ்சுவார்கள். ஒரேயடியாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் செத்து விழுவார்கள்.
பின்னர் ஈஸா நபியும், அவர்களின் தோழர்களும் தூர் மலையிலிருந்து கீழே இறங்குவார்கள். ஒரு ஜான் இடம் கூட மிச்சமில்லாமல் அவர்களின் உடல் பூமி முழுவதும் சிதறி நாற்றமெடுக்கும். அப்போது ஈஸா நபியவர்கள் மீண்டும் அல்லாஹ்விடம் இறைஞ்சுவார்கள்.
அப்போது அல்லாஹ் ஒட்டகத்தின் கழுத்தைப் போன்ற பறவைகளை அனுப்புவான். அவை உடல்களைத் தூக்கிச் சென்று வீசி எறியும். பின்னர் அல்லாஹ் மழையைப் பொழிவிப்பான். கூடாரமோ, மண் வீடுகளோ எதையும் விட்டு வைக்காமல் அவற்றின் மேல் மழை பொழியும். பூமியைக் கண்ணாடி போல் சுத்தமாக்கும்.
'பூமியே உனது பழங்களை முளைக்கச் செய்! உனது அபிவிருத்தியைத் திரும்பக் கொடு' என்று (இறைவனால்) பூமிக்குக் கட்டளை பிறப்பிக்கப்படும். அந்நாளில் ஒரு மாதுளையை ஒரு பெரும் கூட்டத்தினர் சாப்பிடுவார்கள். அதன் தோல்களில் ஒரு கூட்டமே நிழல் பெறும். பாலில் பரகத் செய்யப்படும். ஒரு ஒட்டகத்தில் கறக்கும் பால் ஒரு பெரும் கூட்டத்துக்குப் போதுமானதாக இருக்கும். ஒரு மாட்டில் கறக்கப்படும் பால் ஒரு கோத்திரத்துக்குப் போதுமானதாக ஆகும். ஒரு ஆட்டில் கறக்கப்படும் பால் ஒரு குடும்பத்துக்குப் போதுமானதாக அமையும். இவர்கள் இவ்வாறு இருக்கும்போது தூய்மையான காற்றை அல்லாஹ் அனுப்புவான். அனைத்து முஸ்லிம்களின் உயிர்களையும் அது கைப்பற்றும். மிகவும் கெட்டவர்கள் மட்டுமே மிஞ்சுவார்கள். அவர்கள் வாழும்போதுதான் உலகம் அழியும் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
நூல் : முஸ்லிம் 5629

Rahmath Rajakumaran

குள்ளர்கள் என்ற பிக்மி (Pygmy)
" பிக்மி " என்றால் நம்ம முழங்கையிலிருந்து விரல் மூட்டுகள் வரையுள்ள தூரம் அதாவது சுமார் 14 இன்ஞ் . இந்த 14 இன்ஞ் உயரமுள்ள ஒரு மனிதனை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா ? அமெரிக்கா வயோமிங் மாகாணத்தில் ஒரு 14 இன்ஞ் முழு மனிதனின் உடலைக் கண்டெடுத்தார்கள் . கை கால் எல்லாம் சரியான விகிதாசாரத்தில் , சர்க்கஸ் குள்ளர்கள் போல

ஏறுக்கு மாறாக இல்லாமல் முழு மனிதனாகவே இருந்ததாக ஆய்வுக் கூட ரிப்போர்ட் சொல்கிறது.
....இதுலே அசந்துட்டா எப்படி .. அடுத்து பாருங்கள் .
அமெரிக்க சான் பெட்ரோ (san pedro) மலை . இது யூயோமிங் (Wyoming) பகுதியில் உள்ளது .இங்கு நிறைய தங்கப்புதையல் இருப்பதாக 1932 ல் ஒரு கூட்டம் தங்கம் எடுக்க கிளம்பியது. 4 க்கு 4 அடி நீள அகலத்தில் , ஆழம் 19 அடி ஒரு குகையின் உள்ளே ஆறரை இன்ச் உயரமுள்ள குள்ள மனிதனின் மம்மி ஒன்று இருந்தது . இதுவும் முழு மனிதனின் பரிமாணத்தில் இருந்ததாக மானுடவியலாளர்கள் (Anthropologist) கூறுகிறர்கள் .
சரி , இது இறந்து எத்தனை காலம் . கொஞ்சம் நில்லுங்க , சரியாக
7 ஜூலை 1979 கணக்கிட்டால் சரியாக 1700 வருஷம் முன் வாழ்ந்து இறந்துள்ளார் இந்த மாண்புமிகு குள்ளர், இந்த குள்ளரை ஒரு கண்ணாடி ஜாரில் வைத்து நியூயார்க் மியூஷியத்தில் 1950 வரை இருந்தது . இக் குள்ளர்கள் இனம் நிறைய அமானுஷ்ய வேலைகளை செய்யும் என்றும் வேற்று கிரக வாசிகளின் தொடர்பு உண்டு என்பதான தகவல்களை இம்மலையை ஒட்டி வாழ்ந்த செவ்விந்தியர்கள் கூறவும் மம்மி மியூஷியத்திலிருந்து மிஸ்ஸிங் !
தமிழ்நாட்டில் திண்டுக்கல் - கொடைக்கானல் ஊராட்சி வடக்கு ஊஞ்சி என்ற மலைக் கிராமத்தில் செம்பரக்குளம் அஞ்சி வீடு என்ற இடத்தில் இன்னும் குள்ளர்கள் நடமாட்டம் உள்ளதாம் . ஜாக்கிரதையாக போய் பார்க்கவும் . கொண்டு போற பேக்கில் நுழைந்து விடுவார்கள் .
நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே வடுகம் கிராமத்தில் 3 கிமீ போனீங்கனா போதைமலையில் சாமியார்கள் குள்ளர்களை வசிய மருந்துக்காக தேடுகிறார்கள் .மற்றவர்கள் குள்ளர்களின் தங்க புதையலை தேடுகிறார்கள் .
அதென்னமோ குள்ளர்கள் என்றாலே அமானுஷ்யம் மற்றும் தங்க புதையல் பற்றி பேச்சி அடிபடுகிறது .
இந்தோனேஷியாவின் கிழக்கு பகுதியில் உள்ள புளோரஸ் தீவு (Flores) எரிமலைகள் , காடுகள் கூடவே நிறைய மர்மங்களும் , நிறைய நிறைய அமானுஷ்யங்களும் நிறைந்த தீவு.
2003-ல் டாக்டர் ரிச்சர்ட் ராபர்ட் 19 அடி ஆழத்தில் உள்ள குகையில் 3 அடி உயரமுள்ள பெண் எலும்புக்கூடு .3 வயது குழந்தையாக இருக்குமோ என்று சோதித்ததில் 30 வயது பெண் எலும்பு கூடு . 18 ஆயிரம் வருஷத்திற்கு முன் இந்த 3 அடி உயரமுள்ள 30 வயது பெண்
" வாங்க மச்சான் வாங்க ,வந்த வழியே பார்த்து போங்க " என்று ஆடி பாடியிருக்கிறாள் .
இங்குள்ள குள்ளர்களை நெல்லிஸ் குயா குள்ளர்கள் என்றழைக்கின்றனர் .
இவர்கள் சதா தின்னுக் கொண்டே இருப்பதால் எபுகோகோ என்றும் அழைக்கின்றனர். கண்கள் . காதுகள் பெரிது , உடல் முழுவதும் ரோமம். புரியாத மொழி .
பக்கத்து கிராமங்களில் இரவில் புகுந்து பயிர்கள் . உணவு பொருட்கள் . பழங்களை திருடி எப்போதும் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள் .

" தாப்பத்துல் அர்ளு " - விநோத மிருகம்
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 20)



தஜ்ஜால் என்கிற விநோதமான மனிதன் , யஃஜூஜ், மஃஜூஜ் என்கிற விநோதமான கூட்டம் ,இந்த வரிசையில் கியாமத் நாளின் அடையாளமாக தாப்பத்துல் அர்ளு என்கிற விநோதமான மிருகம் பூமியிலிருந்து வெளிப்படும் !
" இறுதிநாள் அவர்களை நெருங்கிய சமயத்தில், அவர்களுக்காகப் பூமியிலிருந்து ஒரு கால்நடையை நாம் வெளிப் படுத்துவோம். அது எந்தெந்த மனிதர்கள் நம்முடைய வசனங்களை நம்பிக்கை கொள்ளவில்லை என்பதை அவர்களுக்குச் சொல்லிக் காண்பிக்கும் "
(அல்குர்ஆன்: 27:82)

இது வெளிவரும் முன்னே நபி ஈஸா (அலை) அவர்களும் , முஸ்லிம்களும் பைத்துல்லாஹ்வை தவாஃபு செய்து கொண்டிருக்கும் பொழுது , அவர்களுக்கு கீழே பூமி ஆடும். விளக்குகள் ஆடுவது போல ஆடும் .
ஸஃபா மலை ஸஈ செய்யும் இடத்தைச் சார்ந்த பகுதியில் பூமி பிளந்து அதிலிருந்து இந்த மிருகம் வெளியேறும்
இது முழுமையாக வெளியேற மூன்று நாட்களாகும் .

இதற்கு இரண்டு சிறகுகளும் , காளை மாட்டு தலையும் , மனித முகமும், பன்றிக் கண்ணும் , யானைக் காதும், மாட்டுக் கொம்பும், ஒட்டகக் கழுத்தும் , சிங்க நெஞ்சும், பூனை இடுப்பும் , தும்பை ஆட்டு வாலும் , ஒட்டகக் காலும் , வேங்கை நிறமும் கொண்டதாக இருக்கும் .
அதன் வலது கையில் நபி மூஸா (அலை) அவர்களின் ' அஸா 'என்ற தண்டமும் , இடது கையில் நபி சுலைமான் (அலை) அவர்களின் 'காத்தம்' என்னும் முத்திரையும் இருக்கும்.
மூமின்களை அவர்களது நெற்றியில்

அத்தண்டத்தால் அது அடிக்கும் அவ்வடியின் அடையாளத்தால் ஒரு புள்ளி போல் விழும். அது கொஞ்சம் கொஞ்சமாக பெரியதாகி முகம் பிரகாசிக்கும் . அந்த தரும்பும் பிரகாசத்தில் " இவர் மூமின் " என்று நெற்றியில் எழுதும் . "இவர் சுவனவாசி " என்றும் கூறும் .
இறை மறுப்பாளர்களுடைய மூக்கில் அந்த முத்திரையைக் கொண்டு முத்திரை இடும் . அது மச்சம் உண்டாகி , படர்ந்து பெரியதாகி முகத்தைக் கருப்பாக்கி விடும். " இவன் காஃபிர் " என்று அவனுடைய இரு கண்களுக்குமிடையில் எழுதும் . "இவன் நரகவாசி " என்றும் கூறும்
ஹயாத்துல் ஹைவான் என்ற கிதாபில் கூறப்பட்டுள்ளது.

இம் மிருகம் 40 வருஷம் வரை இருக்கும் .
ஒரே மாதத்தில் 3 சந்திர கிராணம் ஏற்படும். அதன் பின் ஒரு விதமான புகை உண்டாகும் . அந்த புகை பயங்கரமானதாயும் , திகிலடி தரத்திலும் இருக்கும் . பூமி முழுவதையும் சூழ வளைந்து நெளிந்து செல்லும் .இது தொடர்ச்சியாக 40 நாள் வரை மனிதர்களை பயமுறுத்தும் .
புகைக்கு பின் ஹபசி ராஜன் கஃபாவை இடிப்பதற்குப் பெரும் படை திரட்டிக் கொண்டு வருவான் . அவனை எதிர்த்து முஸ்லிம்கள் போர் செய்வார்கள். இருந்த போதிலும் ஹபசி ராஜனே ஜெயிப்பான்.
அவன் கஃபாவை இடித்துப் போடுவான். அந்த தருணத்தில் அல்லாஹ் தஆலா கஸ்தூரியை விட அதிக வாசனையுள்ள ஒரு விதமான காற்றை வீசச் செய்வான்.
அக்காற்றை சுவாசிக்கும் முஸ்லிம்கள் எல்லோரும் இறந்து விடுவார்கள் .

"அல்லாஹ்" என்று சொல்லக் கூடியவன் ஒருவனாது இப்பூமியில் இல்லாமல் எல்லோரும் நிராகரிப்பாளராக இருப்பார்கள் இத்தருணத்தில் குர்ஆனின் எழுத்துக்கள் எல்லாம் அழிந்து வெறும் தாளாக மாறி , பின் வானளவில் உயர்த்தப்படும் .தவ்பாவின் வாசல் அடைப்பட்டுப் போகும். அதன் பின் யாரும் ஈமான் கொள்ள முடியாது.

அதன் பின் சூரியன் மேற்கில் உதயமாகும் .பின் சூரியன் உதயமாகாமல் மூன்று நாள் இரவாகவே இருக்கும் . மக்கள் பயத்திலும் ,பீதியிலும் பதறியடித்து அங்கும் இங்கும் ஓடி தட்டழிந்து இருட்டில் கீழே கீழே விழுவார்கள் . நான்காம் நாள் சூரியன் திரும்பவும் மேற்கிலேயே உதயமாகும் . அப்போது சூரியன் கிரகணம் பிடித்த மாதிரி மங்கலாக இருக்கும் . அப்படியே உச்சி வரையும் வந்து சிவப்பாகி, மீண்டும் மேற்கிலேயே அஸ்தமிக்கும் .

அடுத்த நாள் சூரியன் வழக்கம் போல் உதயமாகும் .இது நடந்து நூற்றிருபது வருஷம் வரை இப்பூமியில் மனிதர்கள் தரித்திருப்பார்கள் . ஆனாலும் அவர்களுக்கு ஒரு விதமான மனம் பாதிக்கப்பட்டவர்கள் மாதிரி இருப்பார்கள் . அந்த தருணத்தின் போது நெருப்பு வெளிப்படும் .
மகா கொடுமையான அந்த நெருப்பு , 'அதன்' என்னும் பட்டணத்தின் கீழிருந்து வெளிப்படும் . வெளிப்பட்டு மனிதர்கள் கூடவே நீங்காது இருக்கும் .
இந்த நெருப்பு மனிதர்கள் , ஜின்கள் , ஷைத்தான்களையும் மிருக , பிராணிகளையும் எல்லோருரையும் சூழ வளைத்து திரட்டிக் கொண்டு போய் மஹஷர் வெளியாகும் தானத்திற்கு சேர்க்கும் . அப்போது கியாமத் நாள் மிக்க சமீபமாக இருக்கும் .
ர.ரா
கியாமத் நாளின் அடையாளங்கள் 20 வது பதிவோடு நிறைவு .அடுத்த பதிவு கியாமத் நாள்

Rahmath Rajakumaran

1. எனது மரணம்
2. பைத்துல் முகத்தஸ் வெற்றி
3. கொத்து கொத்தாக மரணம்
4. நூறு தங்கக் காசுகள் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டாலும் அதில் திருப்தியடையாத அளவுக்கு செல்வச் செழிப்பு
5. அரபுகளின் வீடுகள் முழுவதையும் ஆட்டிப் படைக்கும் குழப்பங்கள்
6. மஞ்சள் நிறத்தவர்(வெள்ளையர்)களுக்கும் உங்களுக்கும் நடக்கும் யுத்தம். அவர்கள் எண்பது அணிகளாக உங்களை நோக்கி வருவார்கள். ஒவ்வொரு அணிகளிலும் 12 ஆயிரம் பேர் இருப்பார்கள்.

• நூல்: புகாரி 3176

மதீனா தூய்மையடைதல்

துருத்தி எவ்வாறு இரும்பின் துருவை நீக்குமோ அது போல் மதீனா நகரம் தன்னிடம் உள்ள தீயவர்களை அப்புறப்படுத்தும் வரை யுக முடிவு நாள் வராது என்பது நபிமொழி.

• நூல்: முஸ்லிம் 2451

அன்றும் இன்றும் என்றும் நிகழ்ந்து கொண்டிருப்பவை

யுக முடிவு நாள் வரும் வரை முஸ்லிம்களில் ஒரு கூட்டம் இம்மார்க்கத்திற்காக போராடிக் கொண்டே இருக்கும் என்பது நபிமொழி.

• நூல்: முஸ்லிம் 3546

மாபெரும் பத்து அடையாளங்கள்

இவை தவிர மிக முக்கியமான அடையாளங்களாக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து விஷயங்களைக் குறிப்பிட்டார்கள்.

1 - புகை மூட்டம்
2 - தஜ்ஜால்
3 – (அதிசயப்) பிராணி
4 - சூரியன் மேற்கிலிருந்து உதிப்பது
5 - ஈஸா (அலை) இறங்கி வருவது
6 - யஃஜூஜ், மஃஜூஜ்
7 - கிழக்கே ஒரு பூகம்பம்
8 - மேற்கே ஒரு பூகம்பம்
9 - அரபு தீபகற்பத்தில் ஒரு பூகம்பம்
10 - இறுதியாக ஏமனி’லிருந்து புறப்படும் தீப்பிளம்பு மக்களை விரட்டிச் சென்று ஒன்று சேர்த்தல் ஆகிய பத்து அடையாளங்களை நீங்கள் காணும் வரை அந்த நாள் வராது என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளார்கள்.

• அறிவிப்பவர்: ஹுதைபா (ரலி), நூல்: முஸ்லிம் 5162.

புகை மூட்டம்

வானம் தெளிவான புகையை வெளிப்படுத்தக் கூடிய நாளை எதிர்பார்ப்பீராக! அப்புகை மனிதர்களைச் சூழ்ந்து கொள்ளும், இது கடுமையான வேதனையாக அமைந்திருக்கும்.

• (அல்குர்ஆன் 44:10,11)

உங்கள் இறைவன் உங்களுக்கு மூன்று விஷயங்களைப் பற்றி எச்சரிக்கிறான். அவற்றில் ஒன்று புகை மூட்டம். முஃமினை இப்புகை ஜலதோஷம் பிடிப்பது போல்
பிடிக்கும். காஃபிரைப் பிடிக்கும் போது அவன் ஊதிப்போவான். அவனது செவிப்பறை வழியாகப் புகை வெளிப்படும். இரண்டாவது (அதிசயப்)பிராணி. மூன்றாவது தஜ்ஜால் என்று நபி(ஸல்) கூறியுள்ளார்கள்.

• அறிவிப்பவர்: அபூமாலிக்(ரலி) நூல்: தப்ரானி

யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினரின் வருகை

இறுதியில் யஃஜூஜ், மஃஜூஜ் கூட்டத்தினர் திறந்து விடப்படுவார்கள். உடனே அவர்கள் (வெள்ளம் போல் ஒவ்வொரு மேட்டிலிருந்தும்) விரைந்து வருவார்கள்.

• (அல்குர்ஆன் 21:96)

ஈஸா(அலை) அவர்களின் வருகை

நிச்சயமாக அவர் (ஈஸா) இறுதிநாளின் அடையாளமாவார். இதில் அறவே சந்தேகம் கொள்ளாதீர்கள்! என்னைப் பின்பற்றுங்கள். இதுதான் நேரான வழியாகும்.

• (அல்குர்ஆன் 43:61)

மூன்று பூகம்பங்கள்

(மதீனாவின்) கிழக்கே ஒரு பூகம்பம். மேற்கே ஒரு பூகம்பம், அரபு தீபகற்பத்தில் ஒரு பூகம்பம் ஆகிய மூன்று பூகம்பங்களை நீங்கள் காண்பது வரை யுகமுடிவு நாள் ஏற்படாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

• அறிவிப்பவர்: ஹுதைபா(ரலி) நூல்: முஸ்லிம்

பெரு நெருப்பு
எமனிலிருந்து நெருப்பு தோன்றி மக்களை அவர்களது மஹ்ஷரின்பால் விரட்டிச் செல்லும், அதுவரை கியாமத் நாள் ஏற்படாது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
• அறிவிப்பவர்: ஹுதைபா(ரலி) நூல்: முஸ்லிம் .

Rahmath Rajakumaran

காலம் சுருங்குதல்
காலம் சுருங்கும் வரை அந்த நாள் ஏற்படாது. (இன்றைய) ஒரு வருடம் (அன்று) ஒரு வாரம் போலாகி விடும். (இன்றைய) ஒரு வாரம் (அன்று) ஒரு நாள் போலாகும். (இன்றைய) ஒரு நாள் (அன்று) ஒரு மணி நேரம் போல் ஆகும். ஒரு மணி என்பது ஒரு விநாடி போன்று ஆகும் என்பதும் நபிகள் நாயகம் அவர்கள் காட்டிய அடையாளம்.
நூல் : திர்மிதீ 2254)
கொலைகள் பெருகுதல்*
கொலைகள் அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.
நூல் : புகாரி 85, 1036, 6037, 7061
நில அதிர்வுகளும், பூகம்பங்களும் அதிகரித்தல்*
பூகம்பங்கள் அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளமாகும் என்று நபிகள் நாயகம் (ஸல்) குறிப்பிட்டுள்ளனர்.
நூல்: புகாரி 1036, 7121
பள்ளிவாசல்களை வைத்து பெருமையடிப்பது*
மனிதர்கள் பள்ளிவாசல்களைக் காட்டி பெருமையடிப்பது யுக முடிவு நாளின் அடையாளங்களில் ஒன்றாகும் என்பது நபிமொழி.
நூல்கள் : நஸயி 682, அபூதாவூத் 379, இப்னுமாஜா 731, அஹ்மத் 11931, 12016,
நெருக்கமான கடை வீதிகள்*
கடைகள் பெருகி அருகருகே அமைவதும், நியாயத் தீர்ப்பு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.
நூல்: அஹ்மத் 10306
பெண்களின் எண்ணிக்கை அதிகரித்தல்*
பெண்களின் எண்ணிக்கை தாறுமாறாக அதிகரிப்பதும் யுக முடிவு நாளின் அடையாளமாகும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.
நூல்: புகாரி 81, 5231, 5577, 6808
ஆடை அணிந்தும் நிர்வாணம்
ஆடை அணிந்தும் நிர்வாணமாகத் தோற்றமளிக்கும் பெண்கள் இனி மேல் தோன்றுவார்கள் என்பதும் நபிமொழியாகும்.
நூல் : முஸ்லிம் 3971, 5098
உயிரற்ற பொருட்கள் பேசுவது
விலங்கினங்கள் மனிதனிடம் பேசும் வரையிலும் தோல் சாட்டையும் செருப்பு வாரும் மனிதனிடம் பேசும் வரையிலும் யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி.
நூல்: அஹ்மத் 11365
பேச்சைத் தொழிலாக்கி பொருள் திரட்டுதல்
தங்கள் நாவுகளை (மூல தனமாகக்) கொண்டு சாப்பிடக் கூடியவர் கள் தோன்றும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி.
• நூல்: அஹ்மத் 1511
தெரிந்தவருக்கு மட்டும் ஸலாம் கூறுதல்
தெரிந்தவருக்கு மட்டும் ஸலாம் கூறுவது யுக முடிவு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.
• நூல்: ஹாகிம் 4/493
பள்ளிவாசலை பாதைகளாகப் பயன்படுத்துதல்
பள்ளிவாசல்கள் பாதைகளாக ஆக்கப்படுவதும் யுக முடிவு நாளின் அடையாளம் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறியுள்ளனர்.
• நூல்: ஹாகிம் 4/493

Rahmath Rajakumaran

சாவதற்கு ஆசைப்படுதல்
இறந்தவர்களை அடக்கம் செய்த இடத்தைக் காணும் மனிதன் நானும் இவனைப் போல் செத்திருக்கக் கூடாதா என்று கூறாத வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி.
• நூல்: புகாரி 7115, 7121

இறைத்தூதர் என வாதிடும் பொய்யர்கள்
ஏறத்தாழ முப்பது பொய்யர்கள் தம்மை இறைத்தூதர் என்று வாதிடும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பதும் நபிமொழி.
• நூல்: புகாரி 3609, 7121
முந்தைய சமுதாயத்தைக் காப்பியடித்தல்
'உங்களுக்கு முன் சென்றவர்களை ஜானுக்கு ஜான், முழத்துக்கு முழம் நீங்கள் பின்பற்றுவீர்கள். அவர்கள் உடும்புப் பொந்தில் நுழைந்தார்கள் என்றால் நீங்களும் நுழைவீர்கள்" என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். 'அல்லாஹ்வின் தூதரே முன் சென்றவர்கள் என்று நீங்கள் குறிப்பிடுவது யூதர்களையும், கிறித்தவர்களையுமா?" என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 'வேறு யாரை (நான் குறிப்பிடுகிறேன்)" என்று கூறினார்கள்.
• நூல்: புகாரி 3456, 7319
யூதர்களுடன் மாபெரும் யுத்தம்
யூதர்களுடன் நீங்கள் போர் செய்யும் வரை யுக முடிவு நாள் வராது. அந்த யுத்தத்தின் போது 'முஸ்லிமே இதோ எனக்குப் பின் னால் யூதன் ஒருவன் ஒளிந்திருக்கிறான்" என்று பாறைகள் கூறும்.
• நூல்: புகாரி 2926
கஃபா ஆலயம் சேதப்படுத்தப்படுதல்
கஃபா ஆலயம் இறைவனால் பாதுகாக்கப்பட்ட ஆலயமாக இருந்தாலும் 'கால்கள் சிறுத்த அபீஸீனியர்கள் அதைச் சேதப்படுத்துவார்கள்" என்பது நபிமொழி.
• நூல் : புகாரி 5179
யூப்ரடீஸ் நதியில் தங்கப் புதையல்
யூப்ரடீஸ் (ஃபுராத்) நதி தங்கப் புதையலை வெளியே தள்ளும். அதைக் காண்பவர்கள் அதிலிருந்து எதையும் எடுக்க வேண்டாம் என்பதும் நபிமொழி.
• நூல் : புகாரி 7119
கஹ்தான் இன மன்னரின் ஆட்சி
(யமன் நாட்டு) கஹ்தான் கோத்திரத்தைச் சேர்ந்த ஒருவர் தமது கைத்தடியால் மக்களை ஓட்டிச் செல்லும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பது நபிமொழி.
• நூல் : புகாரி 3517, 7117
அல்ஜஹ்ஜாஹ் மன்னர்
ஜஹ்ஜாஹ் என்ற பெயருடைய ஒரு மன்னர் ஆட்சிக்கு வராமல் உலகம் அழியாது என்பது நபிமொழி.
• நூல் : முஸ்லிம் 5183
எண்ணிப் பார்க்காது வாரி வழங்கும் மன்னர்
கடைசிக் காலத்தில் ஒரு கலீஃபா (ஆட்சியாளர்) தோன்றுவார். அவர் எண்ணிப் பார்க்காமல் செல்வத்தை வாரி வழங்குவார் என்பது நபிமொழி.
• நூல் : முஸ்லிம் 5191
செல்வம் பெருகும்
செல்வம் பெருகும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது என்பது நபிமொழி.
• நூல் : புகாரி 1036, 1412, 7121
ஒருவர் தனது தர்மத்தை எடுத்துக் கொண்டு சென்று இன்னொருவருக்குக் கொடுப்பார். 'நேற்று கொடுத்திருந்தால் நான் வாங்கியிருப்பேன்; இன்று எனக்குத் தேவையில்லை" என்று அந்த மனிதன் கூறிவிடுவான் என்பதும் நபிமொழி.
• நூல் : புகாரி 1424
மாபெரும் யுத்தம்
இரண்டு மகத்தான சக்திகளுக்கிடையே யுத்தம் நடக்கும் வரை யுக முடிவு நாள் ஏற்படாது. அவர்களுக்கிடையே மகத்தான யுத்தம் நடக்கும். இருவரும் ஒரே வாதத்தையே எடுத்து வைப்பார்கள்.
• நூல் : புகாரி 3609, 7121, 6936
பைத்துல் முகத்தஸ் வெற்றி
யுக முடிவு நாளுக்கு முன் ஆறு காரியங்களை எண்ணிக் கொள்!

கியாமத் நாளின் பொழுதுகள் 01
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 21)



இன்றைய தினத்தில் இருந்து 1500 கோடி வருஷங்களுக்கு முன்னால் இந்தப் பிரபஞ்சம் ஒரே ஒரு பெரு வெடிப்பின் மூலம் படைக்கப்பட்டிருக்கலாம் என்கிறது விஞ்ஞானம் . 1500 கோடி வருஷமா அல்லாஹ்வே அறிவான்
(ஆரம்பத்தில்) வானம் (என்றும்) பூமி (என்றும் தனித்தனியாக) இல்லாமல் ஒன்றாக இருந்ததை நாமே பிரித்தமைத்தமைத்தோம்.
(அல்குர்ஆன்: 21:30)

'ஆரம்பம் ' என்றொன்றிருந்தால், 'முடிவும ' இருக்கத்தானே செய்யும், இது தானே உலக நியதி... படைக்கப்பட்ட இந்த உலகத்திற்கும் இது பொருந்தும் அல்லவா?
" கியாமத் " என்ற உலக இறுதி நாட்கள். "கியாமா " என்றால் எழுந்திருத்தல் , அது துன்யா ஒழிந்து போய் ஆகிறா வெளியாய் , படைப்புகள் உட்பட எல்லாம் உயிர் பெற்று எழும்புதல் . இதைத்தான் கியாமத் நாள் எனப்படும். அந்த நாள் துனியாவின் வருஷத்தில் 50 ஆயிரம் வருடத்திற்கு சமமான ஒரு நாளாக இருக்கும் .

" அந்நாளில் மலக்குகளும், ஜிப்ரயீலும் அவனிடம் போய்ச் சேருவார்கள். (அந்நாள்) ஐம்பதினாயிரம் வருடங்களுக்குச் சமமாக இருக்கும்.
(அல்குர்ஆன்: 70:4)
சூர் என்பது ஒருவித ஊது கொம்பு அதன் ஒரு தலை சிறுத்து ஒரு தலை பெருத்துமுள்ள காளைக் கொம்பு போல் இருக்கும். அதன் தலை சுற்றளவு இந்த பூமியின் சுற்றளவாக இருக்கும்.

அல்லாஹு தஆலா இஸ்றாபீல் (அலை) என்ற வானவர் மலக்கை சூது ஊதும்படி ஏவுவான். உடனே அவர்கள் ஊதுவார்கள் இது முதல் சூர் ஊதல் . மனிதர்கள் அவரவர்கள் தத்தம் பணியில் படுத்தோ, நின்றோ , நடந்தோ , பேசிக் கொண்டோ , இனப்பெருக்கம் செய்து கொண்டோ இருக்கும் போது , ஊ ....உடனே உயிரைக் கைப்பற்றும் இஸ்றாயீல் (அலை) என்ற வானவர் மலக்கு , இறைவன் நாடின சிலர் தவிர வானத்திலும் , பூமியிலுமுள்ள எல்லாப் படைப்புகளுடைய ரூஹை உயிரை ஒரே நேரத்தில் கைப்பற்றுவார்கள் .

சூர் வினுடைய சத்தத்தின் அமளி கொண்டே எல்லோருமே இறந்து விடுவார்கள் .
மலைகள் நொருங்கி பஞ்சு பஞ்சாய்ப் பறக்கும் . கடல்கள் எல்லாம் கொதித்து கொந்தளித்து வற்றி வறண்டு போகும்.

பூகம்பங்கள் தொடர்ந்து பூமியைத் தாக்க பூமி இடிந்து தகர்ந்து சம தரையாகி விடும். சூரியனும் , சந்திரனும் , நட்சத்திரங்களும் ஒளி மங்கி கருத்துப் போய் விடும் . ஏழு வானங்களும் அதிர்ந்து நிலை குலைந்து அலைந்து கொண்டு அதிரும் .
"வானங்களையும், பூமியையும் படைத்தவன் உண்மையாகவே அவன்தான். (அவன் யாதொன்றை படைக்கக் கருதும்போது) "ஆகுக!" என அவன் கூறுவதுதான் (தாமதம்.) உடனே (அது) ஆகிவிடும். அவனுடைய சொல்தான் உண்மை. சூர் (எக்காளம்) ஊதப்படும் நாளில், அதிகாரம் அவன் ஒருவனுடையதாகவே இருக்கும். மறைவானவற்றையும், வெளிப்படையானவற்றையும் அவன் நன்கறிவான். அவன் ஞானமுடையவனாகவும், (அனைத்தையும்) நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் : 6:73)

இது முதல் சூர் குழலின் முதல் ஊதல் .
படைப்புகள் எல்லாம் உயிரற்ற சடலங்களாக பூமியில் நிறைந்திருக்க , இப்லீஸ் என்கிற சைத்தான் எங்கே என்னவானான் ?
சொல்றேன் .
ர.ரா

கியாமத் நாளின் பொழுதுகள் 02
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 22)



அல்லாஹுு தஆலா மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களை அழைத்து , "நீர் உம்முடன் 70 ஆயிரம் ஜபானியாக்களைக் கூட்டிக் கொண்டு நரகத்திலுள்ள 70 ஆயிரம் நெருப்பு சங்கலியையும் , நரகத்திலுள்ள 70 ஆயிரம் கை கால் விலங்குகளையும் எடுத்துக் கொண்டு நெருப்பால் படைக்கப்பட்ட இபுலீஸிடம் போய் அவனை மவ்த்தாக்கும் " - என்று உத்திரவு பிறப்பிப்பான் .
அல்லாஹுு தஆலா சொன்ன மாதிரியே இஸ்றாயீல் (அலை) அவர்கள் ஜபானியாக்களையும் விலங்கு சங்கிலிகளுடன் , படைப்புகளெல்லாம் அஞ்சி நடுங்கும்படியான பயங்கரமான தன் சொரூபத்தையை மாற்றிக் கொண்டு பூமியில் இறங்கி இபுலீஸிடம் வருவார்கள்.

மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களின் இந்த பயங்கர சொரூபத்தைக் கண்டதும் இபுலீஸ் தட்டுக் கெட்டு தடுமாறி அஞ்சி நிலத்தில் விழுந்து புரண்டு எழுந்து ஓடுவான் .
மலக்குல் மவ்த்து அவனை விடாமல் விரட்டிக் கொண்டு பின் தொடர்ந்து போவார்கள் .

பின் அவன் நபி ஆதம் (அலை) அவர்கள் அடங்கி இருக்கும் ஸ்தலத்தில் போய் நின்று கொண்டு , " ஆதமே ! நான் எவ்வளவு பெரிய பக்தனாய் இருந்து, மலக்குகளுக்கு இறைப் பாடம் சொல்லிக் கொடுக்கும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்தவன் . நான் சுஜூது செய்யாத இடம் இந்த பூமியில் உண்டா ? அப்பேர்பட்ட என்னை இறைக்
கோபத்திற்கும் , விலக்கி தள்ளப்பட்டதற்கும் , விரட்டி துரத்தப்பட்டதற்கும் காரணம் உம்மால் அல்லவா என்று கூறுவான் .

அதற்குள் மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவன் பின்னால் நிற்பதைப் பார்த்து அவரிடம் இபுலீஸ்,
" நீர் எனக்கு என்ன குடிப்பைக் கொடுத்து என் ரூஹை கைப்பற்றுவீர்? "
" லலா " என்னும் நரகத்தின் குடிப்பை உனக்கு குடிக்கக் கொடுத்து, " ஸயீறு " என்னும் நரகத்து வேதனையைக் உன் உயிரை சிறுகச் சிறுக கைப்பற்றுவேன்"
இதைக் கேட்டு இபுலீஸ் இன்னும் அதிகமாக கலக்கமுற்று 'இது என்ன சோதனை ' என்று மருண்டு ஓடுவான் .
மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவனை விரட்டிக் கொண்டே போவார்கள் .இவ்விதம் ஓடும் இபுலீஸ், முன் ஆரம்பத்தில் எந்த இடத்தில் வைத்து லஃனத்து செய்யட்டான் அதே இடத்தில் போய்ச் சேருவான்.

உடனே ஜபானியாக்கள் 70 ஆயிரம் பேர்களும் அவனை சூழ வளைத்துக்கு கொண்டு , மறுபுறம் போக முடியாமல் , சூலங்களாலும் , வல்லயங்களாலும் குத்தி அவனைத் தடுப்பார்கள் .
அப்போது இபுலீஸ் நெடுமரம் சாய்வது போல தரையில் சாய்ந்து விழுவான்.
விழுந்ததும் அவனுக்கு ஸக்கறாத்து என்னும் மரண வேதனை உண்டாகும் .
அந்த ஸக்கறாத்தில் அவனுடைய தொண்டையில் இருந்து ஒரு விதச் சப்தம் கேட்கும். அந்தச் சப்தத்தை யாரும் கேட்டால் திகில் கொண்டு அந்த இடத்திலேயே இறந்தே விடுவார்கள் .
இபுலீஸ் அவ்விதமான சப்தத்துடன்
ஸக்கறாத்தில் இழுத்துக் கொண்டு அல்லாஹுு தஆலா நாடின காலம் வரையும் கிடந்து சாவான்.
كُلُّ نَفْسٍ ذَآٮِٕقَةُ الْمَوْتِ ثُمَّ اِلَيْنَا تُرْجَعُوْنَ
(உங்களில் உள்ள) ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை அனுபவிக்க வேண்டியதுதான். பின்னர் நீங்கள் (விசாரணைக்காக) நம்மிடமே கொண்டு வரப்படுவீர்கள்.
(அல்குர்ஆன்: 29:57)

பிறகு அல்லாஹுு தஆலா மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களிடம்
" என்னுடைய அடியார்களில் இறக்காமல் மீந்திருப்பவர்கள் யார் யார் ? என்று கேட்பான் .
அதற்கு அவர்கள் , " ஜிப்ரயீல் , மீக்காயீல் , இஸ்றாபீல் ,உன் அர்ஷ்யை சுமக்கும் எட்டு மலக்குமார்களும் இவர்களுடன் எல்லோரின் உயிரை வாங்கும் மலக்குல் மவ்த்து இஸ்றாயீலாகிய நானும் , உயிரோடு இருக்கிறோம் யா அல்லாஹ் !
அப்புறமாக சொல்றேன்.
ர.ரா

கியாமத் நாளின் பொழுதுகள் 03
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 23)



அல்லாஹுு தஆலா மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களிடம்
" என்னுடைய அடியார்களில் இறக்காமல் மீந்திருப்பவர்கள் யார் யார்? என்று கேட்பான் .
அதற்கு அவர்கள் , " **ஜிப்ரயீல் , மீக்காயீல் , இஸ்றாபீல்** ,உன் அர்ஷ்யை சுமக்கும் எட்டு மலக்குமார்களும் இவர்களுடன் எல்லோரின் உயிரை வாங்கும் மலக்குல் மவ்த்து இஸ்றாயீலாகிய நானும் , உயிரோடு இருக்கிறோம் யா அல்லாஹ் ! "
அவர்கள் அனைவரையும் மவ்த்தாகும்படி அல்லாஹுுதஆலா மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களிடம் கட்டளை இடுவான். அதன்படி அனைவரின் உயிரையும் கைப்பற்ற அவர்கள் இறந்து போவார்கள் .


அல்லாஹுு தஆலா மலக்குல் மவ்த்து இஸ்றாயீல் (அலை) அவர்களிடம் , "இப்போது மீந்தவர் யார் ? " என்று கேட்பான்.
அதற்கு " உன் அடியானாகிய நான் மட்டுமே மீந்திருக்கிறேன் யா அல்லாஹ்"
" என்னுடைய படைப்புகளில் நீரும் ஒரு படைப்பு தான், ஆகையால் நீரும் மவ்த்தாகி விடும் " . என்று கட்டளை இடுவான்.

உடனே அவர்கள் சுவர்க்கத்திற்கும் , நரகத்திற்கும் இடையில் போய் விழுந்து நாற்பது வருஷம் வரையும் ஸக்ரத்து என்று மரண வேதனை வருத்தம் அனுபவித்துக் கொண்டு, " ஸக்ரத்து வருத்தத்தை அனுபவித்துக் கொண்டு , இப்படி ஒரு மரண வருத்த வேதனை இருக்குமென்று முன்னமே நான் அறிந்திருந்தால் , முஃமின்களுடைய
ரூஹை வாங்கும்போதாவது அவர்களுக்கு இலேசாக எளிதாக வாங்கி இருப்பேனே ...." என்று பெருஞ் சப்தமிட்டு அலறிக் கொண்டு , அல்லாஹுு தஆலாவின் கட்டளைப்படி மவ்த்தாகி விடுவார்கள் .

இறக்கும்போது சூர் ஊது குழலை அருகில் வைத்துக் கொண்டு மவ்த்தாவார்கள் .
முதல் சூர் ஊதினபோதே இடிந்து தகர்ந்து சமதரையான பூமியும் , அதோடு அலைந்து குலைந்த வானமும், அர்ஷுும் , குர்ஷுும் , லௌஹுும் , சுவர்க்கம் , நரகமும் தவிர மற்ற எல்லா படைப்புகளும் அழிந்துப் போகும் .
அப்போது அல்லாஹுு தஆலா மட்டும் தனித்திருப்பான் . " உலகத்தை கட்டி ஆண்ட மன்னாதி மன்னர்களெல்லாம் இப்போது எங்கே ? மாட மாளிகைகளைக் கட்டிக் கொண்டு குடியிருந்த செல்வந்தர்கள் எங்கே ? என்னுடைய உணவைத் தின்று கொண்டு என்னை அல்லாத வேறு வஸ்துகளை வணங்கியவர்கள் எங்கே ? இப்போது ராஜாங்கம் யாருடையது ? அரசாட்சி யாருடையது ? என்று தன்னில் தானே கேட்பான் .

இக்கேள்விகளுக்கு மறுமொழி சொல்ல அங்கு ஒருவரும் இல்லை. ஆகையால் தான் கேள்விகளுக்கு மறுமொழியாக ராஜாங்கம் , அரசாட்சி ,அடக்கியாளும் ஒருவனாகிய அல்லாஹ்வுக்கே உடையாது என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்வான் .
وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ وَالْاِكْرَامِ
மிக கண்ணியமும் பெருமையும் தங்கிய உங்களது இறைவனின் திருமுகம் மட்டும் (அழியாது) நிலைத்திருக்கும்.

கியாமத் நாளின் பொழுதுகள் 04
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 24)



முதல் சூர் ஊதப்பட்டதும் அழிந்து போன தன் படைப்புகளையெல்லாம் அல்லாஹுு தஆலா எழுப்ப நாடுவான் . அதில் மலக்குகளில் எழுபதினாயிரம் காறூபீன்களையும் , இறை
அர்ஷை சுமந்த மலக்குமார்களையும், முதலில் உயிர்ப்பிப்பான்.இந்த காறூபீன்
மலக்குமார்களுடைய எண்ணிக்கை எழுபதினாயிரமா அதற்கும் மேலா என்பதையும் , அவர்களின் வலிமையையும் , மகிமையையும் அல்லாஹுு தஆலாவைத் தவிர யாரும் அறிய முடியாது .

மலக்குகள் காறூபீன்கள் உயிர்ப்பித்து , அவர்களிடம் “ லவ்ஹ் “ எங்கே என்று கேட்பான் . அதற்கு அவர்கள் “அது அர்ஷில் வைக்கப்பட்டிருக்கிறது “ என்பார்கள் .
அல்லாஹுு தஆலா “ லவ்ஹே ... ! “ என்று சப்தமிட்டு அழைப்பான் . அந்த சப்தத்தில் அது அஞ்சி நடுங்கித் துடிக்கும் . லவ்ஹ் என்பது ஐந்நூறு வருஷத் தூரப் பிரயாணமுள்ள ஒரே ஆணி முத்திலான ஒரு பலகை அதற்கு “ லவ்ஹுுல்
மஹ்ஃபூல் (பேணப்பட்ட பலகை) என்று பெயர் . அதில் துவக்க முதல் கியாமத் வரையுள்ள எல்லா விஷயங்களும் எழுதப்பட்டிருக்கும்.

ஒரு சின்ன ஃபிளாஸ் பேக்.....நபிகள் நாயகம் ﷺ அவர்களுடன் , மலக்குமார்கள் , அர்ஷ் , குர்ஷ் , கலம் என்கிற எழுதுகோல் இவைகளுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது . அதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.
ஹஜ்ரத் ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அன்சாரி ரழியல்லாஹு தஆலா அன்ஹு அறிவிக்கிறார்கள்,

.

நான் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டேன்.

.

“அல்லாஹ் முதன் முதலின் எதைப் படைத்தான்? ”
முதலில் அல்லாஹ் தனது ஒளியிலிருந்து எனது ஒளியைப் படைத்தான் ”

.

இந்த ஒளியானது அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்கி பயணித்தது, அந்நேரத்தில் சொர்க்கம், நரகம், எழுதுகோள், லவ்ஹு, வானம், பூமி, சூரியன், சந்திரன், ஜின், மனித இனம் என எதுவும் படைக்கப்படவில்லை.

.

அல்லாஹ் படைப்பினங்களை படைக்க நாடிய போது, அந்த ஒளியை நான்கு பாகங்களாக பிரித்து, முதல் பாகத்திலிருந்து எழுதுகோலையும், இரண்டாவதிலிருந்து லவ்ஹையும், மூன்றாவதிலிருந்து அர்ஷையும் படைத்தான்.

.

நான்காவது பாகத்தை மீண்டும் நான்கு பாகங்களாக ஆக்கி, முதலாவதிலிருந்து அர்ஷை சுமக்கும் மலக்குமார்களையும், இரண்டாவதிலிருந்து குர்ஸியையும், மூன்றாவதிலிருந்து மலக்குமார்களையும் படைத்தான்.

.

மீதமுள்ள ஒரு பாகத்தை மீண்டும் நான்காக பிரித்து, முதலாவதிலிருந்து வானங்களையும், இரண்டாவதிலிருந்து கோளங்களையும், மூன்றாவதிலிருந்து சுவனத்தையும், பூமியையும் படைத்தான்.

.

ரப்புல் ஆலமீன் அல்லாஹ் மீண்டும் நான்காவதை நான்கு பாகங்களாக பிரித்து, அவற்றில் முதலாவதிலிருந்து மூஃமின்கள் காணக்கூடிய ஒளியையும், இரண்டாவதிலிருந்து மூஃமின்களின் ஒளி பொருந்திய இதயங்களையும், மூன்றாவதிலிருந்து கலிமாவை மொழியக்கூடிய மூஃமின்களின் நாவுகளையும் படைத்தான்.
நூல் : தலாயினுன் நுபுவ்வத், இமாம் பைஹகீ ரலியல்லாஹு அன்ஹு

நபிகளாருடன் மேற்கண்ட படைப்புகள் எப்படி தொடர் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்து கொண்டீர்களா ?
லவ்ஹுல் மஹ்பூல் பலகையிடம் இறைவன் , " உன்னிடம் யான் தந்த வஸ்துக்கள் எங்கே ? "
" நான் அவைகளை வானவர் மலக்கு இஸ்றாயீலிடம் கொடுத்து விட்டேன் "
உடனே அல்லாஹு தஆலா இஸ்றாயீல் தன்னிடம் கொண்டு வரும்படி காறூபீன்களுக்கு கட்டளையிடுவான்.
இம் மலக்குமார்கள் இஸ்றாயீல் (அலை) அவர்களுடைய மகாமிற்குப் போய் " "இஸ்றாயீலே ... .! அல்லாஹ்வுடைய கூப்பிடுதலுக்கு ஜஸாபு (பதில்) சொல்ல வாரும் " என்று அழைப்பார்கள் .உடனே அல்லாஹுதஆலா இஸ்றாயீல் (அலை) அவர்களை உயிர்ப்பிப்பான். உடனே அவர்களை காறூபீன்கள் அழைத்துக் கொண்டு அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் விடுவார்கள் .
அல்லாஹுதஆலா இஸ்றாயீல் (அலை) அவர்களிடம் " லௌஹிடத்திலிருந்து நீ வாங்கின என்னுடைய அமானத்தை என்ன செய்தாய் ? "என்றுவிசாரிப்பான் அதற்கு அவர் " இஸ்றாபீலிடம் கொடுத்து விட்டேன்" என்று சொல்வார்.
இவரை அழைத்த மாதிரியே இஸ்றாபீலையும் அழைத்து , விசாரிக்க அவர் , " அதை மீக்காயீலிடம் கொடுத்து விட்டேன் " என்று சொல்வார் .
இவரை அழைத்த மாதிரியே மீக்காயீலையும் அழைத்து , விசாரிக்க அவர் , " அதை ஜிப்ரயீலிடம் கொடுத்து விட்டேன் " என்று சொல்வார் .
இவரை அழைத்த மாதிரியே ஜிப்ரயீலையும் அழைத்து , விசாரிக்க அவர் , " அதை முஹம்மதர் ரஸூல்லா (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டேன்" என்று சொல்வார்கள் .
ர ரா

கியாமத் நாளின் பொழுதுகள் 05
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 25)



அல்லாஹுு தஆலா மலக்குமார்கள் கர்ரூபீன்களிடம் " என்னுடைய ஹபீபாகிய முஹம்மதர் ரஸூல்லாஹ் ﷺஅவர்களின் இடத்திற்குப் போய் , அவர்களை மிக்க கண்ணியத்துடன் அழைத்து வாருங்கள் " கூறிவிட்டு ,
சுவனத்தின் அதிபதியாகிய ரில்வான் என்னும் மலக்கிடம் , " என்னுடைய ஹபீப் முஹம்மதர் ரஸூல்லாஹ் ﷺ அவர்களுக்காகவும், அவருடைய உம்மத்துக்காகவும் , சுவர்க்கங்களை எல்லாம் அலங்கரியும் " என்று கட்டளையிடுவான்.

பிறகு ஜிப்ரயீல் (அலை) அவர்களை அழைத்து , " இரண்டு பட்டாடைகளையும் , இஸ்றாபீல் (அலை) அவர்களை அழைத்து லிவாவுல் ஹம்து என்னும் புகழ் கொடியையும் கொண்டு போகும்படி அனுப்புவான்.

இந்த மலக்குகள் எல்லோரையும் , மிக்க பணிவுடனும் , மிகுந்த தாழ்மையுடனும் என் ஹபீபிடம் நடந்து கொள்ளுங்கள் என்று கட்டளையிடுவான்.

கியாமத் நாளின் போது வெடித்து சிதறிய பூமியில் தரைமட்டமாக எந்த அடையாளமும் எதுவும் தெரியாமல் இருக்க , ஜிப்ரயீல் (அலை) அவர்கள் பூமியிடம் , " ஷபீஉல் முதுனபீன் முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்களுடைய மேன்மையான மக்புரா எங்கிருக்கிறது ? " என்று கேட்பார்கள்.
அதற்கு பூமி , " என்னை வெடித்து சிதறி என்னை தரை மட்டமாக ஒரே மாதிரி ஆக்கிய வேதனையில் நான் இருக்கிறேன் . அவர்களின் மக்புரா எனக்கு எப்படி தெரியும் ?"
மலக்குமார்கள் செய்வது அறியாமல் நிற்க , அப்போது நபிகள் நாயகம் ﷺ அவர்களின் மக்புராவிலிருந்து பெரிய பிரகாசமுள்ள ஒரு ஒளிவானது ஒரு ஸ்தம்பம் போல எழுந்து வானம் வரையில் உயர்ந்து இலங்கிக் கொண்டிருக்கும் .அந்த ஒளியைக் கண்டு இதுதான் முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்களின் மக்புரா இதுதான் என்று அவ்விடம் நெருங்குவார்கள் .

ஜிப்ரயீல் (அலை) அவர்கள் உட்பட நான்கு மலக்குமார்களும் முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்களை கூப்பிடுவதற்காக ' நான் கூப்பிடமாட்டேன் , நான் கூப்பிடமாட்டேன்' என்று தர்க்கம் பண்ணி பின் வாங்குவார்கள்.
முடிவில் மீக்காயில் (அலை) அவர்கள் "அஸ்ஸலாமு அலைக்கும் யா ரஸூல்லாஹ் " என்று சொல்வார்கள் அதற்கு அவர்களின் மண்ணறையில் இருந்து எந்த பதிலும் வராது.
பின் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் "தூய்மையான ரூஹே ! தூய்மையான உடலில் மீள நுழை " என்று சொல்வார்கள். அதற்கும் எந்த வித ஊசாட்டமும் இருக்காது.

அதன் பிறகு இஸ்றாயீல் (அலை) அவர்கள் " விண்ணப்பம் செய்வதற்காகவும், கணக்கு கொடுப்பதற்காகவும் , உங்கள் உம்மத்து தீர்ப்பு பெறுவதற்காகவும் எழுந்திருங்கள் யா ரஸூல்லாஹ் "
என்று சொன்னதும் , உடனே முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்களின் மக்புரா அதிர்ந்து துளும்பி பிளந்து விரியும் .
முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்கள் மண்ணறையில் இருந்து எழுதுவார்கள்

அப்போது அவர்களின் சிரசிலும், தாடியிலும் ஒட்டியிருக்கும் மண்ணை தங்கள் தட்டிக் கொண்டு, வலது புறமும் , இடதுபுறமும் திரும்பிப் பார்ப்பார்கள். பூமியானது தன் மேலிருந்த கட்டிடங்கள் முதலியவைகளில் ஒன்றும் இல்லாமல் நிலை குலைந்து சம தளமாக இருக்கக் கண்டு , கண்ணீர் சிந்துவார்கள்.
இப்போது ஜிப்ரயீல் (அலை) அவர்கள்

" யா ரஸூல்லாஹ்! ஏன் அழுகிறீர்கள் ? தாங்கள் அல்லாஹ் தஆலா இடத்தில் மஹா மேலான அந்தஸ்தைப் பெற்றிருக்கிறீர்களே , வாருங்கள்"
" ஜிப்ரயீலே ...! இது எந்த நாள் என்று கேட்பார்கள் ." யா ரஸூல்லாஹ் ! இது கியாமத் நாள் , கைசேதப்படும் நாள் , விண்ணப்பஞ் செய்யும்நாள் , சந்திக்கும் நாள் , பிரியும் நாள் , வெருண்டோடும் நாள் ... என்று கூறுவார்கள் .
முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்கள் , "ஜிப்ரயீலே ! நீர் எனக்கு நன்மாராயம் சொல்லும் "
" தாங்களுக்கு நன்மாராயம் உண்டவதாக! இதோ சுவர்க்கத்து வாகனமாகிய புராக்கைப் பாருங்கள் , இறைவன் கொடுத்தனுப்பிய பட்டாடைகளைப் பாருங்கள் , தலைப்பாகைப் பாருங்கள், லிவாவுல் ஹம்தைப் பாருங்கள் .இவையெல்லாம் தங்களுக்காக ரப்பு கொடுத்து விட்டான் !

" இதுகளைப் பற்றி நான் உம்மிடம் எதுவும் கேட்கவில்லை, என்னுடைய உம்மத்தைப் பற்றியே உம்மிடம் கேட்கிறேன் என்னுடைய உம்மத் எங்கே? அவர்களுடைய காரியம் எப்படி ?
." யா ரஸூல்லாஹ் ! தாங்களின் மண்ணறைதான் முதலில் திறக்கப்பட்டுள்ளது "
இஸ்றாபீல் அவர்கள் ." யா ரஸூல்லாஹ் ! இன்னும் இரண்டாம் சூர் ஊதப்படவில்லை " என்பார்கள்
" இப்போதுதான் என் கண்கள் குளிர்ந்தது கல்பும் மகிழ்ந்தது " என்று சொல்லி பட்டாடைகளை வாங்கி உடுத்திக் கொண்டு தலைப்பாகையை தங்கள் தலையில் அணிந்து கொண்டு ," இன்றைய தினம் நான் என் இடுப்பை வரித்துக்கட்டிக் கொண்டு என் உம்மத்திற்காக மன்றாடுவேன் "
பின் ஜிப்ரயீல் (அலை) புராக்கை நபியவர்கள் முன்பாக கண்ணியமாக நிறுத்துவார்கள் .
" யா ரஸூல்லாஹ்! தாங்கள் ஏறுங்கள் "
புராக் வாகனம் நபியவர்களை சுமந்து கொண்டு அல்லாஹ் தஆலாவின் சமூகத்திற்கு வந்து சேரும்.

கியாமத் நாளின் பொழுதுகள் 06
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 26)



புராக் வாகனம் நபியவர்களை சுமந்து கொண்டு அல்லாஹ் தஆலாவின் சமூகத்திற்கு வந்து சேரும்.
உடனே முஹம்மத ரஸூல்லாஹ் ﷺ அவர்கள் இறைவன் முன்பு ஸுஜூதில் விழுவார்கள் .அப்போது அல்லாஹுு தஆலா என் ஹபீபே ! முஹம்மதே ! இது ருக்கூ , ஸுஜூது செய்யும் ஸ்தலம் அல்ல . விசாரணைகள் நடத்தும் ஸ்தலம். தலையை உயர்த்தும் .நீர் விரும்பினதை

என்னிடம் கேளும் நான் தருகிறேன் . தாங்கள் ஷபாஅத் செய்ய உத்தரவு தருகிறேன் . அப்போது நபியவர்கள் தலை நிமிர்ந்து எழுவார்கள் .

பிறகு அல்லாஹ் தஆலா நபி நாயகமவர்களைப் பார்த்து ,
"முஹம்மதே! ...ஜிப்ரயீல் என் அமானத்தை உம்மிடம் தந்தாரா ? "

"ஆம் "
" அதை என்ன செய்தீர்? "
" என் உம்மத்திடம் கொடுத்திருக்கிறேன்"
அதன் பின் " முஹம்மதே ! நீர் பைத்துல் முகத்தீஸில் இருக்கும் பாறைக்கல்லில் போய் உட்கார்ந்திருங்கள் " என்று கட்டளை இடுவான்.

முதல் சூர் ஊதிய முதல் இதுவரை நாற்பது வருஷங்கள் ஆகிவிடும்.
இரண்டாம் சூரை ஊத இஸ்றாபீல் (அலை) அவர்களுக்கு கட்டளை இட , அந்த சூரைஅர்ஷிலிருந்து எடுத்துக் கொள்வார்கள்.
பின் அல்லாஹ் தஆலா வானத்தில் இருந்து சுக்கிலத் தன்மையான மழையொன்று நாற்பது நாள் வரையும் தொடர்ந்து பொழிந்து கொண்டே இருக்கும் .இந்த மழை வெள்ளம் பூமிக்கு மேல் பன்னிரண்டு முழம் உயர்ந்து வழிந்து வெளியேறாமல் பூமியிலே கெட்டி நிற்கும்.
இந்த கெட்டி நிற்கும் நீரால் இறந்து உக்கின எலும்பு, நாம்பு , சதை , தோல் , நகம் , ரோமம் , இவற்றோடு வற்றி வதங்கிய இரத்தம் இவையெல்லாம் பழையபடி ஒன்று சேர்ந்து முன்பு இருந்தபடி , இறந்துபோன ஜீவஜோடிகளுடன் சடலம் உருப்பெற்று தயாராகும். இப்போது இரண்டாம் சூர் ஊத கட்டளை விடுவான்.
படைப்புகளின் தொகை எவ்வளவோ அவ்வளவு துவாரங்கள் சூர் ஊதுகுழலில்
இருக்கும். அந்த ஒவ்வொரு துவாரத்திலும் ஒவ்வொரு படைப்பின் ரூஹையும் அல்லாஹ் தஆலா சேர்ப்பான்.
இஸ்றாபீல் (அலை) அவர்கள் , வாயில் சூரை வைத்துக் கொண்டு " இறந்து மடிந்த சடலங்களே ! மக்கிப் போன எலும்புகளே ! கிழிந்து அழிந்த தோல்களே ! அறுந்து தொலைந்த நரம்புகளே ! உதிர்ந்து பிரிந்த ரோமங்களே ! நீங்கள் விண்ணப்பம் செய்யவும் , கணக்குக் கொடுக்கவும், அதற்குரிய தீர்ப்புப் பெறவும் உங்கள்
கபுறுகளிலிருந்து எழுந்திருங்கள் " என்று சொல்லிக் கொண்டே ஊதுவார்கள் .
அப்போது அல்லாஹுௗ தஆலா "இஸ்றாபீலே ! இன்னும் ஊதும் இன்னும் ஊதும் , நான் உயிர்ப்பிக்கிறேன் .

உடனே இஸ்றாபீல் (அலை) அவர்கள் "நீங்கள் விண்ணப்பம் செய்யவும் , கணக்குக் கொடுக்கவும், அதற்குரிய தீர்ப்புப் பெறவும் உங்கள்
கபுறுகளிலிருந்து எழுந்திருங்கள்

وَالَّذِىْ نَزَّلَ مِنَ السَّمَآءِ مَآءً بِقَدَرٍ فَاَنْشَرْنَا بِهٖ بَلْدَةً مَّيْتًا كَذٰلِكَ تُخْرَجُوْنَ
அவன் தான் மேகத்திலிருந்து மழையைத் தனது திட்டப்படி இறக்கி வைக்கின்றான். (இவ்வாறு செய்கின்ற அல்லாஹ்வாகிய) நாம்தாம், பின்னர் அதனைக் கொண்டு (மழையை பொழியச் செய்து) வறண்டுபோன பூமியை உயிர்ப்பிக்கின்றோம். இவ்வாறே நீங்களும் (இறந்த பின்னர் சமாதிகளிலிருந்து உயிர் கொடுத்து) வெளியேற்றப்படுவீர்கள்.
(அல்குர்ஆன்: 43:11)

"ஒவ்வொரு ரூஹும் அந்தந்த சடலத்தில் மீண்டும் நுழை " என்று அல்லாஹுௗ தஆலா சொல்வான். அந்த கணமே ஒவ்வொரு ரூஹும் அந்தந்த சடலத்தில் நுழைந்து கொள்ளும் .
وَاِذَا الْقُبُوْرُ بُعْثِرَتْۙ
சமாதிகளும் திறக்கப்பட்டால் மரணித்தவர்கள் உயிர் பெற்றெழுந்து,
(அல்குர்ஆன்: 82:4)

கபுறுகள் எல்லாம் திறக்கும் . மடிந்துபோன மனிதர்களும், மலக்குகளும் , ஜின்களும் , ஷைத்தான்களும் உயிர்த்து எழுந்திருப்பார்கள் . மிருக ஜாதி , ஊர்வனமும், பறப்பனவுமாகிய எல்லாப் பிராணிகளும் உயிர் பெற்று எழுந்திருக்கும் .
அவர்கள் எழுந்திருக்கும் போது நிர்வாணமாகவும் , கத்னா செய்யப்படாதவர்களாகவும் , பதட்டமான மனநிலையுடையவர்களாகவும் , யாதொரு பேச்சு மூச்சின்றி மேல் நோக்கியவர்களாய், நாற்பது வருஷம் வரையும் ஒரே நிவையாய் நிற்பார்கள் .

6527. ஆயிஷா(ரலி) அறிவித்தார்.

'நீங்கள் மறுமைநாளில் செருப்பணியாதவர்களாக, நிர்வாணமானவர்களாக, விருத்த சேதனம் செய்யப்படாதவர்களாக ஒன்று திரட்டப்படுவீர்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
உடனே நான் 'இறைத்தூதர் அவர்களே! (நிர்வாணமான) ஆண்களும் பெண்களும் சிலரை சிலர் பார்ப்பார்களே?' என்று கேட்டேன்.
அதற்கு நபி(ஸல்) அவர்கள் 'அந்த எண்ணம் அவர்களுக்கு ஏற்படாத அளவுக்கு (அங்குள்ள) நிலைமை மிகக் கடுமையானதாக இருக்கும்' என்று கூறினார்கள்.
ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 83. சத்தியங்களும் நேர்த்திக்கடன்களும்
அவர்கள் அகன்ற மஹ்ஸர் மைதானத்தில் வெட்டுக் கிளி கும்பல் போல் திரண்டு மொய்த்திருப்பது போல இருக்கும்.
இவ்வாறு நிற்கும் மனிதர்களில் 24 வகையினர் இருப்பார்கள் . அவர்களின் மனித கோலம் ரூபம் மாறி நிற்பார்கள் .
ர ரா

கியாமத் நாளின் பொழுதுகள் 07
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 27)



மனிதர்கள் யாவரும் அகன்ற மஹ்ஸர் மைதானத்தில் வெட்டுக் கிளி கும்பல் போல் திரண்டு மொய்த்திருப்பது போல இருக்கும்.
இவ்வாறு நிற்கும் மனிதர்களில் 24 வகையினர் இருப்பார்கள் . அவர்களின் மனித கோலம் ரூபம் மாறி நிற்பார்கள் .
குழப்பவாதிகள் குரங்கு ரூபமும், லஞ்சம் வாங்கியவன் கரடி ரூபமும் , தொழுகையை இலகுவாய் விட்டவர்கள் பன்றி ரூபமும் ,
இறை போதனை புறக்கணிப்பவன் குருடனாகவும் எழுப்பப்படும் .
" எவன் என்னுடைய நல்லுபதேசங்களைப் புறக்கணிக் கின்றானோ அவனுடைய வாழ்க்கை நிச்சயமாக நெருக்கடி யானதாகவே இருக்கும். மறுமை நாளிலோ நாம் அவனைக் குருடனாகவே எழுப்புவோம்.
(அச்சமயம்) அவன் "என் இறைவனே! நீ ஏன் என்னைக் குருடனாக எழுப்பினாய்? நான் பார்வையுடையவனாக இருந்தேனே!" என்று கேட்பான்.

அதற்கு (இறைவன்) “இவ்வாறே (குருடனைப் போன்ற உன் காரியங்கள் இருந்தன) நம் வசனங்கள் உன்னிடம் வந்தன. நீ அவைகளை(க் கவனத்தில் வைக்காது) மறந்துவிட்டாய். அவ்வாறே இன்றைய தினம் நீயும் கவனிக்கப்படாது மறக்கப்பட்டுவிட்டாய்” என்று கூறுவான்.
(அல்குர்ஆன்: 20:124 -126)

செய்த அமலில் பெருமை அடித்தோர் செவிடும் , குருடுமைகளாய் , விதிவிலக்குகளைப் பிறருக்கும் சொல்லி , தான் செய்யாதோர் ஊனீர் வாடிய நாவைத் தின்கிறவர்களாய் ,

ஆகாதாரின்பத்தை அனுபவித்தோர் காலையும் , தலையையும் வளையக் கட்டப்பட்டுத் துர்க் கந்தம் நாறுகிறவர்களாய் ,
வேத நிபந்தனை மீறினோர் குடியர் போலவும் , புறம்பேசிகள் ,கோள் சொல்லிகள் பிடரியில் நாக்குத் தொங்கியவர்களாய் , பள்ளியிலிருந்து வீண்மொழி பேசினோர் மிருக ரூபமாய் வாயால் அக்கினி கக்கினவர்களாய் , வட்டி வாங்கிகள் , பாம்பும் தேளும் நிறைந்த பெருவயிற்றுகாரர்களாய் ,
அயல் வீட்டாரை நோவித்தவர்கள்,
கை ,கால் அற்றவர்களாய் , பொருளை இறைவழியில் செலவிடாமல் சேகரித்து வைத்திருந்தோர் நெற்றியிலும், முதுகிலும் , விலாவிலும் சூடு போடப்படும்

"(தங்கம், வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் கொண்டு அவர்களுடைய நெற்றிகளிலும், அவர்களுடைய விலாக்களிலும், அவர்களுடைய முதுகுகளிலும் சூடிட்டு "உங்களுக்காக நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை இவைகள்தான். ஆகவே, நீங்கள் சேகரித்து வைத்திருந்த இவற்றை சுவைத்துப் பாருங்கள்" என்று கூறப்படும் நாளை நபியே! நீங்கள் அவர்களுக்கு ஞாபகமூட்டுங்கள் (அல்குர்ஆன் : 9:35)

வர்த்தகத்தில் பொய் சொன்னவர்கள் வாயால் ரத்தம் வடியக் குடல் வெளியே தள்ளினவர்களாய், அல்லாஹ்வுக்கு அஞ்சாமல் மனிதர்களின் வெட்கத்திற்கு அஞ்சி மறைவாக கருமஞ் செய்தவர்கள் சரீரத்தில் ஊனம் வடிகிறவர்களாய், பத்தினிகளைப் பழுது பேசினவர்கள் பிடரியில் நாக்குப் புறப்பட்டவர்களாய் ,
சாட்சி சொல்ல மறுத்தவன் வாயில் நாவில்லாமல் ரத்தமும் சீழும் வடிந்தவர்களாய், விபச்சாரம் செய்தவர்கள் பறுஜிலிருந்து ஊனமும் , சீழும் வடிந்தவர்களாய், அனாதைகள் சொத்தை தின்றவர்கள் முகங் கருத்துக் கண்கள் நீல நிறமாய் வயிற்றில் நெருப்பு நிறைந்தவர்களாய் ,
மாதா பிதாக்களை நோவினை செய்தவர்கள் குஷ்டரோகம் பிடித்தவர்களாய் , மது போதை குடித்தவன் நாவு கொம்பு போலத் தள்ளி நீண்டு உதடுகள் முழங்கால் வரை தொங்கியவர்களாய் , வயிற்றிலிருந்து மலம் . வெளிப்படும் குருடர்களுமாய் , உருமாற்றம் செய்யப்படுவர்கள்.
ர.ரா
Rahmath Rajakumaran
உருமாற்றம்—கண்ணால் காண்பதெல்லாம் மெய்யா?
அந்தப் பில்லிசூனிய மருத்துவர் இறந்து விட்டார். அவருடைய வீட்டிற்கு வெளியே கூடியிருந்தவர்களில் அநேகர், அவர் வேறு ஒரு ஜீவியாக உருமாறிவிட்டதாகவே நம்பினர். இதற்குக் காரணம் என்னவென்றால் அவருடைய மரணத்தின் சமயத்தில் ஒரு பெரிய மலைப்பாம்பு அவருடைய வீட்டைவிட்டு வெளியேறியதை சிலர் கண்டனர்! சிலருக்கு இது ஒரு தற்செயல் நிகழ்ச்சிபோல் தோன்றும். ஆனால், மற்றவர்களுக்கோ பில்லிசூனிய மருத்துவர் மலைப்பாம்பாக மாறிவிட்டதற்கு இது ஒரு அசைக்க முடியாத அத்தாட்சி—உருமாற்றம்!
ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் மனிதர்கள் விலங்குகளாக மாறமுடியும் அல்லது மாற்றப்பட முடியும் என்ற நம்பிக்கை மிக பரவலாகக் காணப்படுகிறது. சிறுத்தைகள் மற்றும் மலைப்பாம்புகளின் தோற்றத்தை பெறும் வல்லமை, சூனியக்காரர்களிடம் இருப்பதாக பெரும்பாலும் நம்பப்படுகிறது. அதேபோல ஒரு சூனியக்காரனால் மற்றவர்களை விலங்குகளாக மாற்றிவிட முடியும் என்ற பயமும் பரவலாகக் காணப்படுகிறது. மற்றவர்களை துன்புறுத்துவதற்கு சூனியக்காரிகள் மரித்தவர்களின் ஆவிகளை பறவைகள் அல்லது விலங்குகளில் ஏவிவிடுவர் என்ற நம்பிக்கை மேற்கு ஆப்பிரிக்காவில் இன்றும் இருந்து வருகிறது. மத்திய ஆப்பிரிக்காவில், மரித்த உறவினர்தான் பாம்பு அல்லது யானையாக மாறியிருக்கிறாரோ என்ற பயத்தில் சிலர் அவற்றைக் கொல்ல மாட்டார்கள்.
இப்படிப்பட்ட நம்பிக்கைகள் சில வாசகர்களுக்கு மடத்தனமாகத் தோன்றினாலும், கண் கண்ட சாட்சிகளால் அது உண்மையாக நிரூபிக்கப்பட்டதாக, உருமாற்றத்தைப் பற்றி அநேக ஆப்பிரிக்கர்கள் நம்புகின்றனர். நியாயத்தன்மை உடைய எத்தனையோ ஆட்களால் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகள் வெறுமனே தற்செயல் நிகழ்ச்சிகளாக இருக்க முடியாது என்று அவர்கள் தர்க்கமும் செய்கின்றனர்.
இதே விதமான நம்பிக்கை உலகமெங்கும் காணப்படுவது உண்மைதான். மனிதர்களை நரிகள், நாய்கள், வளைக்கரடிகள் போன்றவை பிடித்தாட்டக்கூடும் என்று ஜப்பானில் நம்புகின்றனர். இரவு நேரங்களில் மனிதர்கள் ஓநாய்களாக மாறிவிடுவதாக, ஐரோப்பாவின் நாடோடிப் பாடல்களில் வரும் கதைகள் கூறுகின்றன. புலிகள், காட்டுப்பன்றிகள், முதலைகள், பூனைகள் போன்றவை மனிதராகவும் விலங்கினமாகவும் மாறிமாறி வருவதைப்போன்ற கதைகள் உலகத்தின் மற்ற பாகங்களிலும் இருக்கின்றன.
தமிழ்நாட்டில் இறந்தவர்கள் காகத்தின் ரூபத்தில் வந்து போவதாக நம்புகிறர்கள்

Rahmath Rajakumaran

நான் (ஒரு முறை) ஒரு பாம்பைக் கொல்வதற்காக விரட்டிச் சென்று கொண்டிருந்த போது அபூ லுபாபா ரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் என்னைக் கூப்பிட்டு, "அதைக் கொல்லாதீர்கள்" என்று சொன்னார்கள். நான், "அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்கள் பாம்புகளைக் கொல்லும்படி உத்திரவிட்டுள்ளார்கள்" என்று சொன்னேன். அதற்கு அவர்கள், "(ஆமாம், உண்மை தான்.) ஆனால், அதன் பிறகு வீடுகளில் வசிக்கும் பாம்புகளை (பார்த்த உடனே) கொல்லவேண்டாமென்று அவர்கள் தடுத்தார்கள். அவை வீட்டில் வசிக்கும் ஜின்களாகும்" என்று பதிலளித்தார்கள்.
அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹு)
நூல் : புகாரி (3298)

Rahmath Rajakumaran

5723. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
பனூ இஸ்ராயீல் சமுதாயத்தில் ஒரு குழுவினர் (மர்மமான முறையில்) காணாமற்போய் விட்டார்கள். அவர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை.
அவர்கள் எலிகளாக (உருமாற்றப்பட்டுவிட்டதாக)வே நான் கருதுகிறேன். எலிகளுக்கு (முன்னால்) ஒட்டகத்தின் பால் வைக்கப்பட்டால், அவை அந்தப் பாலைக்குடிப்பதில்லை. அவற்றுக்கு (முன்பாக) ஆடுகளின் பால் வைக்கப்பட்டால், அந்தப் பாலை அவை குடித்துவிடுகின்றனவே?
இதன் அறிவிப்பாளரான அபூஹுரைரா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:
இந்த ஹதீஸை நான் கஅபுல் அஹ்பார் (ரஹ்) அவர்களுக்கு அறிவித்தபோது அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதைச் சொல்ல நீங்கள் கேட்டீர்களா?" என்று வினவினார்கள். நான், "ஆம்" என்றேன். அவ்வாறே அவர்கள் பலமுறை கேட்டார்கள். "நான் "தவ்ராத்"தையா ஓதுகிறேன் (அதிலிருந்து சொல்வதற்கு)?" என்று நான் கேட்டேன்.
இந்த ஹதீஸ் மூன்று அறிவிப்பாளர் தொடர்களில் வந்துள்ளது.
அவற்றில் இஸ்ஹாக் பின் இப்ராஹீம் (ரஹ்) அவர்களது அறிவிப்பில், "அவர்கள் என்ன ஆனார்கள் என்று நாம் அறியவில்லை" எனக் காணப்படுகிறது.
5724. முஹம்மத் பின் சீரீன் (ரஹ்) அவர்கள் கூறியதாவது:
அபூஹுரைரா (ரலி) அவர்கள், "எலிகள் உருமாற்றம் பெற்ற உயிரினமாகும். அதற்கு அடையாளம் என்னவென்றால்,அவற்றுக்கு முன்பாக ஆடுகளின் பால் வைக்கப்பட்டால், அவை அதைக் குடிக்கின்றன. (ஆனால்,) அவற்றுக்கு (முன்பாக) ஒட்டகங்களின் பால் வைக்கப்பட்டால் அவை அதைச் சுவைப்பதில்லை" என்று சொன்னார்கள்.
அப்போது கஅப் (ரஹ்) அவர்கள், "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இதைச் சொல்ல நீங்கள் கேட்டீர்களா?" என்று அபூஹுரைரா (ரலி) அவர்களிடம் வினவினார்கள். அபூஹுரைரா (ரலி) அவர்கள், "பிறகு "தவ்ராத்" வேதமா எனக்கு அருளப்பட்டது?" என்று (திருப்பிக்) கேட்டார்கள்.

கியாமத் நாளின் பொழுதுகள் 08
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 28)



மஹஸர் மைதானத்தில் நபிமார்கள் , உலமாக்கள் , ஷஹீதானவர்கள் , குர்ஆனை மனப்பாடஞ் செய்து அதன் முறைப்படி நடந்தவர்கள் , பலவித வியாதி முதலான பலாய்களில் அகப்பட்டுப் பொறுமையோடு சகித்தவர்கள் ,

வழமையாய் பாங்கு சொன்னவர்கள் , நீதமுள்ள அரசர்கள் , அந்தரங்கமாக தான தர்மங்கள் கொடுத்த தயாளர்கள் , சொல், செயல் , நிய்யத்துக்களின் உண்மையுள்ளவர்கள் , விதி விலக்கல்களை உபதேசித்த ஸாலிஹானவர்கள் ,

அநியாயமாகக் கொல்லப்பட்டவர்கள் , நோன்பு நோற்றவர்கள் , வெள்ளிக்கிழமை இறந்தவர்கள் , புருஷனுக்கு வழிப்பட்ட ஸாலிஹான பெண்கள் , தங்கள் மானத்தைக் காப்பாற்றிய பெண்கள் , நிபாஸுடைய காலத்தில் இறந்த பெண்கள் , திக்ரை அதிகம் அதிகம் செய்தவர்கள் ......
...... இவர்களைப் போன்ற இன்னும் பலரது முகங்கள் பூரணச் சந்திரனைப் போல் பிரகாசிக்கும்படியாக தங்கள் வாய்களைத் திறந்து ஷஹாதத்துக் கலிமாவையும் முர்சிலான நபிமார்கள் உண்மை சொன்னார்கள், என்று ஆயத்தையும் ஓதுகிறவர்களுமாக எழுந்து நிற்பார்கள்.

இவ்வித 24 வது வகையினர் கூட்டத்தாரிடத்தில், அல்லாஹுஃ தஆலாவுடைய உத்திரவு கொண்டு மலக்குகள் வந்து கைகொடுத்து நன்மாராயம் சொல்லி , அவர்களின் சரீரத்தில் உள்ள மண்ணைத் துடைப்பார்கள்.
துடைக்கும் போது நெற்றி மண் தவிர மற்ற மண்ணெல்லாம் துடைக்கப்படுகிறது . " நெற்றி மண் மட்டும் கபுறுடைய மண் அல்ல ; அது அவர்கள் தொழும்போது சுஜூது செய்ததனால் ஒட்டிய மண், ஆகையால் அதை துடைக்காதீர்கள் . அந்த நெற்றி மண் சுவர்க்கம் புகும் வரையும் துடைக்கப் படாமல் அப்படியே விட்டு விடுங்கள் " என்ற சப்தம் ஆணையிடும் .

பிறகு அல்லாஹுஃ தஆலா சுவனத்து அதிபதியாகிய ரில்வான் என்னும் மலக்கிடம்,
" என்னுடைய ஸாலிஹான அடியார்களை அவர்கள் கபுறுகளிலிருந்து எழுப்பி இருக்கிறேன். அவர்கள் பசித்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்காக நீர் வேண்டிய நல்ல ருசியான பதார்த்தங்களையும் , குடிப்புகள் முதலியானவற்றையும் அவர்களுக்கு எதிரே கொண்டு போய் கொடுப்பீராக !

ஏனென்றால் அவர்கள் மனிதர்களெல்லாரும் தூங்கும் போது விழித்திருந்து தொழுதவர்கள் , எல்லோரும் உண்டு தின்று கொண்டிருக்கும் போது நோன்பாயிருந்தவர்கள். எனவே அவர்களுக்கு பணிவிடைச் செய்யுங்கள்
மலக்குமார்கள் அப்படியே செய்து கொடுப்பார்கள் , பிறகு அந்த மலக்குமார்கள் சுவனத்து வாகனங்களைக் கொண்டு வந்து சுவனவாசிகளை ஏற்றிக் கொண்டு பறப்பார்கள் .
அந்த உடனே கஸ்தூரி மணமுள்ள மேகம் ஒன்று வந்து , அந்த கூட்டத்தாருக்கு மாத்திரம் குடையிட்டு கூடவே வரும் .
ர.ரா

" ஹஷ்று " _ ஒன்று சேர்த்தல்
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 29)



அல்லாஹுஃ தஆலா படைப்புகளின் நன்மை, தீமைகளைப் பற்றி விசாரிக்க நாடின போது , ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் , " படைப்புகளை எல்லாம் ஒன்று கூட்டி விசாரணைக்கு அழைத்து வாருங்கள் " என்று கட்டளை இடுவான் .

" படைப்புகளே! அடக்கி ஆளும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹ் தஆலாவின் சமூகத்தில் விசாரணைக்காக விரைந்து வாருங்கள், விரைந்து வாருங்கள் " என்று சப்தமிட்டு அழைப்பார்கள் .

அப்போது ஒவ்வொருவருக்கும் கூடவே இருந்து நன்மை தீமைகளை எழுதி பதிவு செய்த இரு மலக்குகளான 'கிராமன் , காத்திபீன் ' அவர்களையும் அழைத்துக் கொண்டு வரவும் அவரவர்களுக்கு இரு சாட்சியாளர்களாகவும் அவ்விரு மலக்குகளை நியமிப்பான்.
இறைவனின் உத்திரவுப்படி பெருநெருப்பு வெளிப்பட்டு பூமி முழுவதையும் சூழ வளைத்து கொண்டு , மூஃமினானவர்களை ஒன்றும் செய்யாமல் , இறை மறுப்பாளர்களின் முகங்களைப் பற்றி எரிக்கவும் செய்யும் .

வெருண்டோடும் இடங்களிளெல்லாம் நெருப்பு மயமாக இருக்கும் .
மிருகங்கள் , பறவைகள் , ஜீவராசிகள் இவைகளுடன் அனைத்தும் வெருண்டோடாமல் விசாரணை தளத்தில் வந்து நிற்கும் .
ஜின்களும் , ஷைத்தான்களும் , அதன் துஷ்டத் தனங்களையனைத்தையும் விட்டுத் தாழ்மையுடன் வந்து நிறகும்.
மஹ்ஷருடைய மைதானம் படைப்புகளின் படையெடுப்பால் நிறைந்து வழிந்து கொண்டிருக்கும் வேளையில் . ...
முன்பதிவில் சொன்ன மாதிரி பைத்துல் முகத்தீஸ் பக்கம் உள்ள பாறையில் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் உட்கார்ந்து, ஒவ்வொரு கூட்டமும் வரும்போதெல்லாம் , எம் உம்மத்து எங்கே ? எம் உம்மத்து எங்கே ? என்று ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் கேட்டுக் கொண்டே இருப்பார்கள் .
" தங்களுடைய உம்மத்து ஆகிர் உம்மத் ஆகையால் அவர்கள் எல்லோருக்கும் கடைசியில்தான் வருவார்கள்
யா ரஸூல்லாஹ் ...! "
ஒவ்வொரு நபியின் உம்மத்துக்களும் தன்னை கடக்கும் பொழுதெல்லாம் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் " யா உம்மத்தி ,யா உம்மத்தி என்று குரல் எழுப்பிக் கொண்டே இருப்பார்கள் .
நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உம்மத்து கடைசியாய் வருவதைக் கண்டு , ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அழுவார்கள் .அவர்கள் அழுவதைப் பார்த்து நபிகள் நாயகம் ﷺ " ஜிப்ரயீலே! ஏன் அழுகிறீர்கள் என்று கேட்பார்கள் .
யா ரஸூல்லாஹ் ...! " தங்களுடைய உம்மத்தை நினைத்துதான் நானும் அழுகிறேன் .
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்களிடம் , " என் உம்மத்து காரியம் எப்படி ? அவர்கள் எப்போது வருவார்கள் ? அவர்கள் எப்போது வருவார்கள் ? என்று கேட்டுக் கொண்டே இருக்க ,
"யா ரஸூல்லாஹ் ...! அதோ தங்களுடைய உம்மத்து வருகிறார்கள் பாருங்கள் அவர்கள் சுஜூது செய்யும் உறுப்புகள் வெளுத்தவர்களாய் வருகிறர்களே அவர்கள்தான் தங்களின் உம்மத் "
உடனே நபியவர்கள் கன்றை பிரிந்த தாய்ப் பசு போல் ஓடோடி சென்று ஆவலுடன் பார்ப்பார்கள் .அப்போது கூட அவர்களின் வாய் ....." யா உம்மத் ! யா உம்மத் ! என்றே முணுமுணுத்துக் கொண்டே ஆவலுடன் பார்ப்பார்கள்.

அப்போது அந்த உம்மத்து அனைவரும் வாகனங்களில் ஏறியவர்களாகவும் ,
தங்கள் நபிக்கு ஸலாம் சொன்னவர்களாகவும், தங்களுடைய நபியைக் கண்டு கொண்டதைப் பற்றி சந்தோஷத்துடையவர்களாகவும் , நன்மாராயம் பெற்றவர்களாகவும் , ஸாலிஹானவர்களாயும் இருப்பதைப் பார்த்து அளவற்ற ஆனந்தமடைந்து , அல்லாஹு தஆலாவுக்கு ஷூக்குறு (நன்றி) செலுத்துவார் .
அதன் பிறகு தங்கள் உம்மத்தில் பாவியானவர்கள் பாவச்சுமையைச் சுமந்தவர்களாயும் கண்ணீர் சிந்த சிந்த அழுதவர்களாயும் , " முஹம்மதே !முஹம்மதே ! " என்று சப்தமிட்டு அலறியவர்களாயும் வருவார்கள் .
இந்தக் கோலத்தைப் பார்த்து நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் " யா உம்மத்தே ....., யா உம்மத்தே.... என்று சொல்லி வாய் விட்டு அழுவார்கள் , அந்த பாவிகளின் கண்களுக்கு தெரியாமல் நபியவர்களை இறைவன் மறைத்து விடுவான் . இவர்களில் அதிகம் பேர் நபிகள் நாயகம் ﷺ அவர்களைக் காண மாட்டார்கள் .

அந்தோ ! அந்நிலையில் உள்ளவர்களையும் நபியவர்கள் தேடி தேடிக் கண்டு .. " யா உம்மத் ! யா உம்மத் !" என்று கூறி அழுதவர்களாகவே நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ காணப்படுவார்கள் .
ர.ரா

விசாரணைக்கு அழைத்தல் .
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 30)



" ஜிப்ரயீலே...! முஹம்மதுடைய உம்மத்து எங்கே ? "
" யா ரப்பு...! அவர்கள் தங்களுடைய நபி முஹம்மது (ஸல்) அவர்களிடத்தில் இருக்கிறார்கள் "
" அவர்களை விசாரணைக்கு கொண்டு வரும் படி முஹம்மதிடம் சொல்லும் "
அப்போது ஜிப்ரயீல் (அலை) அவர்கள் சஞ்சலப்பட்டவர்களாயும், அழுகிறவர்களாயும் நபிகள் நாயகம் ﷺ அவர்களிடத்தில் வந்து ,
" யா ரஸூல்லாஹ்! தங்களுடைய உம்மத்தை அல்லாஹு தஆலா விசாரணைக்கு அழைத்து வரச் சொன்னான் "
நபியவர்கள் அழுதவர்களாய் , அல்லாஹு தஆலா சமூகம் வந்து . ...
" யா ரப்பு ...! என்னுடைய உம்மத்து மானபங்கப்பட்டவர்களாகவும் , பலஹீனமானவர்களாகவும் இருக்கிறார்கள் "

"முஹம்மதே! அவர்களைக் கட்டாயம் விசாரிக்கத்தான் வேண்டும் .அதற்காக அவர்கள் விசாரணைக்கு வந்துதான் ஆக வேண்டும் " .
நபியவர்கள் மீண்டும் அப்படியே கேட்பார்கள். அதற்கு அல்லாஹு தஆலா முன் சொன்னது போலவே சொல்லுவான் . நபியவர்கள் பின்னும் அப்படியே கேட்பார்கள் .அப்போதும் அல்லாஹு தஆலா முன் சொன்னது போலவே சொல்லுவான்.
நபியவர்கள் , அல்லாஹு தஆலாவிடம் , "நான் நபி ஆதம் (அலை) அவர்களை சந்திக்க நீ உத்தரவு தருவாயாக ! "
அப்படியே உத்தரவு தரப்படுகிறது .

உடனே நபியவர்கள் அழுது கொண்டு நபி ஆதம் (அலை) அவர்களிடம் , " என் பிதாவே ! என்னுடைய உம்மத்துக்கு நான் நபி . தாங்களோ தகப்பனாக இருக்கிறீர்கள் .அவர்களுக்கு ஒரு கஷ்டம் நேரிட்டால் துக்கமும் , கைசேதமும் நமக்குத் தானே ! ஆகையால் அவர்கள் செய்த பாவங்களையெல்லாம் நாமிருவரும் பங்கிட்டு எடுத்துக் கொள்ளலாம். அப்போது அவர்கள் ஸலாமத்துப் பெறுவார்கள் "

"மகனே! அல்லாஹு தஆலா குர்ஆனில், 'ஆதம் தன் இறைவனுக்கு மாறு செய்து, வழி தவறினார் ' என்று சொன்னானே அதை நீர் அறியவில்லையா ? அப்படியிருக்க பின்னும் நான் அவர்கள் செய்த பாவங்களையும் எப்படிச் சுமப்பேன் "

இதைக் கேட்டதும் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தலையில் கையை வைத்துக் கொண்டு , " உம்மத்தீ , யா உம்மத்தீ '' என்று அழுதவர்களாய் , '' என் மகள் பாத்திமாவை நினைக்கவில்லை , என் கண்மணியான ஹஸன் , ஹுஸைன் இவர்களை நினைக்கவில்லை. பின் என் நபுஸையும் நினைக்கவில்லை, என் உம்மத்தைத்தான் நினைத்துதான் கவலை கொள்கிறேன் " .
அப்போது , " முஹம்மதே ! உம்முடைய உம்மத்தை விசாரணைக்கு கொண்டு வாரும் " . என்று ஒரு சப்தம் கேட்கும் .

நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கண்ணீர் தாரை தாரையாய் ஓட , அழுது கொண்டே , " என் உம்மத்தே ! நீங்கள் அல்லாஹு தஆலாவின் சமூகத்தில் விசாரணைக்கு அழைக்கப்படுகிறீர்கள் " என்று சொன்னதும் ,

பாவிகள் எல்லோரும் தாங்கள் செய்த பாவங்களை நினைத்து திகில் பிடித்து அழுவார்கள் .
இதனைப் பார்த்த நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ....
" இன்றைய தினம் நான் என் இடுப்பை இறுக வரிந்து கட்டிக் கொண்டு , என்னுடைய உம்மத்துக்காக மன்றாடுவேன் " என்று கூறி , தங்கள் உம்மத்தை மெதுவாக நடத்திக் கொண்டு மலக்குகள் புடை சூழ்ந்து வர , மஹ்ஷர் பெருவெளியில் வந்து சேர்வார்கள் .
ர.ரா
Rahmath Rajakumaran

"இஸ்லாத்தின் அடிப்படை கோட்பாடுகள் " என்கிற இப் பதிவுகள் **#இன்னும்70** பதிவுகளுக்கும் அதிகமாகவே வரலாம் என நினைக்கிறேன் .இன்ஷா அல்லாஹ் !

இதுவரை வெளிவந்த 30 பதிவுகள் கூட நிறைய விஷயங்களை தவிர்த்து ,சுருக்கி உங்களுக்கு மென்மையாக்கி சொல்ல, பதிவின் விசாலத்தையும் ஏகமாக குறைத்து சொல்லி இருக்கிறேன் .

அதற்குள் சிலர் நீங்கள் அறிவியல் பதிவுகள் எப்போது போடுவீர்கள் என்று நமட்டுச் சிரிப்போடு விசாரிக்கிறார்கள்.

என்னமோ இந்த தொடர் ஏதோ கட்டுக்கதையாக யார் யாரோ ஜோடித்து எழுதிய கிதாபுகளையெல்லாம் ஒன்று திரட்டி இந்த ர.ரா பதிவு போடுவதாக எண்ணுகிறார்கள் போலும்.

எண்ணிக் கொள்ளட்டும் .

என் ஆன்மா திருப்திக்காக , எனக்காக நானே எழுதிக் கொள்வதாக வைத்துக் கொள்ளுங்கள் .

இப் பதிவுகளின் உண்மைகளை உளமாற நம்பி படிப்போரின் ஆன்மா நிச்சயமாக உயர்வான இடத்தில் உன்னதமாக தன்னை அலங்கரித்துக் கொள்ளும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.

இப் பதிவுகள் உங்களுக்காக அல்ல : உங்கள் ஆன்மாக்களுக்காக எழுதப்படுகிறது !

மௌகிபு - விசாரணைக் களம்
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 31)



' மௌகிபு ' என்பது விசாரணைக் களம் அது அனைத்து படைப்புகளையும் கொண்டு வந்து நிறுத்துமிடம் . அதுதான் மஹஷர் மைதானம் . இது பைத்துல் முகத்தீஸ் அருகில் வெண்மையும், அதிக விசாலமும் உள்ள சமதள பூமி. (கியாமத் நாளில் எல்லாம் உடைபட்டு தரைமட்டமான பின் பூமியெங்கும் ஒரே சமதளமாகத்தான் இருக்கும்)

எல்லா நபிமார்கள், அவர்களின் உம்மத்து , ஜின்கள், ஷைத்தான்கள் , கூட்டங் கூட்டமாய் வந்து சேர்வார்கள் .
அதன் பின் மிருகங்கள் , பறப்பினம் , ஊர்வன மற்றும் சகல ஜீவகோடிகளும் திரளாய் வந்து சேரும்.

மனிதர்களும் , ஜின்களும் , ஷைத்தான்களும் , நூற்றிருபது அணியாக வகுக்கப்படுவார்கள் அவர்களில் மூஃமின்கள் மூன்று அணியாய் நிற்பார்கள். ஒவ்வொரு அணியிலும் எத்தனை எத்தனை பேர்கள் என்பது அல்லாஹுக்குத்தான் தெரியும்.
அதன் பிறகு என்னுடைய ஹபீபு முஹம்மதுக்காக ஒரு மேடை போடுங்கள் என அல்லாஹு தஆலா மலக்குமார்களுக்கு கட்டளையிடுவான் .

உடனே அர்ஷ்க்குப் பக்கத்திலே ஒளியினால் ஒரு மேடை போடப்படும். அதனருகில 'லிவாவுல் ஹம்து ' என்னும் கொடி நாட்டப்படும்.
பின் அங்கே எழுபதினாயிரம் கொடிகளை நாட்டி 70 ஆயிரம் அணிகளாய் மலக்குகள் நிலை பிரியாமல் நிற்பார்கள் . அணி ஒன்றுக்கு ஐந்து லட்சம் மலக்குகள் நிற்பார்கள்.
நபிமார்கள் அனைவருக்கும் அவரவர் தகுதிப்படி மேடைகள் போடப்பட்டிருக்கும் அவர்களுக்கும் கொடிகள் நாட்டப்படும்.
அபூபக்கர் (ரலி) , உமர் (ரலி) , உஸ்மான் (ரலி) , அலி (ரலி) ஆகிய நால்வருக்கும் 4 மேடைகள் போடப்பட்டு , 4 கொடிகள் நாட்டப்படும்.

ஷஹீதானவர்களுக்கும் மேடைகள் போடப்படும் . மஆதிபுனு ஜபல் (ரலி) , அபூதர் (ரலி) , உபையிபுனு கஃபு (ரலி) இமாம் ஹஸன் (ரலி) , இமாம் ஹுஸைன் (ரலி) ஆகியோருக்கும் தனித்தனியாக ஒவ்வொரு கொடி நாட்டப்படும் .
அல்லாஹு தஆலா : " ஆதமே ! தவ்பா செய்தவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , நூஹே ! ஷுக்ரு செய்தவர்களை எல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , இப்றாஹீமே ! தயாள குணமுள்ளவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , இஸ்மாயிலே ! உண்மையுள்ளவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் .

யூசுபே ! பரதேசிகளைகளையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , ஐயூபே ! பிணியாளிகளையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , தாவூதே ! ஓதுவார்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும், சுலைமானே ! நியாயமுள்ள ராஜாக்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,

மூஸாவே ! சுத்தமான வணக்கக் கார்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , ஹாரூனே ! ஆலிம்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , ஷுஐபே ! முதியோர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,

ஜகரிய்யாவே ! பேரின்பப் பிரியமுள்ளவகளையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , யஹ்யாவே ! நிராசைக்காரர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , ஈஸாவே ! பேரின்ப உவப்புள்ளவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,

முஹம்மதே ! ரஸூல்மார்களையும் , நபிமார்களையும் , ஆரிபீன்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் " என்று உத்தரவு பிறப்பிக்கும் .

பிறகு அபூபக்கரே ! விசுவாசக்காரர் களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , உமரே ! நீதவான்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,
உதுமானே ! கொடையாளிகளையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , அலியே ! பீஸபீல்காரர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,

ஹஸனே ! ஷஹீதானவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,
ஹுஸைனே ! அநியாயமாகக் கொல்லப்பட்டவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் ,

மஆதிபுனு ஜபலே ! மார்க்க விதியறிந்தவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , உபையிபுனு கஃபே ! கறா அத்தை அறிந்தவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் , அபூதர்ரே ! நிராசை பெற்றவர்களையெல்லாம் நீர் சேர்த்துக் கொள்ளும் " என்று உத்திரவு பிறக்கும்
ர.ரா

மௌகிபு - விசாரணைக் களம் 2
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 32)



சூரியனைப் பற்றி விஞ்ஞானம் கூறியதை உங்களுக்கு முதல்ல சொல்றேன் .
சூரியன் பூமியிலிருந்து **149, 96, 000** கி.மீ தூரத்தில் உள்ளது. சூரியன் புவியை விட 109 மடங்கு பெரியதாக உள்ள இதன் விட்டம் சுமார் 1.39 மில்லியன் கிலோமீட்டர்கள். இதன் வெப்பம் 1.5 X 10 **Power of 7- K**

சூரியனில் 13 லட்சம் பூமி உருண்டைகளை உள் அடைக்க முடியும் . சூரியன் பூமியைப் போல் **3,33,000** மடங்கு நிறை (எடை) உள்ளது
சூரிய குடும்பத்தின் மொத்த நிறையில் (எடையில்) 99.8 சதவிகிதம் சூரியனுடைய நிறை (எடை)தான் , அதாவது ஒரு அழகான பெண் அணிந்திருக்கும் நகையைப் போன்றது அதன் மற்ற கோள்கள் அனைத்தும் .

மஹஷரில் படைப்புகள் தராதரப்படி எங்கும் பரவி நெருங்கிச் சேர்ந்து நிற்பார்கள் .
" படைப்புகளே நீங்கள் எல்லோரும் உலகில் இருந்து கொண்டு செய்யாதவைகளையெல்லாம் செய்யும்போது நான் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தேன் அல்லவா? இப்போது நீங்கள் சும்மா இருங்கள் " என்று அல்லாஹு தஆலா கட்டளையிடுவான்.
இன்றைய தினம் ஒவ்வொரு ஆத்மாவும் அது செய்தவைகளுக்குத் தக்க கூலி கொடுக்கப்படும் . வெகு விரைவாய் அல்லாஹு தஆலா விசாரணையை முடிப்பான்.

" எனக்கு வழிப்பட்டவனை சங்கையாக்குவேன் மாறு செய்தவனை வேதனை செய்வேன் என் வார்த்தைப் பாட்டை மாற்ற மாட்டேன் " - அல்லாஹு தஆலா கூறுவான்.
சூரியனை கொண்டு வரும்படி மலக்குகளுக்கு உத்திரவு பிறக்கும். உடனே பூமியைக் காட்டிலும் 360 மடங்கு பெரிதாய் உள்ள நம்ம சூரியனை 360 இடங்களில் 360 சிறுவடங்கள் தொடுத்த 360 பெரும் வடங்கள் பூட்டின வண்டியில் வைத்து , ஒவ்வொரு சிறுவடத்திலும் 360 மலக்குகள் நின்று பிடித்திழுத்துக் கொண்டு வருவார்கள் .


அந்தச் சூரியன் அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் வந்தவுடனே ஸுஜூது செய்யும். அல்லாஹ் சூரியனைப் பார்த்து, " என் அடியார்களில் யாரையாவது உன்னை வணங்கும்படி நீ ஏவினது உண்டா ? "
" என் எஜமானாகிய யா அல்லாஹ்! நீ தூய்மையானவன் . வணங்கப்பட தகுதியானவன் , உன்னையல்லாது வேறு நாயன் இல்லை. அப்படி இருக்க உன்னுடைய அடியார்களை என்னை வணங்கும்படி உன் அடிமையாகிய நான் எப்படி ஏவுவேன் ? "
" உலகத்தில் காட்டிய வெப்பத்தைக் காட்டிலும் இரட்டிப்பாக்கி படைப்புகளின் தலைக்கு மேல் நெருங்கு "
உடனே அந்தச் சூரியன் இரண்டு புருவத்திற்கும் இடையிலுள்ள இடைவெளி அளவு படைப்புகளின் தலைக்கு நெருங்கி நிற்கும். அப்போது அர்ஷுடைய நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் அங்கு இருக்காது. நல்லோர்கள் அனைவரும் அந்த நிழலில் ஒதுங்கி நிற்பார்கள்.
பாவிகள் சூரியனின் வெப்பத்தில் சிக்கி தவிப்பார்கள் .மூளையும் கொதித்து உருகி வியர்வையுடன் கலந்து ரோமக்கால் வழியாய்ப் பிரவாதித்து தரையில் கட்டி நிற்கும்.

அது படைப்புகளின் செய்த வினைக்கு தக்கபடி சிலருக்கு முழந்தாள் வரையும் , சிலருக்கு தலைக்கு மேலுமாக உயர்ந்து நிற்கும் .இவ்வாறு நூறு வருஷம் இந்த வேதனை இருக்கும்.
பிறகு அடுத்து நூறு வருஷம் வரையும் மிகவும் பயங்கரமான இருள் வந்து படைப்புகளை சூழ்ந்து கொள்ளும்.அதில்
திசைகள் தோறும் தத்தளித்துத் தடுமாறி நிற்பார்கள் .
அதன் பிறகு நூறு வருஷம் பயங்கரமான அச்சத்தால் ஒருவர் மீது ஒருவர் விழுந்து மோதிக் கொண்டு அலைவார்கள்.

ஆக இந்த 300 வருஷத்திலும் ஒவ்வொருவரும் தம்தம் நப்ஸ்யைப் பற்றி கவலையில் முழ்கிக் கிடப்பார்களே அல்லாமல் ஆணை ஆணென்றும் , பெண்ணைப் பெண்னென்றும் , ஒருவரை ஒருவர் அறிய மாட்டார்கள் இந்த 300 வருஷமும் துன்யாவுடைய வருஷமாகும்.
இந்த 300 வருஷ சங்கடத்தில் படைப்புகள் அகப்பட்டு , " யா அல்லாஹ் ! எங்களுக்கொரு தீர்மானத்தை செய்து எங்களை நரகத்திற்கு அனுப்புவதாக இருந்தாலும் அனுப்பு, அல்லது இந்த வேதனையிலிருந்து நீ கிருபை செய்து நீக்குவதாக இருந்தாலும் அதையும் செய்" என்று கூறுவார்கள்
அப்பொழுது ஒரு மேகம் வெளிப்பட்டு வந்து குடை போலக் குவியும். அந்த மேகத்தின் நிழல் மூன்று கிளைகளாக பிரியும். அந்த நிழல் பார்வைக்கு நிழலாகத் தோன்றினாலும் நிழலின் சுபாவம் இருக்காது.

اِنْطَلِقُوْٓا اِلٰى ظِلٍّ ذِىْ ثَلٰثِ شُعَبٍۙ
மூன்று கிளைகளையுடைய புகையின் நிழலின் பக்கம் நீங்கள் செல்லுங்கள்" (என்றும் கூறப்படும்).
(அல்குர்ஆன்: 77:30)
முதல் நிழல் கிளையில் மூஃமின்களும், இரண்டாவது நிழல் கிளையில் முனாபிக்குகளும் , மூன்றாவது நிழல் கிளையில் இறை நிராகரிப்பாளர்களும் போய் தங்குவார்கள்.
மூஃமின்கள் நிழல் ஒளிவாகவும் முனாபிக்குகள் நிழல் வெப்பமானதாகவும் , இறை நிராகரிப்பாளர்கள் நிழல் அச்சம் கலந்த பகையாகவும் இருக்கும் .
ர.ரா

மௌகிபு - விசாரணைக் களம் 3
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 33)



மஹஷர் பெருவெளியில் கூடியிருக்கும் மக்கள் நபி ஆதம் (அலை) அவர்களிடம் போய் " மனித குலத்தின் பிதாவே ! எங்களுக்காக அல்லாஹுு தஆலாவிடம் மன்றாட வேண்டும் " என்பார்கள்
நபி ஆதம் (அலை) : "அல்லாஹுு தஆலா தின்ன வேண்டாம் என்று தடுத்த மரத்தின் கனியை தின்று, அவனுக்கு மாறு செய்திருக்கிறேன் . அவனிடம் போய் எப்படி உங்களுக்காக நான் மன்றாட முடியும் ? எனவே நூஹ்விடம் போய் செல்லுங்கள் "
மக்கள் நபி நூஹ் (அலை) அவர்களிடம் போய் அல்லாஹுு தஆலாவிடம் தங்களுக்காக மன்றாட கேட்பார்கள் .

நூஹ் (அலை) : " நான் உலகத்தின் மக்களை நாசஞ் செய்யும்படி அல்லாஹு தஆலாவிடம் கேட்டேன் .அவன்"தூபான் " வெள்ளத்தால் மக்களையெல்லாம் அழித்தான் . எனவே அவன் சமுகம் செல்ல வெட்கமாக இருக்கிறது நீங்கள் இப்ராஹீமிடம் செல்லுங்கள் "
மக்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் போய் அல்லாஹு தஆலாவிடம் தங்களுக்காக மன்றாட கேட்பார்கள்

நபி இப்ராஹீம் (அலை) : " நான் என் மனைவி சாராவைச் சகோதரி என்றும் , ஊர் ஜனங்கள் திருவிழா கொண்டாட என்னை அழைத்தபோது நோயாளியாக இருக்கிறேன் என்றும் கோவிலுள்ள சிலைகளை உடைத்து விட்டு பெரிய சிலைதான் இவைகளை உடைத்தது என்று மூன்று பொய்களை சொல்லி
இருக்கிறேன் . எனவே அவன் சமுகம் செல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது, நீங்கள் மூஸாவிடம் செல்லுங்கள் "

மக்கள் மூஸா (அலை) அவர்களிடம் போய் அல்லாஹு தஆலாவிடம் தங்களுக்காக மன்றாட கேட்பார்கள் .
நபி மூஸா (அலை) : " நான் கிப்த்தியாக்களில் ஒருவன் ஷிப்தியாவிடம் சண்டையிட்ட போது நான் இருவரையும் பிரித்தேன் .இதனால் காயமில்லாமல் தவறுதலாக அடித்தால் அவன் இறந்து விட்டான் .எனவே ஒரு மனிதனைக் கொன்று விட்டேன் எனவே அவன் சமுகம் செல்ல எனக்கு வெட்கமாக இருக்கிறது நீங்கள் ஈஸாவிடம் செல்லுங்கள் "

மக்கள் ஈஸா (அலை) அவர்களிடம் போய் அல்லாஹு தஆலாவிடம் தங்களுக்காக மன்றாட கேட்பார்கள் .
நபி ஈஸா (அலை) : " நஸாராக்கள் என்னை ' இறைவன் ' என்று வணங்கினார்கள் எனவே அவன் சமுகம் செல்ல வெட்கமாக இருக்கிறது நீங்கள் முஹம்மது நபியிடம் செல்லுங்கள் "
மக்கள் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்களை தேடியலைவர்கள் . நபி ஆதம் (அலை) அவர்கள் : " முஹம்மதே ! உங்களுடைய உம்மத்து உங்களை தேடி அலைகிறார்கள் "

நபிகள் நாயகம் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் சப்தமிட்டு " என்னுடைய உம்மத்தே ! நீங்கள் எல்லோரும் எங்கே தேடி அலைந்து கொண்டிருக்கிறீர்கள் ? இதோ உங்களுக்காக அல்லாஹு தஆலாவிடத்தில் நான் கேட்கிறேன் . எல்லோரும் என்னருகே வாருங்கள் "
இந்த சப்தத்தைக் கேட்டதும் ஜனங்கள் அலை அலையாய் நபிகளாருக்கு பின்னாடி அணிவகுப்பார்கள்
" யா ரஸூல்லாஹ்! எங்களை விசாரணை செய்து தீர்த்து விடும்படி அல்லாஹு தஆலாவிடம் நீங்கள் மன்றாடுங்கள் "
மக்களை அழைத்துக் கொண்டு அர்ஷ்க்கு கீழே அல்லாஹு தஆலாவிற்கு ஸுஜூது செய்வார்கள் .
அப்போது அல்லாஹு தஆலாவின் உத்திரவுப்படி ஒரு மலக்கு வந்து நாயகவர்களின் வலது புஜத்தைப் பிடித்துக் கொண்டு " முஹம்மதா ?" என்று மெள்ளக் கேட்பார்கள் .
" ஆம் - முஹம்மது "
" நீங்கள் உங்கள் தலையை உயர்த்துங்கள் நீங்கள் விரும்பினதைக் கேளுங்கள் கொடுக்கப்படுவதாக இறைவன் ஏற்றுக் கொண்டான் "
" யா ரப்பீ! எனக்கு நீ வார்த்தைப்பாடு செய்திருக்கிறபடி "ஷபாஅத்து " செய்ய எனக்கு உத்திரவு வழங்கு "
"நீர் ஷபாஅத்து செய்யும் உரிமையை உமக்கு அளித்தோம் " என்பான் இறைவன்
ர.ரா
Rahmath Rajakumaran
இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்
...... என்கிற இந்த ஆய்வு மிக நீளமானது
" மரணத்திற்குப் பின் ஆன்மாக்களின் நிலை " என்று ஆரம்பித்து " மஹஷர் மைதானம் " என்கிற 33 வது பதிவு வரை வந்துள்ளது.
இவ்வாய்வு இனிமேல்.......
,
கிஸாஸு (குற்றத்தை உறுதிப்படுத்தல்)
ஹிஸாபு (நன்மை தீமை கணக்கு வழக்கு விசாரணை)
மீஸான் (நன்மை ,தீமை நிறுக்கும் தராசு)
ஸ்திராத்துல் முஸ்தகீம் என்கிற கடக்கிற பாலம்
ஹௌளு - தண்ணீர்த் தடாகம்
சுவர்க்கம்

ஜஹன்னம் - நரகம்
ஷபாஅத் - மன்றாட்டம்
உரூஸ் - திருக்கல்யாணம்
லியாபத்து - விருந்து
லிகா - தரிசனம் .....
இத்தனை பதிவுகள் இன்ஷா அல்லாஹ் இன்னும் இத்தொடரில் பதிக்கப்பட உள்ளது . இப்பதிவுகள் சற்று ஏறக்குறைய 100 பதிவுகள் வரை வரலாம் என எதிர்ப்பார்கிறேன் .
ஆலிம் பெருமக்கள் இப் பதிவுகள் குறித்து தங்களுக்குத் தெரிந்ததையும் இப் பதிவுகளின் பின்னூட்டமாக சொன்னால் நண்பர்களுக்கும் , மற்ற ஆலிம் பெருமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நினைக்கிறேன் . எனவேதான் இனி எழுதப் போகிற பதிவுகளின் தலைப்புக் குறித்து முன்னமே சொன்னால் நீங்களும் தக்க ஏற்பாடுகளோடு இருப்பீர்கள் என நினைக்கிறேன் .
ர.ரா

மௌகிபு - விசாரணைக் களம் 34
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 34



நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஷபாஅத் என்னும் மன்றாட்டம் செய்யும் போது, வானம் காற்றாடி போல சுழல ஆரம்பிக்கும் . ஏழு வானத்தின் மொத்த கனத்தை விடவும் மேலான கனத்தில் " கமாம்" என்கிற மேகம் ஏழு வானத்திற்கும் மேலே உருவாகி, திடீரென ஏழாவது வானத்தில் விழும்.

உடனே அந்த 7- வது வானம் வெடித்து பிளத்து தெறித்து , அது ஆறாவது வானத்தில் விழும். அந்த 6-வது வானமும் பிளந்து தெறித்து அது ஐந்தாவது வானத்தில் விழும் .
இவ்விதமாக ஒவ்வொரு வானமும் கீழேயுள்ள அடுத்தடுத்துள்ள வானங்களில் விழும் . இப்படியாக எல்லா வானங்களும் வெடித்து சிதறி முதல் வானத்தில் விழும் . இதனால் முதல் வானத்தில் உள்ள நட்சத்திரங்கள் , சூரியன்கள் , கோள்களெல்லாம் உதிர்ந்து விடும்.
இதனால் பூமி இருள் மயமாகி விடும் . வானம் வெடித்து சிதறியதை கண்ணாலும் , அதனால் உண்டான சப்தத்தையும் படைப்புகள் கேட்டு சுரணையற்று கலங்கி நிற்பார்கள் .

اَلَمْ تَرَوْا كَيْفَ خَلَقَ اللّٰهُ سَبْعَ سَمٰوٰتٍ طِبَاقًا ۙ
"ஏழு வானங்களையும், அடுக்கடுக்காக எவ்வாறு அல்லாஹ் படைத்திருக்கின்றான் என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? "
(அல்குர்ஆன்: 71:15)
மேற்கண்ட வசனத்தில் சொல்லப்பட்டுள்ள ஏழு வானங்களின் அடுக்கடுக்கை அப்போதுதான் படைப்புகள் காணுமோ என்னமோ ?
ஏழு வானத்து மலக்குகளும் ஒவ்வொரு கூட்டமாகப் பூமியில் இறங்குவார்கள். அப்போதும் கூட அவர்கள் இறங்கும் போது தஸ்பீஹு தஹ்லீலு செய்து கொண்டே இறங்கி , படைப்புகளையெல்லாம் வளைந்து குழ்ந்து கொள்வார்கள் .

பிறகு அதாபுடைய மலக்குகள் பெருங் கூட்டமாக இறங்குவார்கள். அவர்கள் உருவத்தில் மஹா பெரிதானவர்களும் , மிக்க வலிமையுடையவர்களும் , மிகக் குரூர உருவத்திலும் இருப்பார்கள். இம் மலக்குகளின் இரண்டு புருவத்தின் இடைவெளி ஐநூறு வருஷத் தூரமுள்ளதாக இருக்கும். குற்றவாளிகளுடைய தலையையும் , காலையையும் வளைத்து சேர்த்துக் கட்டி விசாரணைக்கு இழுத்துக் கொண்டு போகும்படி உத்தரவு அவர்களுக்கு வரும்.

يُعْرَفُ الْمُجْرِمُوْنَ بِسِيْمٰهُمْ فَيُؤْخَذُ بِالنَّوَاصِىْ وَ الْاَقْدَامِ
குற்றவாளிகள், அவர்கள் முகக் குறியைக் கொண்டே அறிந்து கொள்ளப்படுவார்கள். அவர்களுடைய உச்சி மயிரையும், கால்களையும் பிடித்திழுத்து (நரகத்தில்) எறியப்படும்.
(அல்குர்ஆன்: 55:41)

அவர்களைக் கண்ட நபிமார்கள் முதலானவர்களும் அஞ்சிப் பயந்து குப்புற விழுவார்கள். படைப்புகள் அந்த மலக்குகள் கூட்டம் இறங்கும் ஆரவாரத்தின் அமளி துமளியால் அஞ்சிக் கலங்கி நம்மைத்தான் பிடிப்பார்கள், நம்மைத்தான் பிடிப்பார்கள் என்று ஒவ்வொருவரும் எண்ணி குப்புற விழுந்து கிடப்பார்கள்.
ஒவ்வொரு வானத்தின் படைப்புகளை அந்தந்த வானத்து மலக்குகள் சூழ்ந்து கொள்ள , இறுதியில் படைப்புகளையெல்லாம் நடுவில் வைத்து மலக்குமார்கள் மதில் சுவர் போல் சூழ்ந்து நிற்பார்கள் .
முன்னர் சொன்ன அந்த கமாம் என்னும் மேகக் குடையின் கீழ் மலக்குகளுக்கு போடப்பட்டிருக்கும் குர்ஷியில் உட்கார்ந்து கொண்டு ,
" மனிதர்களே! ஜின்களே ! இனி உங்கள் பட்டோலைகள் படிக்கப்படும் .அதில் நன்மையைக் கண்டவன் அல்லாஹுதஆலாவைப் புகழ வேண்டும்
தீமையைக் கண்டவன் தன்னைத்தானே நிந்திக் கொள்ள வேண்டும் " எல்லோரும் கேட்கச் சொல்வார்கள் .
ர.ரா

மௌகிபு - விசாரணைக் களம் 5
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 35)



நரகத்தைக் கண் முன் இழுத்துக் கொண்டு வரக் கட்டளை பிறக்கும்.
ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நரகத்து அதிபதியாகிய மாலிக் (அலை) அவர்களிடம் போய் , "அல்லாஹு தஆலா நரகத்தைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டதாக " சொல்லப்படும் .
இதைக் கேட்ட மாலிக் (அலை) அவர்கள்
" இது எந்த நாள்? " என்று கேட்பார்கள்.
" இது கியாமத் நாள் " என்று ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கூறுவார்கள்.
" படைப்புகளையெல்லாம் அல்லாஹு தஆலா ஹாஜராக்கி விட்டானா? " முஹம்மது நபியும் ,அவர்கள் உம்மத்தும் எங்கே ? அந்த உம்மத்து நரகத்துக் கொடுமையை எப்படி சகிப்பார்கள் ? " என்று மாலிக் (அலை) கேட்பார்கள்.
முஹம்மது நபியும் , அவர்கள் உம்மத்தும் அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் ஹாஜராகி இருக்கிறார்கள். இந்த உம்மத் நரகத்துக் கொடுமையைச் சகிக்கும் விதம் இப்படியென்று நான் அறியேன். அது அல்லாஹு தஆலா நாடியபடி " என்று பதில் சொல்வார்கள் .

பின்பு , மாலிக் (அலை) அவர்கள் நரகத்தைப் பார்த்து , " நரகமே எழுந்திரு" என்று உரத்த சப்தத்தில் சொல்வார்கள் உடனே அது எழுந்திருக்கும் .

நரகம் ஆயிரம் வருஷத் தூரப் பிரயாண இடையுள்ள ஒட்டகக் கால் போன்ற நான்கு கால்களும் , முப்பதினாயிரம் தலைகளும், தலை ஒன்றிற்கு ஆயிரம் வாய்களும் , வாய் ஒன்றிற்கு உஹது மலையினும் பெரிதாக முப்பதினாயிரம் கடைவாய்ப் பற்களும் இருக்கும்.
உதடுகள் ஒவ்வொன்றும் பூமியின் பரப்பை போலிருக்கும் , மேல் உதடுகளில் உதடு ஒன்றிற்கு முப்பதினாயிரம் சங்கிலிகள் போடப்பட்டிருக்கும் .அதைப் போல் கீழ் உதடுகளிலும் உதடு ஒன்றிற்கு முப்பதினாயிரம் சங்கிலிகள் போடப்பட்டிருக்கும் .சங்கிலி ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் கரனைகள் இருக்கும் .

நரகத்திற்கு எழுபது மூவாயிரம் வடங்கள் பூட்டப்பட்டிருக்கும் . மாலிக்கு (அலை) அவர்கள் நரகத்தை அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் இழுத்துக் கொண்டு போகும்படி ஜபானியாக்களுக்கு உத்தரவு செய்வார்கள் .மனிதர்களிலும், ஜின்களிலும் நாற்பதினாயிரம் பங்குக்கு அதிகமான வலிமையுள்ள ஜபானியாக்கள் ஒவ்வொரு அணியாக ஏழாயிரம் அணிகள் நின்று நரகத்தை இழுப்பார்கள் .

அவ்வளவு பேர் இழுத்தும் என்ன பிரயோஜனம் அது கொஞ்சமும் நகராமல் , ஒரு வருஷத் தூரப் பிரயாணம் கீழே பதிந்து போகும். அதனக் கண்டு மாலிக் (அலை) அவர்கள்
" நரகமே! நீ அல்லாஹு தஆலா கட்டளைக்கு மாறு செய்கிறாயோ ? என்று கேட்பார்கள் .
" நான் அப்படி செய்யவில்லை "
" அப்படியானால் நட "
மலக்குகள் இழுக்க இழக்க அது நடக்கும்.
நரகம் நடக்கையில் புலி சீறிப் பாய்வது போல உறுமும். அப்பொழுது மஞ்சள் நிறமுள்ள அக்கினிக் கங்குகள் அதிலிருந்து தெறிக்கும் . அது படைப்புகளை சூழவளைந்து கொள்ளும்படி பெரியபுகையும் இருளும் அதிலிருந்து புறப்படும் . நரகம் வரும் போது படைப்புகளை ஒரே விழுங்கில் விழுங்கி விடத் தாவிப் பாயும் . ஜபானியர்கள் அதன் பாய்ச்சலை
தடுத்து இழுத்துக் கொள்வார்கள்.

நரகம் நெருப்பு கொதிக்கிற அமளி துமளியான சத்தத்தை எல்லா படைப்புகளுமே கேட்கும் . மனிதர்கள் அதனைப் பார்த்து அஞ்சி கலங்கி கண்ணீர் விற்று கதறுவார்கள் .
பாவிகள் " கட்டாயம் நாம் மோசம் போய் விட்டோம் .நமக்கு அபாயம் வந்து விட்டது என்று தீர்மானித்து அழுவார்கள் .

وَّعَرَضْنَا جَهَنَّمَ يَوْمَىِٕذٍ لِّلْكٰفِرِيْنَ عَرْضَا ۙ
நிராகரிப்பவர்களுக்கு அந்நாளில் நரகத்தையே நாம் நிச்சயமாக அவர்கள் முன்பாக்குவோம்.
(அல்குர்ஆன்: 18:100)

நம்பிக்கைக்காரர்கள் " நப்ஸி ! நப்ஸி ! என்று சப்தமிடுவார்கள் .மறுபடியும் நரகம் உறுமும் .
பாவிகள் முழந்தாட்டபடி அநேகர்
முகங்கள் கவிழ்ந்தும் விழுவார்கள் அநியாயக்காரர்கள் , " நாங்கள் கெட்டோழிந்திருக்கும் காலத்தில் இது பற்றி எங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடாதா ? "என்று அலறுவார்கள்.

நரகத்தின் அருகில் நின்று ஜபானியாக்களில் மிகப் பெரிய பயங்கரமான ஜபானியா ஒருவர் தம் கையில் மிகப் பெரிய இரும்புத் தடியொன்றை பிடித்துக் கொண்டு ,
." உலகில் பேராசையும் , கொடும்பாவத்தையும் செய்து காலங் கழித்த , இன்னான் மகன் இன்னான் எங்கே ?" என்று பெரும் சப்தமிட்டு கூப்பிடுவார் .இப்படி ஒவ்வொரு பாவியின் பெயர் சொல்லி சப்தமிடுவார் .மற்ற ஜபானியர்கள் ஒவ்வொரு பாவியையும் பிடித்து இழுத்து வருவார்கள் .
நரகத்தை இழுத்துக் கொண்டு ஜபானியர்கள் அல்லாஹு தஆலாவின் சமுகத்தில் வந்து நிறுத்துவார்கள்.
நரகம் அல்லாஹு தஆலாவிற்கு ஸுஜூது செய்யும். அப்போது அல்லாஹு தஆலா நரகத்திடம்
,
" நரகமே நீ பேசுவாயாக! உடனே அது வாய் திறந்து , " வணக்கத்திற்குரிய தக்க நாயன் அல்லாஹு தஆலா வைத் தவிர வேறில்லை . நாயனே ! உன்னுடைய இரணத்தைத் தின்று நீ அல்லாத வஸ்துக்களை வணங்கியவர்களையும் , இரவிலும் பகலிலும் உனக்கு மாறு செய்தவர்களையும் , உன் மீது சத்தியமாக வேதனை செய்வேன் .

" அல்லாஹு தஆலா " இன்றைய தினம் உன் வயிற்றை மனிதர்களைக் கொண்டும் , ஜின்களைக் கொண்டும் நான் நிறப்புவேன் .

اِلَّا مَنْ رَّحِمَ رَبُّكَ وَلِذٰلِكَ خَلَقَهُمْ وَتَمَّتْ كَلِمَةُ رَبِّكَ لَاَمْلَئَنَّ جَهَنَّمَ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ اَجْمَعِيْنَ

அவர்களில் உங்கள் இறைவன் அருள் புரிந்தவர்களைத் தவிர. இதற்காகவே (மாறுபடும்) அவர்களை படைத்தும் இருக்கிறான். (பாவம் செய்த) "ஜின்களைக் கொண்டும் மனிதர்களைக் கொண்டும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்ற உங்கள் இறைவனின் வாக்கு நிறைவேறியே தீரும்.
(அல்குர்ஆன்: 11:119)

உடனே ஜபானியாக்கள் நரகத்தை அங்கு இருந்து இழுத்துக் கொண்டு போய் அர்ஷ்க்கு இடது புறத்தில் நிறுத்தாட்டுவார்கள் .
ர.ரா

Rahmath Rajakumaran

ஜின்கள் 3 (ஜின் =நெருப்பு = நரகம்)
ஜின்கள் நெருப்பில் படைக்கப்பட்டிருப்பதால் நரகமும் நெருப்பில் படைக்கப்பட்டிருப்பதால் ஜின்களை நரகத்தின் நெருப்பு தீண்டாதா ? என்ற கேள்வி நண்பர் ஒருவர் கேட்டார்
மனிதனை மண்ணில் படைக்கப்பட்டதால் அவன் இறந்த உடம்பை மண் தீண்டாமலா இருந்தது மண்ணோடு மண்ணாக மக்க வைக்கவில்லை ?
ஒளிவீச்சி, நெருப்பு ,கதிர் வீச்சி, அலைகள் இவையெல்லாம் சூரியனின் வெள்ளோளியில் இருக்கிறது இது பற்றிய விபரம் மலக்குமார்கள் தொடரில் சொல்லி இருக்கிறேன் இப்போதும் சொல்கிறேன்
சூரியனின் ஒளியில் நாம் பார்க்கக் கூடிய வைலட் v ,இன்டிகோ I , புளு B , கிரீன் G , எல்லோ Y , ஆரஞ்சு O , ரெட் R இவைகள் நாம் பார்க்கும் 0.00004 cm இருந்து 0.00007 cm வரை நம்மால் பார்க்க முடியும்
வைலட் நிறத்திற்கு மேலே அல்ட்ரா வைவட் , எக்ஸ்ரே கதிர், காமா கதிர், காஸ்மிக் கதிர் , இன்னும் அறியப்படாத கதிர்களும் உள்ளன
அதைப்போலவே ரெட் நிறத்திற்கு கீழே இன்ஃபரா ரெட் , மின் பொறி , ராடார் கதிர்கள், டெலிவிஷன் , குட்டையான ரேடியோ அலை , ரேடியோ அலை , நீளமான ரேடியோ அலை , இன்னும் அறியப்படாத கதிர் . . . . . . இவைகளில் ஏதோ நெருப்புக்கதிரில் ஜின்கள் படைக்கப்பட்டிருக்கலாம்
" ஜின்களையும் மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன்
திருக்குர்ஆன் 11 : 119
"ஜின்களைக் கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து படைத்தோம் "
திருக்குர்ஆன் 15 : 27
நரகின் எரிபொருளாக குர்ஆனில் இன்னொரு இடத்தில்
" மனிதர்களும் கற்களும் இரையாகின்ற நரக நெருப்புக்குப் பயந்து கொள்ளுங்கள் "
திருக்குர்ஆன் 2 : 24
இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் கற்கள் கந்தகக் கற்கள் என்று அக்கால விஞ்ஞானத்தின்படி சொல்லப்பட்டிருந்தாலும் கந்தக கற்கள் சொற்ப காலமே வெப்பத்தை தரக்கூடியது ஆனால் யூரேனிய கற்கள் யுக யுகங்களாக நெருப்பைக் கொட்டக்கூடியது அட, அதன் சாம்பலிருந்து வெளிப்படும் கதிர் வீச்சு லட்சக்கணக்கான வருடங்களுக்கு இருந்து கொண்டே இருக்கும் நரக வாசிகள் என்றென்றும் யுக யுகங்களாக அதில் இருப்பதாக இறைவன் குறிப்பிடுகிறான்
சில நரகங்களின் நெருப்பு விநோத தன்மையைக் கொண்டது
" நபியே ! ஹுதமா என்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா ? அதுதான் அல்லாஹ் உடைய கட்டளையால் எரிக்கப்பட்ட நெருப்பு
அது உடல்களில் பட்டவுடன் உள்ளங்களில் பாய்ந்து விடும் நெருப்பு
திருக்குர்ஆன் 104 : 5_9
அநேகமாக இந்த நரகத்தின் நெருப்பு அணுகதிர் வீச்சியின் நெருப்பாக இருக்கலாம்
யுரேனியத்தின் கதிர் வீச்சு இழக்க 704 மில்லியன் வருடங்கள் ஆகும்
எனவே ஜின்கள் நெருப்பில் படைக்கப்பட்டிருந்தாலும் யுரேனியம் போன்ற அணுசக்தி வெளிப்படுத்தும் கதிர் வீச்சு கொண்ட நெருப்பு நரகத்தில் இருக்கலாம் எனவே ஜின்களுக்கும் கொடிய வேதனை தரக்கூடடியே நெருப்பு அதைப் படைக்கப்பட்ட நெருப்பைக் காட்டிலும் கொடிய நெருப்பு நரகத்தில் உண்டு ர.ரா

மௌகிபு - விசாரணைக் களம் 6
(மஹஷர் மைதானம்)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 36)



அர்ஷ் யைப் பற்றியும் சொல்ல வேண்டும் .அது அவனது அரியணை .
படைக்கப்பட்ட எல்லா உலகங்களையும் , அவ்வுலகங்களிலுள்ள எல்லாவற்றையும் தூக்கி அர்ஷின் நடுவில் வைத்தால் , மிகப் பெரிய்ய்ய மைதானத்தின் நடுவே ஒரு சிறிய மோதிரத்தை வைத்த மாதிரி இருக்கும் .

அத்தனை பெரிய அர்ஷை எட்டு மலக்குமார்கள் மட்டும் சுமந்து நிற்பார்கள் . அந்த மலக்குகள் ஒவ்வொருவருக்கும் நான்கு முகங்கள் இருக்கும். அந்த நான்கு முகங்களில் ஒரு முகம் மனித முகம், மற்றது புலி, காளை ,கழுகு ஆகிய நான்கு முகங்கள் ஒரே ஒரு மலக்குக்கு இருக்கும் . (இந்து புராணங்களில் இம்மாதிரி படைப்புகள் குறித்து வர்ணனைகளை நீங்கள் அறிவீர்கள்)
மேலும் நன் நான்கு சிறகுகளும் இவர்களுக்கு இருக்கும். இதில் இரண்டு இரண்டு சிறகுகள் அவரவர் முகங்களுக்கு மேல் மறைத்துக் கொண்டிருப்பதால் , இந்த எட்டு மலக்குகளும் அல்லாஹ்வின் அர்ஷ்யைப் பார்த்ததே இல்லை. எத்தனை வியப்பான படைப்பினங்கள் இந்த 8 மலக்குமார்கள் !

மஹஷர் மைதானத்திற்கு சுவர்க்கத்தையும் கொண்டு வர கட்டளையிடுவான். சுவர்க்கத்தை அர்ஷின் வலது புறம் நிறுத்தி அதன் வாசல்களைத் திறந்து வைப்பார்கள் .
அதன் பின் 'மீஸான் ' என்கிற நன்மை, தீமைகளை எடை போடும் தராசும் அவனது கட்டளைக்கிணங்க கொண்டு வரப்படும் .
பின்பு 'ஸிராத் ' என்கிற கடந்து போகும் பாலத்தையும் கொண்டு வந்து , அதை நரகத்தின் முதுகின் மேல் வைக்கப்படும் .
ஆக மஹஷர் மைதானத்தில் நரகம் முதல் சுவர்க்கம் வரை எல்லாவற்றையும் கொண்டு வந்து படைப்புகளின் முன் நிறுத்தப்படும் .

இந்நிகழ்வு ஏறக்குறைய சுதந்திர தினத்தன்று ஜனாதிபதி மற்றும் பொதுமக்கள் பார்வைக்கு இந்திய அரசு நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்தும் ரத ஊர்வலங்களும் , தன் போர் தளவாட டேங்கள் போன்ற படைப்புகளின் அணிவகுப்பையும் , வானத்தில் ஜெட் போர் விமானங்கள் சீறிப் பறந்து சாகஸங்கள் செய்யும் நிகழ்வுகளையும் உங்கள் கண் முன் வந்து போகிறதா ? இதன் மூலம் இந்திய திருநாட்டின் வல்லமையை பக்கத்து பக்கத்து நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்கிற சூசகமான ஓர் அச்சுறுத்தல்தானே .
ஒரு நாடு தன் வல்லமையை இப்படியெல்லாம் பறைசாற்றும் போது , சர்வத்தையும் படைத்த அந்த ரப்பு தன் வல்லமையை எவ்வாறெல்லாம் காட்டுவான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் .
ர.ரா

கிஸாஸு - குற்றத்திற்குரிய பரிகாரம் .
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 37)



மனிதர்கள் முதல் ஜின்கள் , ஷைத்தான்கள் , மிருகங்கள் மற்றும் சகல உயிரினங்கள் வரை ஒருவருக்கொருவர் அல்லது ஒன்றுக்கொன்று பிரதிக்கு செய்த குற்றத்திற்கு உத்தரவாதம் பண்ணுதலுக்கு "கிஸாஸு " எனப்படும்.

கொம்பு இல்லாத மாட்டை கொம்புள்ள மாடு முட்டியிருந்தால் , குற்றம் இழைக்கப்பட்ட கொம்பு இல்லாத மாட்டிற்கு அந்த உடனேயே கொம்பைக் கொடுத்து, கொம்புள்ள மாட்டை முட்டச் செய்து தீர்ப்பு செய்வான்.
இதுபோல சகல ஜீவராசிகளின் குற்றத்திற்கு நேர் செய்யப்பட்டு , பின் அத்தனை ஜீவராசிகளையும் பார்த்து , "மண்ணோடு மண்ணாகுக " என்று அல்லாஹு தஆலா கட்டளையிடுவான்.
உடனே அவை அனைத்தும் மடிந்து மண்ணோடு மண்ணாகி விடும். இனி அவைகளுக்கு மீட்சியே இல்லை .
இதைப் பார்த்துக் கொண்டு நிற்கும் இறை மறுப்பாளர்கள் , " நாங்களும் இப்படி மண்ணோடு மண்ணாக மடிந்திடக் கூடாதா ? அப்படியாய் எங்களை விட்டு விட்டால் எந்த வேதனையும் இருக்காதே ! " என்று சொல்வார்கள் .

அடுத்து " சொர்க்கத்திற்குப் போகிறவன் ஒரே ஒரு பிழை செய்திருந்தாலும், அதற்குப் பகரம் செய்யாமல் சொர்க்கத்திற்கு போக முடியாது .

அதே மாதிரி சொர்க்கத்திற்கு போக வேண்டியவனுக்கு பாவி ஒருவன் ஒரே ஒரு பிழை செய்ந்திருந்தாலும் அதற்குப் பகரம் செய்யாமல் அவன் நரகத்திற்குப் போக முடியாது . அந்த பிழை ஒரே ஒரு அடி அடித்திருந்தால் கூட , அதற்குரிய பகரம் செய்தே ஆக வேண்டும் " - என்று கட்டளை பிறக்கும் .

இக்கட்டளைப் பிரகாரம் , "ஒருவருக்கொருவர் அநியாயம் செய்து கொண்ட இரு வழக்காளிகள் எங்கே ? " என்று அழைக்கப்படும்.
உடனே இரண்டு வழக்காளிகள் கொண்டு வரப்படுவார்கள் . இதில் ஒருவன் குற்றம் செய்தவன் மற்றொருவன் அவனால் குற்றம் இழைக்கப்பட்டவன் . குற்றத்திற்கு தக்கபடி குற்றம் செய்தவனின் நன்மையைப் பிடுங்கி , குற்றம் இழைக்கப்பட்டவனுக்கு வழங்கப்படும்.
குற்றம் செய்தவன் யாதொரு நன்மையும் செய்யவில்லையென்றால் , குற்றம் இழைக்கப்பட்டவனின் பாவத்தை எடுத்து குற்றம் செய்தவன் மேல் சுமத்தப்படும் .
அடுத்து , குற்றம் செய்தவன் யாதொரு நன்மையும் செய்யாமலும் , குற்றம் இழைக்கப்பட்டவன் யாதொரு பாவமும் செய்யாதவனாக இருந்தால் , குற்றம் இழைக்கப்பட்டவனை அல்லாஹு தஆலா மேலே அண்ணாந்து பார்க்கச் சொல்வான் . அவன் பார்த்த போது , மிக்க அழகான , அலங்காரமான ஒரு பூங்காவனமும், அதற்குள் விசித்திரமான ஒரு தங்க மாளிகையும் தோன்றும்.
அப்பூங்காவும் , தங்க மாளிகை கண்டு "யா ரப்பே ! இது யாருடையது " என்று கேட்பான் .
அதற்கு அல்லாஹு தஆலா "இவைகளுக்கு கிரயம் கொடுப்பவன் எவனோ அவனுக்குரியது " .

"யா ரப்பே இவற்றிற்கு கிரயம் கொடுப்பவன் யார் ? என்று கேட்பான் .
" கிரயம் கொடுப்பவன் நீ தான் " என்பவன் அல்லாஹு தஆலா .
அதற்கு அவன் , " நான் எதைக் கொண்டு இவற்றிற்கு கிரயம் கொடுப்பேன் ? "
அல்லாஹு தஆலா , "குற்றம் செய்தவனைச் சுட்டிக்காட்டி "அதோ அங்கு நிற்கிறானே , அவன் உனக்குச் செய்த குற்றத்தை நீ பொறுத்துக் கொள்வதுதான் அவற்றிற்குரிய விலை "
குற்றம் செய்தவனை குற்றம் இழைக்கப்பட்டவன் உடனேயே பொறுத்துக் கொள்வான் .
உடனே இரண்டு பேரையும் சொர்க்கம் செல்லும்படி அல்லாஹு தஆலா தீர்ப்பு சொல்வான்.
அல்லாஹு தஆலா தன் அடியார்களுக்குள் ஒருவருக்கொருவர் செய்து கொண்ட குற்றங்களுக்கும் , கொடுக்க வேண்டிய கடன்களுக்கும், வேறு வகைப்பட்ட உத்திரவாதங்களுக்கும் விசாரித்து , இவ்விதமே தீர்ப்புச் செய்வான்.
ர.ரா

விசாரணை இன்றி சொர்க்கம்
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 38)



மஹஷர் மைதானத்தில் அல்லாஹு தஆலாவின் புறத்திலிருந்து " வரிசை பெற்றவர்கள் எங்கே ? " என்று ஒரு சப்தம் உண்டாகும்.
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்.
" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "
அவர்கள் சொர்க்கத்திற்குள் விரைந்து போவார்கள் . அவர்களை மலக்குகள் சந்தித்து , " முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "

" நாங்கள் வரிசை பெற்றவர்கள் என்று எங்களுக்குப் பெயர் அதாவது மனிதர்கள் எங்களுக்கு அநியாயம் செய்தால் பொறுத்துக் கொள்வோம். குற்றம் இழைத்தால் மன்னிப்போம் "
"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
அதன் பின் " ஸபுறுடையவர்கள் எங்கே ? "
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்.
" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "
அவர்களையும் மலக்குகள் சந்தித்து , "முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "

" நாங்கள் ஸபுறுடையவர்கள் அல்லாஹு தஆலாவின் ஏவலை செய்வதிலும்
, விலக்கலை விடுவதிலும் நேரிடும் வருத்தத்தைப் பொறுத்தோம்
"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
அதன் பிறகு "அல்லாஹு தஆலாவுக்கு உவப்பு வைத்தவர்கள் எங்கே ? "
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்
" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "

அவர்கள் சொர்க்கத்திற்குள் விரைந்து போவார்கள் . அவர்களை மலக்குகள் சந்தித்து , " முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "
"அல்லாஹு தஆலாவுக்கு உவப்பு வைத்தவர்கள் நாங்கள் உவப்பு என்னவென்று மலக்குகள் கேட்பார்கள்.

" நாங்கள் அல்லாஹுக்காக ஒருவரை ஒருவர் உவந்து பழகிக் கொள்வோம் "
"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
அதன் பிறகு " இரவெல்லாம் விழித்திருந்து வணங்கியவர்கள்
எங்கே? "
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்.
" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "
அவர்கள் சொர்க்கத்திற்குள் விரைந்து போவார்கள் . அவர்களை மலக்குகள் சந்தித்து , " முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "
"மனிதர்கள் படுத்து உறங்கும்பொழுதெல்லாம் நாங்கள் விழித்திருந்து வணங்குனோமே அதனால் "
"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
அதன் பிறகு " பீஸபீல்காரர்கள் எங்கே ?"
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்.
" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "
அவர்கள் சொர்க்கத்திற்குள் விரைந்து போவார்கள் . அவர்களை மலக்குகள் சந்தித்து , " முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "

" நாங்கள் அல்லாஹு தஆலாவின் பாதையில் யுத்தம் புரிந்தவர்கள் "
"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
அதன் பிறகு " பலாயை அனுபவித்தவர்கள் எங்கே ? "
அப்போது ஒரு கூட்டத்தார் வெளிப்படுவார்கள்.

" நீங்கள் என் கிருபையைக் கொண்டு யாதொரு கேள்வி கணக்கில்லாமல் சொர்க்கம் புகுதுங்கள் "
அவர்கள் சொர்க்கத்திற்குள் விரைந்து போவார்கள் . அவர்களை மலக்குகள் சந்தித்து , " முந்திக் கொண்டு சொர்க்கத்துக்குள் நுழைகிறீர்களே நீங்களெல்லாம் யார் ? "

" நாங்கள் மனிதர்கள் ஸுவதியாய் இருக்கையில் பலாயினுடைய வேதனையைச் சகித்துக் கொண்டிருந்தோம் "

"நீங்கள் சொர்க்கத்திற்குள் தாராளமாக போங்கள் "
இவ்விதமாக அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் முதலான நாற்பத்தொன்பது லட்சம் பேர்கள் யாதொரு கேள்வி கணக்கு இல்லாமல் நபி (ஸல்) அவர்களின் ஷபாஅத்தைக் கொண்டு கூட்டம் கூட்டமாக சொர்க்கம் புகுதுவார்கள் .
ர.ரா

ஹிஸாபு - கணக்கு விசாரணையும், பட்டோலையும் .
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 39)



மனிதர்கள் , ஜின்கள் அவரவர் செய்த நன்மை , தீமைகளைப் பட்டோலைப்படி பரிசோதனை செய்வதற்கும் அவற்றைப் பற்றிக் கேள்வி கணக்கு கேட்பதற்கும் வேண்டி , ஒவ்வொரு ஆளாகப் பிடித்து தூக்கி கொண்டு வருவதற்கென்று இரண்டு மலக்குகள் முன்னமே நியமிக்கப்பட்டிருப்பார்கள் .
மனிதர்களை விசாரிப்தற்காக "ஒவ்வொருவரும் அவரவர் காலின் பெருவிரல் நுனியத் தரையில் ஊன்றி நிற்கும் படி அணிவகுத்துவிடுங்கள் " என்று மலக்குகளுக்கு இறைவன் உத்திரவு செய்வான். படைப்புகளும்களும் அவ்வாறே பெருவிரல் நுனியத் தரையில் ஊன்றி நிற்பார்கள் . (இது ஏன் என்று தெரியவில்லை)

பின் அவனவனுடைய கழுத்தில் மாட்டப்பட்டிருக்கும் பட்டோலைக்கட்டுகள் கழுத்திலிருந்து ஆகாயத்தில் பறந்து போய் . ....
" இன்னான் மகன் இன்னானே! உன் பட்டோலையை வலது கையில் வாங்கிக் கொள் " என்றும் , இன்னான் மகன் இன்னானே ! உன் பட்டோலையை இடது கையில் வாங்கிக் கொள் " என்றும் கட்டளை பிறக்கும் .
வலது கையில் பெறுபவர்கள் நல்லவர்கள் ஸாலிஹ்களும் , இடது கையில் பெறுகிறவர்கள் கெட்டவர்களும் , பாவிகளுமாய் இருப்பார்கள்.
வலது கையில் பட்டோலை பெறுகிறவர்களில் முதன்மையானவர் உமர் இப்னு கத்தாபு (ரலி) அவர்கள். அவருக்கு சூரியனது ஒளியைப் போல் சுடர் இருக்கும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
" அபூபக்கர் எங்கே? "

"நீண்ட தூரம் மலக்குகள் அவரை சுவர்க்கத்தின்பால் அழைத்துச் சென்று விட்டனர் என்பதாக இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்

இடது கையில் பட்டோலை பெறுகிறவர்களில் முதன்மையானவர் அஸுவதிபுனு அப்துல்அஸ்து (இவன் யார்? தெரியவில்லை)
" உன் பட்டோலையை நீ படித்துப் பார். இன்றைய தினம் உன்னைக் கேள்வி கேட்டுக் கொள்ள நீயே போதுமானவன்"
எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் படிப்பார்கள் . வலது கையில் வாங்கிய பட்டோயில் முன்புறம் நன்மையும் , பின்புறம் தீமையும் எழுதப்பட்டிருக்கும் .
அவரவர்கள் முதலில் பின்புறத்தைப் படித்துப் பார்ப்பார்கள். அப்போது அவர்களின் முகம் பயத்தால் மஞ்சளாய் நிற மாறிவிடும் . அதே பின் பக்கத்தின் கடைசியில் " இவையெல்லாம் நீ செய்த பாவங்கள் ; இருந்தாலும் அவற்றையெல்லாம் நான் மன்னித்து விட்டேன் " என்று எழுதியிருக்கும் இந்த வரியைப் படித்தவுடன் பயம் நீங்கி சந்தோஷப்படுவார்கள்.
அந்த பட்டோலையைப் புரட்டி முன்பக்கத்தைப் படித்துப் பார்ப்பார்கள். அதைப் படிக்கப் படிக்க சந்தோஷம் அதன் கடைசியில் " இவையெல்லாம் நீ செய்த நன்மைகள் , அவற்றை நான் அதிகப்படுத்திவிட்டேன் "

இடது கையில் பெற்ற ஒவ்வொரு பட்டோலையும் மிக கருப்பாக இருக்கும் அதன் முழுமையும் தீமையாகவே எழுதப்பட்டிருக்கும் . அதைப் படித்து பார்க்கும் போதே முகம் கருத்துக் கண்கள் நீல நிறமாய் அதிக பயத்தில் மூழ்குவார்கள் . அதன் கடைசியில் "இவையெல்லாம் நீ செய்த பாவங்கள். இவைகள் உனக்கு நீயே சுமத்திக் கொண்டது " என்று எழுதப்பட்டிருக்கும் .
ர.ரா

பட்டோலை விவகாரங்கள் 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 40)



வலது கையில் பட்டோலை பெற்றவர்கள் தனது பட்டோலையை வாசித்து முடித்தவுடன் , அவரை அறுபது முழம் உயரமாக்கி, அவருடைய முகத்தைப் பூரண சந்திரனைப் போல பிரகாசிக்கச் செய்து , பட்டாடை உடுத்தி,தங்கத்தாலும், வெள்ளியினாலும் , கடகங்கள் பூட்டி , அதில் முத்துக்களைப் பதித்து கரங்களில் அணிவித்து , தலையில் தங்க கீரிடமும் அணிவிக்கப்படும்.

அவர் தன்னையொத்த மனிதர்களிடம் , "உங்களுக்கு நன்மாராயம் உண்டாவதாக ! உங்களில் ஒவ்வொருவரும் எனக்குக் கிடைத்தது போலவே கிடைக்கப்பெறுவீர்கள்" என்று சொல்வார் .
இடது கையில் பட்டோலை பெற்றவன் தனது பட்டோலையை வாசித்து முடித்தவுடன் அறுபது முழம் உயரமாக்கி, அவனுடைய முகத்தைப் கருப்பாக்கி கீழ் சட்டை போட்டுவித்து , அக்கினியால் கீரிடம் செய்து அவன் தலையில் கவிழ்த்தப்படும்.


அவன் தன்னையொத்த மனிதர்களிடம் வரும் போது , அவர்கள் இவனைக் கண்டு அஞ்சி, "இவனை இங்கே வர விடாதீர்கள் " என்று அலறுவார்கள் .
அவர்களைப் பார்த்து " நீங்கள் என்னையா விரட்டுகின்றீர்கள் ? அல்லாஹ் உங்களையும் விரட்டுவான் "
பட்டோலைப் பெற்றவர்களில் சிலருடைய பட்டோலை முழுவதும் அங்கீகரிக்கப்படாமல் காணப்படும். சிலருடைய பட்டோலையில் சில விஷயங்கள் அங்கீகரிக்கப்பட்டு பல அங்கீகரிக்கப்படாமல் தள்ளப்படும்.
சிலருடைய பட்டோலை முழுவதுமே அங்கீகரிக்கப்படும் .சிலருடைய பட்டோலையில் உள்ள பாவங்கள் நீக்கப்பட்டு மன்னிக்கப்படும் .
சிலருடைய பட்டோலையில் நன்மைகள் மேலும் அதிகமாக்கப்படும் .சிலருடைய பட்டோலையில் உள்ள பாவங்கள் மேலும் அதிகமாக்கப்படும். சிலருடைய பட்டோலையில் உள்ள நன்மைகள் கூட தள்ளுபடி செய்யப்படும்.

ذٰلِكَ بِاَنَّهُمُ اتَّبَعُوْا مَاۤ اَسْخَطَ اللّٰهَ وَكَرِهُوْا رِضْوَانَهٗ فَاَحْبَطَ اَعْمَالَهُمْ
காரணமாவது: அல்லாஹ்வுக்குக் கோபமூட்டக் கூடியவை களையே இவர்கள் பின்பற்றி, அவனுக்குத் திருப்தித் தரக்கூடிய வைகளை வெறுத்து வந்தனர். ஆதலால், இவர்களுடைய நன்மைகள் அனைத்தையும் அல்லாஹ் அழித்துவிட்டான்.
(அல்குர்ஆன்: 47:28)
தத்தம் வழக்காளிகளுக்கு நன்மையைக் கொடுத்து தீமையைப் பெற்றுக் கொண்டவர்கள் அவரவர் பட்டோலைப் படித்துப் பார்த்து தாம் செய்த நன்மைகள் எழுதப்படாமல் இருப்பதைக் கண்டு ,

" இறைவா! நான் செய்த நன்மைகள் இதில் ஏன் எழுதப்படவில்லையே "

" உன்னுடைய நன்மைகள் நீ கொடுக்க வேண்டிய வழக்காளிகளுக்குக் கொடுக்கப்பட்டு விட்டன என்று பதில் வரும் தாம் செய்யாத தீமை எழுதப்பட்டிருப்பதைக் கண்டு
" இறைவா! நான் செய்யாத தீமைகள் இதில் ஏன் எழுதப்பட்டிருக்கின்றன என்று கேட்பார்கள். அதற்கு ..
" நீ கொடுக்க வேண்டிய வழக்காளிகளின் தீமைகள் அந்தக் கடனுக்கு பதிலாக உன்மீது சுமத்தப்பட்டன " என்று பதில் வரும்.
ர ரா

பட்டோலை விவகாரங்கள் 02
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 41)



அல்லாஹு தஆலா ஒருவன் உண்டென்பதை நம்பாமல் இணை வைத்தும் , மார்க்க வரம்பை கடந்தும் , அக்கிரமங்கள் பல செய்த இறை மறுப்பாளனை மஹா பெரிய நரகத்தில் தள்ளும்படி மலக்குகளுக்கு கட்டளை பிறப்பிக்கும்போது , அந்த இறை மறுப்பாளன் ,
" இறைவா! என் பட்டோலை சரிவர எழுதப்படவில்லை. நாங்கள் சொல்லாத சொற்களையும் , செய்யாத செயல்களையும், எண்ணாத எண்ணங்களையும் அந்த மலக்குகள் எழுதிவிட்டார்கள் "
" இல்லை இறைவா! சொன்ன சொற்களையும் , செய்த செயல்களையும், எண்ணி எண்ணங்களையும்தான் எழுதினோம். இவர்கள் உண்மையை ஒப்புக் கொள்ளாத வழிகேடர்கள் " என்று மலக்குகள் சொல்லுவார்கள்
அல்லாஹு தஆலா இம் மலக்குகளை குறித்து குர்ஆனில் அல்லாஹ் ...

كِرَامًا كَاتِبِيْنَۙ
அவர்கள் (மலக்குகளில் உள்ள) கண்ணியமான எழுத்தாளர்கள்.
(அல்குர்ஆன்: 82:11)

அதென்ன கண்ணியமான எழுத்தாளர்கள் .... .?
இவ்வானவர்கள் நன்மையை எழுதினால் வானம் சென்று இறைவனிடத்தில் உடனுக்குடன் சமர்ப்பித்து, 'உன்னுடைய இன்ன அடியான் இன்ன நன்மையைச் செய்தான் ' என்று சாட்சியங் கூறுகின்றனர் .
தீமையைச் செய்தால் , அதனைக் குறித்து மௌனம் சாதிக்கிறார்கள் " "நாயனே , நீ மறைக்கிறவன், அவர்களோ உனது வேதத்தை தினந்தோறும் ஓதி உன்னைப் புகழ்ந்து வணக்க வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர் . எனவே அவர்களது மறைந்த குறையை வெளிப்படுத்த மாட்டோம்." என்று கூறுவார்கள்

மேலும் நன்மையை எழுதும் விஷயத்தில் அவர்கள் ரொம்பவும் தீவிரமானவர்கள் . தீமையை எழுதும் போது மனதின் மறதியாக தீமையைச் செய்து விட்டால் அதனை அவர்கள் எழுதிக் கொள்ள மாட்டார்கள் தீமையை பதிவும் விஷயத்தில் தவ்பா, இஸ்திஃபார் செய்யக் கூடும் என்ற எண்ணத்தால் சற்று தாமதிப்பவர்கள் .தவ்பா , இஸ்திபார் செய்தால் அதனையும் சேர்த்து எழுதி நன்மையின் தராசு தட்டை கனமாக்குவார்கள் . இதனால்தான் இறைவன் இவர்களை கண்ணியமான எழுத்தாளர்கள் என்ற அடைமொழியோடு குறிப்பிடுகின்றான் .
பிறகு அல்லாஹு தஆலா கேள்வி கணக்கு கேட்க ஆரம்பிப்பான். அப்போது அர்ஷுடைய ஒளி வெளியாய் மஹ்ஷர் மைதானம் முழுவதும் வெளிச்சமாகும் .

உடனே அல்லாஹு தஆலா தன் அடியார்களைக் கேள்வி கேட்கப் போகிறான் என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொள்வார்கள் .இன்னும் ஒவ்வொருவரும் நம்மைத்தான் கூப்பிடப் போகிறார்கள் என்றே எண்ணுவான் .
ர.ரா

நபிமார்களிடம் விசாரணை
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 42)



அல்லாஹு தஆலா மலக்கு இஸ்ராபீல் (அலை) அவர்களை அழைத்து ,

" நான் உம்மிடம் தந்த ரிஸாலத்தை என்ன செய்தீர்? "
" ஜிப்ரயீலிடம் ஒப்படைத்தேன் "
ஜிப்ரயீலிடம் விசாரிக்க, அதை
ரசூல்மார்களிடம் ஒப்படைத்தேன் .

அல்லாஹு தஆலா நபி நூஹு (அலை) அவர்களிடம் , " நூஹே ! நீர் என் ரிஸாலத்தை உம்முடைய கூட்டத்தாரிடம் சேர்த்தீரா ? "
"ஆம் சேர்த்தேன்"
அல்லாஹு தஆலா நூஹு (அலை) கூட்டத்தாரிடம் , " நூஹு உங்களிடம் என் ரிஸாலத்தை சேர்த்தாரா ? "
" எங்கள் இறைவனே! அப்படி அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்படியான எந்த ஒரு ரசூலும் எங்களிடம் வரவில்லை "
(கப்பலைக் கட்டி, தூபான் வெள்ளத்தி லிருந்து உங்களை பாதுகாக்கிறேன் என்று சொன்ன நபி நூஹை எளிதாக மறுதலித்து விட்டார்கள்)
" என்ன நூஹே .. என் ரிஸாலத்தை உம்முடைய கூட்டத்தாரிடம் சேர்த்ததாக சொன்னீர் .இவர் இல்லை என்கிறார்களே "

யா அல்லாஹ் ! உன் ரிஸாலத்தை உண்மையாக என் கூட்டத்தாரிடம் சேர்த்து விட்டேன் . அதற்குச் சாட்சிக்காரரர் முஹம்மது நபியும், அவர்களது உம்மத்தும் "
உடனே அல்லாஹு தஆலா நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைப் பார்த்து சாட்சி கேட்பான். அவர்கள் நூஹு (அலை) அவர்கள் தங்கள் கூட்டத்தாரிடம் ரிஸாலத்தை சேர்த்ததாக சாட்சி சொல்வார்கள் .

அப்போது நூஹு (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தைப் பார்த்து,
" நீங்கள் எங்களைக் கண்டவர்கள் அல்லவே, அப்படியிருக்க, நீங்கள் எங்கள் பேரில் எவ்விதம் சாட்சி சொல்லுகிறீர்கள்? " என்று கேட்பார்கள்,

அதற்கு நபி (ஸல்) அவர்களின் உம்மத்து "அல்லாஹு தஆலாவின் சமுகத்தை நோக்கி , யா அல்லாஹ் ! நீ எங்களுக்கு ஒரு ரசூலையும் , வேதத்தையும் அனுப்பியிருக்கிறாயே , அந்த வேதத்தில் இவர்களைப் பற்றி சொன்னதை ஈமான் கொண்டு நாங்கள் இவர்கள் பேரில் சாட்சி சொல்லுகிறோம். ஆனால் அவரின் கூட்டத்தார் மறுதலிக்கிறார்கள்" என்று சொல்வார்கள்.
அதற்கு அல்லாஹு தஆலா இவர்களைப் பார்த்து , " நீங்கள் உண்மை சொன்னீர்கள் " என்று ஒப்புக் கொள்வான்.

قُلْ اٰمَنَّا بِاللّٰهِ وَمَاۤ اُنْزِلَ عَلَيْنَا وَمَاۤ اُنْزِلَ عَلٰٓى اِبْرٰهِيْمَ وَ اِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَمَاۤ اُوْتِىَ مُوْسٰى وَ عِيْسٰى وَالنَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ

(நபியே!) நீங்கள் கூறுங்கள்: "அல்லாஹ்வையும், நம்மீது அருளப்பட்டதையும்; இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் ஆகியவர்கள் மீதும், அவர்கள் சந்ததிகள் மீது அருளப்பட்டவை களையும்; மூஸா, ஈஸா மற்றும் அனைத்து நபிமார்களுக்கு அவர்கள் இறைவனால் அளிக்கப்பட்டவைகளையும் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம். இவர்களில் ஒருவரையும் (நபியல்ல என்று) நாம் பிரித்துவிட மாட்டோம். அல்லாஹ் ஒருவனுக்கே நாங்கள் (முற்றிலும்) கீழ்ப்படிந்து நடப்போம் (என்றும் கூறுங்கள்.)
(அல்குர்ஆன்: 3:84)
ர.ரா

நபிமார்களிடம் விசாரணை 2
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 43)



அல்லாஹுு தஆலா ஈஸா (அலை) அவர்களிடம் விசாரணை செய்வான் .
" ஈஸாவே! நீர் உம்மையும் , உமது தாய் மரியமையும் " இறைவனாக " வணங்கும்படி உமது கூட்டத்தாரிடம் சொன்னது உண்டா ? "

இந்த பயங்கரமான கேள்வியை கேட்டதும் ஈஸா (அலை) அவர்கள் நிலை தடுமாறி சில வருஷங்கள் வரை பதில் சொல்லாமல் நாவெழாமல் தன்னை மறந்த நிலையில் நின்று , பின்பு ....
" யா அல்லாஹ்! எனக்குப் பாத்தியம் அல்லாததை நான் அவர்களுக்குச் சொல்லவே இல்லை என்பதை நீ நன்கு அறிவாய் . எனக்கும் , உங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள் என்று உன் கட்டளைப் பிரகாரமே சொன்னேன் " என்று நடு நடுங்கிச் சொல்வார்கள்.

وَاِذْ قَالَ اللّٰهُ يٰعِيْسَى ابْنَ مَرْيَمَ ءَاَنْتَ قُلْتَ لِلنَّاسِ اتَّخِذُوْنِىْ وَاُمِّىَ اِلٰهَيْنِ مِنْ دُوْنِ اللّٰهِ قَالَ سُبْحٰنَكَ مَا يَكُوْنُ لِىْۤ اَنْ اَقُوْلَ مَا لَـيْسَ لِىْ بِحَقٍّ اِنْ كُنْتُ قُلْتُهٗ فَقَدْ عَلِمْتَهٗ تَعْلَمُ مَا فِىْ نَفْسِىْ وَلَاۤ اَعْلَمُ مَا فِىْ نَفْسِكَ اِنَّكَ اَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ

அன்றி, அல்லாஹ் (மறுமை நாளில் ஈஸாவை நோக்கி) "மர்யமுடைய மகன் ஈஸாவே! அல்லாஹ்வுடன் என்னையும், என்னுடைய தாயையும் இரு கடவுள்களாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று மனிதர்களை நோக்கி நீங்கள் கூறினீர்களா?" என்று கேட்பான் என்பதையும் ஞாபகமூட்டுங்கள். அதற்கு அவர் கூறுவார்: "நீ மிகப் பரிசுத்தமானவன். எனக்கு ஒரு சிறிதும் தகாததை நான் ஒருபோதும் கூறமாட்டேன். அவ்வாறு நான் கூறியிருந்தால் நிச்சயமாக நீ அதனை அறிந்திருப்பாயே! என் உள்ளத்திலுள்ளதை நீ நன்கறிவாய். உன் உள்ளத்திலுள்ளதை நான் அறியமாட்டேன். நிச்சயமாக நீதான் மறைவானவை அனைத்தையும் நன்கறிபவன்.
(அல்குர்ஆன்: 5:116)
ர.ரா

குறுக்கு விசாரணையும் , அவயங்களின் சாட்சியும்
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 44)



அல்லாஹு தஆலா வின் விசாரணை மூன்றாக பிரிக்கப்படும்.

1) இலகு விசாரணை , இது ஸாலிஹ்களிடம் விசாரிக்கப்படும் . இதற்கு தண்டனை இல்லை.
2) தீர்க்க விசாரணை , இது பாவிகளிடம் விசாரிக்கப்படும் . இதற்கு தண்டனை உண்டு ; மன்னிப்பும் உண்டு.
3) கடின விசாரணை , இது முனாபிக்களிடம் நடத்தப்படும் . இதற்கு தண்டனை உண்டு ; மன்னிப்பு இல்லை .

அல்லாஹு தஆலா ஒவ்வொருவரையும் , அவரவர்களுக்கு கொடுத்த நிஃமத்துகளைப் பற்றியும் , அவரவர் செய்த அமல்களைப் பற்றியும் , அவரவர்கள் செய்த குற்றங்களைப் பற்றியும் கேள்வி மேல் கேள்வி கேட்டு விசாரிப்பான்.

அப்போது அவர்கள் தாம் செய்த குற்றங்களை ஒப்புக் கொள்ளாமல் பாவிகள் மறுதலிப்பார்கள். அவனிடம் ஆட்சேஷபிப்பார்கள் . மேலும் இக்குற்றங்களை தாங்கள் செய்ததற்கு எந்த வித சாட்சியுமே இல்லை என்று அடித்து சொல்லி வாதாடுவார்கள் .
மேலும் இக் குற்றங்களை பதிவு செய்த மலக்குகள் , தங்களை வேண்டுமென்ற குற்றவாளியாக ஆக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தில் செய்யப்பட்டதாக கூட குற்றம் சாட்டுவார்கள் .
விசாரணை மும்முரமாக நடைபெற்றுகொண்டிருக்கும் போது , தங்கள் வாதத் திறமையை தாங்களே மெச்சிக் கொண்டும் இருக்கும் போது , பாவிகளிடம் அல்லாஹு தஆலா , "நீங்கள் செய்த குற்றங்களுக்கு சாட்சியாளர்கள் உங்களுக்கு எதிராக சாட்சி சொன்னால் ஏற்றுக் கொள்வீர்களா ?"
' அட, யாருமே பார்க்காத போதும் யாருமே இல்லாத போதும் , இருட்டில் நாம் செய்த 'அந்த ' குற்றங்களுக்கு யாரை சாட்சியாளர்களாக இறைவன் கொண்டு வர முடியும் ? என்று பாவிகள் சுற்றுமுற்றும் பார்த்து , யார் நமக்கு எதிராக சாட்சி சொல்ல வர முடியும் ? என்று இறுமார்ப்போடு இருக்கும் தருணத்தில் ..

حَتّٰٓى اِذَا مَا جَآءُوْهَا شَهِدَ عَلَيْهِمْ سَمْعُهُمْ وَاَبْصَارُهُمْ وَجُلُوْدُهُمْ بِمَا كَانُوْا يَعْمَلُوْنَ
அச்சமயம் (பாவம் செய்த) அவர்களுக்கு விரோதமாக அவர்களுடைய செவிகளும், அவர்களுடைய கண்களும், அவர்களுடைய (உடல்) தோல்களும் அவைகள் செய்தவைகளைப் பற்றி சாட்சி கூறும். (அல்குர்ஆன் : 41:20)

وَقَالُوْا لِجُلُوْدِهِمْ لِمَ شَهِدْتُّمْ عَلَيْنَا قَالُوْۤا اَنْطَقَنَا اللّٰهُ الَّذِىْۤ اَنْطَقَ كُلَّ شَىْءٍ وَّهُوَ خَلَقَكُمْ اَوَّلَ مَرَّةٍ وَّاِلَيْهِ تُرْجَعُوْنَ
அதற்கவர்கள், தங்கள் தோல்களை நோக்கி, "எங்களுக்கு விரோதமாக நீங்கள் ஏன் சாட்சியம் கூறினீர்கள்?" என்று கேட்பார்கள்.
அதற்கு அவைகள், "எல்லா பொருள்களையும் பேசும்படி செய்கின்ற அல்லாஹ்வே எங்களையும் பேசும்படி செய்தான். அவன்தான் உங்களை முதல் முறையாகவும் படைத்தான். (இறந்த) பின்னரும் நீங்கள் அவனிடமே கொண்டு வரப்பட்டிருக் கின்றீர்கள்" என்றும் அவை கூறும்.
(அல்குர்ஆன் : 41:21)

وَمَا كُنْتُمْ تَسْتَتِرُوْنَ اَنْ يَّشْهَدَ عَلَيْكُمْ سَمْعُكُمْ وَلَاۤ اَبْصَارُكُمْ وَلَا جُلُوْدُكُمْ وَلٰكِنْ ظَنَنْتُمْ اَنَّ اللّٰهَ لَا يَعْلَمُ كَثِيْرًا مِّمَّا تَعْمَلُوْنَ
உங்களுடைய செவிகளும், உங்களுடைய கண்களும், உங்களுடைய தோல்களும் உங்களுக்கு எதிராக சாட்சியம் கூறாமல் இருக்க, நீங்கள் உங்களுடைய பாவங்களை அவைகளுக்கு மறைத்துக் கொள்ள முடியவில்லை. எனினும், நீங்கள் செய்பவைகளில் அதிகமானவற்றை அல்லாஹ் அறியவே மாட்டான் என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தீர்கள்.
(அல்குர்ஆன்: 41:22)
ர.ரா

கேள்வியின் நாயகனே !
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 45)



விவரம் தெரிந்த வயதிலிருந்தே நம்முடன் சில கேள்விகளும் கூடவே வளர்ந்து வருகின்றன.
ஒவ்வொரு நாளும் பதிலற்ற சில கேள்விகளுடன்தான் நாம் படுக்கைக்கு செல்கிறோம். நாம் உறங்கும் போது கூட கேள்விகள் விழித்திருக்கின்றன !
ஆக இப்படி கேள்விகளோடு பிறந்து , கேள்விகளோடு வளர்ந்து, வாழ்ந்து , மரித்த பின்னும் மண்ணறையிலும் கேள்விகள் கேட்கப்பட்டு , பின் தொடர கேள்விகள் விரட்டிக் கொண்டே வந்து மஹஷர் வரை மனிதர்கள் கேள்விக் கணைகளாலே சுற்றி
வளைக்கப்படுகிறார்கள் .

اَيَحْسَبُ الْاِنْسَانُ اَنْ يُّتْرَكَ سُدًى
(யாதொரு கேள்வியும் தம்மிடம்) கேட்காது விட்டுவிடப்படுவோம் என்று மனிதன் எண்ணிக்கொண்டானா?
(அல்குர்ஆன்: 75:36)

ஒவ்வொருவரையும் கேள்விகள் கேட்டு விசாரிக்கப்படும் போது , அவரவர்களுக்கு வலது புறமும் , இடது புறமும் , முன்புறமும் நரகம் காண்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்கும். நரகத்தைப் பார்த்தவர்களாய் கையில் பட்டோலையைப் பிடித்தவர்களாய் நிற்பார்கள் .

அல்லாஹு தஆலா ஒவ்வொருவராக விசாரிக்கும் போது , தனித்தனியாக "உனக்கு நான் சரீர சுகத்தைக் கொடுத்து , உன் ஆயுளையும் நீட்டி வைத்தேனே , அந்த ஆயுளை எந்தக் கருமத்தில் நீ போக்கினாய் ?
" உனக்கு பாலியத்தைத் தந்தனே அதை எதைக் கொண்டு பழுதுபடுத்தினாய்? அந்த பாலியம் எப்படியெல்லாம் வீண் விரயம் செய்து பாவத்தை தேடிக் கொண்டாய் ?
இளமைக் கொடுத்தேனே, அதைக் கொண்டு என்ன நன்மை செய்தாய் ?
உனக்கு நிறைய செல்வத்தைத் தந்தேனே , அந்த செல்வத்தை நீ எப்படி தேடினாய் ? எந்த விஷயத்தில் எவ்விதம் செலவு செய்தாய் ? "

அவனுக்கு கொடுத்த நிஃமத்துகளைப் பற்றியும் , அதிகமாகவும், கொஞ்சமாகவும் , பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் செய்த அமல்கள் அனைத்தையும் பட்டோலையில் எழுதப்பட்டிருக்கும் ஒவ்வொரு அமலைக் குறித்தும் கேள்விகள் கேட்பான்.
அல்லாஹு தஆலா ஒவ்வொரு மூச்சுக்காற்றை உள்வாங்கும் போதும், அந்த மூச்சுக்காற்றை வெளியிடும் போதும் என்ன செய்தாய் என்று இரண்டிரண்டு கேள்விகளைக் கேட்டான்.
இன்னும் ஒருவன் செய்த ஒவ்வொரு கருமத்தைக் குறித்து , அதை நீ ஏன் செய்தாய் ? எப்படி செய்தாய் ? யாருக்காகச் செய்தாய் ? என்று மும்மூன்று கேள்விகள் தொடராகக் கேட்பான்

فَوَرَبِّكَ لَنَسْـَٔـلَـنَّهُمْ اَجْمَعِيْنَۙ
(ஆகவே) உங்கள் இறைவன் மீது சத்தியமாக! அவர்கள் அனைவரையும் (நம்மிடம்) ஒன்று சேர்த்து,
(அல்குர்ஆன் :15:92)

عَمَّا كَانُوْا يَعْمَلُوْنَ
அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதைப் பற்றி நிச்சயமாக (அவர்களிடம்) கேள்வி கணக்குக் கேட்போம்.
(அல்குர்ஆன்: 15:93)


பிறகு அதிகாரிகள் செய்த அதிகாரங்களைப் பற்றிக் கேள்வி கேட்கப்படுவார்கள் .அவர்கள் செய்த அதிகாரம் நியாயமானதாக இருந்தால் நற்பேறும் , அநியாயமானதாக இருந்தால் , கஷ்டமும் பெறுவார்கள்.
இது மாதிரியே தர்மகர்த்தாக்கள் செய்த தர்ம காரியங்கள் குறித்தும் கேள்விகள் கேட்கப்படும் .

ஒவ்வொரு தம்பதியினர் தங்கள் துணைக்கு செய்த நன்மைகளைக் குறித்தும் , துரோகங்கள் குறித்தும் கேள்விகள் கேட்கப்படும் .
பின்பு மேய்ப்பாளர்கள் தங்கள் கால்நடை பிராணிகளை வைத்து மேய்த்ததைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்படும் .

இப்படி கேட்கப்படும் அனைவரும் குற்றவாளிகளாகவும் இருப்பார்கள் குற்றவாளிகள் அல்லாதவர்களும் இருப்பார்கள் . ஆனால் கேள்விகள் மட்டும் கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

நவீன காலத்து வலைதளத்தைப் பற்றியும் , அதைப் பயன்படுத்திய விதத்தைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்படலாம் .
ர.ரா

ரகசிய விசாரணை.
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 46)



திருச்சி : நீதிமன்ற அறையின் கதவுகள் , ஜன்னல்கள் மூடப்பட்ட நிலையில் சுமார் 2 மணி நேரம் மாஜிஸ்திரேட் திருவேணி அவர்கள் முன்னிலையில் , தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும் , சமூக ஆர்வலருமான முகிலன் ரகசிய வாக்குமூலம் அளித்துள்ளார் . அது ரகசியமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாதிரியான ரகசிய விசாரணை அல்லாஹுதஆலா இறை நல்லடியாளர்களிடம் நடத்துகிறான் . கதவிற்கு பதிலாக திரைக்குள் வைத்து ரகசிய விசாரணை செய்யப்படுகிறது.
அல்லாஹுதஆலா தன் அடியார்களில் சிலரை ஒவ்வொருவராகத் தன் சமுகத்தில் அழைத்து , அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எதுவும் தெரியாமல் இருப்பதற்காக திரை போட்டு மறைவாக விசாரிக்கும் விதமும் , செய்த குற்றமும் , மற்றவர் அறியாமல் அதை மறைத்துக் கொண்டு , அவர்களை தனித்தனியாக அழைத்து கையிலிருக்கும் பட்டோலையைப் அவர்களே படிக்கும்படி சொல்வான் .
உடனே பட்டோலையில் அவர்கள் செய்த நன்மையைப் படிக்கும் போது முகம் மலர்ச்சியாய் வெளுத்த முகமுமாயும் , அவர்கள் செய்த தீமையைப் படிக்கும் அவர்களின் முகம் கறுத்தவர்களாயும் அதனைப் படிப்பார்கள்

அப்போது அல்லாஹுதஆலா அவர்களைப் பார்த்து
" இன்ன காலத்தில் இன்ன பாவத்தை நீ செய்ததுண்டோ அதை நீ அறிவாயா? "
என்று ஒவ்வொருவரையும் கேட்பான் .

இக்கேள்விக்கு அவர்கள் " அதை நாங்கள் நன்றாகவே அறிவோம் " என்று ஒப்புக் கொள்ளுவார்கள் .இவ்விதம் அவர்கள் செய்த எல்லாப் பாவங்களையும் பற்றி ஒவ்வொன்றாக கேட்க , அவைகளை அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். பின் அவர்களிடம் நீங்கள் செய்த இந்த பாவங்களை உலகிலேயே பிறர் அறியாமல் நான் மறைத்து வைத்திருந்தேன் .இப்போது அந்த பாவங்களை மன்னித்துக் கொண்டேன் .

அவர்களின் பட்டோலையில் எழுதப்பட்டிருக்கும் பாவங்களைப் பார்த்து ,அல்லாஹுதஆலா "விசாரணை செய்யப்பட்டு விட்டது . நீங்கள் நன்மையாகுங்கள் " என்று கூறுவான்.
அப்படியோ எல்லா பாவங்களும் நன்மையாகிவிடும் !
உடனே அவர்கள் அல்லாஹுதஆலாவிற்கு ஸுஜூது செய்வார்கள். மலக்குகளுக்கும் , நபிமார்களுக்கும் கூடத் தெரியாமல் மறைத்து வைத்து விசாரித்த இந்த ரகசிய விசாரணையின் முடிவில் அவர்கள் செய்த அந்த ஸுஜூது மாத்திரம் எல்லோரும் பார்ப்பார்கள் .

பார்த்து "இந்த அடியார்கள் அல்லாஹுதஆலாவிற்கு ஒரு போதும் மாறு செய்யாதவர்கள் , அவர்களுக்கு இப்போது மங்களம் கிடைத்திருக்கிறது "
என்று ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள்.

பிறகு அல்லாஹுதஆலா மேற்சொன்ன அடியார்களைப் பற்றி குர்ஆனில்

بَلٰى مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ
(உண்மை) அவ்வாறன்று! எவர் (அல்லாஹ்வுக்காக) நன்மை செய்து தன்னை (முற்றிலும்) அல்லாஹ்வுக்கு அர்ப்பணம் செய்து விடுகிறாரோ அவருக்கே அவர் செய்யும் நன்மையின் கூலி அவருடைய இறைவனிடம் உண்டு. அன்றி, இத்தகையவர்களுக்கு எத்தகைய பயமுமில்லை; அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.
(அல்குர்ஆன்: 2:112)

" இவர்கள் நரகத்தை விட்டு விலக்கப்பட்டு சுவர்க்கத்தில் பிரவேசிக்கப்படட்டும் " என்று எழுதின கடிதத்தை அவர்கள் வலது கையில் கொடுத்து , ரத்தினங்களாலான கிரீடத்தையும் , தங்க ஆபரணங்களையும் , பட்டாடைகளையும் அணியச் செய்து அனுப்புவான் .
அவர்கள் வரும் போது மனிதர்கள் பார்த்து " இவர்கள் யார் ? நபிமார்களா ?"
என்று ஆச்சரியப்பட்டு வழி விலகி நிற்பார்கள் .
சரி , உண்மையில் இவர்கள் யார் ?

وَلَا تَطْرُدِ الَّذِيْنَ يَدْعُوْنَ رَبَّهُمْ بِالْغَدٰوةِ وَالْعَشِىِّ يُرِيْدُوْنَ وَجْهَهٗ مَا عَلَيْكَ مِنْ حِسَابِهِمْ مِّنْ شَىْءٍ وَّمَا مِنْ حِسَابِكَ عَلَيْهِمْ مِّنْ شَىْءٍ فَتَطْرُدَهُمْ فَتَكُوْنَ مِنَ الظّٰلِمِيْنَ
(நபியே!) தங்கள் இறைவனின் திருப்பொருத்தத்தை விரும்பி காலையிலும் மாலையிலும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பவர்களை நீங்கள் விரட்டி விடாதீர்கள்! அவர்களுடைய கணக்கிலிருந்து எதுவும் உங்களுடைய பொறுப்பாகாது. உங்களுடைய கணக்கிலிருந்து எதுவும் அவர்களுடைய பொறுப்பாகாது. ஆகவே, நீங்கள் அவர்களை விரட்டினால் அநியாயக்காரர்களில் நீங்களும் ஒருவராகி விடுவீர்கள்!
(அல்குர்ஆன்: 6:52)
நீங்கள்தான் சொல்ல வேண்டும். இவர்கள் யார் ?
ர.ரா

ஒப்பிட்டு விசாரணை.
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 47)



அடிமைப்பட்டவர்களை விசாரிக்கப்படும் போது , அல்லாஹு தஆலா அவர்களிடம்,
"எனக்கு செய்ய வேண்டிய இபாதத் எனும் வணக்க வழிப்பாட்டை விட்டு உங்களை எது விலக்கிற்று? "
" நீ எங்கள் இரணத்தை குறைத்து எங்கள் எஜமான்களுக்கு அதிகமாக்கினாய். அதனால் நாங்கள் எஜமானர்களை சார்ந்திருந்தோம் . அவர்கள் இட்ட கட்டளை செய்து முடிக்கவே எங்களுக்கு காலம் போதவில்லை .எனவே நாங்கள் எப்படி இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டை உனக்கு செய்ய முடியும் ? "

உடனே அல்லாஹு தஆலா நபி யூஸுப் (அலை) அவர்களை சுட்டிக் காட்டி , " நான் உங்களை அடிமையாக்கியது போல் , இதோ , இவரையும் அடிமையாக்கி , பின் சிறைக் கைதியாக்கினேன். ஆனால் உங்களைப் போல இவர் என் இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டில் குறையேதும் வைக்கவில்லையே " _ என்று சொல்லி, " அந்த அடிமைகளை நரகத்திற்குள் தள்ளுங்கள் " என்று கட்டளையிடுவான் .
அடுத்து நோயாளிகளை விசாரிக்கப்படும் போது அவர்களிடம் ,

"எனக்கு செய்ய வேண்டிய இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டை விட்டு உங்களை எது விலக்கிற்று? "

" நீ எங்களுக்கு நோயை உண்டாக்கினாய். அதனால் அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்பட்டு , எங்களால் உனக்கு செய்ய வேண்டிய இபாதத்தை
வணக்க வழிப்பட்டை எங்களால் செய்ய முடியவில்லை " ,
உடனே அல்லாஹு தஆலா நபி ஐயூப் (அலை) அவர்களைச் சுட்டிக்காட்டி ,

"நான் உங்களை நோயாளியாக்கியது போல், இதோ இவரையும் நோயாளியாக்கி பின் அதிக முசிப்பத்தான புழுக்கள் தசை தின்னும்படியான சதா மனவேதனையும் வலியையும் கொண்ட பெரிய நோயைக் கொடுத்தேன்
ஆனால் இவர் உங்களைப் போல் என் இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டில் குறையேதும் வைக்கவில்லையே " _ என்று சொல்லி, " "அந்த நோயாளிகளை நரகத்திற்குள் தள்ளுங்கள் " என்று கட்டளையிடுவான் .

பிறகு நாட்டை ஆண்ட இராஜக்கள் விசாரிக்கப்படுவார்கள் . அவர்களிடம் ,
"எனக்கு செய்ய வேண்டிய இபாதத்தை
வணக்க வழிப்பட்டை விட்டு உங்களை எது விலக்கிற்று ? "


" நீ எங்களுக்கு ராஜாங்கத்தையும் அதில் வாழும் குடிமக்களையும் கொடுத்தாய்.
எங்கள் ராஜாங்கத்தின் பக்கத்து நாட்டு தொல்லையும் ,அதைக் கட்டி ஆள மிக சிரமத்தையும் தந்தாய் . அதனால் நாங்கள் எங்கள் ராஜாங்கத்தை ஆளவே நேரம் போதவில்லை .எனவே நாங்கள் எப்படி இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டை உனக்கு செய்ய முடியும் ?

அல்லாஹு தஆலா நபி ஸுலைமான் (அலை) அவர்களை காட்டி , " நான் உங்களுக்கு ராஜாங்கத்தை கொடுத்தது போல் , இதோ இவருக்கும் உங்களுக்கு கொடுத்தை விட பல மடங்கு பெரிய ராஜாங்கமான மொத்த உலகத்தையும் கட்டி ஆள வைத்தேன் . ஆனால் உங்களைப் போல இவர் என் இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டில் குறையேதும் வைக்கவில்லையே " _ என்று சொல்லி, அந்த ராஜாக்களை நரகத்திற்குள் தள்ளுங்கள் என்று கட்டளையிடுவான்.

இப்படி ஏழ்மை , கடன் தொல்லை , குடும்ப பாரம் , என்று எண்ணிடலங்கா பிரச்சனைகளை அவன் முன் வைத்து ,

"நாங்கள் எப்படி இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டை உனக்கு செய்ய முடியும் ? " என்று மக்கள் ஒவ்வோரும் சொல்லும் போது
அவன் அனுப்பிய 'ஒரு லட்சத்து
இருபத்தினாங்காயிரம் ' நபிமார்களில் ஒருவருக்கு மனிதர்கள் சொல்லும் அதே பிரச்சனையை விட , மிக அதிகமான பிரச்சனைகளை கொடுத்ததைச் சுட்டிக்காட்டி ,
" ஆனால் உங்களைப் போல இவர் என் இபாதத் என்னும் வணக்க வழிப்பட்டில் குறையேதும் வைக்கவில்லையே " _ என்று அவன் சொல்லிக் காட்டுவான்.
ர.ரா

மீஸான் என்னும் தராசு 01
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 48)



நன்மை, தீமைகள் ஏன் எடை போட்டு நிறுக்கப்பட வேண்டும் ? எண்ணிக்கையால் **100 , 1000 ,** லட்சம் என்று பணத்தைப் போல் எண்ணிவிட முடியாதா ? முடியாது .

நன்மை, தீமைகள் எண்ணிக்கையில் இல்லை . அவைகள் முப்பரிமாணம் கொண்ட எடை கனம் நிறைகளான சீட்டுக்கட்டுகளால் ஆனது. அதனால்தான் எடை போடப்பட்டு நிறுக்கப்படுகிறது .

மீஸான் என்கிற தராசுக்கு வருவோம் .
மீஸான் என்பது தராசு . அதில்தான் அவரவர் நன்மை , தீமைகள் நிறுக்கப்படும்.
அந்த தராசு இரண்டு ஸ்தம்பங்களையும் , அதில் தொங்கும் இரண்டு தட்டுகளையும் , ஒரு முள் முனை கொண்டதாக இருக்கும் .

இரண்டு ஸ்தம்பங்களுக்கும் இடைவெளி மக்றிபு மஷ்றிகுகளின் இடைவெளியாம்.
(இது விபரம் எனக்கு புரியவில்லை தெரிந்தோர் பின்னூட்டத்தில் ஜமாய்க்கலாம்)


அதன் தட்டு ஒன்றில் ஏழு பூமிகளையும் , ஏழு வானங்களையும் ரொம்ப இலேகுவாக வைத்து நிறுக்க முடியும்.
ஒரு தட்டு ஒளியினாலும் , மறுதட்டு இருளினாலும் உண்டாகி இருக்கும். ஒளித் தட்டில் நன்மை , இருள் தட்டில் தீமை நிறுக்கப்படும். நன்மை தட்டு சுவர்க்கத்தின் முன்பாகவும் , தீமை தட்டு நரகத்திற்கும் முன்பாகவும் தொங்கும் .
அந்த ஒரே ஒரு தராசில்தான் எல்லோருடைய நன்மை , தீமைகள் நிறுக்கப்படும்.
அதை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் ஸ்தம்பக்கால்களுடன் பிடித்துத் தூக்கிக் கொண்டு அர்ஷ்க்கு எதிர் முகமாய் முனைமுள்ளைப் பார்த்த வண்ணமாய் நிறுப்பார்கள்
.
நன்மை ,தீமைகள் நிறுக்கப்படும் போது நிறைகணக்குப் பார்த்துச் சொல்ல மலக்கு மீக்காயீல் (அலை) அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பார்கள் .

நிறுக்கும் போது நன்மை தட்டு கணக்குமானால் அது கீழே தாழ்ந்து முன் சொல்லப்பட்டிருக்கிற " இல்லீன் " என்னும் தானத்தில் உயரும் .தீமைதட்டு லேசானால் அது மேலே உயர்ந்து "ஸிஜ்ஜீன் " என்னும் தானத்தில் தாழும் .
அணு அளவு நன்மை செய்தவர் அதைக் காண்பார். அணு அளவு தீமை செய்தவர் அதைக் காண்பார். (அல்குர்ஆன் 99:7,8)
அவரவருடைய நன்மை, தீமைகளடங்கிய பட்டோலைகளை தராசில் வைத்து நிறுக்கப்படும். பட்டோலைக்காரர்கள் மூன்று வகையினர் .

1) தீமையே இல்லாத பட்டோலை உடையவர்கள். இவர்களை சுவர்க்கம் போகவும்,
2) நன்மையே இல்லாத பட்டோலை உடையவர்கள் இவர்கள் நரகத்திற்கு போகவும்
3) நன்மையும் தீமையும் கொண்ட பட்டோலை உடையவர்கள் நன்மை தீமைகளை நிறுத்துப் பார்த்து , அவரவர்களின் எடை எதில் அதிகமாக இருக்கிறதோ அதைப் பொறுத்து சுவர்க்கமோ , நரகத்திற்கோ அனுப்பப்படும் .

وَنَضَعُ الْمَوَازِيْنَ الْقِسْطَ لِيَوْمِ الْقِيٰمَةِ فَلَا تُظْلَمُ نَفْسٌ شَيْـًــا وَاِنْ كَانَ مِثْقَالَ حَبَّةٍ مِّنْ خَرْدَلٍ اَتَيْنَا بِهَا وَكَفٰى بِنَا حٰسِبِيْنَ
மறுமை நாளில் சரியான தராசையே நாம் நாட்டுவோம். யாதொரு ஆத்மாவுக்கும் (நன்மையைக் குறைத்தோ, தீமையைக் கூட்டியோ) அநியாயம் செய்யப்படமாட்டாது. (நன்மையோ தீமையோ) ஒரு கடுகின் அளவு இருந்தபோதிலும் (நிறுக்க) அதனையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும். (வேறெவரின் உதவியும் நமக்குத் தேவையில்லை.) (அல்குர்ஆன் : 21:47)
ர.ரா

மீஸான் என்னும் தராசு 02
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 49)



அவரவர்களின் நன்மை , தீமைகளை நிறுக்கும்படி அல்லாஹு தஆலாவின் கட்டளை பிறந்த போது உடனே அவரவர்களின் பட்டோலைகள் தானாக உயரப் பறந்து தராசின் தட்டில் போய் விழும் !
பட்டோலை பறந்தபோது ஒவ்வொருவரும் தம் பட்டோலை தராசின் வலது தட்டில் விழுகிறதா , இடது தட்டில் விழுகிறதா என்றும் தராசின் முனைமுள்ளு வலது புறத்தில் முனைகிறதா இடது புறத்தில் முனைகிறதா என்றும் மனக்கலக்கத்துடன் பார்த்து நிற்பார்கள்.
அந்த வேளையில் அவர்களுக்கு உண்டாயிருக்கும் அச்சம் இவ்வளவென்று சொல்ல முடியாது
.
وَوُضِعَ الْكِتٰبُ فَتَرَى الْمُجْرِمِيْنَ مُشْفِقِيْنَ مِمَّا فِيْهِ وَ يَقُوْلُوْنَ يٰوَيْلَـتَـنَا مَالِ هٰذَا الْـكِتٰبِ لَا يُغَادِرُ صَغِيْرَةً وَّلَا كَبِيْرَةً اِلَّاۤ اَحْصٰىهَا وَوَجَدُوْا مَا عَمِلُوْا حَاضِرًا وَ لَا يَظْلِمُ رَبُّكَ اَحَدًا
(அவர்களுடைய தினசரிக் குறிப்புப் புத்தகம் அவர்கள் முன் வைக்கப்பட்டால் குற்றவாளிகள் (தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் அதில் இருப்பதைக் கண்டு) பயந்து
"எங்களுடைய கேடே! இதென்ன புத்தகம்! (எங்களுடைய பாவங்கள்) சிறிதோ பெரிதோ ஒன்றையும்விடாது இதில் வரையப்பட்டிருக்கின்றதே" என்று அவர்கள் (புலம்பிக்) கூறுவதை நீங்கள் காண்பீர்கள்.
(நன்மையோ தீமையோ) அவர்கள் செய்த அனைத்தும் (அதில்) இருக்கக் காண்பார்கள். உங்கள் இறைவன் எவனுக்கும் (அவனுடைய தண்டனையைக் கூட்டியோ, நன்மையைக் குறைத்தோ) அநியாயம் செய்ய மாட்டான். (அல்குர்ஆன்: 18:49)

நன்மையை ஒரு தட்டிலும் ,தீமையை ஒரு தட்டிலுமாக வைத்து நிறுப்பார்கள் .
ஒருவொருவரின் நன்மை, தீமைகளை
நிறுத்தும் போது தராசில் இரண்டு ஸ்தம்பக் கால்களுக்கும் நடுவில் கொண்டு போய் நிறுத்தி, ஒரு மலக்கின் வசம் காட்டுவார்கள்.
நிறுக்கும்போது யாருடைய நன்மைத் தட்டு கனத்ததோ , அவனுடைய பெயரைச் சொல்லி , இன்னான் சீதேவியாகிவிட்டான் .இனி ஒருக்காலும் அவன் மூதேவியாக மாட்டான் என்றும் , யாருடைய தீமை தட்டுக் கனத்ததோ,அவனுடைய பெயரைச் சொல்லி, இன்னான் மூதேவியாகிவிட்டான் . இனி ஒருக்காலும் அவன் சீதேவியாக
மாட்டான் என்று ஜிப்ரயீல் (அலை) அவர்கள் சப்தமிட்டு சொல்லிக் கொண்டிருப்பார்கள் .

அப்போதே நன்மை தட்டுக் கனத்தவர்கள் சுவர்க்கத்திற்குக் கொண்டு போவதற்காக ரஹ்மத்துடைய மலக்குகள் வசமும், தீமை தட்டு கனத்தவர்கள் நரகிற்குக் கொண்டு போவதற்காக ஜபானியாக்கள் வசமும் ஒப்படைக்கப்படுவார்கள் .


" (மனிதர்களே!) அந்நாளில் நீங்கள் (உங்கள் இறைவன் முன்) கொண்டு போகப்படுவீர்கள். மறைவான உங்களுடைய எந்த விஷயமும் அவனுக்கு மறைந்துவிடாது.
எவனுடைய செயல்கள் எழுதப்பட்ட ஏடு அவனுடைய வலது கையில் கொடுக்கப்படுகின்றானோ அவன் (மற்றவர்களை நோக்கி மகிழ்ச்சியுடன்) "இதோ! என்னுடைய ஏடு; இதனை நீங்கள் படித்துப் பாருங்கள்" என்றும்,
"நிச்சயமாக நான் என்னுடைய கேள்வி கணக்கைச் சந்திப்பேன் என்றே நம்பியிருந்தேன்" என்றும் கூறுவான்.

ஆகவே, அவன் திருப்தியடையும்படியான சுகபோகத்தில், மேலான சுவனபதியில் இருப்பான்.
அதன் கனிகள் (இவர்கள், படுத்திருந்தாலும் உட்கார்ந்திருந்தாலும், நின்று கொண்டிருந்தாலும், எந்நிலைமையிலும் கைக்கு எட்டக்கூடியதாக இவர்களை) நெருங்கி இருக்கும்.

(இவர்களை நோக்கி) "சென்ற நாள்களில் நீங்கள் சேகரித்து வைத்திருந்தவை (நன்மை)களின் காரணமாக, மிக்க தாராளமாக இவைகளைப் புசியுங்கள்! அருந்துங்கள்! (என்று கூறப்படும்).
எவனுடைய செயல்கள் எழுதப்பட்ட ஏடு அவனுடைய இடது கையில் கொடுக்கப்பெறுவானோ அவன், "என்னுடைய ஏடு எனக்குக் கொடுக்கப்படாதிருக்க வேண்டாமா?
என்னுடைய கணக்கையே இன்னதென்று நான் அறியாதிருக்க வேண்டாமா?
நான் இறந்தபொழுதே என்னுடைய காரியம் முடிவு பெற்றிருக்க வேண்டாமா?
என்னுடைய பொருள் எனக்கு ஒன்றும் பயனளிக்க வில்லையே!
என்னுடைய அரசாட்சியும் அழிந்துவிட்டதே!" என்று புலம்புவான்.
(பின்னர் நாம்) "அவனைப் பிடியுங்கள், அவனுக்கு விலங்கிடுங்கள்;
அவனை நரகத்தில் தள்ளுங்கள் என்றும்,
எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" என்றும் (கூறுவோம்).
நிச்சயமாக அவன் மகத்தான அல்லாஹ்வையே நம்பிக்கைக் கொள்ளவில்லை.
ஏழைகளுக்கு (உணவளிக்காததுடன், பிறரையும்) உணவளிக்கும்படி அவன் தூண்டவில்லை.
"ஆகவே, இன்றைய தினம் அவனுக்கு இங்கு யாதொரு நண்பனும் இல்லை.
(புண்களில் வடியும்) சீழ் சலங்களைத் தவிர, (அவனுக்கு வேறு) உணவில்லை" (என்றும் கூறப்படும்).
அதனைக் குற்றவாளிகளைத் தவிர (மற்றெவரும்) உண்ண மாட்டார்கள் "
அல்குர்ஆன் 69 : (18 - 37)
ர.ரா

மீஸான் என்னும் தராசு 03
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 50)
சிலரில் ஒவ்வொருவருக்குத் தொண்ணூற்றொன்பது பட்டோலை கட்டுகளைக் கொண்டு வந்து அவர்களுக்கு விரித்து காட்டுவார்கள் .
ஒவ்வொரு கட்டும் பார்வை எட்டுந்தூர நீளமுள்ளதாக இருக்கும் .அந்த கட்டுகள் முழுவதும் தீமைகள் எழுதப்பட்டிருக்கும்.
பிறகு ஒரே ஒரு துண்டு கடிதம் கொண்டு வருவார்கள் .அதில் ' ஷஹாதத்துக் கலிமா ' மாத்திரம் எழுதப்பட்டிருக்கும் .
மேற்சொன்ன தீமைகள் எழுதிய 99 பட்டோலைக் கட்டுகளை ஒரு தட்டிலும் , இந்த ஒரே ஒரு துண்டு கடிதத்தை மறு தட்டிலுமாக வைத்து நிறுப்பார்கள் .
துண்டு கடிதத் தட்டு கனக்கும் .
இன்னும் முஃமீனாவர்களில் சிலருடைய நன்மை தட்டும் லேசாவது உண்டு. அப்படி லேசானவுடன் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் ஒரு கடிதத் துண்டை அந்த தட்டில் வைப்பார்கள் அப்போது அந்தத் தட்டு கனத்து விடும்.
அப்போது ஒவ்வொரும் தமக்கு உதவி செய்த நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களை இன்னாரென்று அறியாமல் , " நீங்கள் யார் ? உங்கள்
முக லக்ஷ்ணமும் , குண லக்ஷ்ணமும் எவ்வளவு மகிமையுள்ளதே ... உங்கள் பாதங்களுக்கு என் பிதா மாதாக்கள் குறுபனாயிருப்பார்கள் " என்று சொல்வார்கள் .
அப்போது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் , அவ்வொவ்வொருவரையும் பார்த்து ,
" நான் உன்னுடைய நபி முஹம்மது . இப்போது நான் உன்னுடைய தட்டில் வைத்தது , நீ என் பேரில் ஓதின ஸலவாத்து, அதை இந்த தருணத்தில் உனக்கு பிரதி செய்து விட்டேன் "
ர.ரா

மீஸான் என்னும் தராசு 04
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 51)



நன்மை தீமைகள் நிறுக்கப்படும்போது சிலருக்கு இரண்டும் சமமாக இருக்கும் .
காசை சுண்டி பூவா ? தலையா ? போட்டு பார்க்கும் போது காசு பூவையும் காட்டாமல் , தலையையும் காட்டாமல் நெட்டுக்கு நின்றால் எதை எடுத்துக் கொள்வது ?
இந்த மாதிரி நிலை மீஸானில் எடை போடும் போது , தராசின் முனைமுள் எந்தப் பக்கமும் சாயாமல் நட்ட நடுவில் நின்று விடும் .

அப்போது அவர்கள் தம் தம் நன்மை தட்டுக் கனப்பதற்காக ஒரேயொரு நன்மை இல்லாமல் தயங்குவார்கள் .
அல்லாஹு தஆலா அந்த ஒவ்வொருவரையும் பார்த்து...,
"ஜனங்களிடத்தில் போய் ஒரே ஒரு நன்மையைக் கேட்டு வாங்கு அதைக் கொண்டு நான் உன்னை சுவர்க்கம் நுழைய செய்கிறேன் "
உடனே அவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் போய்க் கேட்பார்கள்.

" ஒரே ஒரு நன்மை! .ஒரே ஒரு நன்மை !"

அப்போது எல்லோரும், "ஒரு சிறு நன்மையானாலும் அது எங்களுக்கு வேண்டியது . ஆகையால் தரமாட்டோம்" என்று சொல்லி விடுவார்கள் .
பின்பு அங்கே ஒருவன் ஒரே ஒரு நன்மையைக் கேட்டு அலைபவர்களை பார்த்து , அவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு ...,
" என் பட்டோலையில் நான் செய்ததாக ஒரே நன்மைதான் உண்டு. அதைக் கொண்டு நான் என்ன சுவர்க்கமா செல்ல முடியும் ? ஆகையால் அதை ஹதியாவாக உனக்கு கொடுத்து விடுகிறேன் . எடுத்துக் கொள் .நீயாவது சுவர்க்கம் செல் "
உடனே அதைப் பெற்றுக் கொண்டு மீஸான் பக்கம் திரும்பி ஓடோடி வருவார் அவரிடம் அல்லாஹு தஆலா , " உனக்கு ஒரே ஒரு நன்மையை ஹதியாவாகக் கொடுத்தவனை அழைத்து வா " என்று கூறுவான் .
அவன் வந்ததும் ..,

அந்த ஒரே ஒரு நன்மையைக் கொடுத்தவனிடம் அல்லாஹு தஆலா :
" என்னுடைய கொடை உன்னுடைய கொடையைப் பார்க்கிலும் மஹா பெரியது என்பதை நீயும் அறிந்து கொள்ள, ஒரே ஒரு நன்மையைக் கொடுத்த நீயும், அதை ஹதியாவாகப் பெற்ற பெற்ற அவனும் சுவர்க்கத்திற்குள் நுழையுங்கள் "

அடுத்து , நன்மை , தீமை இரண்டும் சரி நிறையுள்ளவர்களைச் சுவர்க்கத்திற்கும் அனுப்பாமலும், நரகத்திற்கும் அனுப்பாமலும் 'அஹ்ஃராப் ' என்னும் தானத்தில் நிறுத்தி வைக்கும் படி கட்டளை பிறக்கும்.

'அஹ்ஃராப் ' என்பது சுவர்க்கத்திற்கும், நரகத்திற்கும் மத்தியில் உள்ள மிகப் பெரிய ஒரு மதில் சுவர். அதன் மீது இருப்பவர்களுக்கு சுவர்க்கமும் தெரியும் , நரகமும் தெரியும் . அவர்கள் சுவர்க்கத்தைப் பார்த்து பார்த்து சந்தோஷப்பட்டாலும் , நரகத்தைப் பார்த்து அஞ்சி நடுங்குவார்கள் .

இறுதியில் இம் மதில் சுவர் மீது இருப்பவர்களை சுவர்க்கத்தில் நுழையச் செய்வான் .அதற்கு முன் அவர்களை **"நஹ்ருல் ஹயாத் "** என்னும் ஜீவ நதியில் குளிக்கச் செய்து பின் சுவர்க்கத்தில் நுழையச் செய்வான் .

இவர்களை அஹ்ஃராப்காரரர்கள் என்பதற்கு அடையாளமாக ஒவ்வொரு கழுத்துக்களிலும் , வெண்ணிற மச்சம் ஒன்று உண்டாயிருக்கும். இவர்கள் "சுவர்க்கவாசிகள் எளியோர் '' என்று சொல்லப்படுவார்கள் .

وَبَيْنَهُمَا حِجَابٌ وَعَلَى الْاَعْرَافِ رِجَالٌ يَّعْرِفُوْنَ كُلًّا بِسِيْمٰهُمْ وَنَادَوْا اَصْحٰبَ الْجَـنَّةِ اَنْ سَلٰمٌ عَلَيْكُمْ لَمْ يَدْخُلُوْهَا وَهُمْ يَطْمَعُوْنَ

(நரகவாசிகளும் சுவர்க்கவாசிகளும் ஆகிய) இவ்விருவருக்குமிடையில் ஒரு மதில் இருக்கும். அந்த மதிலின் சிகரத்தில் சில மனிதர்கள் இருப்பார்கள்.
(நரகவாசி சுவர்க்கவாசியாகிய) ஒவ்வொருவரையும் அவர்களின் (முகக்) குறியைக் கொண்டே இவர்கள் அறிந்து கொள்வார்கள். இவர்கள் சுவர்க்கவாசிகளை நோக்கி "(இறைவனுடைய) சாந்தியும் சமாதானமும் உங்கள் மீது உண்டாவதாகுக!" என்று சப்தமிட்டுக் கூறுவார்கள்.
(சிகரத்தில் இருக்கும்) இவர்கள் (இதுவரையிலும்) சுவர்க்கத்தில் நுழையவில்லை. எனினும், அவர்கள் (அதில் நுழைவதை) மிக ஆவலுடன் ஆசைப்பட்டுக் கொண்டிருப்பார்கள்.
(அல்குர்ஆன் : 7:46)
ர.ரா

மீஸான் என்னும் தராசு 05
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 52)



அன்றைய தினம் நன்மை தீமைகளை
எடைபோடுவது சத்தியம் ஆகவே
எவருடைய எடை (நன்மையால்)
கனமானதோ அவர்கள்தான்
வெற்றியாளர்கள். அல் குர் ஆன் : (7 : 08)

மறுமையில் அடியானின் மீஸானில்
முதலாவது வைக்கப்படுவது அவன்
தனது குடும்பத்தாருக்கு செய்த
செலவாகும்..
ஒரு தோழர் நபி இடம் வருகை தந்து
சொன்னார் :
"நாயகமே எனது அடிமைகள்என்னிடம் பொய் கூறுகின்றனர் எனது பொருளில் மோசடி செய்கின்றனர்
எனக்கு மாறு செய்கின்றனர் .
எனவே அவர்களை நான்
திட்டுகின்றேன்,அடிக்கின்றேன் நான்
இவர்களுடன் இவ்வாறு நடந்து
கொள்வதால் மறுமையில் எனது நிலை
எப்படி இருக்கும் ? "என்று கேட்டார்
அப்பொழுதுபெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் .
" பொய் இத்துடன் அவர்களுக்கு
நீ கொடுத்த தண்டனைகளும் அளந்து
பார்க்கப்படும்.அப்பொழுது அவர்களின் பாவங்களும் உனது தண்டனைகளும்
சமநிலையில் இருந்தால் அது உனக்கு
சாதகமும் அல்ல பாதகமும் அல்ல.
அவர்களின் பாவங்களை விடவும் உனது
தண்டனை குறைவாக
இருக்குமானால் , அது உனக்கு சிறப்பு
சேர்க்கும்.அவர்களின் பாவங்களை
விட உனது தண்டனைஅதிகமாக
இருக்குமானால் அவர்களுக்காக
உன்னை பழிவாங்கப்படும் " என்றார்கள்

இதை கேட்டஅம்மனிதர் அழுது விட்டார் அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் ,
"கியாமத் நாளுக்காக நீதியான தராசுகளை நிறுவுவோம். எவருக்கும் சிறிதளவும் அநீதி இழைக்கப்படாது. ஒருகடுகு விதை அளவே இருந்த போதும் அதையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும். (அல்குர்ஆன் 21:47)

இந்த வசனத்தை நீங்கள் ஓதவில்லையா? என்று கேட்டார்கள்
"நாயகமே அவர்களை நான் பிரிவது
தான்எனக்கும் அவர்களுக்கும் நலமாகும்எனவே அவர்கள் அனைவரையும் உரிமை விட்டதற்கு நான் உங்களை சாட்சியாக்குகின்றேன் " என்று கூறி விடுதலை செய்துவிட்டார்
நூல்;மிஸ்காத் பக்கம். 426

ஜாபிர்(ரலி)கூறுகிறார்கள் :
"பெற்றோருக்கும் மனைவிமார்களுக்கும்நம்மிடம் ஜீவனாம்சம் பெறக் கடமைபட்டவர்களுக்கு வசதி இருந்தும்செலவு செய்யாமல் கஞ்சத்தனம் செய்வது மனிதனின் மீஸானையும்
மறுமையையும் அது பாதிக்கும்...
மறுமையில் மீஸான் ஏற்படுத்தப்பட்டு
அதில் ஒரு மனிதனையும் அவன் மீது
பதிவான நன்மை தீமைகளையும்
வைக்கப்படும் அப்பொழுது தராசு
ஒருபக்கமாக சாயும் அதாவது நன்மை
தட்டு லேசாகும் உடனே அவன் நரகிற்கு
அனுப்பப்படுவான் .அவன் அங்கிருந்துசெல்லும் போது அல்லாஹ்வின் அருகில்இருந்து சப்தமிட்டு ஒரு மலக்கு
சொல்வார் :
"அவசரப்படாதீர்கள் அவருக்கு ஒரு நன்மை இருக்கின்றது உடனே அங்கு ஒரு காகிதம் கொண்டு வரப்படும் அதில் "லாஇலாஹ இல்லல்லாஹும் அதனுடைய நன்மையும் இருக்கும் "அதை அந்த தட்டில் அம்மனிதனுடன் வைக்கப்படும் அப்பொழுது மீஸான்
அதனுடன் சாயும் நன்மை தட்டு கனமாகிஅவன் சொர்க்கம் செல்வான்.
நூல் .துர்ருல் மன்சூர்
தாவூது நபி மீஸான் தராசை தனக்கு

காட்டும் படி அல்லாஹ்விடம்
சொன்னார்கள். அல்லாஹ் காட்டினான்அப்பொழுது அதனுடைய ஒவ்வொரு தட்டும் கிழக்குப் பகுதிக்கும் மேற்குப் பகுதிக்கும் இடையில் உள்ள அனைத்தையும் உள்ளடக்கும் அளவு இருந்ததைக் கண்டு மயங்கி விழுந்து விட்டார்கள்

இந்த தட்டுகளை நன்மையைக்கொண்டுநிறப்பும் சக்தியை யார் பெறமுடியும். என்று கேட்டபொழுது அல்லாஹ் சொன்னான் :
"எனது அடியானை நான் பொருந்தி கொண்டுவிட்டால் அவன் வழங்கும் ஒரு பேரித்தகனியின் தர்மத்தைக் கொண்டே அதை நான் நிரப்பிவிடுவேன் "என்றான்.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் தனது சகோதரரின் ஒரு தேவையைநிறைவேற்றுகின்றாரோ
அவனுடைய மீஸானுக்கு அருகில்
நான் நிற்பேன் அதுஏற்றமானால் சரி.
இல்லையனால்அவருக்காக நான்
அல்லாஹ்விடம் ஷபாஅத் செய்வேன்
என்றார்கள்.

நூல்: துர்ருல் மன்ஸூர்.
நபி (ஸல்) அவர்கள் . அபூதர்ருல் கிபாரி
(ரலி) அவர்களிடம் அமல் செய்வதற்கு
இலகுவான மீஸானில் கனமானதுமானநன்மைகளை உங்களுக்கு நான்
அறிவித்து தரவேண்டாமா என்று கேட்டு விட்டு சொன்னார்கள். நீங்கள்
நற்குணத்தையும் மௌனத்தையும் பற்றிபிடித்துக்கொள்ளுங்கள். இறைவன் மீதுஆணையிட்டு கூறுகின்றேன். இவ்விரண்டையும் போன்று படைப்புகள்வேறு எந்த அமலையும் செய்வதில்லை.
நூல் : துர்ருல் மன்ஸூர்.
நாவிற்கு இலகுவான மீஸானில் கனமான ரஹ்மானுக்கு பிரியமான வார்த்தைகள் "சுப்ஹானல்லாஹி வபிஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம் "என்பதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்
நபி(ஸல்) அவர்கள் சொன்னார்கள்.
மறுமையில் உலமாக்களின் பேனா மையும் ஷுஹதாக்களின் இரத்தமும் மீஸானில் அளக்கப்படும் அப்பொழுது ஷுஹதாக்களின் இரத்தத்தை
உலமாக்களின் பேனாமை
மிகைத்துவிடும்.
நூல் : துர்ருல் மன்ஸூர்

அறிவிப்பு
இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்



என்கிற நீண்ட நெடிய இவ் ஆய்வு "மரணத்திற்கு பின் ஆன்மாக்களின் நிலை " என்ற முதல் பதிவில் இருந்து இத்தொடர் ஆரம்பித்து 25 பதிவுகளோடு நிறைவு செய்யலாம் என்ற எண்ணத்தில்
1) தௌபா (மீளுதல்)
2) ஸக்றாத் (மரணப்படுக்கையில் மரண மயக்கம்)
3) மவ்த்து (மரணம்)


இந்த தலைப்புகளைத் தவிர்த்தேன் .
"மரணத்திற்கு பின் ஆன்மாக்களின் நிலை " என்று இத்தொடரின் முதல் பதிவை ஆரம்பித்தேன் .
உங்களின் ஆர்வம் கண்டு இத்தொடரை 100 பதிவுகளாக நிறைவு செய்ய இன்ஷா அல்லாஹ் நாடியுள்ளேன்.
இனி வர உள்ள பதிவுகள் :

1) ஸிராத் (பாலம்)
2) ஹௌலு (தண்ணீர் தடாகம்)
3) ஜன்னத் (சுவர்க்கம்)
4) ஜஹன்னம் (நரகம்)
5) ஷபாஅத் (மன்றாட்டம்) ;
ஷபாஅத் (சிபாரிசு இத்தொடரின் 6 வது பதிவில் உள்ளது)
6) உறுஸ் (திருக்கல்யாணம்)
7) லியாபத் (விருந்து)
8)தஜல்லி (தோற்றம்)
9) லிகா (தரிசனம்)
வரை இன்ஷா அல்லாஹ் எழுத உள்ளேன் .

தவிர்த்த தலைப்புகளான
1) தௌபா (மீளுதல்)
2) ஸக்றாத் (மரணப்படுக்கை)
3) மவ்த்து (மரணம்)
இம்மூன்று விடுபட்ட தலைப்புகளையும் மீஸான் (தராசு) பதிவுக்குப் பின் தொடர உள்ளேன்.
ர.ரா
இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பதிவுகள் அனைத்துமே விஞ்ஞானத்தில் காட்டப்படும் உபகர்ணங்களைப் போல அதோ , இதோ என்று எந்த வஸ்துகளையும் காட்ட முடியாது . விஞ்ஞான விதிகள் போல பூச்சி பூச்சியாக கணக்கெழுதி காட்டவும் முடியாத இஸ்லாமிய கோட்பாடுகள் இது.
இது முழுமையாக குர்ஆன் , ஹதீஸ் மூலம் மரணத்திற்குப் பின் தொடரும் ஆன்மாக்களின் போராட்டக் களம் .

இதை எல்லா ஆன்மாக்களும் கடந்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாய நிலை . அப்போது அனுபவிக்க வேண்டிய பயம் கலந்த விஷயங்களை இப்போதைய பாதி வாழ்க்கையில் நாம் முன்கூட்டியே அறிந்து கொள்கிறோம் . அவ்வளவுதான் .
இது ஒன்றும் கட்டுக்கதைகள் அல்ல, சுவராஸ்யம் குன்றாமல் எழுத ;
கொண்ட ஈமானின் அடித்தளக் கோட்பாடுகள் . இதன் மீதுதான் இஸ்லாம் என்னும் மாபெரும் கோட்டையைக் கட்டி , அந்த கோட்டையின் கோமகனாக உங்களையும் , என்னையும் அல்லாஹு தஆலா ஆள வைத்துள்ளான் .
மறுமை வாழ்வு பூலோக வாழ்வு மாதிரி அற்ப நூறு வருடங்களைக் கொண்டது அல்ல ; அது யுக யுகங்களாக என்றும் வாழும் பெருவாழ்வு அது . இதற்குரிய பிரயாசனங்கள் எடுத்தே ஆக வேண்டும் . எடுப்போம் அழிவில்லாத பெருவாழ்வை அடைந்தே தீருவோம் .
ர.ரா
Rahmath Rajakumaran
இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் பதிவுகள் அனைத்துமே விஞ்ஞானத்தில் காட்டப்படும் உபகர்ணங்களைப் போல அதோ , இதோ என்று எந்த வஸ்துகளையும் காட்ட முடியாது . விஞ்ஞான விதிகள் போல பூச்சி பூச்சியாக கணக்கெழுதி காட்டவும் முடியாத இஸ்லாமிய கோட்பாடுகள் இது.
இது முழுமையாக குர்ஆன் , ஹதீஸ் மூலம் மரணத்திற்குப் பின் தொடரும் ஆன்மாக்களின் போராட்டக் களம் .
இதை எல்லா ஆன்மாக்களும் கடந்துதான் ஆக வேண்டும் என்ற கட்டாய நிலை . அப்போது அனுபவிக்க வேண்டிய பயம் கலந்த விஷயங்களை இப்போதைய பாதி வாழ்க்கையில் முன்கூட்டியே அறிந்து கொள்கிறோம் . அவ்வளவுதான் .
இது ஒன்றும் கட்டுக்கதைகள் அல்ல, சுவராஸ்யம் குன்றாமல் எழுத ;
கொண்ட ஈமானின் அடித்தளக் கோட்பாடுகள் . இதன் மீதுதான் இஸ்லாம் என்னும் மாபெரும் கோட்டையைக் கட்டி , அந்த கோட்டையின் கோமகனாக உங்களையும் , என்னையும் அல்லாஹு தஆலா ஆள வைத்துள்ளான் .
மறுமை வாழ்வு பூலோக வாழ்வு மாதிரி அற்ப நூறு வருடங்களைக் கொண்டது அல்ல ; அது யுக யுகங்களாக என்றும் வாழும் பெருவாழ்வு அது . இதற்குரிய பிரயாசனங்கள் எடுத்தே ஆக வேண்டும் . எடுப்போம் அழிவில்லாத பெருவாழ்வை அடைந்தே தீருவோம் .

தவ்பா - மீளுதல் 1
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 53)



இஸ்லாமிய வழக்கில் பாவமன்னிப்பு (தவ்பா) என்றால் , 'பாவங்களை விட்டு அல்லாஹ்வின் பக்கம் திரும்புதல் ' என்று பொருள்.

ஒரு மனிதன் பாவத்தை செய்தவுடன் அல்லாஹ்வை விட்டுத் தூரமாகி விடுகிறான். அவன் பாவமன்னிப்புக் கோரி திரும்பினால் அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட்டு அவனுக்கு நெருக்கமாகிறான். இதையே " தவ்பா " எனப்படுகிறது.
இதையே 'அல்லாஹ் அவன் பக்கம் திரும்பினான்' என்று சொன்னால் அல்லாஹ் அவனது பாவமன்னிப்பைக் கோரலை ஏற்றுக்கொண்டான் என்று பொருள்.
ஒருவரின் தவ்பா ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நிபந்தனையும் இருக்கிறது.
அது அவர் தம் பாவத்தைக் கைவிட்டு நேர்வழியில் செல்வதாகும்.

தவ்பா என்பது, அல்லாஹ்விடம் திரும்புவதற்கு 3 ஷரத்துக்கள்
1) பாவங்களை விட்டு விலகி அவற்றை வெறுப்பது,
2) அல்லாஹ்வுக்கு கீழ்படிவதில் உள்ள குறைபாடுகளை எண்ணி வருந்துவது,
3) அப்பாவத்தை மீண்டும் செய்யாமல் இருக்க உறுதி எடுப்பது. இதில் ஒன்று குறைந்தாலும், உங்கள் தவ்பா தூய்மையானது அல்ல.

فَمَنْ تَابَ مِنْ بَعْدِ ظُلْمِهٖ وَاَصْلَحَ فَاِنَّ اللّٰهَ يَتُوْبُ عَلَيْهِ‌ؕ اِنَّ اللّٰهَ غَفُوْرٌ رَّحِيْمٌ
எவரேனும் தன்னுடைய (இத்) தீயச் செயலுக்குப் பின்னர் (கைசேதப்பட்டு தன் குற்றத்தை) சீர்திருத்திக் கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து விடுவான். (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் மிக மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையவனாகவும் இருக்கின்றான்.
(அல்குர்ஆன்: 5:39)
ஒருவன் செய்யும் பாவங்களானது பிறர் சம்பந்தம் உள்ளதும் , பிறர் சம்மந்தம் இல்லாதது என்று இரு வகைப்படும் .
பிறர் சம்பந்தம் இல்லாத பாவமானது தொழுகை , நோன்பு, ஸக்காத்து, ஹஜ்ஜு முதலியவைகளை விடுவது போன்றவைகள் . விபச்சாரம் செய்தல் , போதை பொருள் அருந்துதல் போன்றவைகள்
இவ்விதப் பாவங்களுக்குச் செய்யும் தவ்பாவுக்குத்தான் மேற்சொன்ன 3 ஷறத்துகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
இனி , பிறர் சம்மந்தமுள்ள பாவமானது கொலை, களவு, புறம் பேசுதல் , சொத்தை அபகரித்தல் முதலியவைகள் . இவ்விதப் பாவங்களுக்குச் செய்யும் போது தவ்பாவுக்கு மேற் சொன்ன 3 ஷறுத்துகளுடன் 4 வது ஷறத்தாக செய்த பாவத்தினால் பாதிக்கப்பட்டவனுக்கு அந்நபரின் , அதாவது பணம் அல்லது சொத்தாக இருந்தால் திரும்பக் கொடுத்தல்.
ஒருவனை கொன்று விட்டால், கொல்லப்பட்டவனுடைய பாத்தியக்காரனிடத்தில் மன்னிப்புக் கேட்டல் , ஒருவனைப் பற்றி புறம் பேசினால் , 'நான் இன்னானிடத்தில் உன்னைப் பற்றி புறம் பேசினேன் , நீ அதை மன்னித்துக் கொள்'
பாவமன்னிப்புக் கோரிக்கையை அல்லாஹ் நேசிக்கிறான். அவன் கூறுகிறான்: " நிச்சயமாக அல்லாஹ் (பாவத்தைவிட்டு) வருந்தி மீளுகிறவர்களை விரும்புகின்றான்; சுத்தமாக இருப்பவர்களையும் விரும்புகின்றான் " குர்ஆன் : (2 : 222)
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:


"பனூ இஸ்ராயீல்களின் சமுதாயத்தில் ஒரு மனிதர் இருந்தார். அவர் தொண்ணூற்றொன்பது மனிதர்களைக் கொன்று விட்டிருந்தார். பிறகு (தன் குற்றங்களுக்காக மனம் வருந்தி, தனக்கு மன்னிப்புக் கிடைக்குமா என்று) விசாரித்தபடி, "(எனக்குப்) பாவ மன்னிப்புக் கிடைக்குமா?'' என்று ஒரு பாதிரியாரிடம் வந்து கேட்டார்.

அந்தப் பாதிரியார், "கிடைக்காது'' என்று கூற, அந்த பாதிரியாரையும் அம்மனிதர் கொன்றுவிட்டார்.
பிறகு, (மீண்டும் மனம் வருந்தி) விசாரிக்கலானார். அப்போது ஒரு மனிதர், "(நல்லோர் வாழும்) இன்ன ஊருக்குப் போ!'' என்று அவருக்குச் சொன்னார்.
(அந்த ஊரை நோக்கி அவர் சென்றபோது பாதி வழியில்) மரணம் அவரைத் தழுவியது. (மரணத் தருவாயில்) அவர் தன் நெஞ்சை அந்த ஊர் இருக்கும் திசையில் சாய்த்துக் கொண்(டே இறந்து விட்)டார்.
அப்போது அல்லாஹ்வின் கருணையைப் பொழியும் வானவர்களும் அல்லாஹ்வின் தண்டனைகளை நிறைவேற்றும் வானவர்களும் அவர் விஷயத்தில் (அவரை யார் அழைத்துச் செல்வது என்று) சச்சரவிட்டுக் கொண்டனர்.
உடனே அல்லாஹ் அதை நோக்கி, "நீ நெருங்கி வா!'' என்று (அவர் செல்லவிருந்த ஊருக்கு) உத்திரவிட்டான். இதை நோக்கி, "நீ தூரப் போ!'' என்று (அவர் வசித்து வந்த ஊருக்கு) உத்திரவிட்டான்.
பிறகு, "அவ்விரண்டுக்கு மிடையே உள்ள தூரத்தைக் கணக்கெடுங்கள்'' என்று (வானவர்களுக்குக்) கூறினான். (அவ்வாறே கணக்கெடுத்த போது) செல்ல விருந்த ஊருக்கு (அவர் வசித்து வந்த ஊரை விட ஒரே) ஒரு சாண் அளவிற்கு அவர் (உடைய உடல்) சமீபமாக இருந்த காரணத்தால் அவருக்குப் பாவ மன்னிப்பு வழங்கப்பட்டது.
இதை அபூ சயீத் அல்குத்ரீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
(ஸஹீஹுல் புகாரீ 3470)

ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பில், "அம்மனிதர் நல்லோர்களின் ஊருக்கு ஒரு சாண் அளவு நெருக்கமாக இருந்தான். எனவே அவனை அந்த மக்களைச் சேர்ந்தவனாகக் கணக்கிடப்பட்டது" என்றும், அவனது நெஞ்சு அதை நோக்கியதாக இருந்தது என்றும் உள்ளது. (2716)
அல்லாஹ் கூறுகிறான்:
"(நபியே!) நீர் கூறும்:என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்டபோதிலும், அல்லாஹ்வின் அருளைப் பற்றி நீங்கள் நம்பிக்கை இழந்துவிட வேண்டாம். (நீங்கள் பாவத்திலிருந்து விலகி, மனம் வருந்தி மன்னிப்பைக் கோரினால்) நிச்சயமாக அல்லாஹ் (உங்களுடைய) பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிடுவான். ஏனென்றால், நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், கருணை உடையவனுமாக இருக்கின்றான் "
குர்ஆன் (39 : 53)

நபியவர்கள் கூறினார்கள்: "உங்களில் ஒருவர் வறண்ட பாலைநிலத்தில் தொலைத்துவிட்ட தனது ஒட்டகத்தை (எதிர்பாராதவிதமாக)க் கண்டுபிடிக்கும் போது, அவருக்கு ஏற்படும் மகிழ்ச்சியைவிடத் தன் அடியான் தவ்பா-பாவமன்னிப்புப் கோரி தன்னிடம் திரும்புவதில் அல்லாஹ் அதிகம் மகிழ்ச்சி அடைகிறான்.
(ஸஹீஹுல் புகாரீ 6309)
ர.ரா

தவ்பா - மீளுதல் 2
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 54)



நம் பாவங்கள் அதிகரிக்கும்போது, நமக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகள் தடுக்கப்படலாம், இன்னும் அதிகமான சோதனைகளுக்கு ஆளாகலாம். தவ்பா நம்மை வாழ்வின் துன்பங்களிலிருந்து மீட்டு அருளின் பக்கம் கொண்டு செல்லும் ஒரு காரணியாகும் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள் .

அல்லாஹ் கூறுகிறான்: ''ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு முறையோ, இரு முறையோ [பல விதமான பேரழிவுகள், நோய், பஞ்சம் போன்ற துன்பங்களால்] அவர்கள் சோதிக்கப்படுகிறார்கள்' என்பதை அவர்கள் காணவில்லையா? அப்படியிருந்தும் அவர்கள் தவ்பா செய்து மீள்வதும் இல்லை. நினைவு கூர்ந்து நல்லுணர்ச்சி பெறுவதும் இல்லை.
[அல் குர்ஆன்,9:126]

"என் சகோதரரே, பாவங்களில் விழுந்துவிட்டால் அல்லாஹ்வின் கருணை மீது நம்பிக்கை இழந்துவிடாதீர்கள். மன்னிப்பின் வாசல் சூரியன் மேற்கில் உதிக்கின்ற காலம் வரும் வரை, அதாவது மறுமை ஏற்படும் வரை திறந்தே இருக்கின்றது.
(நபி மொழி)

நபியவர்கள் கூறினார்கள்: " நிச்சயமாக அல்லாஹ் பகலில் பாவம் செய்தவரின் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்ள இரவு வரை தனது கரத்தை விரிக்கிறான்.
மேலும் இரவில் பாவம் செய்தவரின் பாவமன்னிப்பை ஏற்றுக்கொள்ள பகல் வரை தனது கரத்தை விரிக்கிறான். இது சூரியன் மேற்கில் உதிக்கும் வரை நடக்கும். (ஸஹீஹ் முஸ்லிம் 2759)
தவறுகள், பாவங்கள் செய்வது மனித இயல்புதான். அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிவதில் யாருமே தவறு செய்யாமல் இருக்க முடியாது. பாவங்களால் அல்லது மறதியால் அவனுக்கு மாறுசெய்துவிடுவோம். அனைவருக்கும் இந்த குறைபாடு நிலை இருக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் 'இடது பக்கத்தில் உள்ள எழுத்தர் ஒரு முஸ்லிமின் பாவத்தை பதிவு செய்வதை (ஆறு மணி நேரம்) தாமதிக்கிறார். அவர் (அந்த ஆறு மணி நேரத்திற்க்குள்) மனம் வருந்தி அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு கேட்டால், அதைப்பதிவு செய்யாமல் விட்டுவிடுவார். அப்பாவத்தை அவர் செய்து விட்டால், அது ஒரு பாவமாக எழுதப்படும்.[தபரானி]
அதனால், உங்கள் செயல்களை (ஆறு மணிநேரத்திற்க்கொரு முறை)– ஒரு நாளைக்கு 4 முறை மதிப்பீடு செய்து, அல்லாஹ்வின் இந்த அற்புதமான கருணையிலிருந்து நன்மை பெறுங்கள்!
கீழ்க்கண்ட ஹதீஸை நன்கு கவனித்து உள்வாங்கி படியுங்கள்


நபியவர்கள் கூறினார்கள்: " என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக, நீங்கள் பாவம் செய்யாதவர்களாக இருந்தால், அல்லாஹ் உங்களை விட்டுவிட்டு வேறு மக்களைக் கொண்டு வருவான். அவர்கள் பாவம் செய்த நிலையில் அவனிடம் பிரார்த்திப்பார்கள், மன்னிப்புக் கேட்பார்கள். (ஸஹீஹ் முஸ்லிம் 6621)
மேலும் கூறினார்கள்: ஆதமின் மகன் ஒவ்வொருவரும் பாவம் செய்யக்கூடியவர்களே. அவர்களில் சிறந்தவர்கள் யாரெனில் பாவம் செய்ததை எண்ணி வருந்தி மன்னிப்புத் தேடுகிறவர்கள் ஆவர்.
(திர்மிதீ 2499 அல்பானீ ஹசன்)

நீங்கள் அத்தனைத் தவறாக ஒன்றைச் செய்திருந்தீர்கள் என்றால், நீங்கள் ஒரு மோசமான மனிதராக இருக்க வேண்டும், இல்லையா?
இல்லை .
மோசமான மனிதராக இருப்பதற்கும், மோசமான செயலைச் செய்வதற்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. அல்லாஹு தஆலா உங்களுக்கு மன்னிப்புக் கேட்க சந்தர்ப்பம் அளித்திருக்கிறான். இன்ஷா அல்லாஹ், உங்கள் பாவம் நன்மையாகக்கூட மாற்றப்படும்! இது எத்தனை அற்புதம்?

அந்த அற்புதமான பாக்கியத்தை கீழ்க்கண்ட வசனத்தில் காண முடிகிறது . பாருங்கள்
يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا تُوْبُوْۤا اِلَى اللّٰهِ تَوْبَةً نَّصُوْحًا عَسٰى رَبُّكُمْ اَنْ يُّكَفِّرَ عَنْكُمْ سَيِّاٰتِكُمْ وَيُدْخِلَـكُمْ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ۙ يَوْمَ لَا يُخْزِى اللّٰهُ النَّبِىَّ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ‌ نُوْرُهُمْ يَسْعٰى بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ يَقُوْلُوْنَ رَبَّنَاۤ اَ تْمِمْ لَـنَا نُوْرَنَا وَاغْفِرْ لَـنَا ‌ۚ اِنَّكَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ

"நம்பிக்கையாளர்களே! நீங்கள் கலப்பற்ற மனதுடன் (பாவத்தி லிருந்து விலகி) அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். உங்கள் இறைவனோ உங்கள் பாவங்களுக்குப் பரிகாரமாக்கி, (மன்னித்து) சுவனபதியிலும் உங்களைப் புகுத்திவிடுவான்.
அதில் தொடர்ந்து நீரருவிகள் ஓடிக்கொண்டிருக்கும். (தன்னுடைய) #நபியையும், #அவருடன்_நம்பிக்கை-கொண்டவர்களையும் அந்நாளில் அல்லாஹ் இழிவுபடுத்த மாட்டான்.
அந்நாளில், இவர்களுடைய பிரகாசம் இவர்களுக்கு முன்னும், இவர்களுடைய வலது பக்கத்திலும் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கும். இவர்கள் "எங்கள் இறைவனே! எங்களுக்கு, எங்களுடைய பிரகாசத்தை (அணையாது) நீ பரிபூரணமாக்கி வை. எங்களுடைய குற்றங்களையும் நீ மன்னித்து அருள்புரி. நிச்சயமாக நீ அனைத்தின் மீதும் ஆற்றலுடையவன்" என்று பிரார்த்தனை செய்து கொண்டிருப்பார்கள்.
(அல்குர்ஆன்: 66:8)
ர.ரா

ஸக்றாத் - மரணப் படுக்கை 01
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 54)



"ஸக்றாத் " என்பது ஐம்புலன்களும் ஒடுங்கி அடங்கி அனுபவித்தவை எல்லாம் மறந்து போகும்படியான ஒரு விதமான மயக்கம். நபிகளாரின் சுன்னத்துக்களை பேணாமல் இடது கையால் பானங்களை குடித்தவர்களுக்கு தங்களின் பெயரே மறந்து போகுமாம்.
ஸக்றாத்தில் 'ஆகிறா ' என்னும் மறுமையைச் சேர்ந்த விஷயங்கள் அனைத்தும் தொடர்ந்து வெளியாகும் . அதே நேரத்தில் 'துனியா 'என்னும் இவ்வுலகில்
மறைக்கப்பட்டருந்தவைகளும் வெளிப்படும். வாழ்நாளில் ' இது ஏன் ? அது ஏன் ' என்று சிந்தித்த பல விஷயங்களுக்கு ரொம்ப சுளுவா விடை தெரிந்து கொள்ள முடியும்.
தெரிந்து என்ன பிரயோஜனம் ? யாரிடமும் எதுவும் சொல்ல வெளியில் முடியாது.
ரூஹைக் கைப்பற்ற வரும் மலக்குல் மவ்த்து இஸ்ராயீல் (அலை) அவர்களையும் , இன்னும் பல மலக்குமார்களையும் , இறந்து போன உறவினர்கள் , இன்னும் மரித்தவர்களில் பிரியம் வைத்து

தம்முடன் பழகியவர்கள், கைப் பிடித்துக் கற்றுக் கொடுத்த ஞானவான்கள் … என பட்டியல் நீளும்.

நன்மை தீமைகளின் பட்டோலைகளும் காட்டப்படும் .இனி அடையப் போகிற கதி என்ன என்றும் அப்போது மிகத்தெளிவாக தெரியும்.
ஒருவன் ஸக்றாத்தை அனுபவிக்கும் போது , அவனுக்கு அச்சமும், துயரமும் , கைசேதமும் அதிகரிக்கும் . தான் செய்த பாவங்களால் இனிப்படப் போகும்
அதாபின் பயங்கரமான காட்சிகளைக் கண்டு நடுங்குவான் .
இன்னும் ஸக்றாத் வேளையில் அதை அனுபவிப்பவன் யாரானாலும் சரி, அவர்களுடைய ஈமானைக் கெடுக்க வேண்டும் என்று இப்லீஸ் வந்து , அதற்கு ஆகுமான அநேக குபுறு வார்த்தைகளைச் சொல்லும்படி பல விதத் தந்திரங்கள் செய்வான். அவனை இபுலீஸ் என்றும், அவன் சொல்லும் வார்த்தைகள் குபுறு என்றும் பிரித்தறியாதவர்கள் அந்தோ ! அவனிடம் ஈமானை இழந்து விடுவார்கள் .

ஸக்றாத் நேரத்தில் இபுலீஸ் பலவகையிலும் முன்னுக்கு வருவான் . ஸக்றாத்தை அனுபவிக்கிறவர்களுக்கு மஹா கொடுமையான வேதனையும் , வருத்தமும் , திட்டு முட்டு , திகிலடியும் , மிக பெரிய நாவரட்சியும் இருக்கும் .
அப்போது இபுலீஸ் மிக குளிர்ந்த தண்ணீரைக் கொண்டு வந்து , அருகில் நின்று , " இதோ பார் தண்ணீர் குடிக்க விரும்பினால் இதோ தருகிறேன். அதற்கு முன் நான் சொன்னேனே இரண்டு அல்லாஹ்வைப் பற்றி உன் வாயால் சொல்லு " என்பான்
ஈமானில் உறுதிபாடானவர்கள் அவனிடம் இருந்து தப்பித்துக் கொள்வார்கள் .
யார் யார் எந்தெந்த கருமங்களைத் துன்யாவில் செய்து வந்தார்களோ , முக்கியமாய் அதுவே ஸக்றாத்தில் மேலிடும்.

கலிமா , திக்ருகளை , தியானங்களை நியமமாக்கியவர்களுக்கு கலிமாவும் , வீண் வார்த்தைகளை நியமமாக்கியவர்களுக்கு அவ்வீண் வார்த்தைகளுமே ஸக்றாத்தில் தானாகவே நாவில் நடக்கும். அதைத் தடுக்க எவராலும் , எவ்விதத்திலும் முடியாது.
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கூறியதாவது : " நீங்கள் உயிரோடிருக்கையில் எப்படி இருந்தீர்களோ , அப்படியே மவ்த்தாவீர்கள் , எப்படி மவ்த்தானீர்களோ , அப்படியே எழுப்பப்படுவீர்கள் "
துனியாவின் அழிவிற்கு பெரிய கியாமத்தின் அடையாளங்கள் இருப்பது போல , மவ்த்துக்கு முன் ஸக்றாத் சிறிய கியாமத் போல இருக்கும் .
ர.ரா

Rahmath Rajakumaran

அழியாத 4 சக்திகளான
1)மின்காந்த சக்தி
2) அணுக்கருவுக்குள் இருக்கும் வலிமையான அணுசக்தி
3) அணுக்கருவுக்கு வெளியே இருக்கும் மெலிதானஅணுசக்தி
4) புவி ஈர்ப்பு சக்தி
இந்த 4 சக்திகளையும் இணைக்கும் கோட்பாடு Grand Unified Theory (GUT)
இதில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் புவி ஈர்ப்பு சக்தியைத் தவிர 3 சக்திகளை ஒருவாறு இணைத்தார். புவி ஈர்ப்பு சக்தி அவரது மரணப்படுக்கை வரை தொடர்ந்து கண்ணாம்பூச்சிக் காட்டியது
தன் " அரோடிக் அனரிசைம் " என்ற நோயால் பாதிக்கப்பட்டதால் மரணத்தின் முன் கொஞ்ச நேரம் வரை GUT கோட்பாட்டையே சிந்தித்துக் கொண்டே இருந்து இறுதியில் பிரகாசமான புன்முறுவலாக சிரித்தார் .தன் சிரிப்புக்கு காரணமான கண்டிப்பை தான் எழுத முடியாமல் உயிர் துறந்தார் .
(ஸக்றாத்நேரத்தில் 'துனியா 'என்னும் இவ்வுலகில்
மறைக்கப்பட்டருந்தவைகளும் வெளிப்படும். வாழ்நாளில் ' இது ஏன் ? அது ஏன் ' என்று சிந்தித்த பல விஷயங்களுக்கு ரொம்ப சுளுவா விடை தெரிந்து கொள்ள முடியும்)
தெரிந்து என்ன பிரயோஜனம் ? யாரிடமும் எதுவும் சொல்ல வெளியில் முடியாது.

ஸக்றாத் - மரணப் படுக்கையின் வேதனை 02
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 55)



ஒருவனுக்கு மரணம் வரை எவ்வித துன்பமும், துயரமும் , வருத்தம் சிறிதும் இல்லாமல் வாழ்திருந்தாலும் அவனுக்கு ஸக்றாத் வருத்தம் உண்டாவது நிச்சயம்.
ஸக்றாத்தின் வருத்தம் அதை அனுபவித்தவனுக்கே தெரியும் அல்லாமல் , மற்றவர்களுக்கு எப்படி எடுத்துச் சொன்னாலும் அவ்வளவு வேதனையை சொல்லி மாளாது மற்றவர்களுக்கும் தெரியாது.


ஒரு பேச்சுக்கு , இறந்தவன் மீண்டும் வந்து , தான் பட்ட ஸக்றாத் வேதனையை மனிதர்களுக்குத் தெரிவிப்பானானால், திகில் கொண்டு துன்யாவின் சுகத்தையெல்லாம் அறவே மறந்து, இனி ஒருபோதும் அதில் பிரவேசிக்க மாட்டார்கள் . இவ்வுலகில் சிரிப்பு , சந்தோஷமெல்லாம் ஓடிப்போய் துக்கமும் கவலையுமே மிஞ்சும்.

ஒருவனது ஸக்றாத் வேதனையை ஒரு ரோமக் கால் அளவு எடுத்து, வானத்துடைய மலக்குகள் பூமியையுடையவர்களாகிய எல்லோர் மீதும் வைத்தால் , அவ் வேதனையை தாங்காமல் அனைவரும் ஒருமித்து செத்தேப் போவார்கள்.
ஸக்றாத் வேதனையை அதில் ஓர் அணு அளவு எடுத்து உலகிலுள்ள எல்லா மலைகள் மீதும் வைத்தால் அவைகள் வேதனையை தாங்காமல் உருகிப் போகும்.
ஸக்றாத் வேதனை என்பது உடலையும் , ரூஹையும் பற்றி பிடித்து பிடுங்கி வேதனைக்குள்ளாக்குவதால் , அது இப்படி என்று அறிய முடியாத கொடுமையான வருத்தம் எனறு சொல்லப்படுகிறது.

ஸக்றாத் வேதனையை ' நஜுஃஹு ' என்று அழைக்கிறார்கள். நஜுஃஹு என்பதற்கு 'பிடுங்குதல் ' எனப்படும். உடலிற் நீக்கமற நிரம்பி பரவி நிற்கும் நூஹைப் பற்றி பிடுங்குவதால்தான் ஸக்றாத் வேதனையை நஜுஃஹு என்றழைக்கப்படுகிறது.
ஒருவனுக்கு ஸக்றாத் வந்து விட்டால், அவனுடைய ரூஹை காலின் பெருவிரலில் இருந்து தொடங்கி, கொஞ்சம் கொஞ்சமாக அது பிடுங்கப்படுகிறது .அது தொண்டைக் குழியில் வந்த போது அவனுடைய தவ்பா வாசல் அடைபடும். அதன் பின் அவன் தவ்பா செய்வதில் எந்த பிரயோஜனமும் தராது.

فَلَوْلَاۤ اِذَا بَلَغَتِ الْحُـلْقُوْمَۙ
(உங்களில் மரணிக்கும் ஒருவரின் உயிர்) தொண்டைக் குழியை அடைந்தால்,
(அல்குர்ஆன் : 56:83)
وَاَنْتُمْ حِيْنَٮِٕذٍ تَـنْظُرُوْنَۙ
அந்நேரத்தில் நீங்கள் (இறப்பவனுக்குச் சமீபமாயிருந்தும், ஒன்றும் செய்ய முடியாமல்) பரக்கப் பரக்க விழிக்கின்றீர்கள்.
(அல்குர்ஆன் : 56:84)
وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْكُمْ وَلٰـكِنْ لَّا تُبْصِرُوْنَ
ஆயினும், நாம் அவனுக்கு உங்களைவிட மிக சமீபமாக இருக்கின்றோம். எனினும், நீங்கள் (நம்மைப்) பார்ப்பதில்லை.
(அல்குர்ஆன் : 56:85)
ர.ரா

ஸக்றாத் - மரணப்படுக்கையின் வேதனை 03
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 56)




ஒவ்வொருவனுக்கும் ஸக்றாத்தில் அவன் ரூஹு தொண்டைக் குழியில் வந்து தவ்பா வாசலும் அடைபட்டு , மவ்த்து நெருக்கமானவுடன் , அவனுடைய உடல் உறுப்புகள் தலை முதல் பாதம் வரை ஒன்றுக்கொன்று பிரிவுக்காக ஸலாம் சொல்லிக் கொள்ளும் . பின் ரூஹும் உடலுக்கு ஸலாம் சொல்லி பிரியும் .

அந்த வேளையில் ஒருவர் பின் ஒருவராக நான்கு மலக்குமார்கள் வருவார்கள்.
அவர்களில் முதலாவதாக ரிஷ்க் வுடைய மலக்கு அவனைப் பார்த்து ,
" உனக்கான ரிஷ்க் என்னும் உணவு உலகெங்கும் தேடினேன். ஓர் அணுவளவும் இல்லை . உனக்கான உணவு இல்லாத உலகில் நீ எப்படி உயிர் வாழ முடியும் ? "
இரண்டாவது குடிப்பு உடைய மலக்கு ,
உனக்கான குடிப்பு என்னும் பானம் உலகெங்கும் தேடினேன் . ஒரு சொட்டுக் கூட இல்லை . உனக்கான குடிப்பு இல்லாத உலகில் நீ எப்படி உயிர் வாழ முடியும் ? "
மூன்றாவது மூச்சுடைய மலக்கு ,
உனக்கான மூச்சு என்னும் சுவாசக் காற்று உலகெங்கும் தேடினேன் . ஒரு மூச்சிக்கேனும் கூட காற்று இல்லை . உனக்கான சுவாசம் இல்லாத உலகில் நீ எப்படி உயிர் வாழ முடியும் ? "
நான்காவது தவணையுடைய மலக்கு

உனக்கான வாழும் காலம் என்னும் தவணை உலகெங்கும் தேடினேன் . ஒரு நொடிப்பொழுது கூட இல்லை . உனக்கான தவணை இல்லாத உலகில் நீ எப்படி உயிர் வாழ முடியும் ? "
" உலகெங்கும் தேடினோம் நீ உயிர் வாழ ஒரு வழியும் உனக்கு இல்லை " என்று நான்கு மலக்குமார்களும் சொல்வார்கள்

وَمَا كَانَ لِنَفْسٍ اَنْ تَمُوْتَ اِلَّا بِاِذْنِ اللّٰهِ كِتٰبًا مُّؤَجَّلًا وَ مَنْ يُّرِدْ ثَوَابَ الدُّنْيَا نُؤْتِهٖ مِنْهَا وَمَنْ يُّرِدْ ثَوَابَ الْاٰخِرَةِ نُؤْتِهٖ مِنْهَا وَسَنَجْزِى الشّٰكِرِيْنَ
யாதொரு ஆத்மாவும் அல்லாஹ்வின் அனுமதியின்றி இறப்பதில்லை. இது தவணை நிர்ணயிக்கப்பட்ட விதியாகும். எவர் (தன் செயலுக்கு) இந்த உலகத்தின் நன்மையை (மட்டும்) விரும்புகின்றாரோ அவருக்கு அதனை (மட்டும்) அளிப்போம்.
எவர் மறுமையின் நன்மையை(யும்) விரும்புகின்றாரோ அவருக்கு அதனை(யும்) வழங்குவோம். மேலும், நன்றி செலுத்துபவர்களுக்கு நாம் அதிசீக்கிரத்தில் நற்பயனை வழங்குவோம். (அல்குர்ஆன்: 3:145)
ர.ரா

ஸக்றாத் - மரணப் படுக்கையின் அறிகுறிகள் 04
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 57)



ஸக்றாத்தில் பயங்கரமான மூன்று சங்கடங்கள் உண்டு
1) ஸக்றாத்தின் வேதனை வருத்தம்.
2) மலக்குல் மவ்த்து இஸ்ராயீல் (அலை) அவர்களை மிக பயங்கர உருவத்தில் காட்சியாக காணுதல்.
3) அனுபவிக்கப் போகிற நரக வேதனைகளை கண்முன் காட்டப்படல்.
இந்த பயங்கரமான மூன்று சங்கடங்கள் பாவிகளுக்கு நேரிடும் .

ஸாலிஹான நல்லடியார்களுக்கு ,.
1) ஸக்றாத்தின் வருத்தம் இலேகுவாக இருக்கும்.
2) மலக்குல் மவ்த் இஸ்ராயீல் (அலை) அவர்களை சாந்த சொரூபத்தில் காட்சியாக காணுதல் .
3) அனுபவிக்கப் போகிற சுவர்க்கத்தின் சுகபோகங்களை கண்டு களித்தல்.

இன்னும் ஸக்றாத்தில் நல்லடியார்களுக்கு மூன்று நற்குறி தென்படும் .
1) ஸக்றாத்தில் உடல் உசும்புதல் இன்றி ஒடுங்கி, அடங்கி நெற்றியில் வியர்ப்பது
2) கண்களில் நீர் ததும்புவது
3) உதடுகள் உலர்ந்திருப்பது.

ஸக்றாத்தில் கெட்ட அடியார்களுக்கு மூன்று துற்குறி தென்படும் .
1) கழுத்தில் சுருக்கிவிட்டார் போல் உறுமுவதும்
2) உடல் சிவந்து தோன்றுவதும்,
3) உதடுகள் சாம்பல் பூத்திருப்பது போல் தோன்றுவது.
இந்த துற்குறிக் கண்டு அந்த இடத்திலேயே உங்கள் கருத்துக்களை பகிரும் போது , அந்த இறந்த மைய்யத்தின் உறவினர்களுக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்தி விடலாம் .
மைய்யத்தின் அறிகுறி கண்டு துஆ செய்ய வேண்டும் .
ஸக்றாத்தை அனுபவிக்கிறவனைச் சூழ்ந்திருப்பவர்கள் அவன் முகத்தை
கிப்லா திசையில் திருப்பி வைத்து கலிமாவை மெல்லவாக சொல்லிக் கொடுக்க வேண்டும் . மெதுவாக சொன்னாலும் அவர்கள் தெளிவாக கேட்கிறார்கள் .
ர.ரா

ஸக்றாத்தின் இரண்டு வகைகள் 05
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 58)

ஸக்றாதின் முடிவு இரு வகைப்படும்
1) ஹுஸ்னுல் காத்திமா (அழகிய நல்ல முடிவு) என்பது ஈமானுடன் மவ்த்தாவது ஆகும்.
2) சூவுல் காத்திமா (கெட்ட முடிவு) என்பது ஈமான் மாறி மவ்த்தாவது ஆகும்.

அல்லாஹு தஆலாவுடைய திக்ரை மறவாமல் இருப்பதும் , அவனுடைய அச்சத்தை மனதில் பதிய வைத்திருப்பதும் , மார்க்கத்தைப் பேணி நடப்பதும் , துர்கருமங்களை விலக்கி நற்கருமங்களைச் செய்வதும் , மறுமையின் ஆசை அதிகமாக
இருப்பதும் , மவ்த்தின் வேதனையை நினைத்து நினைத்து அச்சத்துடன் வாழ்வது ,
ஈமானுக்கு பழுதை வருத்தும் சொல்லையும் , செயலையும், எண்ணத்தையும் சுத்தமாகத் தெரிந்து கொண்டு அவை அணுகாமல் நடந்து கொள்வதும் ... இவைகள் ஹுஸ்னுல் காத்திமா என்னும் அழகிய நல்ல முடிவை பெற்றுத் தரும் .
ஹராமை ஹலால் என்றும், ஹலாலை ஹராம் என்றும் நம்ப வைத்து மோசடி செய்வது , மார்க்கத்திற்கு விரோதமான சொல்லைச் சொல்வதும், செயலை செய்வதும் , எண்ணத்தை எண்ணுவதும் , வாக்கு மாறுதல் , பொய் சத்தியம் செய்தல் இவைகளால்
ஸக்றாத்தில் ஈமான் மாறி பறிபோய்விடும் .
பெரியயோர்கள் சூவுல் காத்திமாவைப் பற்றி மிகவும் பயந்திருக்கிறார்கள் .
நல்ல அடியார்கள் ஸக்றாத்தில் ,
நபி (ஸல்) அவர்களும் , ஜிப்ரயீல் (அலை) அவர்களும் ,ரஹ்மத்துடைய மலக்குமார்களும் வந்து சந்திப்பார்கள் .
ஜிப்ரயீல் (அலை) அவர்கள் தங்கள் சிறகினால் நல்ல அடியார்களின் முகத்தை தடவிக் கொடுத்து , நபி (ஸல்) அவர்களை அவனுக்குச் சுட்டிக்காட்டி , "இவர்கள் தாம் உன்னுடைய நபி முஹம்மது (ஸல்) ஆவர்கள் "
மாயாஜாலம் செய்யும் இப்லீஸின் சேட்டைகள் அங்கே பலிக்காது , வெருண்டோடுவான் .
ர.ரா

ஸக்றாத்தில் மலக்குமார்களின் பணி 6
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 59)



ஒவ்வொரு அடியானுக்கும் இரண்டு மலக்குமார்களும் , இது போல ஜின்னும் , ஷைத்தானும் சாட்டப்பட்டிருப்பார்கள் .
இந்த இரண்டு மலக்குமார் களுக்கு "ஹபலத் " என்னும் பெயர் .ஹபலத் என்றால் காவல்காரர்கள் என்று அர்த்தம். இரவும் , பகலும் அவனைப் பிரியாதிருந்து அவனுக்கு நேரிடும் ஆபத்துக்களை விலக்கி அவனைப் பாதுகாத்துக் கொண்டிருப்பார்கள் .
ஒரு மலக்கு அவனுடைய அவனுடைய வலது புறமும் , இன்னொரு மலக்கு அவனுக்கு இடதுபுறமும் இருப்பார்கள் .

அவன் உட்கார்ந்தால் அவர்களும் அவனுக்கு வலது , இடதுமாய் உட்கார்ந்திருப்பார்கள்.அவன் நடந்தால் அவனுக்கு முன்னும், பின்னுமாய் நடப்பார்கள் .அவன் படுத்தால் அவனது தலைமாட்டிலும், கால் மாட்டிலுமாய் நிற்பார்கள் .
அவன் ஜிமாஃ செய்யும் போதும் , மலஜலம் கழிக்கும் போது மாத்திரம் அவனை விட்டுப் பிரிந்து , அவன் துப்பரவானவுடன் அவனுடன் சேர்ந்து கொள்வார்கள்.

இன்னும் அந்த மலக்குகள் அவனுடைய நன்மை தீமைகளான சொல், செயல் , நினைப்பு எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எழுதி வருவார்கள் .அவன் முனங்கும் முனக்கம் கூட எழுதப்படும் அப்படி எழுதி வருவதனால்தான் அவர்களுக்கு **"கிராமன் - காத்திபீ "** பெயர்.
வலது புற மலக்கு நன்மையையும் , இடதுபுற மலக்கு தீமையையும் எழுதுவார்கள்.

நன்மையானால் உடனே எழுதப்படும். தீமையானால் உடனே எழுதத் தொடங்கும் போது , நன்மை எழுதுற மலக்கு அதை எழுத விடாமல் தடுத்து "கொஞ்சம் பொறும்.இவன் தவ்பா செய்தாலும் செய்வான் " என்று காத்திருக்கச் சொல்வார் .அதனால் அதை எழுதாமல் ஒரு ஸாஅத்தாகிப இரண்டரை நாழிகை நேரம் மட்டும் நிறுத்தி வைப்பார்கள் .
இதற்கிடையில் பய புள்ளே அந்தத் தீமைக்கு தவ்பா செய்து விட்டால் எழுதாமல் விட்டு விடுவார்கள் இல்லையென்றால் எழுதி விடுவார்கள் இதற்கு நன்மை எழுதுற மலக்கிடம் சாக்ஷி வாங்குவார்கள் .

இப்படியே ஒவ்வொரு பய புள்ளேக்கும் பகல் பூரா ஒரு புஸ்தகமும் , ராத்திரி பூரா ஒரு புஸ்தகமுமாக , நாளொன்றுக்கு இரண்டு புஸ்தகங்கள் எழுதப்பட்டு , ஒரு வருஷத்திற்கு ஒரு தரம் ஷஃபான் மாதம் 15 இரவில் ஒன்றாகச் சேர்த்து ஒரே கட்டாக கட்டி வைப்பார்கள் .
ஸக்றாத்தில் மவ்த் நெருங்கிய சமயம் இந்த இரண்டு மலக்குகளும் மேற்படி பட்டோலை புஸ்தகக் கட்டுகளை கொண்டு வந்து அவனுக்குக் காட்டி ,
"பய புள்ளே ...! படித்துப் பார்" என்று சொல்வார்கள் .
அவன் அதைப் படித்து நன்மை அதிகமாக இருந்தால் , சந்தோஷமும் , தீமை அதிகமாக இருந்தால் , துயரமும் படுவான் .
பின்பு அந்த மலக்குகள் அந்த கட்டுகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டுக்கட்டி , எல்லாம் சரி என்று முத்திரையிட்டு ,
பய புள்ளே கழுத்தில் மாட்டி விடுவார்கள்
இனி கியாமத் நாளில் அந்தக் கட்டுடன் தான் எழுந்திருப்பான் .
ர.ரா

மரணத் தருவாயில் மா நபி (ஸல்) அவர்கள் 07
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 60)



இறுதி நேரம் நெருங்கவே ஆயிஷா (ரழி) நபி (ஸல்) அவர்களைத் தனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். இதைப் பற்றி ஆயிஷா (ரழி) கூறுவதாவது:
“நபி (ஸல்) என் அறையில் எனக்குரிய தினத்தில் எனது கழுத்துக்கும் நெஞ்சுக்குமிடையில் மரணமானார்கள்.
அவர்களது மரண நேரத்தில் எனது எச்சிலையும் அவர்களது எச்சிலையும் ஒன்று சேர்த்தேன். எனது சகோதரர் அப்துர் ரஹ்மான் அறைக்குள் வந்தார்.

அவரது கரத்தில் மிஸ்வாக் இருந்தது. நபி (ஸல்) அவர்களை எனது மடியில் கிடத்தியிருந்தேன். அப்துர் ரஹ்மான் கரத்திலுள்ள மிஸ்வாக்கை நபி (ஸல்) அவர்கள் பார்த்தார்கள்.
அவர்கள் மிஸ்வாக் செய்ய விரும்புகிறார்கள் என புரிந்து கொண்டேன். "நான் உங்களுக்கு அதனை வாங்கித் தரவா?" என்று கேட்டபோது, "ஆம்!" என தலை அசைத்தார்கள். அதனை வாங்கிக் கொடுத்தேன்.

அது அவர்களுடைய பற்களுக்கு சிரமமாக இருந்தது. "நான் அதனை மிருதுவாக்கி தரட்டுமா?" என்று கேட்டேன். தலை அசைத்து "ஆம்!" என்றார்கள். நான் அதனை மிருதுவாக்கிக் கொடுத்தேன்."
இன்னொரு அறிவிப்பில் வருவதாவது: "நபி (ஸல்) மிக அழகிய முறையில் அக்குச்சியால் பல் துலக்கினார்கள். அவர்களுக்கருகில் நீர் நிரம்பிய குவளை இருந்தது. அதில் கைகளை விட்டு முகத்தில் தடவிக் கொண்டார்கள்.

"லாஇலாஹஇல்லல்லாஹ் இன்னலில் மவ்த்தி சகராத்- வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. மரணத்திற்குப் பல மயக்கங்கள் இருக்கின்றன" என்றார்கள். (ஸஹீஹுல் புகாரி)
பல் துலக்கிய பின்பு தங்களது கையை அல்லது விரலை உயர்த்தினார்கள். அவர்களது பார்வை முகட்டை நோக்கியது. அவர்களது உதடுகள் அசைந்தன. அவர்கள் என்ன கூறுகிறார்கள் என ஆயிஷா (ரழி) செவிதாழ்த்திக் கேட்டார்கள்.
நபி (ஸல்) அப்போது "இறைத்தூதர்கள், வாய்மையாளர்கள், இறைப்போர் தியாகிகள், நல்லோர்கள் ஆகிய நீ அருள் செய்தோருடன்...
அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக! என்மீது கருணை காட்டுவாயாக! உயர்ந்த நண்பனுடன் என்னைச் சேர்த்து வைப்பாயாக! அல்லாஹ்வே! உயர்ந்த நண்பனை...
(ஸஹீஹுல் புகாரி)
கடைசி வார்த்தையை மட்டும் மூன்று முறை நபி (ஸல்) கூறினார்கள். உயர்த்திய அவர்களுடைய கை சாய்ந்தது. உயர்ந்தோனிடம் சென்றார்கள். இன்னாலில்லா வ இன்னா இலை ராஜிஊன்.
ஹிஜ்ரி 11, ரபீஉல் அவ்வல் பிறை 12, திங்கட்கிழமை முற்பகல் முடியும் நேரத்தில் அவர்களுக்கு மரணம் ஏற்பட்டது. அப்போது நபி (ஸல்) அவர்களுக்கு 63 வயது, 4 நாட்கள் ஆகியிருந்தன.
ர.ரா

மரணத் தருவாயில் மனோகர் பாரிக்கர் - -கோவா முதலமைச்சர் - (ஸக்றாத் 08)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 61)



" என் வாழ்க்கை எனக்கு அளவிட முடியாத அரசியல் செல்வாக்கு, மரியாதையை கொடுத்துள்ளது. அது என் பெயருடன் இணைந்த அடையாளமாகிப் போனது.
கூர்ந்து யோசித்தால், நான் செய்யும் பணியை விட வேறு மகிழ்ச்சியான தருணங்களை நான் அனுபவிக்கவில்லை என்றே தோன்றுகிறது.
இன்று உடல் நலிவுற்று, படுக்கையில் நான் வீழ்ந்த நிலையில் நான் இதுவரை வாழ்ந்த வாழ்வினையை சுய பரிசோதனை செய்து பார்க்கிறேன்.
புகழ், பணம் , சொத்து இவையே வாழ்வில் நாம் அடைய வேண்டிய இலட்சியமாக நான் நினைத்தேன் .
...ஆனால் மரணத்தின் வாயில் நிற்கும் எனக்கு இப்போது மரணத்தை நான் மிக நெருக்கமாக ஒவ்வொரு நொடியும் உணர்கிறேன்.


மருத்துவமனையில் என் படுக்கையைச் சுற்றி ஒளி + ஒலியிடும் உயிர் காக்கும் கருவிகள் மத்தியில் நான் மரணத்தின் மிக அருகாமையில் இருப்பதை அவ்வப்போது உணர்த்திக் கொண்டே இருக்கின்றன

இந்த சிக்கலான தருணத்தில் நான் உணர்ந்தது என்னவென்றால் , வாழ்க்கையில் பணத்தையும் , புகழையும் குவிப்பதை விட இன்னும் அடைய வேண்டியது நிறையவே இருக்கிறது.
சமூக சேவையும் நமக்குப் பிடித்தமான நபர்களோடு சரியான உறவுமுறை பேணுதலும் மிக அவசியம் .
அரசியலில் எவ்வளவோ வெற்றியை குவித்தாலும் ,போகும் போது எதையும் எடுத்துப் போகப் போவதில்லை என்பதை இப்போது நன்கு உணர்கிறேன்.
மரணப்படுக்கை மிகவும் தனித்துவம் வாய்ந்தது. காரணம் அந்தப் படுக்கையை பிறரோடு பகிர முடியாது.

உங்கள் ஏவலுக்கு கட்டுப்பட எத்தனையோ வேலைக்காரர்கள் , டிரைவர்கள், பணியாளர்கள் என்று இருந்தாலும் , உங்கள் வியாதியை யாரோடும் பகிர முடியாது .
எதைத் தொலைத்தாலும் தேடிக் கண்டு பிடித்து விடலாம் .ஆனால் தொலைத்த வாழ்நாளை மீட்டெடுக்க உங்களால் முடியவே முடியாது.

எனவே அர்த்தமுள்ள வாழ்வை வாழுங்கள் .வாழ்நாள் முழுவதையும் வெற்றியை துரத்துவதிலேயே கழித்து விடாதீர்கள் . வாழ்க்கை என்னும் நாடகத்தில் மரணம் என்னும் (Climax) கிளைமாக்ஸ் வந்தே தீரும் .
எனவே நண்பர்களே ....! உங்கள் மீது அக்கறை செலுத்துங்கள் .உங்கள் பணத்தை அர்த்தமுள்ள முறையில் செலவு செய்ய பழகிக் கொள்ளுங்கள் .
உங்களைச் சுற்றி இருப்பவரிடம் பாசத்தைப் பொழிய பழகிக் கொள்ளுங்கள் .
பிறக்கும் போது நாம் அழுகிறோம் . இறக்கும்போது நம்மைச் சுற்றியுள்ளவர்கள் அழுவார்கள் .எனவே இந்த இரண்டு அழுகைக்கும் உட்பட்ட காலத்தை , மரணத்தை நாம் தொடும் முன்பு மகிழ்ச்சியாகவும் அர்த்தமுள்ளதாகவும் வாழ்வோம் .
- Dec 8 - 2018 - மனோகர் பாரிக்கர் - முதலமைச்சர் - கோவா
ர.ரா
Shaik Salihu
இஸ்லாம் அல்லாதவர்களின் உபதேசங்கள் இஸ்லாமிய கோட்பாடுகள் என்ற தலைப்பில் வேண்டாம். கிதாபில் உள்ளது உள்ளபடி எதிர்பார்க்கிறேன். இது போன்ற பதிவுகள் பின்னர்...
Rahmath Rajakumaran
Shaik Salihu இறைவன் குர்ஆனில் குறிப்பிடும் போது இஸ்லாத்தின் பால் ஈமான் கொண்டவர்கள் மற்றும் ஈமான் கொள்ளாதவர்களைப் பற்றியும் குறிப்பிடுவதாலும், மேலும் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தால் ஒரு வேளை மனச் சாந்தி ஏற்பட்டிருக்கலாம் என்பதையும் சுட்டிக் காட்டவே இந்த மாதிரி பதிவுகள் போட வேண்டியதுள்ளது

700 மில்லியன் அல்ல, 700 பில்லியன் சம்பாதித்த ஸ்டீவ் ஜாப்ஸ் _ (ஸக்றாத் 9)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 62)






சான்பிரான்ஸிஸ்கோ தகவல் தொழில்நுட்பத் துறையில் ஜாம்பவான் எனப்படும் ஆப்பிள் நிறுவனத் தலைவர் ஸ்டீவ் ஜாப்ஸ் 1955 -ல் பிறந்து தன் 56 வயதில் கணையப் புற்றுநோயில் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார் .

கல்லூரி படிப்பை பாதியில் விட்டவர் . தன் நண்பரான ஸ்டீவ் வோஸ்னியாக்குடன் சேர்ந்து 1976 -ல் ஆப்பிள் நிறுவனத்தை நிறுவியவர் .
1980-ல் மேக் கணனிகள் **(Macintosh computers)** தயாரித்து உலகை தன்னை உற்று நோக்க பிரபலம் அடைந்தவர்.

1997 -ல் ஐமேக் (i mac) என்ற புதிய கண்டிப்பு மூலம் கோடி கோடியாக டாலர்களை மலைப்போல் குவித்தவர் .**700 மில்லியன்** அல்ல; **700 பில்லியன்** டாலர் சொத்துக்களை வாங்கி குவித்தவர்.

அவர் இறக்கும் தறுவாயில் அவர் அளித்த பேட்டி :
என்னுடைய தொழில் யாரும் நினைத்துக் கூட பார்க்க முடியாத இடத்தை நான் பிடித்தது உண்மையென்றாலும் அதற்காக நான் பட்ட கஷ்டமும் உண்மைதான்
ஆனால் நான் அடைந்த வெற்றி உண்மை இல்லை என்பதை இறுதி நேரத்தில் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இப்போது மரணப்படுக்கையில் இருந்து கொண்டு என் கடந்தகாலத்தை நினைத்துப் பார்க்கையில் , நான் தேடி சம்பாதித்த புகழ், செல்வம் , செல்வாக்கு அனைத்தும் மரணத்தின் பிடியில் எனக்கு செல்லாக் காசாகி அர்த்தமற்ற பொருளாகி விட்டது.
இந்த நேரத்தில் நான் உணர்வது , என் அருகில் காத்திருக்கும் மரணத்தைத் தவிர வேறொன்றும் இல்லை.
என் வாழ்க்கைக்கு தேவையான செல்வங்களை மட்டும் தேடிக் கொண்டு, உறவுகள் , கலை மற்றும் என் சிறுப் பிராயக் கனவுகளை அடைய முயற்சித்திருக்க வேண்டும் . ஆனால் நான் அப்படி செய்யவில்லை .
மலைப் போல் வந்த அளவுக்கு அதிகமான எனது பொருளீட்டால்
எதையும் அனுபவிக்க முடியாத திருப்பு முனையில் என்னைக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது .
இறைவன் எல்லோருக்கும் அன்பு என்ற ஒன்றை கொடுத்துள்ளார் . அது மனச்சாந்தி அளிக்கக்கூடியது என்பதை உணராமல் அதை வீணாக்கி விட்டேன்.
வாழும் காலத்தில் அதை அதிகமாக பகிர்ந்து கொள்ள வேண்டும் .பகிர்ந்து கொள்ள வேண்டியது அன்பை , செல்வங்களை அல்ல.


ஒன்று கூற வேண்டுமென்றால் , நாம் சேர்த்து வைத்த செல்வங்கள் எல்லாவற்றையும் நம்மால் கொண்டு செல்ல முடியாது. ஆனால் நாம் பகிர்ந்து கொண்ட அன்பினை கொண்டு செல்ல முடியும் .

அவைதான் தன்னுடைய இறுதி தருணத்தில் இந்த இருட்டறையிலும் எனக்கு வெளிச்சத்தையும் , நம்பிக்கையையும் தருகின்றது .
இந்த உலகில் சிறிது கால வாழ்க்கை எல்லை இல்லாதது . எங்கு வேண்டுமானாலும் செல்லலாம் . முயற்சி இருந்தால் எந்த வெற்றியையும் அடையலாம் .ஆனால் அன்பு என்பது பல்லாயிரம் மைல்கள் எம்முடன் பயணிக்கக் கூடிய உணர்வு . அது எமது இதயத்திலும் கைகளிலும் உள்ளது. உலகின் அதிக பெறுமதியான படுக்கையில் இப்போது நான் படுத்திருக்கிறேன் . என்னால் எல்லாவற்றிற்கும் பணத்தைக் கொண்டு ஆட்களைக் கொண்டு காரியம் சாதிக்க முடியும் .
ஆனால் என் நோயை சுமக்க எனது பணத்தைக் கொண்டு என்னால் யாரையும் நியமிக்க முடியவில்லை .

எந்த ஒரு பொருளையும் இழந்தாலும் பணத்தைக் கொண்டு மீண்டும் பெற்றுக் கொள்ள முடியும் .ஆனால் இழந்த என் வாழ்வை என் செல்வத்தால் பெற்றுக் கொள்ள முடியவில்லை .இதுதான் இவ்வுலக வாழ்வின் செல்வத்தின் நிலை.

كُلُّ نَفْسٍ ذَآٮِٕقَةُ الْمَوْتِ‌ وَاِنَّمَا تُوَفَّوْنَ اُجُوْرَكُمْ يَوْمَ الْقِيٰمَةِ‌ فَمَنْ زُحْزِحَ عَنِ النَّارِ وَاُدْخِلَ الْجَـنَّةَ فَقَدْ فَازَ‌ وَمَا الْحَيٰوةُ الدُّنْيَاۤ اِلَّا مَتَاعُ الْغُرُوْرِ
ஒவ்வொரு ஆத்மாவும் மரணத்தை சுவைத்தே தீர வேண்டும். (எனினும்) உங்கள் (செயல்களுக்குரிய) கூலிகளை நீங்கள் முழுமையாக அடைவதெல்லாம் மறுமை நாளில்தான். ஆகவே, (அந்நாளில்) எவர் (நரக) நெருப்பிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு சுவர்க்கத்தில் நுழைவிக்கப்படுகிறாரோ அவர் நிச்சயமாக பெரும் பாக்கியத்தை அடைந்துவிட்டார். இவ்வுலக வாழ்க்கை மயக்கக் கூடிய (அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை. (அல்குர்ஆன் : 3:185)
வாழ்வில் எந்த ஒரு காலக் கட்டத்தில் நாம் இருந்தாலும் மரணத் திரை எப்போது விழும் என்று யாருக்கும் தெரியாது . தெரிந்தாலும் அதைத் தடுக்கவும் முடியாது .
குடும்பத்தினர் மீதும் , குழந்தைகள் மீதும் , உறவினர்கள் மீதும் அன்பு காட்டுங்கள் . உங்கள் ஆரோக்கியத்தின் மீதும் கவனம் செலுத்துங்கள் .
- ஸ்டீவ் ஜாப்ஸ்
ர.ரா

இறப்பதற்கு முன் பிரபலங்களின் கடைசி வார்த்தைகள். - (ஸக்றாத் 10)
(இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் 63)



இறப்பதற்கு முன் பிரபல மனிதர்கள் கூறிய கடைசி வார்த்தைகள்
இறப்பதற்கு முன்னர் யாராக இருப்பினும் ஏதேனும் முக்கிய செய்தி அல்லது அவர்களுக்கு பிடித்தமான நபர்களிடம் அவர்கள் கூற விரும்பும் வார்த்தைகளை தான் கூறுவார்கள். மேலும், இறக்கும் தருவாயில் யாரும் பொய் கூற மாட்டார்கள் என்பது அனைவரின் பொதுவான நம்பிக்கை.

சிலர் இறக்கும் போது கூறும் வார்த்தையில் ஆழ்ந்த பொருளும் அடங்கியிருக்கும். பொதுவாகவே பிரபலங்கள் மற்றும் சான்றோரின் வார்த்தைகள் ஓர் முன் உதாரணமாக தான் எடுத்துக் கொள்ள படுகின்றன.
இவர்கள் இறக்கும் முன் கூறிய வார்த்தைகள் பொன் எழுத்துக்களாகவே உலக ஏட்டில் பதிக்கப்படுகின்றன.இனி, இறப்பதற்கு முன் பிரபலங்கள் கூறிய கடைசி வார்த்தைகள் பற்றி காணலாம்...

அப்துல் கலாம்
"விளையாட்டு பசங்களா? நல்லா பண்ணிங்களா ?" இது தான் மாணவர் ஜனாதிபதி கடைசியாக பேசிய வார்த்தைகள்.
கார்ல் மார்க்ஸ்
"கடைசி வார்த்தைகள் முட்டாள்களுக்கானது, அது ஒரு போதும், முழுமையாக கூறப்படுவதில்லை". என கார்ல் மார்க்ஸ் இறப்பதற்கு முன்னர் கூறினார்.
பீத்தோவன்
இசை மேதை பீத்தோவன் தான் இறப்பதற்கு முன்னர், "நண்பர்களே நன்கு கைத்தட்டுங்கள், காமெடி முடியப் போகிறது " என கூறினார்.
இளவரசி டயானா
கார் விபத்தில் இறப்பதற்கு முன்னர் இளவரசி டயானா, "ஓ கடவுளே, என்ன நடந்தது ?" என கூறினாராம்.
சே-குவேரா
புரட்சியாளர் சே தான் இறக்கும் முன்னர், "வா கோழையே, நீ என்னை சுட வந்திருக்கிறாய். ஆனால், நீ கொல்ல போவது ஓர் மனிதனை மட்டும் தான் "
மால்கம் எக்ஸ்
மனித உரிமை புரட்சியாளர் மால்கம் எக்ஸ் தான் இறக்கும் போது, "சகோதரர்களே, சகோதரர்களே, இது அமைதிக்கான வீடு "(உலகம்) என கூறினார்.
மொஸார்ட்
பிரபல இசை அமைப்பாளர் மொஸார்ட் தான் இறக்கும் போது, "மரணத்தின் ருசியானது இதழ்களுக்கு மேலே உள்ளது, பூமிக்கு மேல் அல்ல" என்று கூறினார்.
ஸ்டீவ் ஜாப்ஸ்
ஆப்பிள் நிறுவனதின் முதன்மை செயலாளர் ஸ்டீவ் தான் இறக்கும் போது, "ஓ வாவ்... ஓ வாவ்... ஓ வாவ் " என்று கூறினார்.
பாப் மார்லி
பிரபல ரெக்கே பாடகர், பாடலாசிரியர், அமைதியை விரும்பிய மனிதர், "பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது" என கூறினார்.
ஜாக் டேனியல்
பிரபல விஸ்கி நிறுவன வியாபாரி ஜான் டேனியல் தான் இறக்கம் தருவாயில், "ஒரு கடைசி ட்ரின்க் ப்ளீஸ் " என்று கூறினார்.
அன்னை தெரேசா
"இயேசுவே உன்னை நேசிக்கிறேன், இயேசுவே உன்னை நேசிக்கிறேன்.." என்று கடைசியாக அன்னை தெரேசா கூறினார்.
இந்திராகாந்தி
இந்திராகாந்தி தான் இறக்கும் முன்னர் கடைசியாக கூறிய வார்த்தை,
"நமஸ்தே "
காந்தி
கோட்சே துப்பாக்கியால் சுட்ட போது, கீழே விழுந்த நொடியில் காந்தி கூறிய கடைசி வார்த்தை "ஹே ராம்"
(இத்துடன் ஸக்றாத் பதிவுகள் நிறைவு)
ர.ரா

மரணம் (மவ்த்து) 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 64)



மரணம் .அது உடலை விட்டு ரூஹு பிரிவது . ரூஹு பிரிந்தபோது உடல் பிரேதமாகும் .இவ்விதம் உடலையும் , ரூஹையும் பிரிப்பதற்காக அல்லாஹு தஆலா ஒரு மலக்கை நியமித்திருக்கிறான் . அவர் பெயர் இஸ்றாயீல் (அலை) ; மலக்குல் மவ்த் என்றும் சொல்படுகிறது .
மரணத்தை மனிதர் முதல் எல்லா ஜீவன்கள் மீதும் விதிக்கப்பட்டதால் அனைத்து உயிர்களும் இருப்பது நிச்சயம் .

மனிதர்களுக்கு மரணம் காரணம் பற்றியும் வரும் , பற்றாமலும் வரும்.
காரணம் பற்றி மவ்த்து வியாதியில் மவ்த்தாவது , காரணம் பற்றாத மவ்த்து திடீரென்று வரும் , இது சடுதி மரணம் .
மரணத்தினால் உண்டாகும் வேதனை கூறிய வாளினால் ஆயிரம் வெட்டுப் படுவதைப் பார்க்கிலும் அதிகக் கொடுமையா இருக்கும்.
மரணத்தின் வேதனையில் ஒரு ரோமக் கால் அளவு எடுத்து எல்லா ஜீவராசிகள் மீதும் வைத்தால் அதைத் தாங்க முடியாமல் ஒருமித்து மடிந்து போகும். அதாவது எல்லா ஜீவராசிகளும் தாங்கக் கூடாத மவ்த்தினுடைய முழு வேதனையும் , ஒவ்வொரு ஜீவனும் அனுபவிக்க வேண்டியதாக இருக்கின்றது .
மவ்த்து வருவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தவணை குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த தவணை முடியும்போது , அதற்கு ஒரு க்ஷணப் பொழுது முந்தாமலும் ,ஒரு க்ஷணப் பொழுது பிந்தாமலும் மவ்த்தாவார்கள் .

எவ்விதம் கெஞ்சி மன்றாடினாலும் மலக்கல் மவ்த்து (அலை) அவர்கள் உடன்பட மாட்டார்கள் .
இப்படித்தான் நபி மூஸா (அலை) அவர்களின் உயிரை வாங்க மலக்கல் மவ்த்து இஸ்ராயீல் வந்த போது ...
1339. அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

" உயிர் பறிக்கும் வானவர் ஒருவர் மூஸா(ரலி) அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்தபோது மூஸா(அலை) அவர்கள் அவரின் கண் பிதுங்கும் அளவுக்கு அடித்துவிட்டார்கள்.
உடனே அவர் அல்லாஹ்விடம் போய், 'இறைவா! மரணிக்க விரும்பாத ஓர் அடியானிடம் நீ என்னை அனுப்பிவிட்டாய்' என்றார்.
பிறகு அல்லாஹ் அவரின் கண்ணைச் சரிப்படுத்திவிட்டு, 'நீர் மீண்டும் அவரிடம் சென்று, அவரை ஒரு மாட்டின் முதுகில் கையை வைக்கச் சொல்லி, அவரின் கை எத்தனை ரோமங்களை அடக்கிக் கொள்கிறதோ அத்தனை ஆண்டுகள் அவர் உயிர் வாழலாம் என்பதையும் கூறும்' என அனுப்பி வைத்தான்.

(அவ்வாறே அவர் மூஸா(அலை) அவர்களிடம் வந்து கூறியபோது,) மூஸா(அலை) 'இறைவா! அதற்குப் பிறகு?' எனக் கேட்டதும் அல்லாஹ், 'பிறகு மரணம் தான்' என்றான்.
உடனே மூஸா(அலை) அவர்கள் 'அப்படியானால் இப்பொழுதே (தயார்)' எனக் கூறிவிட்டு அல்லாஹ்விடம் (பைத்துல் முகத்தஸ் என்னும்) புனிதத்தலத்திலிருந்து கல்லெறியும்

தூரத்திலுள்ள (புனிதத் தலத்திற்கு மிக அருகிலுள்ள) இடத்தில் தம் உயிரைக் கைப்பற்றுமாறு வேண்டினார்கள்.
மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறும்போது, 'நான் மட்டும் இப்போது அங்கு (பைத்துல் முகத்தஸில்) இருந்தால் உங்களுக்கு அந்த செம்மணற் குன்றிற்கருகில் உள்ள பாதையிலிருக்கும் மூஸா(அலை) அவர்களின் கப்ரைக் காட்டியிருப்பேன்' எனக் குறிப்பிட்டார்கள்.
ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 23. ஜனாஸாவின் சட்டங்கள்.
ர.ரா

Rahmath Rajakumaran

ஆதம் (அலை) அவர்கள் தம் இறைவனிடம் திரும்பி வந்தார்.
இறைவன் " நிச்சயமாக இதுதான் உம்முயை காணிக்கையும் .உன் வழித்தோன்றல்களின் காணிக்கையும் ஆகும்" என்றான் . பின் அல்லாஹ் தனது இரண்டு கைகைகளையும் மூடிக் கொண்டு " இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடு " என்றான் .
" நான் எனது இறைவனின் வலக்கரத்தை தேர்ந்துத்தேன் அதிலே ஆதமும் அவரது சந்ததியினரும் இருந்தனர்.
"இறைவா ! இவர்களெல்லாம் யார் ? "
"இவர்கள் உன் சந்ததியினர் " . அத்தனை பேர்களின் இரு கண்களுக்கிடையில் அவர்களின் வயது எழுதப்பட்டிருந்தது அதில் வசீகரமான முகமுடைய ஒருவர் இருந்தார்.
" இறைவா ! இவர் யார் ?"
"இவர் உன்னுடைய மகன் தாவூத் அவருக்கு நான் 40 வயதை எழுதியுள்ளேன் "
" இறைவா ! இவரது வயதை அதிகப்படுத்துவாயாக ! "
" நான் அதை எழுதி முடித்துவிட்டேன்"
" இறைவா ! நான் அவருக்கு என்னிடமிருந்து 60 வயதைத் கொடுக்கிறேன் "
" அவ்வாறே செய்கிறேன்"
ஆதம் (அலை) அவர்கள் சொர்க்கத்தில் இருந்தார் . பிறகு அங்கிருந்து இறக்கப்பட்டார்.. ஆதம் தமது வாழ்நாளை எண்ணிக் கொண்டிருந்தார்.
சிறிது காலம் கழித்து .உயிரைக் கைப்பற்றும் மலக்குல் மவூத் என்ற வானவர் வந்தார் .
" நீர் என்ன முன்னரே வந்து விட்டீர் எனக்கு ஆயிரம் ஆண்டுகள் எழுதப் பட்டிருந்தே ? "
" ஆமாம் . உண்மைதான் . என்றாலும் .நீங்கள் உங்கள் மகன் தாவூத்திற்கு 60 வருடங்களைக் கொடுத்து விட்டீரே ! "
ஆதம் நபி மறுத்தார் .எனவே அவரது சந்ததியினரும் மறுத்து வருகின்றனர் . மேலும் ஆதம் (அலை) அவர்களுக்கு மறதி ஏற்பட்டது. அவரது சந்ததியினருக்கும் மறதி ஏற்பட்டது .
இந்த நாளிலிருந்தே பூமியில் முதன் முதலாக எழுத்து உதயமாகி அதை எழுதி வைத்துக் கொள்ளும்படியும் , அதற்குரிய சாட்சிகளை ஏற்படுத்தும்படியும் கூறப்பட்டது " என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அபூ ஹுரைரா (ரலி) _ நூல் திர்மிதி ,முஸ்லிம் .

மரணம் (மவ்த்து) 02
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 65)



மரணம் தவணை குறிக்கப்பட்டது . அந்த தவணையானது அவன் எந்தத் தலத்தில் எவ்வித மறைவில் என்ன பந்தோபஸ்தில் இருந்த போதிலும் அவனை மரணம் கைப்பற்றிக் கொள்ளும் .
" நீங்கள் எங்கிருந்தபோதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமான உயர்ந்த (கோட்டை) கொத்தளத்தின் மீது நீங்கள் இருந்தபோதிலும் சரியே! "
(அல்குர்ஆன்: 4:78)

மவ்த்தின் தவணை இன்ன காலத்தில், இன்ன வேளையில் , இன்ன இடத்தில் , இன்ன விதத்தில் தனக்கு வருமென்று எவனும் அறிய மாட்டான். மவ்த்து திடுகூறாய் வந்து பிடித்துக் கொள்ளும். அப்போது யாராயிருந்தாலும் கைசேதப்படாமற் போக மாட்டார்கள் .
எவ்விதங் கட்டுக்காவலில் இருந்தாலும் , எங்கே ஓடி ஒளித்தாலும் மவ்த்து விடாது. இன்னான் இன்ன காலத்தில் இன்ன நேரத்தில் மவ்த்திருந்தால் அந்த நேரத்திலேயே மவ்த்தாவான் . அதை அவன் அறிய மாட்டான் . இது பற்றி ஒரு நிகழ்வு ,

முற்காலத்தில் மலக்குல் மவ்த்து (அலை) அவர்களை எல்லோரும் நேரிற் காண்பது வழக்கம்.
ஒரு நாள் ஸுலைமான் (அலை) அவர்களின் சபையில் அங்கிருந்த ஒரு பாலியரை மலக்குல் மவ்த்து (அலை) அவர்கள் உற்றுப் பார்த்து விட்டுப் போனார்கள் .

உடனே அந்த பாலியர் ஸுலைமான் நபி (அலை) அவர்களிடம்,
" நபியே! மலக்கல் மவ்த் வந்து என்னை உற்றுப் பார்த்து விட்டு போகிறார் . அதனால் எனக்கு அச்சமாக இருக்கின்றது . தாங்கள் தயவு செய்து இப்போதே என்னை சீனா ராஜ்ஜியத்திற் கொண்டு போய் விட்டு விடும்படி உங்களுக்கு கட்டுபட்ட காற்றுக்கு உத்திரவு செய்ய வேண்டும் "
அப்படியே நபியவர்கள் காற்றுக்கு உத்திரவு கொடுத்தார் .காற்று அவரை
சீனா ராஜ்ஜியத்திற் கொண்டு போய் விட்டுவிட்டது.
பிறகு மலக்கல் மவ்த் (அலை) அவர்கள் நபியவர்களின் சபைக்கு வரவே , அவரிடம் நபியவர்கள்,
" தாங்கள் அந்த பாலியரை ஏன் உற்றுப் பார்த்தீர்கள்? "
" நபியே! அந்தப் பாலியரின் ரூஹை இன்றைக்கு சீன ராஜ்ஜியத்தில் கைப்பற்றும்படி எனக்கு கட்டளை பிறந்திருக்கின்றது . அப்படி இருக்க அவர் இங்கிருக்கிறாரே , இங்கிருந்து இன்றைக்கே எப்படி சீனாவுக்கு எப்படி போவார் என்றுதான் உற்றுப் பார்த்தேன்"
" அந்த பாலியர் தங்களைக் கண்டு பயந்து சீனாவுக்குத் தம்மை காற்றின் மூலமாக அனுப்பி விடும்படி தாமாகக் கேட்டுக் கொண்டார். அப்படியே காற்று அவரை அங்கே கொண்டு போய் விட்டு விட்டது "
" அப்போ, எனக்கு வந்த கட்டளை மிகச் சரியாகத்தான் வந்திருக்கிறது. இதோ இப்போதே சீனா போய் அந்த பாலியரின்
ரூஹை கைப்பற்றுகிறேன்"
" நீங்கள் எங்கிருந்தபோதிலும் மரணம் உங்களை அடைந்தே தீரும்; மிகப் பலமான உயர்ந்த (கோட்டை) கொத்தளத்தின் மீது நீங்கள் இருந்தபோதிலும் சரியே! "
(அல்குர்ஆன்: 4:78)
இது துர்ருல் ஹினான் என்ற அரபி கிதாபில் உள்ளது.
ர.ரா

மரணம் (மவ்த்து) 03
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 66)



ஆது மக்களின் அரசனாக ஷத்தாத் முடிசூடிக் கொண்டான் . உருவச்சிலைகளை வணங்கும். அவனிடம் ஹூத் (அலை) ஏகத்துவத்தை போதித்தார்கள் .
"உங்களது உருவமற்ற இறைவனை வணங்கினால் என்ன கிடைக்கும்? "
"சொர்க்கம் "
"எப்படி இருக்கும் உன் இறைவனின் சொர்க்கம்?"
"தங்கத்தாலும் மணி முத்துக்களாலும் வைர வைடூரியங்களாலும் அது உருவாக்கப்பட்டது."

" ப்பூ .... அவ்வளவுதானே ?... அந்த சொர்க்கத்தை பூலோகத்திலேயே நானே உருவாக்கிக் கொள்கிறேன்" என்று தன் கீழ் உள்ள சிற்றரசர்கள் அத்தனை பேரிடமும் மேற்கண்ட தங்கம் போன்றவற்றை உடனடியாக கொண்டு வரச் சொன்னான் .

பூலோக சொர்க்கம் தன்னுடைய 600 வயதில் உருவாக்கப்பட்டு 900 வயதில் கட்டி முடிக்கப்பட்டது . இதற்கு
"இறமதாத்தில் இமாத்" என்ற பெயரும் சூட்டப்பட்டது.
இறைவன் கூட தன் குர்ஆனில் ,
" இதைப் போன்று ஒரு நகரம் இம்மண்ணில் உருவாக்கப்படவே இல்லை" என்று
குர்ஆனில் (89 : 8) குறிப்பிடுகிறான் .

கோலாகலமான திறப்பு விழா . தன் சமூக மக்கள் புடை சூழ ஷத்தாத் அங்கு வந்தான் . அந்த இடத்தில் பொன் நிற மான் ஒன்று மேயக் கண்டான் . ஏற்கனவே மயில்கள் ,குயில்கள், அன்னப்பறவைகள் , முயல்கள் போன்றவற்றை கொண்டு அழகுப்படுத்தப்பட்ட பூலோக சொர்க்கத்தில் பொன் மான் மேய்ந்தால் இன்னும் அழகாக இருக்குமே...
பொன்மானை பிடிக்க விரட்டினான் ஷத்தாத் , கூடவே அவன் சமூகமும் விரட்டியது . அது இறக்கை கொண்டு பறக்க ஆரம்பித்தது . அந்த இடத்தில் பார்க்க அச்சமுற தோற்றத்தில் ஒரு ஆள்,
"பூலோகத்தில் சொர்க்கம் கட்டினால் இறப்பே வராத இறைவன் என்ற நினைப்போ? "
" யார் நீ ?"
"இஸ்ராயீல் "
" இங்கு என்ன செய்ய வந்தீர்?"
" உன் உயிரை வாங்க "

ஒரே ஒரு சப்தம் ஷத்தாத் உட்பட அத்தனை பேரும் மாண்டனர் ... இப்படி ஒரு வரலாறு பேசுகிறது இறமதாத்தில் இமாத் என்ற பூலோக சொர்க்த்தை திறக்க அதன் தலைவாயிலுக்கு வந்து ஷத்தாத் வலது காலை முன்வைத்து இடது காலை தூக்கும் அந்த இடவெளி நேரத்தில் அவன் உயிர் வாங்கப்பட்டது. இப்படி ஒரு வரலாறும் பேசுகிறது.
காலச் சக்கரம் சுழன்றது .

இறைவன் . "இஸ்ராயீலே , நீர் எப்போதாவது எவர் மீதாவது இரக்கம் கொண்டிருக்கிறீரா ?"
"ஆம் இறை பெரியோனே ...ஒரு தடவை நடுக் கடலில் கப்பல் ஒன்று புயல் காற்றில் அலைக்கழித்து கவிழ்ந்து அத்தனை பேரின் உயிரும் வாங்கப்பட்டது.
அத்தருணத்தில் ,ஒரு கர்ப்பிணி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்து மிதக்கும் சிறிய மரத்துண்டில் வைத்து நீந்தினாள் . அந்த சமயம் அவள் உயிரையும் வாங்க ஒரு மீன் அவளை கடித்து குதறி விழுங்கியது .

இந்த நிகழ்வு என்னை இரக்கப்பட வைத்தது " என்றார் இஸ்ராயீல் (அலை) அவர்கள்.
"அடுத்து?" என்று கேட்டான் இறைவன்

ஷத்தாத், பூலோக சொர்க்கத்தை சுகிச்சு சுகிச்சி கட்டினான் . அத்தனை வருடம் கட்டிய சொர்க்கத்தை ஒரு தடவையாவது அவன் முழுமையாக உள்ளே போய் பார்ப்பதற்குள் அவன் உயிர் வாங்கியது எனக்கு ரொம்பவும் இரக்கமாக இருந்தது என்றார் இஸ்ராயீல் (அலை) அவர்கள் .
"தாயில்லாமல் அன்று கடலில் தத்தளித்த அந்த ஆண் குழந்தைதான்
இந்த ஷத்தாத் " - என்றான் இறைவன்
உயிர் வாங்கும் இஸ்ராயீல் (அலை) அதிர்ந்து விட்டார்கள் .
அடுத்து
فَلَمَّا قَضَيْنَا عَلَيْهِ الْمَوْتَ مَا دَلَّهُمْ عَلٰى مَوْتِهٖۤ اِلَّا دَآ بَّةُ الْاَرْضِ تَاْ كُلُ مِنْسَاَتَهٗ فَلَمَّا خَرَّ تَبَيَّنَتِ الْجِنُّ اَنْ لَّوْ كَانُوْا يَعْلَمُوْنَ الْغَيْبَ مَا لَبِثُوْا فِى الْعَذَابِ الْمُهِيْنِ
ஸுலைமானுக்கு நாம் மரணத்தை விதித்தபொழுது அவர் இறந்துவிட்டார் என்பதை, அவர் சாய்ந்திருந்த தடியை அரித்து விட்ட பூச்சியைத் தவிர (மற்ற எவரும்) அந்த ஜின்களுக்கு அறிவிக்கவில்லை.
(அவர் சாய்ந்திருந்த தடியைக் கரையான் பூச்சிகள் அரித்துவிட்டன. ஆகவே, அதன் மீது சாய்ந்திருந்த ஸுலைமான் கீழே விழுந்துவிட்டார்.) அவர் கீழே விழவே (வேலை செய்து கொண்டிருந்த) அந்த ஜின்களுக்கு தாங்கள் மறைவான விஷயங்களை அறியக்கூடுமாக இருந்தால் (இரவு பகலாக உழைக்க வேண்டிய) இழிவு தரும் இவ்வேதனையில் தரித்திருக்கமாட்டோம் என்று தெளிவாகத் தெரிந்தது.
(அல்குர்ஆன்: 34:14)

நடுக் கடலில் குழந்தையை பிரசவித்த ஷத்தாத்தின் தாயாக இருந்தாலும் சரி,
இறைவனையே எதிர்த்து , அவன் உண்டாக்கிய சொர்க்கத்திற்கு போட்டியாக பூலோகத்தில் சொர்க்கம் கட்டிய ஷத்தாத்தும் சரி , இறை இல்லாமான பைத்துல் முஹத்தீஸைக் கட்டிய நபி ஸுலைமான் (அலை) அவர்களாக இருந்தாலும் சரி ...
யாருக்கு எப்போது மரணம் ? எப்படி மரணம் என்பதை தெள்ளத் தெளிவாக கட்டளையை அனுப்பிக் கொண்டே இருப்பான் அந்த வல்ல நாயகன் .
ர.ரா

மரணத்தின் வேதனை 04
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 67)



உமர் (ரலி) அவர்கள், கஅபு (ரலி) அவர்களிடம் , " கஅபே ! மரணத்தைப் பற்றி எனக்கு விபரம் கூறுங்கள் "
" முட்கள் நிறைந்த ஒரு மரக்கிளையை ஒரு மனிதனுடைய வயிற்றினுள் விட்டு, பிறகு அதை வேகமாக இழுத்தால், அந்த ஒவ்வொரு முள்ளும், ஒவ்வொரு நரம்பைப் பிடுங்கிக் கொண்டு வருமே, அந்த வேதனையை விடக் கடுமையானதாகும் மரண வேதனை "
நபி மூஸா (அலை) அவர்களின் ரூஹானது , (உயிர்) இறைவனிடம் சென்ற போது , "மூஸாவே ! மரண நிலை உமக்கு எப்படி இருந்தது ?

" என்னை ஒரு சிட்டுக் குருவியைப் போல் நான் கண்டேன். அக்குருவி கொதிக்கும் எண்ணெய்யில் போட்டு பொரிக்கப்படுகிறது.
ஆனால் கொதிக்கும் எண்ணெய்யில் அக்குருவி மரணமடையவுமில்லை ! அதை விட்டுத் தப்பியோடி சுகம் பெறவும் அதனால் முடியவில்லை .இந்த நிலையில் நானிருந்தேன் "
நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் ரூஹ் இறைவனிடம் சென்றபோது , "இப்ராஹீமே ! மரண நிலை உமக்கு எப்படி இருந்தது ? "
நனைக்கப்பட்ட உரோமங்களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் ஒரு வளைந்த கம்பியை வேகமாக இழுத்தால், அக்கம்பியினால் எப்படி உரோமங்கள் இழுக்கப்பட்டுக் கொண்டு வருமோ , அதைவிடக் கடினமாக இருந்தது "

" இப்ராஹீமே! உமக்கு மவுத்தின் நிலையை நாம் இலேசாக்கி வைத்தோம்"
நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சங்கைக்குரிய ரூஹை , வெண்ணெயில் உள்ள முடியை எடுப்பதைப் போல் கைப்பற்றியும் , ரோஜா மலர் போன்றிருந்த நாயகத்தின் வதனம் வாடிய மாதுளைத் தோல்போல் மாறி விட்டதாகக் கூறப்படுகிறது .
இந்த நேரத்தில் "இறைவா ! எனது உம்மத்தினருக்கு மரண வேதனையை இலேசாக்கி வைப்பாயாக ! என்று
நபி (ஸல்) அவர்கள் கூறிக் கொண்டிருந்தார்கள்.
நபி (லல்) அவர்களின் மரண வேதனையைப் பார்த்த எனக்கு , எவருமே இதிலிருந்து தப்ப முடியாது என்று உறுதி அதிகமாகியது "
- ஹஜ்ரத் ஹஸன் (ரலி)
4462. அனஸ்(ரலி) அறிவித்தார்

நபி(ஸல்) அவர்களின் நோய் கடுமையானபோது, அவர்களுக்கு மயக்கமேற்படத் தொடங்கியது. அப்போது ஃபாத்திமா(ரலி), 'அந்தோ! என் தந்தைக்கு ஏற்பட்ட மரண வேதனையே!' என்று கூறினார்கள்.
ஃபாத்திமா(ரலி) அவர்களை நோக்கி நபி(ஸல்) அவர்கள், 'இன்றைய தினத்திற்குப் பின் உன் தந்தைக்கு எந்த வேதனையும் இல்லை' என்று கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் இறப்பெய்தியவுடன், ஃபாத்திமா(ரலி), 'அழைத்த அதிபதியின் அழைப்பை ஏற்ற என் தந்தையே! ஃபிர்தௌஸ் எனும் சொர்க்கத்தை தம் உறைவிடமாக்கிக் கொண்ட என் தந்தையே! இந்த இறப்புச் செய்தியை நாங்கள் (வானவர்) ஜிப்ரீல் (அலை) அவர்களுக்கு அறிவிக்கிறோம், என் தந்தையே!' என்று கூறினார்கள்.
நபி(ஸல்) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டபோது ஃபாத்திமா(ரலி) (என்னை நோக்கி), 'அனஸே, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மீது மண்ணைப் போட உங்கள் மனம் எப்படி இடம் தந்தது?' என்று கேட்டார்கள்.
ர.ரா

மரணத்திற்குப் பின் ஆன்மாவின்
அவலங்கள் 05
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 68)

மரணத்திற்குப் பிறகு பாவத்மாக்கள் அநேகர் " நான் உலகில் அல்லாஹு தஆலாவுக்கு வழிப்படாமல் மாறு செய்தேன் . பரிகாசக்காரர்களில் ஒருவனாக இருந்தேன் . அதனால் நேரிட்ட கைசேதம் எனக்கு மிகவும் பெரிதாயிற்று ; இந்த மாதிரியெல்லாம் இருக்கும் என்பதை வாழும்நாளில் என் மனம் முரண்டாகவே நிராகரித்து விட்டதே , என் பகுத்தறிவுக்கும் இது தென்படாமல் போய் விட்டதே , இனி இப்போது என்ன செய்வேன் " என்றும் ....
மற்றும் அநேகர் " என்னை இப்போது மவ்த்தாக்காமல் இன்னும் சில காலம் உயிரோடு இருக்க விட்டால் நன்மை செய்தவர்களில் நானும் ஒருவனாகவே " என்றும் ....
இன்னும் அநேகர் , " என் எஜமானே ! எனக்கு இந்த மரண கண்டத்தை விட்டு விடுதலை செய்ய வேண்டுகிறேன். அப்படி செய்தால் , நான் செய்யாமல் தவறிப் போன நற்கருமங்களைச் செய்து முடிக்கிறேன் " என்றும் ...

இன்னும் அதிகம் பேர் , " எஜமானே ! என்னை இன்னும் சொற்ப நாட்கள் தவணைக் கொடுத்து , இந்த மவ்த்தி லிருந்து மீளுவிப்பாயானால் , நான் தான தருமங்களைச் செய்து ஸாலிஹானவர்களுடன் ஆகிவிடுவேன்" என்றும் ...
இவ்வாறெல்லாம் அவனவன் பிதற்றிக் கொண்டு அலைவானேத் தவிர மேலிடத்தில் கவனிக்கப்படும் சொற்கள் அல்ல ; அவற்றால் எந்த பிரயோஜனமும் எப்போதும் ஏற்படாது.
وَاَنْفِقُوْا مِنْ مَّا رَزَقْنٰكُمْ مِّنْ قَبْلِ اَنْ يَّاْتِىَ اَحَدَكُمُ الْمَوْتُ فَيَقُوْلَ رَبِّ لَوْلَاۤ اَخَّرْتَنِىْۤ اِلٰٓى اَجَلٍ قَرِيْبٍۙ فَاَصَّدَّقَ وَاَكُنْ مِّنَ الصّٰلِحِيْنَ
உங்களுக்கு மரணம் வருவதற்கு முன்பாகவே, நாம் உங்களுக்குக் கொடுத்தவைகளிலிருந்து தானம் செய்யுங்கள். (அவ்வாறு செய்யாதவன் மரணிக்கும் சமயத்தில்,) "என் இறைவனே! ஒரு சொற்ப காலத்திற்கு என்னை விட்டுவைக்க வேண்டாமா? (அவ்வாறு விட்டால்,) நான் தானமும் செய்வேன்; (நன்மைகளைச் செய்து) நல்லோர்களிலும் ஆகிவிடுவேன்" என்று கூறுவான்.
(அல்குர்ஆன்: 63:10)
وَلَنْ يُّؤَخِّرَ اللّٰهُ نَفْسًا اِذَا جَآءَ اَجَلُهَا وَاللّٰهُ خَبِيْرٌ بِمَا تَعْمَلُوْنَ
(எனினும்) யாதொரு ஆத்மாவுடைய (மரணத்தின்) தவணை வரும் பட்சத்தில் அதனை அல்லாஹ் பிற்படுத்தவே மாட்டான். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிந்தே இருக்கின்றான்.
(அல்குர்ஆன்: 63:11)
ர.ரா

"ஸிராத் " என்கிற கடக்கும் பாலத்தின் கட்டமைப்பு 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 69)



"ஸிராத்" என்பது பாலம்; விசாரணைத் தளமான மௌகிபுக்கும், சுவர்க்கத்திற்கும் இடையில் நீண்டிருக்கும் இப் பாலம் நரகத்தின் மீது போடப்பட்டிருக்கும்.

இப் பாலம் வாளை விட அதிகக் கூர்மையுள்ளதாய் , தலைமுடியைப் பார்க்கிலும் அதிக மெல்லியதாய் உள்ள பாலம் . உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா ?
பாலத்தின் தூரம் ஐம்பதினாயிர வருஷப் பிரயாணத் தூரமுள்ள பாலம் . இதில் முப்பதினாயிர வருஷப் பிரயாணத் தூரம் செங்குத்தான ஏற்றமுள்ளதாகவும், பதினாயிர வருஷப் பிராயாணத் தூரம் தலை குப்புற தள்ளும் கிடு கிடு பள்ளத்தாக்கானதாகவும் , மீதிமுள்ள நான்கு வருஷப் பிரயாணத் தூரம் சம தளமாகவும் இருக்கும் .

சறுக்குதலும் ,வழுக்குதலுமே அதன் குணம் . பாலத்தில் எங்கே பார்த்தாலும் நீண்டதும் , வளைந்ததுமான இரும்பு கொக்கிகளும் , நஜ்த் பகுதியில் முளைக்கும் கருவேல மர முற்களும் முளைத்திருக்கும் . பாலம் முழுவதும் இருள் சூழ்ந்திருக்கும் .
பாலத்தின் அடியில் நரகத்தின் நெருப்பு எரிவதால் இருண்ட அடர் புகையும் பாலத்தின் மீது எப்போதும் படர்ந்திருக்கும் .

அமானிதத்தையும் , உறவு பந்தத்தையும் பாலத்திற்கு அனுப்பப்படும். அவையிரண்டும் ஸிராத் பாலத்தின் இருபக்கங்களிலும் வலது, இடதுபுறமாக நின்று கொள்ளும் .
அமானிதத்தை ஆட்டைப் போட்டவர்களை பாலத்தின் வலது புறத்திலிருந்து நரக நெருப்புக் கிடங்கில் தள்ளப்படும் .
உறவு பந்தத்தை முறித்தவர்களை பாலத்தின் இடது புறத்திலிருந்து நரக நெருப்புக் கிடங்கில் தள்ளப்படும் .
இன்னும் அந்தப் பாலம் ஒரே ஸ்ராத்தாக இருந்தாலும் , இதில் ஏழு ஜஸறுகள் என்ற சிறு சிறு பாலங்களும் , அகபா என்னும் மலை மேற் பாதை கொண்டதுமாக ஸிராத் என்கிற மெயின் பாலம் அமைக்கப்பட்டிருக்கும் .

"ஹஷ்ரு "என்கிற சேர்க்குதல் மைதானத்தில் இருந்து, அந்த ஸிராத் என்கிற மெயின் பாலத்திற்கு போவதற்காகப் ஜஸறு என்கிற சிறு சிறு பாலங்கள் 7 போடப்பட்டிருக்கும் அவைகளை கடந்து ஸிராத் போக வேண்டும்.
அந்த ஜஸறு என்கிற சிறு சிறு பாலங்களும் நரகத்தின் மீதே போடப்பட்டிருக்கும் . நரகத்தின் எரிமலைகள் அநேகம் இந்த ஜஸறு என்கிற சிறு சிறு பாலங்களுக்கும் மேலே வளர்ந்து உயர்ந்திருக்கும் .
இந்த ஜஸறுகளாகிய சிறு சிறு பாலங்களையும் , அகபா என்னும் மலை மேற் பாதைகளையும் கடந்துதான் மேற்படி ஸிராத்திற்கு போக முடியும்.
நான் உங்களுக்கு பாலத்தின் அமைப்பை தனித்தனியாக சொல்லி இருக்கிறேன் . ஆனாலும் இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்ததுதான் 'ஸிராத் ' என்று சொல்லப்படும் .

ஸிராத் பாலத்து நான்கு புறமும் நரகத்து நெருப்பு கொழுந்து விட்டுத் தாவிச் சூழ்ந்து கொண்டிருக்கும் .
இந்த ஸிராத்தில் நடக்கிற ஒவ்வொரு வரையும், மேற்சொன்ன ஐஸறுகளாகிய சிறு சிறு 7 பாலங்களிலும் , முதற் சிறு பாலத்தில் ஈமானைப் பற்றியும் ,
இரண்டாம் சிறு பாலத்தில் தொழுகையைப் பற்றியும் , மூன்றாம் சிறு பாலத்தில் ஸக்காத்தைப் பற்றியும் , நான்காம் சிறு பாலத்தில் நோன்பைப் பற்றும் , ஐந்தாம் சிறு பாலத்தில் ஹஜ்ஜு , உம்ராவைப் பற்றியும் , ஆறாம் சிறு பாலத்தில் ஒலு , முழுக்குகளைப் பற்றியும் , ஏழாம் சிறு பாலத்தில் பந்துக்களுடன் உறவாடுவாடி , ஒருவருக்கொருவர் செய்த அநியாயங்களைப் பற்றியும் , மலக்குகள் விசாரிப்பார்கள் .

விசாரணை விசாரிக்கப்படும் போது அவரவர் அதற்குரிய தக்க ஜவாபு சொல்லாமல் குற்றங்கண்டுப் பிடிக்கப்பட்டால் , பாலத்தில் கடந்து போக முடியாதவாறு அங்கங்கே தடுக்கப்பட்டுப் போவார்கள்.

ثُمَّ لَنَنْزِعَنَّ مِنْ كُلِّ شِيْعَةٍ اَيُّهُمْ اَشَدُّ عَلَى الرَّحْمٰنِ عِتِيًّا
பின்னர், ரஹ்மானுக்கு மாறு செய்வதில் கடினமாக இருந்தவர்கள் அனைவரையும் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் நிச்சயமாக நாம் பிரித்து விடுவோம்.
(அல்குர்ஆன்: 19:69)

ثُمَّ لَنَحْنُ اَعْلَمُ بِالَّذِيْنَ هُمْ اَوْلٰى بِهَا صِلِيًّا
பின்னர், அவர்களில் நரகத்தை அடைய மிக்க தகுதி உடையவர்கள் யார் என்பதை நிச்சயமாக நாம் அறிந்து கொள்வோம்.
(அல்குர்ஆன் :19:70)

وَاِنْ مِّنْكُمْ اِلَّا وَارِدُهَا ۚ كَانَ عَلٰى رَبِّكَ حَتْمًا مَّقْضِيًّا
அதனைக் கடக்காது உங்களில் எவருமே தப்பிவிட முடியாது. இது உங்களது இறைவனிடம் முடிவு கட்டப்பட்ட மாற்ற முடியாத தீர்மானமாகும்.
(அல்குர்ஆன் :19:71)

ثُمَّ نُنَجِّى الَّذِيْنَ اتَّقَوْا وَّنَذَرُ الظّٰلِمِيْنَ فِيْهَا جِثِيًّا
ஆனால், நாம் இறை அச்சத்துடன் வாழ்ந்தவர்களை பாதுகாத்துக் கொள்வோம். அநியாயக்காரர்களை (அவர்கள்) முழந்தாளிட்டவர்களாக (இருக்கும் நிலைமையில்) அதில் தள்ளிவிடுவோம்.
(அல்குர்ஆன்: 19:72)
ர.ரா

ஸிராத் பாலத்தில் அணிவகுப்பு 2
(இஸ்லாத்தின் அடிப்படைக்கோட்பாடுகள் 70)



இதுவரை இவ்வுலகிற்கு வந்த 1, 24,000 நபிமார்களின் கூட்டத்தார்கள் தங்கள் தங்கள் நபியின் பின் அணு வகுத்து நிற்பார்கள் .
ஸிராத் பாலத்தில் முதன் முதலில் ஏறிக் கடப்பதற்காக நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுடைய உம்மத்துக்களாகிய நம்மை அழைக்கப்படும் .

விசாரணைத் தளமான மௌகிபுக்கும் , சுவர்க்கத்திற்கும் இடையில் நீண்டிருக்கும் இப் பாலத்தின் மீது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தன் கூட்டத்தாராகிய நம்மை கூட்டிக் கொண்டு போய் விடுவார்கள் .

நாம் எல்லோருமே நம் நபியவர்களின் சிரத்தை எடுத்து நம்மை ஒழுங்குப் படுத்துவதையும் , சோர்ந்து நிற்கும் நமக்கு அவ்வப்போது ஆறுதலாக பேசுவதுமாக இருப்பதைக் கண்டு புளங் காகிதம் நாம் கொள்வோம் .

நம் கூட்டத்தாரை அடுத்து நபி ஈஸா (அலை) அவர்களுடைய உம்மத்தும், அவர்களை அடுத்து நபி மூஸா (அலை) அவர்களுடைய உம்மத்தும், இப்படியாக ஒவ்வொரு நபிமார்களுக்குப் பின் அந்தந்த நபியை பின்பற்றிய அந்தந்த உம்மத்கள் அணுவகுத்து நிற்கும்.
கடைசியில் நபி நூஹு (அலை) அவர்களும் , அவர்களுடைய உம்மத்தும் வந்து சேர்ந்து , முறைப்படி பாலத்தில் ஏறி நடப்பார்கள் .

"தக்வாவுடன் – பயபக்தியுடன் இருந்தார்களே அவர்களை நாம் ஈடேற்றுவோம்;
ஆனால், அநியாயம் செய்தவர்களை அ(ந்நரகத்)தில் முழந்தாளிட்டவர்களாக விட்டு விடுவோம்." குர்ஆன் (19:72)
அப்போது ஸிராத் பாலத்தின் முன் முகப்பில் ஜிப்ரயீல் (அலை) அவர்களும் ,
பாலத்தின் நடுவில் மீக்காயீல் (அலை) அவர்களும் , இவ்விரு மலக்குகளுக்கு இடையில் நரகத்தின் அதிபதியான மலக்கு மாலிக் (அலை) அவர்களும் நிற்பார்கள் .
பின்பு எல்லோரையும் பாலம் ஏறிக் கடக்கும்படி கட்டளைப் பிறக்கும். . உடனே எல்லோரும் பாலம் கடக்க ஆரம்பிப்பார்கள் .

பாலத்து வாசலை அடுத்து நிற்கும் மலக்கு மாலிக் (அலை) அவர்கள் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களைப் பார்த்து,
" முஹம்மதே ...! தங்களுடைய உம்மத்தில் அல்லாஹு தஆலா உடைய உத்திரவு யார் யாருக்கு உண்டோ அவர்கள் இந்த பாலத்தைக் கடப்பார்கள். மற்றவர் கால் சறுக்கி நரகத்தில் விழுவார்கள். ஆகையால் உம் உம்மத்தில் பாவச் சுமை இல்லாதவர்களை பாலத்தைக் கடக்கச் சொல்லுங்கள் . பாவச் சுமை உள்ளவர்களை இப்படியே நரகத்தில் இறங்கி விடச் சொல்லுங்கள் "
அப்போது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் " மாலிக்கே ...! உம்முடைய முகத்தை என் உம்மத்துப் பார்த்தால் அவர்கள் மனங்கலங்கி கால்கள் நடுங்கும். ஆகையால் அல்லாஹ்வின் மீது ஆணை நீர் உமது முகத்தைத் திருப்பிக் கொள்ளும் "
" முஹம்மதே.... ! தாங்கள் மட்டும் இல்லாவிட்டால் தங்கள் உம்மத் முன்னமே நரகம் போய்ச் சேர்ந்திருப்பார்கள் " என்று சொல்லிவிட்டு மாலிக் (அலை) அவர்கள் தன் முகத்தை திருப்பிக் கொள்வார்கள் .

ஸிராத் பாலத்தில் ஏறி நடக்க ஆரம்பிக்கும்போது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுடைய உம்மத்து பத்து கூட்டமாகப் பிரிவார்கள் .
எல்லாக் கூட்டத்திற்கும் முன் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் நின்று கொண்டு , தங்கள் உம்மத்தைத் திரும்பிப் பார்த்து , "என்னுடைய உம்மத்தே ...! கலங்காதே, தயங்காதே , என்னை நீங்கள் தொடர்ந்து கொண்டு பிரிந்து விடாமல் என் பின்னாலேயே வாருங்கள் " _ என்று சொல்லிவிட்டு முன்னாள் நடப்பார்கள் .
நபியவர்களைத் தொடர்ந்து உம்மத்தாகிய நீங்களும் , நானும் , நம் சந்ததியினரும் இன்ஷா அல்லாஹ் நடப்போம் .
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் முன் செல்ல, அவர்களுடைய உம்மத் பின் தொடர, ஹஜரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் , " இரட்சகனே .. எனதிறைவா..! இவர்கள் எல்லோரையும் ஸலாமத்தாக்கி வைப்பாயாக என்று சொல்லிக் கொண்டே நம் பின் வருவார்கள் .
ர.ரா
Mohamed Rafiq
நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) மஹ்ஷரில் ஒரே நேரத்தில் மூன்று இடத்தில் காண கிடைப்பார்கள்.
1, ஷபாஅத் செய்யும் இடத்தில
2, ஹவ்துல் கவ்சர் நீர் தடாகத்தில்
3, ஸிராத் பாலத்தில் உம்மத்துகள் நரகத்தில் விழாமல் பாதுக்காக்க.
ஒரு சமயம் கேள்வி பட்டது சரியா என்று தெரியாது.

ஸிராத் பாலத்தில் அணிவகுப்பு 3
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 71)



" ஏ ... மஹ்ஷரில் கூடின கூட்டங்களே! என்னுடைய ஹபீபு முஹம்மதுடைய மகள் பாத்திமதுஸ் ஸுஹறா ஸிராத் பாலத்தை கடக்கப்போகிறபடியால் நீங்கள் எல்லோரும் உங்கள் பார்வைகளைத் தாழ்த்தித் தலை குனிந்து கொள்ளுங்கள் " என்று அர்ஷ் -க்குள்ளி லிருந்து ஒரு சப்தம் வரும் . காரணம் அவர்கள் சுவர்க்கத்தின் தலைவி அல்லவா....


அன்றியும் காவல் என்கிற அமானையும் , கிருபை என்கிற உம்மத்தையும் ,ஸிராத் பாலத்தில் வலது , இடதுபுறத்தில் அல்லாஹு தஆலா அனுப்பி நிறுத்துவான் .
பிறகு பாத்திமா (ரலி) அன்ஹா அவர்கள் எழுபதினாயிரம் ஹூருல்ஈன்களுடன் முன் சொன்ன பத்துக் கூட்டத்தாரில் முதற் கூட்டம் பின் தொடர மின்னல் வேகத்தில் அப்பாலத்தைக் கடந்திடுவார்கள் .
அந்த முதற் கூட்டத்தில்தான் ஸாலிஹான பெண்கள் இருப்பார்கள் .
இரண்டாம் கூட்டத்தார் காற்றின் வேகத்தில் பாலத்தைக் கடப்பார்கள்.
மூன்றாம் கூட்டத்தார் தேசிக் குதிரையின் வேகமாய் பாலத்தைக் கடப்பார்கள் .
நான்காம் கூட்டத்தார் ஒட்டகையின் வேகமாய் பாலத்தைக் கடப்பார்கள்.
ஐந்தாம் கூட்டத்தார் விரைந்தோடியும் பாய்ச்சலிலும் , பாலத்தைக் கடப்பார்கள்.
ஆறாம் கூட்டத்தார் சாதாரண நடையில் பாலத்தைக் கடப்பார்கள்.
ஏழாம் கூட்டத்தார் மொள்ள மொள்ள நடந்தும் , அப்படி நடக்கவும் இயலாமல் இடையிடையே உட்கார்ந்தும் , நின்றும் , தவழ்ந்தும் பாலத்தைக் மிக மெதுவாக கடப்பார்கள்.
எட்டாம் கூட்டத்தார் சிலர் நெஞ்சால் தவழ்ந்தும் , சிலர் பாலத்தில் உள்ள இரும்பு கொக்கிளாலும்

, முற்களாலும், கொளுவப்படுவதுமாய் காயப்பட்டு, பின்
அவைகளிலிருந்து விடுபட்டும், சிலர் ஒரு நாள் பிரயாணமாயும், சிலர் இரு நாள் பிரயாணமாயும், சிலர் ஓரிரு மாதப் பிரயாணமாயும் , சிலர் ஒரு வருட, சிலர் இரு வருடப் பிரயாணமாயும் , சிலர் அதிகப்பட்ச இருபத்தைந்து வருடப் பிரயாணமாயும் அப்பாலத்தைக் கடப்பார்கள்.
அவர்கள் இவ்வாறு பாலத்தை கடக்கும் வேதனையில் " யா முஹம்மது ! "
"யா முஹம்மது! " என்று அலறுவார்கள் .
அப்போது மலக்குகள் , " யா ரப்பே !
யா ரப்பே ! இவர்களை ஸலாமத்தாக்கு , இவர்களை ஸலாமத்தாக்கு " என்று சொல்வார்கள் .
ஒன்பதாம் கூட்டத்தாரும் , பத்தாம் கூட்டத்தாரும் ஜஸறு என்ற சிறு சிறு பாலத்திலும் , அகபா என்னும் மலை மேற் பாலத்திலும் உள்ள கொக்கிகள் , மற்றும் முட்களால் பற்றி இழுக்கப்பட்டு , காயப்பட்டு அங்கேயே தடைபட்டுப் போவார்கள் . உடனே நபியவர்கள் வந்து அந்த இடர்பாட்டினை நீக்கி விடுவார்கள் .
ஒன்பதாம் கூட்டத்தாரும் , பத்தாம் கூட்டத்தாரும் பற்றியும் , இவர்கள் காரியம் எப்படி என்று அல்லாஹு தஆலா விடம் நரகத்தின் அதிபர் மலக்கு மாலிக் (அலை) அவர்கள் கேட்பார்.
அதற்கு அல்லாஹு தஆலா , " என் ஹபீப் முஹம்மதும் , அவர்களை தொடர்ந்து போகிற ஸாலிஹானவர்களும் சுவர்க்கம் புகும் வரை , அவர்களை கியாமத்து ஓடையில் ஒளித்து

வையும் " என்று கட்டளை இடுவான் . அவர்களும் அவ்விதமே அந்த ஓடையில் மறைத்து வைக்கப்பட்டிருப்பார்கள் .
பிறகு நபி (ஸல்) அவர்கள் பாலத்தைப் பார்த்து தங்கள் உம்மத்தில் பாலங்கடந்தவர்கள் போக,மீந்தவர்களில் ஒருவரையும் காணாமல் , அப்படி எவரெனும் இருந்தால் , சுவர்க்கத்தில் காணலாமென்று நினைத்து அவர்களும் பாலத்தைக் கடந்திடுவார்கள் .
அதன் பிறகு நபி ஈஸா (அலை) அவர்களும் , அவர்களின் உம்மத்துடன் ஒருவர் பின் ஒருவராக பாலத்தைக் கடப்பார்கள் .
இவ்வாறாக ஒவ்வொரு நபிமார்களும் , அவர்களின் கூட்டத்தார்களும் ஸிராத் பாலத்தை கடந்து போவார்கள் .
ர.ரா
இத்துடன் ஸிராத் என்கிற பாலத்தின் பதிவுகள் நிறைவு பெறுகிறது

Rahmath Rajakumaran
பின்னர் அமானிதத்தையும் உறவு பந்தத்தையும் அனுப்பப்படும். அவையிரண்டும் ஸிராத் பாலத்தின் இருபக்கங்களிலும் வலது, இடதுபுறமாக நின்று கொள்ளும். உங்களில் முந்தியவர் மின்னலைப் போல அப்பாலத்தைக் கடந்து செல்வார்.
அப்பொழுது நான் (அபூஹுரைரா) கேட்டேன்.. என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டும் (யா ரசூலுல்லாஹ்!) மின்னலின் வேகம் என்றால் எவ்வாறு? அதற்கு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், நீங்கள் மின்னல் எவ்வாறு கண் சிமிட்டும் நேரத்தில் கடந்து செல்கிறது என்பதைப் பார்க்கவில்லையா? என்று கூறினார்கள்.
பின்னர் (உங்களில் சிலர்) காற்றைப் போன்றும், பின்னர் சிலர் பறவை பறப்பதைப் போன்றும், (பின்னர்) வேகமாக ஓடும் மனிதனின் ஓட்டத்தைப் போன்றும் (வேகமாக) அப்பாலத்தைக் கடந்து செல்வார். (இவ்வாறு) அவர்களுடைய அமல்கள் அவர்களை அழைத்துச் செல்லும்.
உங்களுடைய நபி ஸிராத் பாலத்தின் நின்றவராக என் இரட்சகனே! ஈடேற்றமடைய செய்வாயாக! ஈடேற்றமடைய செய்வாயாக! எனக் கூறிக் கொண்டிருப்பார்.
(இவ்வாறாக மக்கள் அதனைக் கடந்து கொண்டிருப்பார்கள். பின்னர்) அடியார்களின் அமல்கள் குறைந்து பல வீனமாகிவிடும். எதுவரையெனில் ஒரு மனிதர் வருவார், அவர் தம்முடைய பித்தட்டில் நகர்ந்து கொண்டவராக வருவார். அவர் அதனைக் கடப்பதற்கு சக்தி பெறமாட்டார் (அவரது நல் அமல்கள் மிகக் குறைவாக இருந்தால் இந்நிலை)
பாலத்தின் இரு பகுதிகளிலும் முட்கள் தொங்கவிடப்பட்டிருக்கும். யாரைப் பிடிக்கும்படி ஏவப்படுகிறதோ அவரை அவை பிடித்துவிடும். அம்முட்களால் (லேசாக) தைக்கப்பட்டு விடுபவர், ஈடேற்றமடைந்து விடுவார். அங்கிருந்து கீழே தள்ளப்பட்டு விடுபவர், நரகினில் ஆகிவிடுவார். அபூஹுரைராவின் உயிர் யார் வசம் இருக்கிறதோ அவன் (அல்லாஹ்) மீது ஆணையாக! ஜஹன்னம் என்ற நரகின் ஆழம் எழுபது ஆண்டுகளின் தொலை தூரமாகும். (நூல்: முஸ்லிம்)

தஜல்லி .
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 72)



தஜல்லி என்பது தோற்றம் . அது அல்லாஹு தஆலா தன் அடியார்களுக்கு தோற்றமாகுதல் .
அல்லாஹு தஆலா நபி ஆதம் (அலை) அவர்களை அழைத்து , "ஆதமே ! நரகத்திற்கு அனுப்பவேண்டியவர்களை அனுப்பும் "என்று கட்டளை இடுவான்.
"குற்றவாளிகள் எல்லோரும் , குற்றமற்றவர்களுடன் சேர்ந்திராமல் பிரிந்து போங்கள் " என்று ஒரு சப்தம் வரும் .
நரகத்திற்கு அனுப்பப்படுவர்களை ஏழு கூட்டங்களாக பிரிவார்கள் .

முதலாவது கூட்டம் அல்லாஹு தஆலாவை அறிந்திருந்தும், மனமுரண்டான பிடிவாதத்தினால் அல்லாஹுக்கு ஈமான் கொள்ளாதவர்கள் .

இரண்டாவது கூட்டம் மூடத்தனத்தினால் அல்லாஹுக்கு ஈமான் கொள்ளாதவர்கள்.
இந்த இரண்டு கூட்டத்தாரையும் குருவிகள் தானியத்தைக் கொத்தி எடுப்பது போல் நரகம் தானாகக் கொத்தி எடுத்துக் கொள்ளும் .
இந்த இரண்டு கூட்டத்தாரும் கடுந் தாகமுள்ளவர்களாய் வருவார்கள் . தண்ணீர் கேட்பார்கள் " அதோ தண்ணீர் " என்று நரகத்தைக் காட்டவே, அவர்களுக்கு நரகத்தின் கானலானது தண்ணீர் போலத் தோன்றும். உடனே அதன் மீது வேட்கையாய் விரைந்து போவார்கள் .

மூன்றாவது கூட்டம் அல்லாஹுதஆலா வுக்கு இணை வைத்து தாங்கள் வணங்கிய வஸ்துக்களை பின்பற்றச் செய்து நரகத்தில் தள்ளப்படுவார்கள்

நான்காவது கூட்டம் ரஸூல்மார்களை ஒப்புக் கொள்ளாதவர்களும் , அல்லாஹு தஆலாவின் ஸிபத்துகளை அறியாதவர்களுமானவர்கள் .

ஐந்தாவது கூட்டம் யஹுதிகள் ,
ஆறாவது கூட்டம் நஸாறாக்கள் .
ஏழாவது கூட்டம் அப்புறமாக சொல்றேன் .
ஒவ்வொரு கூட்டத்தாரையும் நரகத்திற்கு அனுப்பப்படும்போதே , "ஒவ்வொரு கூட்டத்தாரும் நீங்கள் துன்யாவில் வணங்கிய வஸ்துகளைத் தொடர்ந்து கொள்ளுங்கள் " என்று பெரிய சப்தமாக எல்லோருடைய காதிலும் கேட்கும்.

இதனால் துன்யாவில் சிலுவையை வணங்கினவர்களுக்குச் சிலுவையும் , உருவத்தை வணங்கினவர்களுக்கு உருவத்தையும் விக்கிரகத்தை , சிலைகளை வணங்கினவர்களுக்கு விக்கிரகத்தை , சிலைகளையும் ,
சூரியனை வணங்கினவர்களுக்கு சூரியனையும் , சந்திரனை வணங்கினவர்களுக்கு சந்திரனையும் , நட்சத்திரத்தை வணங்கினவர்களுக்கு நட்சத்திரத்தையும் , நெருப்பை வணங்கினவர்களுக்கு நெருப்பையும் அவரவர்கள் எதை எதை வணங்கினார்களோ அதை அதை அவரவர் முன் உருவெடுத்து வந்து நிற்கும் .
ஹஜரத் நபி ஈஸா (அலை) அவர்களை "தேவன் " என்றும் " தேவகுமாரன்" என்றும் வணங்கிய கிறிஸ்தவர்களான நஸாறாக்களுக்கு முன்னால் நபி ஈஸா (அலை) அவர்களுடைய உருவத்தில் ஒரு ஷைத்தான் வந்து நிற்பான் .உடனே அவர்கள் எல்லோரும் அந்த ஷைத்தானை பின் தொடர அவன் நரகில் கொண்டு போய் சேர்ப்பான் .

ஏழாவது கூட்டம் முனாபிக்குகள் . இவர்கள் மூஃமினாவர்களுடன் கலந்து நிற்பார்கள் . அல்லாஹுதஆலா அவர்களைப் பார்த்து... "நீங்களும் நீங்கள் வணங்கின வஸ்துக்களைத் தொடர்ந்து கொள்ளுங்கள் ".
அதற்கு " நாங்கள் அல்லாஹுதஆலாவைத் தவிர வேறொன்றையும் வணங்கவில்லையே" என்று சொல்லுவார்கள் .
அப்போது அல்லாஹுதஆலா , " நீங்கள் உங்கள் இறைவனாகிய அல்லாஹுதஆலாவை அறிவீர்களா ? "
" ஆம், அறிவோம் ".
உடனே அல்லாஹுதஆலா தன்னை அவர்கள் தரிசிக்கும்படி "தஜல்லி " யாவான். அப்போது மூஃமீன்கள் அனைவரும் அல்லாஹு தஆலாவை அறிந்து கொண்டு அவனுக்கு ஸுஜூதில் விழுவார்கள் .
முனாபிக்குகளோ ஸுஜூதில் விழாமல் மல்லாந்து விழுவார்கள். உடனே முனாபிக்குகளை வேறாகப் பிரித்து நரகத்தில் தள்ளப்படுவார்கள் .
4851. ஜரீர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார்
ஓர் இரவில் நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்து கொண்டிருந்தோம். அப்போது அவர்கள் பதினான்காம் இரவின் முழுநிலவைக் கூர்ந்து நோக்கியபடி, 'இந்த நிலவை நீங்கள் நெருக்கடியின்றிக் காண்பது போல் உங்களுடைய இறைவனையும் காண்பீர்கள்.
ர.ரா
(தஜல்லி பதிவு இத்துடன் நிறைவு)

ஹௌளு கவ்தர் 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 73)



"ஹௌளு கவ்தர்" என்பது தண்ணீர்த் தடாகம் . அது ஸிராத் பாலத்தை தாண்டியதும் அப்புறமுள்ள அகன்ற மைதானத்தில் இருக்கும் .
அதை அல்லாஹு தஆலா நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்குச் சொந்தமாகக் கொடுத்திருக்கிறான்.

اِنَّاۤ اَعْطَيْنٰكَ الْكَوْثَرَ
(நபியே!) நிச்சயமாக நாம் உங்களுக்கு "கவ்ஸர்" என்னும் (சுவர்க்கத்தின்) தடாகத்தை கொடுத்திருக்கின்றோம்.
(அல்குர்ஆன்: 108:1)

அதன் பிரமாணம் ஒரு மாதத் தூரச் சதுர அளவுள்ளது. அதிலுள்ள நீர் , பாலைப் பார்க்கிலும் வெண்மையாய் , கஸ்தூரியைப் பார்க்கிலும் நற்மணமாய், தேனைப் பார்க்கிலும் மதுரமாய் இருக்கும். அதில் ஒரே ஒரு மிடறு தண்ணீரைக் குடித்தால் ஊழியூழி காலமாய் , யுகயுகங்களாய் தாகமே ஏற்படாது.

கவ்தர் தடாகத்திற்கு தண்ணீர், சுவர்க்கத்திலுள்ள **'கவ்தர் '** என்ற நதியின் இரண்டு பெரிய கால்வாய் வழியாக வந்து கொண்டே இருக்கும் .
அதன் நான்கு கரைகளிலும் தண்ணீர் பாத்திரங்கள் , வானத்து நட்க்ஷத்திரங்களிலும் அதிகமாக வைக்கப்பட்டிருக்கும் .
அதன் நான்கு அணைகளிலும் அபூபக்கர் (ரலி) , உமர் (ரலி) , உதுமான் (ரலி) , அலி (ரலி) ஆகிய நால்வர்களும் அதிகாரிகளாய் நிற்பார்கள் .
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கையில் அஸா பிடித்தவர்களாய் அங்கு நிற்பார்கள்.
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தங்கள் உம்மத்திலுள்ள நம்மைப் பார்த்து ,அழைத்து அந்த தடாகத்தில் தண்ணீர் குடிக்கும்படி ஏவுவார்கள் .
ஸிராத் பாலங்கடந்த எல்லோருமே அங்கு போய்க் களைப்பாறி ,மேற்படி தடாகத்திற் போய்த் தண்ணீர் குடிப்பார்கள்.

ஹௌளு கவ்தர் தடாகத்தைப் போல மற்ற நபிமார்களுக்கும் தடாகம் உண்டு. அந்தந்த தடாகத்திற்கும் வேறுவேறு பெயர்கள் இருக்கலாம் . அந்தந்த நபிமாருடைய உம்மத்து அவரவர் தடாகத்திற்குப் போய்த் தண்ணீர் குடிப்பார்கள் .

ஆனால் நபி ஸாலிஹு (அலை) அவர்களுக்கு மாத்திரம் தடாகம் இருக்காது . அவர்களுக்கு தடாகத்திற்குப் பதிலாக அவர்களின் ஒட்டகத்து மடியே காத்திருக்கும் .

தங்கள் தங்கள் உம்மத்துக்கு அந்தந்த நபிமார்கள் தண்ணீர் புகட்டும் போது, நபி ஸாலிஹ் (அலை) அவர்கள் தன் உம்மத்திற்கு ஒட்டகப் பாலைப் புகட்டுவதை பெருமையாகப் பேசுவார்கள் . அந்த பெருமையிற் சிறந்தவர்களாக மிக அதிகமான உம்மத்துடைய ஜனங்களுக்கு நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தண்ணீர் புகட்டுவார்கள் .

கவ்தர் தடாகத்தைச் சுற்றி பலவித மரங்கள் விருக்ஷங்களாக பரவி நிற்கும் .
ஒவ்வொரு விருக்ஷத்தின் கீழும் அருவிகள் ஒலித்தோடும்.
ஸிராத் பாலத்தை கடந்த எல்லோரும் கவ்தர் தடாகத்தில் தண்ணீர் பருகிக் களைப்பு தீர்ந்து விருக்ஷத்தின் கீழ் உள்ள அருவிகளில் குளிப்பார்கள்.
குளித்தவுடன் அவர்களுக்குள்ள சகல அசுத்தங்களும் நீங்கிப் பரிசுத்தமாகி , நபி ஆதம் (அலை) அவர்களுடைய அறுபது முழ உயரமும் , ஏழு முழ கனமும் , நபி ஈஸா (அலை) அவர்களுடைய முப்பத்தி மூன்று வயதும் , நபி யூசுப் (அலை) அவர்களுடைய யௌவன சொரூபமுள்ளவர்களாக ஆவார்கள் .
எல்லோருடைய முகங்களும் பூரணச்சந்திரன் போல இலங்கிக் கொண்டும் , சரீரங்கள் கஸ்தூரி வாடை கமழவும் அத் தடாகத்தை விட்டு கரையேறுவார்கள் .
ர.ரா

''ஹவ்ளுல் கவ்ஸர் " என்கிற தடாகத்தைப் பற்றி நபிகளார் 02
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 74)



"கவ்ஸர் என்றால் என்ன?" என்று அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

"(அது) சுவர்க்கத்திலுள்ள ஓர் ஆறாகும். அதனை என் இறைவன் எனக்காக கொடுத்திருக்கிறான். அதன் தண்ணீர் பாலைவிட அதிக வெண்மையானதாக இருக்கும். அதன் சுவையோ தேனைவிட அதிக இனிப்பானதாக இருக்கும்.
அதில் பறவைகளும் இருக்கின்றன. அவற்றின் கழுத்துகள் ஒட்டகத்தின் கழுத்துகளைப் போல் இருக்கும்" என்று கூறினார்கள்.
அப்போது உமர் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள், "இந்தப் பறவைகள் மிகவும் உல்லாசமாக இருக்கும்" என்று கூறினார்கள்.
அதற்கு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "அவற்றை உண்பவர்கள் அவற்றை விட உல்லாசமாக இருப்பார்கள்" என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, நூல்: திர்மிதீ)
அல் கவ்தர் சுவர்க்கத்திலுள்ள ஆறாகும்,
அதனுடைய இரு ஓரங்களும் தங்கமாகும். முத்து பவளத்தின் மீது அது ஓடுகின்றது. அதனுடைய மண் கஸ்தூரியை விட மிகவும் மணமானது.

அதனுடைய தண்ணீர் தேனைவிடவும் இனிமையானது, ஐஸ் கட்டியை விடவும் வெண்மையானது என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

கவ்ஸர் நதியின் பரப்பு, ஒரு மாத பயண தூரமுடையதாக இருக்கும். அதன் இரு மருங்குகளிலும் விலை உயர்ந்த கற்களால் அமைக்கப்பட்ட கூடாரங்கள் இருக்கும். அதன் நீர் பாலைவிட அதிக வெண்மை யானதாகவும், கஸ்தூரியை விட அதிக வாசமுள்ளதாகவும் இருக்கும். அதன் நீரை அருந்தியவர்கள் பின்னர் ஒருபோதும் தாகிக்க மாட்டார்கள். அங்கு நட்சத்திரங்களின் எண்ணிக்கையைவிட அதிகமான பாத்திரங்கள் இருக்கும்.

நிச்சயமாக நாம் உமக்குக் கவ்ஸரைக் கொடுத்திருக்கிறோம்' என்பதைக் குறித்து அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா அவர்கள் வினவப்பட்டது (அதற்கவர்)
"அது ஒரு நதி. உங்களுடைய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு அது கொடுக்கப் பட்டிருக்கிறது. அதனுடைய இரு மருங்குகளிலும் துவாரமிடப்பட்ட மாணிக்கம் இருக்கிறது. அதனுடைய பாத்திரங்கள் நட்சத்திரங்களின் எண்ணிக்கைக்குச் சமமானவை" என்று கூறினார்கள். (அறிவிப்பவர்: அன்னை ஆயிஷா ஸித்தீக்கா ரலியல்லாஹுதஆலா அன்ஹா, நூல்: புகாரீ)

சுவர்க்கத்தின் பாத்திரங்களில் எவர் தண்ணீர் அருந்துகிறாரோ அவருக்கு அவருடைய இறுதிநாள் வரை தாகமெடுக்காது. சுவர்க்கத்திலிருந்து இரண்டு ஆறுகள் வருகின்றன. அதன் அகலமோ சிரியா (ஷாம்) தேசத்திலுள்ள அம்மான், ஈலா ஆகிய ஊர்களுக்கிடையே உள்ள தூரத்திற்குச் சமமாக இருக்கும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனித மிஃராஜ் பயணத்தில் கவ்ஸர் நதியைக் கண்டிருக்கிறார்கள். இது குறித்த ஹதீஸ்:
அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிஃராஜுக்கு சென்ற போது (கூறிய விவரங்களில்) "நான் ஒரு நதியின் பக்கமாக அழைத்து வரப்பட்டேன். அதன் இரு மருங்குகளிலும் துவாரமுள்ள முத்துக் கூடாரங்களிருந்தன.

'இது என்ன, ஜிப்ரயீல்?' என்று கேட்டேன். 'இது கவ்ஸர்' என்று (அவர்) கூறினார்" என்று அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: அனஸ் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, நூல்: புகாரீ)
கவ்ஸர் நதியில் பிரவேசிக்கும் பாக்கியம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தினருக்குக் கிடைக்கும். அவர்களின் எண்ணிக்கையும் மிகவும் கூடுதலாக இருக்கும்.
இது குறித்த ஹதீஸ்: "நிச்சயமாக எல்லா நபிமார்களுக்கும் ஒவ்வொரு ஹவ்ளு உண்டு. அங்கு அவரவரின் சமூகத்தினர் வருவார்கள். அன்றி, நிச்சயமாக அவர்கள் தங்களுக்குள் அவர்களில் எவர் (அதாவது எந்தச் சமூகத்தினர்) அதிகமாக வருகிறார்கள் என்று பெருமை பாராட்டிக் கொள்வார்கள். மேலும், நிச்சயமாக நான் என்னுடைய ஹவ்ளில் அவர்களை விட அதிகமான பேர் வருவார்கள் என்று நம்புகிறேன்" என்று அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஸமுரதுப்னு ஜுன்துப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு அவர்கள். நூல்: திர்மிதீ.)

கவ்ஸர் நதியில் பிரவேசிக்கும் பாக்கியமுடைய உம்மத்தினருக்கு விருந்தோம்புபவராக அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே இருப்பார்கள்! ஆயினும், இஸ்லாம் மார்க்கத்தில் புதுமைகளை ஏற்படுத்தி, மாற்றங்களை உண்டு பண்ணியவர்கள் கவ்ஸர் நதியை விட்டும் அப்புறப்படுத்தப் படுவார்கள்! இது குறித்த ஹதீஸ்கள்:
"ஹவ்ளுல் கவ்ஸரில் நான்தான் உங்களுக்கு விருந்தோம்புபவனாக இருப்பேன்" என்று அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஜுன்துப் ரலியல்லாஹுதஆலா அன்ஹு, நூல்: புகாரீ, முஸ்லிம்)

நான் அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க அவர்களின் பக்கம் குனியும் போது, அவர்கள் என்னை விட்டும் அப்புறப்படுத்தப் படுவார்கள்.
அப்பொழுது நான், "இறைவனே! இவர்கள் என் தோழர்களாயிற்றே!" என்று கூறுவேன்.
அதற்கு, "நிச்சயமாக, இவர்கள் தங்களுக்குப் பின் என்னவென்ன புதுமைகளை மார்க்கத்தில் உண்டுபண்ணினார்கள் என்று தாங்கள் அறியமாட்டீர்கள்" என்று கூறப்படும்.

எனவே நான், "தூரமாகிவிடுங்கள்: தூரமாகிவிடுங்கள். எனக்குப் பின் (என் மார்க்கத்தை) மாற்றியவர்கள் (நீங்கள்) எனக் கூறுவேன்" எனக் கூறினார்கள். (அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹுதஆலா அன்ஹூ அவர்கள். நூல்: புகாரீ, முஸ்லிம்)
அல்லாஹு ஸுப்ஹானஹுதஆலா, தன்னுடைய ஹபீபு அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் நம் அனைவருக்கும் கவ்ஸர் நதியில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தந்தருள்வானாக! ஆமீன்.
ர.ரா

"ஹவ்ளுல் கவ்ஸர் " என்கிற தடாகத்தைப் பற்றி நபிகளார் 03
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 75)



1888. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'என்னுடைய இல்லத்திற்கும் என்னுடைய மிம்பருக்கும் இடைப்பட்ட பகுதி சொர்க்கத்துப் பூங்காக்களில் ஒரு பூங்காவாகும்! என்னுடைய மிம்பர் என்னுடைய ஹவ்ள் (அல்கவ்ஸர் தடாகத்தின்) மீது அமைந்துள்ளது!'
என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

1344. உக்பா இப்னு ஆமிர்(ரலி) அறிவித்தார்.
ஒரு நாள் நபி(ஸல்) அவர்கள் உஹதுக்குச் சென்று, (போரில் கொல்லப்பட்டவர்களுக்காக ஜனாஸாவை முன்னால் வைத்துத் தொழுவது போன்று) தொழுகை நடத்தினார்கள்.
பிறகு மிம்பருக்கு வந்து, 'நிச்சயமாக நான் உங்களுக்காகக் காத்திருப்பேன். உங்களுக்கு நான் சாட்சியும் கூறுவேன்.
மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இப்போது (கவ்ஸர் எனும்) என்னுடைய தடாகத்தைக் காண்கிறேன். எனக்கு பூமியின் கருவூலங்களின் திறவுகோல்கள் அல்லது பூமியின் திறவுகோல்கள்... கொடுக்கப்பட்டுள்ளன. நிச்சயமாக அல்லாஹ்வின் மீது ஆணையாக!
என(து மரணத்து)க்குப் பின்னால் நீங்கள் இணைவைப்பார்களாக ஆகிவிடுவீர்களோ என்று நான் பயப்படவில்லை. ஆனால், (உலகத்திற்காக) நீங்கள் ஒருவரோடொருவர் மோதிக் கொள்வீர்களோ என்றே பயப்படுகிறேன்!' என்று கூறினார்கள்.


2367. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது ஆணையாக! (தன்னுடைய குளத்தில் நீரருந்த விடாமல்) அந்நிய ஒட்டகத்தை (குளத்தின் உரிமையாளர்) குளத்திலிருந்து விரட்டுவதைப்

போன்று நானும் (மறுமையில் சிறப்புப் பரிசாக) எனக்குக் கிடைக்கவிருக்கும் தடாகத்திலிருந்து சில மனிதர்களை (நீரருந்த விடாமல்) விரட்டுவேன்.
என அபூ ஹுரைரா(ரலி) அறிவித்தார்.

3163. அனஸ்(ரலி) அறிவித்தார்.
நபி(ஸல்) அவர்கள் அன்சாரிகளை, அவர்களுக்கு பஹ்ரைனின் நிலங்களை வருவாய் மானியமாக எழுதித் தருவதற்காக அழைத்தார்கள்.
அன்சாரிகள், 'அல்லாஹ்வின் மீதாணையாக! எங்கள் குறைஷிச் சகோதரர்களுக்கும் இதே போன்று எழுதித் தரும் வரை நாங்கள் (இவற்றை) ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று கூறிவிட்டார்கள்.
இதைக் கேட்ட நபி(ஸல்) அவர்கள், 'அது குறைஷிகளுக்குக் கிடைக்கும்; அல்லாஹ் அதை விரும்பும் பட்சத்தில்' என்று கூறினார்கள். குறைஷிகளுக்கும் எழுதித் தரும்படி அன்சாரிகள் (தொடர்ந்து) வற்புறுத்திக் கூறினார்கள். அப்போது,
நபி(ஸல்) அவர்கள், '(அன்சாரிகளே!) எனக்குப் பின் (சிறிது காலத்திற்குள்ளாகவே) உங்களை விடப் பிறருக்கு (ஆட்சியதிகாரத்தில்) முன்னுரிமை தரப்படுவதை நீங்கள் பார்ப்பீர்கள்.
எனவே, (மறுமையில், எனக்குச் சொந்தமான) தடாகத்தின் அருகே என்னைச் சந்திக்கும் (காலம்) வரை பொறுமையைக் கைக் கொள்ளுங்கள்' என்றார்கள்.

7022. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்'
நான் உறங்கிக் கொண்டிருக்கையில் (கனவில்) ஒரு நீர்த் தடாகத்தின் அருகில் இருந்து கொண்டு மக்களுக்கு நான் நீர் புகட்டிக் கொண்டிருக்கக் கண்டேன்.
அப்போது அபூபக்ர் அவர்கள் என்னிடம் வந்து எனக்கு ஓய்வளிப்பதற்காக என் கரத்திலிருந்த அந்த வாளியை வாங்கி இரண்டு வாளிகள் தண்ணீர் இறைத்தார். அவர் இறைத்தபோது (சற்று) சோர்வு தென்பட்டது. அல்லாஹ் அவருக்கு மன்னிப்பளிப்பானாக!
பிறகு கத்தாபின் புதல்வர் (உமர்) வந்தார். அவர் அபூபக்ர் அவர்களிடமிருந்து (அந்த வாளியை) எடுத்துக்கொண்டு மக்கள் (தாகம் தீரத் தாங்களும் அருந்தி தங்கள் ஒட்டகங்களுக்கும் புகட்டிவிட்டுத்) திரும்பிச் செல்லும் வரை இறைத்துக்கொண்டேயிருந்தார். அப்போதும் தடாகத்தில் நீர் பொங்கிக் கொண்டிருந்தது.
என அபூ ஹுரைர(ரலி) அறிவித்தார்.
ர.ரா
கவ்தர் தடாகம் இத்துடன் நிறைவு பெறுகிறது .

ஜன்னத் என்னும் சொர்க்கத்தின் வகைகள் 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 76)



ஜன்னத் என்பது சுவர்க்கம் , அது ஏழு வானங்களுக்கும் மேலே ஒளியினால் படைக்கப்பட்டிருக்கும் பொன்னுலகம் .

அதற்கு உயர் பதமாகிய நூறு தரஜாக்கள் உண்டு. ஒவ்வொரு தரஜாக்களுக்கும் இடையில் ஐநூறு வருஷப் பிரயாணத் தூரம் இருக்கும்.
சொர்க்கதின் அகலம் ஏழு வானங்கள், ஏழு பூமிகளுக்குள்ள அளவானது. நீளம் அல்லாஹு தஆலாவே அறியக்கூடியது .

وَسَارِعُوْۤا اِلٰى مَغْفِرَةٍ مِّنْ رَّبِّكُمْ وَجَنَّةٍ عَرْضُهَا السَّمٰوٰتُ وَالْاَرْضُۙ اُعِدَّتْ لِلْمُتَّقِيْنَۙ
உங்கள் இறைவனின் மன்னிப்புக்கும், சுவர்க்கத்துக்கும் விரைந்து செல்லுங்கள். அதன் விசாலம் வானங்கள், பூமியின் விசாலத்தைப் போன்றது. (அது) இறை அச்சம் உடையவர் களுக்காக(வே) தயார்படுத்தப்பட்டுள்ளது.
(அல்குர்ஆன் : 3:133)
அந்த சுவர்க்கத்திற்கு வெள்ளியினாலும், பொன்னாலும் ,
மரகதத்தினாலும், சன்னமுத்துனாலும் , ஆணி முத்தினாலும் , மாணிக்கத்தினாலும் , ஒளியினாலும் ஏழு மதில்கள் உண்டு.

இந்த ஏழு மதில்களை உடைய சொர்க்கத்திற்கு எட்டு வாசல்கள் உண்டு. ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு சொர்க்கம் .இதைத் தான் எட்டு சொர்க்கம் என்று சொல்லப்படும் .
1 வது சொர்க்கம் தாருல் ஜவால்
மாணிக்கத்தினால் படைக்கப்பட்டது
2 வது சொர்க்கம் தாருஸ் ஸலாம்
பவளத்தினால் படைக்கப்பட்டது
3 வது சொர்க்கம் ஜன்னத்துல் மஃவா வெள்ளியினால் படைக்கப்பட்டது
4 வது சொர்க்கம் ஜன்னத்துல் குல்து
செம்பொன்னினால் படைக்கப்பட்டது
5 வது சொர்க்கம் ஜன்னத்துந் நயீம்
ஆணி முத்துவினால் படைக்கப்பட்டது
6 வது சொர்க்கம் ஜன்னத்துல் ஃபிர்தௌஸ் பசும் பொன்னினால் படைக்கப்பட்டது
7 வது சொர்க்கம் ஜன்னத்துல் அதன் பச்சை மரகதத்தினால் படைக்கப்பட்டது
8 வது சொர்க்கம் தாருல் கறாராம் சன்ன முத்துவினால் படைக்கப்பட்டது .

349. பின்னர் ஜிப்ரீல்(அலை) என்னை 'ஸித்ரதுல் முன்தஹா' என்னும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அதைப் பல வண்ணங்கள் சூழந்திருந்தன. அது என்ன என்பது எனக்குப் புலப்படவில்லை.
பின்னர் சுவர்க்கத்தில் புகுத்தப்பட்டேன். அதில் முத்துக்களால் உள்ள கயிறுகளைப் பார்த்தேன். சுவர்க்கத்தின் மண் கஸ்தூரியாக இருந்தது' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என அபூதர்(ரலி) அறிவித்தார். ஸஹீஹ் புகாரி
ர.ரா

ஜன்னத் என்னும் சொர்க்கத்தின் மாளிகைகள் 02
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 77)



சொர்க்கம் வெயில் இல்லாத ஒரு வசந்த கால குளிமையான ரம்மியான சூழ்நிலை எப்போதுமே நிலவும்.
சொர்க்கத்து மாடமாளிகைகள் அனைத்தும் ஒன்றின் மேல் ஒன்றான அநேக அடுக்குகளை உடையதாய் இருக்கும். இம்மாட மாளிகைகளைச் சுற்றி சுற்றி நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும்
சொர்கப் புரி மாணிக்கத்தினாலும் , மரகதத்தினாலும் ஆணிமுத்தினாலும் கட்டப்பட்டதாக இருக்கும். மாணிக்கக் கம்பத்து நுனியிற் கட்டப்பட்ட சிறப்பான பலவிதக் கட்டுமாளிகைகளும் உண்டு.

அந்த மாளிகைகள் வெளிப்புறத்திலும் , உட்புறத்திலும் அநேக மெத்தை வீடுகள் தரையில் அஸ்திவாரம் தோண்டி கட்டி எழுப்பாமல் , ஆகாயத்திலே நின்று இலங்கிக் கொண்டிருக்கும். மிக உயர்ந்தோனின் உன்னதமான கற்பனை திறன் அல்லவா ?
அடுத்த சொர்க்கம் ஒரே ஒரு முத்தினால் அமைக்கப்பட்டடு , அதன் உள்ளே எழுபது மாணிக்க வீடுகள் இருக்கும் . ஒவ்வொரு வீட்டிலும் பலவகை ரத்தினங்களான எழுபது அறைகள் கொண்டு , ஒவ்வொரு அறையிலும் எழுபது சந்தன மஞ்சங்கள்
போடப்பட்டிருக்கும் .ஒவ்வொரு மஞ்சத்திலும் பல வர்ணப் பட்டாடைகளால் எழுபது விரிப்புகள் விரிக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு விரிப்பிலும் ஒவ்வொரு ரம்பையும் , (தரீக்குல் ஜன்னா என்கிற கிதாபில் " ரம்பை " என்றே கூறப்பட்டுள்ளது. அடியேன் அந்த வார்த்தையே அப்படியே பிரயோகப்படுத்தி இருக்கிறேனேத் தவிர வேறு ஒன்றும் ஞான் அறியவில்லை பராபரமே) ஆண் அடிமை எழுபது பேர்கள், பெண் அடிமை எழுபது பேர்களும் சேவகம் செய்ய காத்து இருப்பார்கள்
எழுபது தாம்பாளங்களும் , ஒரு தாம்பாளத்திற்கு எழுபது வித உணவுகளும் கொண்ட அநேக அரண்மனைகள் சொர்க்கவாசிக்காக காத்து இருக்கும் .
ஒரே ஒரு மாணிக்கத்தினால் எழுபதினாயிரம் அறைகள் கொண்ட எழுபது அடுக்கு மெத்தையுள்ள அரண்மனைகள் , இந்த அரண்மனைகளின் (ஊசி ?) கோபுரங்கள் நீண்டு உயர்ந்திருக்கும்.

இந்த அரண்மனைகளுக்கு ஒவ்வொன்றிற்கும் நாலாயிரம் வாசல்களும் , வாசல் ஒவ்வொன்றிலும் இருபத்தைந்து ரம்பைகளும் இருப்பார்கள் . இந்த அரண்மனை ஒவ்வொன்றும் ஒரே ஒரு சொர்க்கவாசிக்கு உரியதாக இருக்கும்.
அடுத்தடுத்து வானுயர்ந்த கட்டிடங்கள் கணக்கில்லாமல் வரிசை வரிசையாக கட்டப்பட்டிருக்கும் .
இந்த கட்டிடங்களை ஒட்டி ஆங்காங்கே கூடாரங்களும் அமைக்கப்பட்டிருக்கும் .
ஒவ்வொரு கூடாரமும் வேறு வேறு விதமாக காட்சியளிக்கும் .அந்த கூடாரங்களின் அமைப்பு மனித கற்பனையெல்லாம் சிந்தித்தே இருக்க முடியாதவாறு அமைக்கப்பட்டிருக்கும்.
அதாவது ஒரே ஓர் ஆணி முத்தினால் இருபது காத சதுர வளைவுள்ள கூட்டாரங்கள் அமைக்கப்பட்டு இருக்கும்.

மாடமாளிகையிலும் , கூடாரங்களிலும் முத்தினாலும், மாணிக்கத்தினாலும் , சித்தர வேலைகள் செய்த பொற்தட்டில்களும், நாற்காலிகளும், சாய்மான பீடங்களும் கணக்கின்றி போடப்பட்டிருக்கும்.

உட்புறம் இஸ்தப்றக்குப் பட்டினாலும் , வெளிப்புறம் ஒளியினாலும் ஆன விரிப்புகள் அவைகளில் ஒவ்வொன்றிலும் விரிக்கப்பட்டிருக்கும் .
பொன், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவைகளால் பலவித தட்டு முட்டு சாமான்கள் நக்ஷத்திரங்களைப் போல் ஆங்காங்கே அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும் .

يُطَافُ عَلَيْهِمْ بِصِحَافٍ مِّنْ ذَهَبٍ وَّاَكْوَابٍ وَفِيْهَا مَا تَشْتَهِيْهِ الْاَنْفُسُ وَتَلَذُّ الْاَعْيُنُ وَاَنْتُمْ فِيْهَا خٰلِدُوْنَ
(பலவகை உணவுகளும் பானங்களும் நிறைந்த) பொற்தட்டுக்களும், கிண்ணங்களும் அவர்களைச் சுற்றிக்கொண்டே இருக்கும். அங்கு, அவர்கள் மனம் விரும்பியவைகளும், அவர்களுடைய கண்களுக்கு ரம்மியமானவையும் அவர்களுக்குக் கிடைக்கும். (அவர்களை நோக்கி) "இதில் என்றென்றும் நீங்கள் வசித்திருங்கள்" (என்றும் கூறப்படும்.)
(அல்குர்ஆன்: 43:71)

சொர்க்கவாசிகளுக்கு பொற்கடகம் அணிவிக்கப்படும். மெல்லியதாகவோ அழுத்தமானதாகவோ அவர்கள் விரும்பிய பசுமையான பட்டாடைகளை அணிவார்கள். இவர்களுடன் எந்நேரமும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் சதா அங்கே குடிகொண்டிருக்கும்
اُولٰٓٮِٕكَ لَهُمْ جَنّٰتُ عَدْنٍ تَجْرِىْ مِنْ تَحْتِهِمُ الْاَنْهٰرُ يُحَلَّوْنَ فِيْهَا مِنْ اَسَاوِرَ مِنْ ذَهَبٍ وَّ يَلْبَسُوْنَ ثِيَابًا خُضْرًا مِّنْ سُنْدُسٍ وَّاِسْتَبْرَقٍ مُّتَّكِـِٕـيْنَ فِيْهَا عَلَى الْاَرَآٮِٕكِ‌ نِعْمَ الثَّوَابُ وَحَسُنَتْ مُرْتَفَقًا
இவர்களுக்கு நிலையான சுவனபதிகள் உண்டு. அவற்றில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டேயிருக்கும்.
அவர்களுக்குப் (பரிசாகப்) பொற்கடகம் அணிவிக்கப்படும். மெல்லியதாகவோ அழுத்தமானதாகவோ (அவர்கள் விரும்பிய) பசுமையான பட்டாடைகளை அணிவார்கள்.
ஆசனங்களிலுள்ள தலையணைகள் மீது சாய்ந்து (மிக்க உல்லாசமாக) இருப்பார்கள். இவர்களுடைய கூலி மிக்க நன்றே! இவர்கள் இன்பம் சுவைக்கும் இடமும் மிக்க அழகானது.
(அல்குர்ஆன்: 18:31)
ர.ரா
சொர்க்கத்தின் நதிகள் 03
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 78)



சொர்க்கத்தில் " நஹ்ர் ரஹ்மத் " என்ற ஒரு நதி உண்டு. அந்த நதியின் மணல் கஸ்தூரியும், அதனுடன் கலந்து கிடக்கும் பருக்கை கற்களாக முத்துக்கள் இருக்கும். ரஹ்மத் நதி நீர் பனிநீரிலும் வெண்மையும் , தேனிலும் இன்பமுமாய் உள்ளது. இந்நதி எட்டு சுவர்க்கங்களிலும் பிரவாகித்து ஓடும்.
அடுத்து " கௌதர் நதி " என்னும் சிறப்பு வாய்ந்த நதி ஒன்று உண்டு. இதன் ஆழம் எழுபதினாயிரம் காத அளவுள்ளது. இதன் இரு கரைகளும் முத்தினாலும், மரகதத்தினாலும் , மாணிக்த்தினாலும் ஆனது. அதன் இருமருங்கும் முத்துக் கூடாரங்கள் போடப்பட்டிருக்கும்.

கௌதர் நதி கரையில் உள்ள மரங்கள் ஆணி முத்தினாலும் , மாணிக்கத்தினாலும் வளர்ந்திருக்கும் இந்நதி பிரவாகிக்கும் நீர் பாலிலும் வெண்மையும் , தேனிலும் இன்பமுமாயிருக்கும். இந்த கௌதர் நதி

நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்குச் சொந்தமானது .
அடுத்து சொர்க்கத்தில் "நஹ்ருல் காபூர் "
என்கிற கற்பூர நதியும் உண்டு.
"நிச்சயமாக நல்லவர்கள் (சுவர்க்கத்தில்) குவளைகளிலிருந்து (பானம்) அருந்துவார்கள்; அதன் கலப்பு காஃபூராக (கற்பூராக) இருக்கும், (காஃபூர்) ஒரு சுனையாகும்; அதிலிருந்து அல்லாஹ்வின் நல்லடியார்கள் அருந்துவார்கள். அதை (அவர்கள் விரும்பும் இடங்களுக்கெல்லாம்) ஓடைகளாக ஓடச் செய்வார்கள்.
குர்ஆன் 76 : 5 , 6

இன்னும் மேன் மாடங்களிலிருக்கும் சுவனவாசிகள் பயன்படுத்தும்படியான ஆகாச நதிகளும் அநேகம் ஓடிக்கொண்டிருக்கும் , இந்நதியை "நஹ்ரு தஸ்னீம் " என்று அழைக்கப்படுகிறது.
"நஹ்ரு ரம்யான் " என்கிற நதியின் கரையில் பவளத்தினாலேயே பட்டணங்கள் இருக்கும் அந்த பட்டணத்திற்கெல்லாம் வெள்ளியினாலும், பொன்னாலும் ஆயிரம் வாசல் உண்டு. அங்கு பல வித நீருற்றுகளும் , அருவிகளும் உண்டு.
சொர்க்கத்து நதிகளில் சில நம் பூமியின் நதிகளைப் போல் இரு கரைகளை உருவாக்கி பள்ளத்தில் ஓடும் நதி போல் அல்லாமல் , இரு கரைகளே இல்லாமல் சுவனத் தரையின் மேல் ஓடும் விநோத நதிகளும் உண்டு.

சொர்க்கத்து எல்லா பாதைகளிலும் , எல்லாத் தரிப்பிடங்களிலும் ஓடிக்கொண்டிருக்கிற " ஸல்ஸபீல் நதி " அங்கு உண்டு .
وَيُسْقَوْنَ فِيْهَا كَاْسًا كَانَ مِزَاجُهَا زَنْجَبِيْلًا
(இஞ்சி கலந்த) "சன்ஜபீல்" என்னும் (மிக்க உயர்ந்ததொரு) பானமும் அங்கு அவர்களுக்குப் புகட்டப்படும்.
(அல்குர்ஆன்: 76:17)

عَيْنًا فِيْهَا تُسَمّٰى سَلْسَبِيْلًا
அது அங்குள்ள ஓர் ஊற்றின் நீர், அதற்கு "ஸல்ஸபீல்" என்றும் பெயர் கூறப்படும்.
(அல்குர்ஆன்: 76:18)

இந்தத் தண்ணீர் நதிகள் அல்லாமல் பாலினாலும் , தேனினாலும் , பழரச மதுவினாலும் தனித்தனியாக அநேக நதிகளும் உண்டு.
இன்னும் தண்ணீர் கடலும், தேன் கடலும், பாற்கடலும் உண்டு. இந்தக் கடல்களிலிருந்தும் நதிகள் பிரிந்து எங்கும் பிரவாகித்து ஓடும். கடல்களின் இன்னொரு பக்கம் அந்தந்த நதிகள் அடைந்து சங்கமிக்கின்றன.

" இறை அச்சமுடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட சுவனபதியின் தன்மையாவது: அதில் தீங்கற்ற (பரிசுத்தமான) நீரருவிகள் இருக்கின்றன.
பரிசுத்தமான ருசி மாறாத பாலாறுகளும் இருக்கின்றன. திராட்சை ரச ஆறுகளும் இருக்கின்றன. அது குடிப்பவர்களுக்குப் பேரின்பமளிக்கக்கூடியது. தெளிவான தேனாறுகளும் இருக்கின்றன. (அல்குர்ஆன் : 47:15)

எல்லா நதிகளும் கஸ்தூரி மணலையும் , கஸ்தூரி மணத்தையும் உடையதாய் இருக்கும் .
எல்லா நதிகளும் சொர்க்கத்தில் உள்ள மலைகளில் உற்பத்தியாகின்றன. மேற்சொன்ன பாலினாலும் , தேனினாலும் , பழரச மதுவினாலும் , தண்ணீரினாலுமான ஆகிய நான்கு நதிகளும் , **" ஹவ்லு"** என்னும் தடாகத்தில் விழுகின்றன .
ர.ரா

சொர்க்கத்தின் மரங்கள் ,கனிகள் 04
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 79)



சொர்க்கத்தில் அநேக வகையான வித்தியாசமான விருக்ஷங்கள் அதாவது மரங்கள் நிறைய உண்டு. அந்த விருக்ஷங்கள் எல்லாம் உலகத்திலுள்ள
விருக்ஷங்களைப் போல் இல்லாமல் தலைகீழாக இருக்கும் .எல்லா விருக்ஷங்களும் அடிகள் , கிளைகள் , கொம்புகள் , துளிர்கள் , இலைகள் எல்லாம் பொன்னினாலும், வெள்ளியினாலும் உண்டாயிருக்கும்.

அந்த விருக்ஷங்களில் இலைகள் காயந்து சருகுகள் ஆகாமலும் , கனிகள்கள் ஓயாமலும் ,ஒழியாமலும் நிலையாகவே இருக்கும்.
சொர்க்கத்தில் இருப்பவர்கள் யார் யார் எந்தெந்த விருக்ஷங்களில் எந்தெந்த கனிகள் இருக்க வேண்டுமென்று நாடினார்களே, அந்தந்த விருக்ஷங்களில் அந்தந்த கனிகள் இருக்கும். ஒவ்வொரு கனியும் சுவனவாசிகளை எதிர்நோக்கி காத்திருக்கும்.
وَدَانِيَةً عَلَيْهِمْ ظِلٰلُهَا وَذُلِّلَتْ قُطُوْفُهَا تَذْلِيْلًا
அதிலுள்ள (மரங்களின்) நிழல்கள் அவர்கள் மீது தாழ்ந்து (சூழ்ந்து) கொண்டிருக்கும். அதன் கனிகள் (சுலபமாகப் பறிக்கக்கூடிய விதத்தில்) அவர்கள் முன் சாய்ந்து வரும்.
(அல்குர்ஆன் :76:14)

ஒரு விருக்ஷத்தில் உள்ள ஒரு காயை அல்லது கனியைப் பறித்தால், அது மறுபடியும் அந்த இடத்திலேயே உண்டாகும் .

وَّفَاكِهَةٍ كَثِيْرَةٍۙ
ஏராளமான கனி வர்க்கங்களும் உண்டு.
(அல்குர்ஆன்: 56:32)

لَّا مَقْطُوْعَةٍ وَّلَا مَمْنُوْعَةٍۙ
அதன் கனிகள் (புசிக்க) தடுக்கவும் படாது. (பறிப்பதால்) குறைவுமுறாது. (ஒன்றைப் பறித்தால், மற்றொன்று அதே இடத்தில் காணப்படும்.)
(அல்குர்ஆன்: 56:33)

இது நம்ம பூலோகத்து மாம்பழம்தானே என்று சுவைத்துப் பார்த்தால் ருசியிலும் , அதன் மணத்திலும் சுவை கூடி வேறு சுவைகளாக இருக்கும் .
وَبَشِّرِ الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ كُلَّمَا رُزِقُوْا مِنْهَا مِنْ ثَمَرَةٍ رِّزْقًا ۙ قَالُوْا هٰذَا الَّذِىْ رُزِقْنَا مِنْ
قَبْلُ وَاُتُوْا بِهٖ مُتَشَابِهًا وَلَهُمْ فِيْهَآ اَزْوَاجٌ مُّطَهَّرَةٌ ۙ وَّهُمْ فِيْهَا خٰلِدُوْنَ
(நபியே!) எவர்கள் (இவ்வேதத்தை) நம்பிக்கை கொண்டு (அதில் கூறப்பட்டுள்ளபடி) நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு (சுவனபதியில்) நிச்சயமாக சோலைகள் உண்டு என்று நீங்கள் நற்செய்தி கூறுங்கள்.
அவற்றில் நீரருவிகள் (தொடர்ந்து) ஓடிக்கொண்டேயிருக்கும். அவற்றிலிருந்து (அவர்களுக்கு) ஒரு கனி புசிக்கக் கொடுக்கப்படும் போதெல்லாம் முன்னர் நமக்குக் கொடுக்கப்பட்டதும் இதுதானே! என (ஆச்சரியப்பட்டு)க் கூறுவார்கள். (ஏனென்றால்) பார்வைக்கு ஒரே விதமாகத்

தோன்றக் கூடியவைகளையே கொடுக்கப் பெறுவார்கள். (எனினும் அவை சுவையில் விதவிதமாக இருக்கும்) (அல்குர்ஆன் : 2:25)

விருக்ஷங்களின் இலைகள் காற்றடிக்கப்பட்டு ஒன்றோடுடொன்று உராய்வதால் பலவித கீத நாதங்களான ஓசை இசையாய் வெளிப்படும் .
இந்த விருக்ஷங்கள் தவிர **ஸஜ்ரத்து குல்து , ஸிதுறத்துல் முந்தஹா , ஸஜ்ரத்துத் தூபா** என்ற மூன்று நாமங்களால் அழைக்கப்படும் மிகப் பிரதானமான ஒரு மரம் உண்டு. அதன் அடி ஆணிமுத்து , நடு மாணிக்கம் , கிளைகள் மரகதம் , இலைகள் சுந்துஸ் பட்டு , அதன் கிளைகள் அர்ஷின் கால் வரை தாவி இருக்கும். அந்த ஒரே மரம் எட்டு சுவர்க்கங்களுக்கும் மேலே குடை போல் கவிழ்ந்து மூடிக்கொண்டிருக்கும்.

அதன் நிழல் எங்கும் விழும். அது ஸிதுறத்துல் முந்தஹா என்பதால் இலந்தை மரமாம் .இதன் கனிகள் ஒவ்வொன்றும் யானைக்காது போலவும்,
அதிகப் பிரகாசமாக இலங்கும்.

இம் மரம் ஜாதியில் இலந்தையாக இருந்தாலும் துனியாவிலுள்ள எல்லா வகைப் பழங்களும் இதில் காய்த்து குலுங்கும் மரமாக இருக்கும் .
இந்த மரத்தின் வேரிலிருந்துதான் சொர்க்கத்து நதிகளெல்லாம் பிறந்து பிரவாகிக்கும் .
இந்த மரம் மட்டும் அல்லாமல் சுவனத்து எல்லா மரங்களின் பழங்களில் விதை இல்லாமல் இருக்கும். காரணம் பழம் பறிக்கப்பட்டதும் , அந்த உடனேயே அதே இடத்தில் வேறு ஒரு பழம் உண்டாகி
விடும் . விதையைத் தூவி , வேலி கட்டி, தண்ணீர் பாய்ச்சி... இந்த வேலையெல்லாம் நம்ம பூலோகத்திற்குத்தான் தேவை. வான லோக மரத்திற்கு தேவையில்லை.
இன்னும் வண்ண மலர்கள் , வாசனைப் புற்பூண்டுகள் காணக்கோடி முளைத்திருக்கும் பூங்காவனமாகவே சொர்க்கப்புரி காட்சியளிக்கும் .
எல்லா மரத்து கிளைகளிலும் விநோதமான , பக்ஷிப்பறவைகள் , கீத நாதஞ் செய்து கொண்டிருக்கும்.

கண்ணுக்கு குளிர்ச்சியான மலர்கள் , மூக்குத் தேவையான வாசனைகள் , காதுக்கினிய தேனிசை நாதங்கள் மொத்தத்தில் சொர்க்கப்புரி எல்லா ஆத்மாக்களையும் சொக்க வைக்கும் .

748. இப்னு அப்பாஸ்(ரலி) அறிவித்தார்.
நபி(ஸல்) அவர்களின் காலத்தில் சூரிய கிரகணம் ஏற்பட்டபோது (அதற்காகத்) தொழுதார்கள்.
'இறைத்தூதர் அவர்களே! நீங்கள் நின்ற இடத்தில் எதையோ பிடிக்க முயன்றுவிட்டுப் பின்வாங்கினீர்களே?' என்று நபித்தோழர்கள் கேட்டனர்.
'எனக்குச் சுவர்க்கம் எடுத்துக் காட்டப் பட்டது. அதிலிருந்து ஒரு குலையைப் பிடித்தேன். அதை நான் எடுத்திருந்தால் உலகம் உள்ளளவும் அதை நீங்கள் புசித்திருப்பீர்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி)

சொர்க்கத்தின் கண்ணழகிகள் 01
(இஸ்லாத்தின் அடிப்படைக்
கோட்பாடுகள் 80)



சுவனத்தில் ஹூருல் ஈன்கள் என்ற கண்ணழகி பெண்கள் திரள் திரளாக இருப்பார்கள் .
ஹூருல் ஈன்களின் பாதம் முதல் முழங்கால் வரை குங்குமத்தினாலும் , முழங்காலிலிருந்து மார்பு வரை கஸ்தூரியினாலும் , மார்பிலிருந்து கழுத்து வரை அம்பரினாலும் , கழுத்திலிருந்து உச்சி வரை கற்பூரத்தினாலும் பிரயோத்தமாக படைக்கப்பட்டிருப்பார்கள் .

ஹூருல் ஈன்களின் மேனியின் நிறம் முத்தின் வெண்மையும் , மரகதத்தின் பசுமையும் , புஷ்பராகத்தின் மஞ்சளும் மாணிக்கத்தின் சிவப்பும் கலந்த கலவையாக இருப்பார்கள் .
فِيْهِنَّ قٰصِرٰتُ الطَّرْفِۙ لَمْ يَطْمِثْهُنَّ اِنْسٌ قَبْلَهُمْ وَلَا جَآنٌّ
அவைகளில், கீழ் நோக்கிய பார்வைகளையுடைய (அழகிய) கன்னிகைகளும் இருப்பார்கள். இவர்களுக்கு முன்னர், அவர்களை யாதொரு மனிதனும் ஜின்னும் தீண்டி இருக்கமாட்டார்கள்.
(அல்குர்ஆன்: 55:56)

كَاَنَّهُنَّ الْيَاقُوْتُ وَالْمَرْجَانُ
அவர்கள், சிகப்பு மாணிக்கத்தைப்போலும் பவளங்களைப் போலும் இருப்பார்கள்.
(அல்குர்ஆன்: 55:58)

ஹூருல் ஈன்களின் கண்கள் அறத்தீர்ந்த வெண்மையும், அறத்தீர்த்த கருமையுமாக இருப்பார்கள் . இவர்களின் கண்களில் ஒளி வீசும். இதனால்தான் இவர்களுக்கு "ஹூருல் ஈன்கள் " என்ற பெயர் உண்டாயிற்று.

حُوْرٌ مَّقْصُوْرٰتٌ فِى الْخِيَامِ
அவர்கள்தாம், ஹூர் (என்னும் கண்ணழகிகளாகிய கன்னிப்பெண்)கள். அவர்கள், (முத்து பவளங்களாலான) கூடாரங்களில் வசித்திருப்பார்கள்.
(அல்குர்ஆன்:55:72)

2796. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
சொர்க்கவாசிகளில் (ஹூருல் ஈன்களில்) ஒரு பெண், உலகத்தாரை எட்டிப் பார்த்தால் வானத்திற்கும் பூமிக்குமிடையே உள்ள அனைத்தையும் பிரகாசமாக்கி விடுவாள்; பூமியை நறுமணத்தால் நிரப்பி விடுவாள். அவளுடைய தலையிலுள்ள முக்காடோ உலகத்தையும் அதிலுள்ளவற்றையும் விடச் சிறந்ததாகும்.
என அனஸ்(ரலி) அறிவித்தார்.
ஸஹீஹ் புகாரி

ஹூருல் ஈன்கள் ரத்தினம் மாதிரி பளபளப்பாக இருப்பதால் , அவர்களின் உடலிலுள்ள கால்களின் எலும்பு மஜ்ஜைகள் (காலின்) எலும்புக்கும் சதைக்கும் அப்பாலிருந்து வெளியே தெரியும்

3254. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
சொர்க்கத்தில் முதலாவதாக நுழையும் அணியினர் பௌர்ணமி இரவின் சந்திரனைப் போன்று தோற்றமளிப்பார்கள். (அடுத்து) அவர்களின் சுவடுகளைப் பின்தொடர்ந்து சொர்க்கத்தினுள் நுழைபவர்கள், வானத்தில் நன்கு ஒளி வீசிப் பிரகாசிக்கும் நட்சத்திரத்தைப் போன்று (பிரகாசமாகவும் அழகாகவும்) இருப்பார்கள். அவர்களின் உள்ளங்கள் ஒரே மனிதரின் உள்ளத்தைப் போன்றிருக்கும். அவர்களுக்கிடையே பரஸ்பர வெறுப்போ, பொறாமையோ இருக்காது. ஒவ்வொரு மனிதருக்கும் 'ஹூருல் ஈன்' எனப்படும் அகன்ற (மான் போன்ற) விழிகளையுடைய மங்கையரிலிருந்து இரண்டு மனைவிமார்கள் இருப்பார்கள். அவர்களின் கால்களின் எலும்பு மஜ்ஜைகள் (காலின்) எலும்புக்கும் சதைக்கும் அப்பாலிருந்து வெளியே தெரியும். (ஸஹீஹ் புகாரி)

ஹூருல் ஈன்களின் வாய் உமிழ்நீர் ஒரு துளி இந்தக் கடலில் விழுந்தால் கடல் நீர் முழுவதும் அமிர்தமாக மாறிவிடும்.
ஹூருல் ஈன்கள் துன்யாவின் பெண்களைப் போல் பலவிதமாக இருப்பார்கள் . ஒவ்வொரும் எழுபது விதப் பட்டாடைகள் உடுத்தி நவரத்தினம் இழைத்த தங்க வளையல் முதல் எல்லா ஆபரணங்களும் மேனியெங்கும் அணிந்திருப்பார்கள் .
மேலும் குர்ஆனில் அல்லாஹ் ஹூருல் ஈன்கள் பற்றி ...

وَعِنْدَهُمْ قٰصِرٰتُ الطَّرْفِ عِيْنٌ
அவர்களிடத்தில் கீழ் நோக்கிய, அடக்கமான பார்வையையுடைய (ஹூருல் ஈன் என்னும்) கண்ணழகிகளும் இருப்பார்கள்.
(அல்குர்ஆன்: 37:48)

- كَذٰلِكَ وَزَوَّجْنٰهُمْ بِحُوْرٍ عِيْنٍ

இவ்வாறே (சந்தேகமின்றி நடைபெறும்). அன்றி, "ஹூருல் ஈன்" (என்னும் கண்ணழகிகளாகிய கன்னிகை)களையும் நாம் அவர்களுக்கு திருமணம் செய்து வைப்போம்.
(அல்குர்ஆன்: 44:54)

مُتَّكِـِٕيْنَ عَلٰى سُرُرٍ مَّصْفُوْفَةٍ وَزَوَّجْنٰهُمْ بِحُوْرٍ عِيْنٍ
அணி அணியாகப் போடப்பட்ட கட்டில்களி(ல் உள்ள பஞ்சணைகளி)ன் மீது சாய்ந்தவண்ணமாக இருப்பார்கள். நாம் அவர்களுக்கு ("ஹூருல்ஈன்" என்னும்) கண்ணழகிகளாகிய கன்னிப் பெண்களை திருமணம் செய்து வைப்போம். (அல்குர்ஆன் : 52:20)
خَيْرٰتٌ حِسَانٌ
அவைகளில், சிறந்த குணம் படைத்தவர்களான அழகிகள் உள்ளனர்.
(அல்குர்ஆன் :55:70)

وَحُوْرٌ عِيْنٌ
(அங்கு இவர்களுக்கு) "ஹூருல் ஈன்" (என்னும் கண்ணழகி களான மனைவி)களும் இருப்பார்கள்.
(அல்குர்ஆன்:56:22)

كَاَمْثَالِ اللُّـؤْلُـوِٴالْمَكْنُوْنِ
அவர்கள் பேணிப் பாதுகாக்கப்படும் முத்துக்களைப் போல் இருப்பார்கள்.
(அல்குர்ஆன்: 56:23)

اِنَّاۤ اَنْشَاْنٰهُنَّ اِنْشَآءً
(அவர்களுடன், கண்ணழகிகளாகிய ஹூருல் ஈன் என்னும் கன்னியர்களும் இருப்பார்கள். அவர்கள் ஒருவராலும் பெற்றெடுக் கப்பட்டவர்கள் அல்லர்.) நிச்சயமாக நாம் அவர்களைச் (சொந்தமாக இவர்களுக்கெனப் புதிதாகவே) படைத்திருக்கின்றோம்.
(அல்குர்ஆன்:56:35)

وَّكَوَاعِبَ اَتْرَابًا ۙ
(மனைவிகளாக) ஒரே வயதுடைய (கண்ணழகிகளான) நெஞ்சு நிமிர்ந்த கன்னிகளும், (அல்குர்ஆன் :78:33)
நல்லடியார்களான ஆண்களுக்கு ஹூருல் ஈன்கள் இருப்பது போல் நல்லடியார்களான பெண்களுக்கு என்ன இருக்கிறது?
(இது பற்றிய சேதி இன்ஷா அல்லாஹ் பிற்பாடு)

ஹூருல் ஈன்கள் 02
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 81)



உம்முஸல்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒரு சமயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள்,

"உலகிலிருந்து செல்லும் பெண்களுக்குக் கூடுதல் சிறப்பா? அல்லது **ஹூருல் ஈன்** பெண்களுக்கா?"
அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்,
"ஒரு விரிப்பின் அடிப்பாகத்தைவிட, மேல் பாகத்திற்கு இருக்கும் சிறப்பு போல, உலகிலிருந்து சென்ற பெண்களுக்கு ஹூருல் ஈன்களை விட சிறப்பு உண்டு

பின் உம்முஸல்மா ரளியல்லாஹு அன்ஹா கேட்டார்கள், "ஏன்? எப்படி?''
அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்;
"அவர்கள் தொழுகிறார்கள், நோன்பிருக்கிறார்கள். இன்னும் பல வணக்க வழிபாடுகளைச் செய்கின்றனர்." என்றார்கள்.
இறந்துபோன முஸ்லிம் ஆணோ, பெண்ணோ எவராயினும் அவர்களுக்கு ஜனாஸாத் தொழுகை செய்த பின் பிரார்த்திக்கும்படி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த பிரார்த்தனையில்;
''(இவரது) இப்போதைய குடும்பத்தைவிட, நல்ல குடும்பத்தை இவருக்கு கொடுப்பாயாக! இப்போதைய துணையைவிட நல்ல துணையைக் கொடுப்பாயாக!"
(நூல்கள்: முஸ்லிம், நஸயீ)

சுவர்க்கத்தில் ஆண்கள் விரும்புவது ஹூருல் ஈன்களை. பெண்களைப் பொறுத்த வரையில் அதற்குச் சமமான சிறந்தவைகள் அவர்களுக்கு கிடைக்கும்.
நுண்ணறிவாளனான அல்லாஹ் அவனுடைய அளவிட முடியாத மதி நுட்பத்தைக் கொண்டு ஆண்களுக்கு ஹூருல் ஈன்கள் கிடைப்பது போன்ற அளவிற்கு பெண்களுக்கு என்ன கிடைக்கும் என வெளிப்படையாக குறிப்பிடவில்லை. இது அல்லாஹ் மிகவும் கண்ணியமானவன் என்பதையும் நாணமுறுபவன் என்பதையும் குறிக்கின்றது.
மேலும் எதைக் குறித்து பெண்களே மிகவும் நாணமுறுபவர்களாகவும் கண்ணியமானவர்களாகவும் இருக்கின்றார்களோ அதையே எப்படி அல்லாஹ் வெளிப்படையாகக் கூறி அதை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள் எனக் கூறுவான் எனவே அல்லாஹ் தன்னுடைய திருமறையில் பின்வரும் வசனத்தில் மறைமுகமாகக் கூறியிருக்கிறான்.
உங்கள் மனம் விரும்பியதெல்லாம் அதில் உங்களுக்கு இருக்கிறது (அல்குர்ஆன் 41:31)

அல்லாஹ்வின் நல்லடியார்களான பெண்கள் ஹூருல் ஈன்களை விட உயர்ந்த அந்தஸ்த்தில் இருப்பார்கள்: –
ஹூருல் ஈன்கள் எவ்வளவு தான் அழகிலும் குணத்திலும் அவர்களின் படைப்பிலும் சிறப்பு மிக்கவர்களாயினும் இவ்வுலகில் நல்லறம் புரிந்த பெண்கள் சுவர்க்கத்தில் ஹூருல் ஈன்களை விட அந்தஸ்த்தில் உயர்ந்தவர்களாகவும் அழகில் சிறந்தவர்களாகவும் இருப்பார்கள்.
ஏனென்றால் ஹூருல் ஈன்கள் இறைவனின் நல்லடியார்களை மகிழ்விப்பதற்காக சுவர்கத்தில் படைக்கப் பட்டவர்களாவார்கள். அவர்கள் இவ்வுலகில் நல்லறங்கள் புரிந்த நல்லடியார்களுக்கு கட்டுப்பட்டவர்களாக சுவனத்தில் இருப்பார்கள்.

ஆனால் இறைவனின் நல்லடியார்களான பெண்களோ தாங்கள் செய்த நற்செயல்களின் விளைவாக சுவனம் சென்றவர்கள். எனவே இவர்களுக்கும் ஹூருல் ஈன்களுக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றது.
அஷ் ஷெய்ஹு இப்னு உதைமீன் அவர்களிடம் ஹூருல் ஈன்கள் பற்றியும் இவ்வுலகில் உள்ள பெண்களைப் பற்றியும் என வினவப் பட்டபோது அதற்கு ஷெய்ஹு அவர்கள் பின்வருமாறு பதில் அளித்தார்கள்.
“(நல்லறங்கள் புரிந்த) இந்த உலகத்தின் பெண்கள் ஹூருல் ஈன்களை விட அந்தஸ்திலும் வெளிப்புற தோற்றத்திலும் உயர்ந்தவர்களாக இருப்பார்கள். அல்லாஹ்வே முற்றிலும் அறிந்தவன்” என்று கூறினார்கள்.
ர.ரா

சுவனத்து வாகனமும்,வார கிழமைகளும்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 82)



சுவனத்தில் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல வாகனமாக "யாகூத் " என்ற பறக்கும் குதிரைகள் உண்டு. அது நம்மை நினைத்த இடத்திற்கெல்லாம் சுமந்து பறக்கும்.
" அல்லாஹ்வின் தூதரே! சுவனத்தில் குதிரைகள் உண்டா ? " என்று ஒரு மனிதர் கேட்டார்.
" அல்லாஹ் உன்னை சுவனத்தில் நுழையச் செய்து அப்போது நீ சிவப்பு நிற யாகூத் என்ற பறக்கும் குதிரையில் பவனி வர விரும்பினால் நீ நினைத்த இடமெல்லாம் உன்னை சுமந்து பறந்து செல்லும் "

அப்போது இன்னொரு மனிதர் "அல்லாஹ்வின் தூதரே ! சுவனத்தில் ஒட்டகம் உண்டா ? "
அதற்கு நபி (ஸல்) அவர்கள் முந்தைய மனிதருக்கு சொன்ன பதிலை
கூறவில்லை.
" நீ சுவனத்தில் உன் மனம் விரும்பியதும் உன் கண்களுக்கு குளிர்ச்சியானதும் கிடைக்கும் "
புரைதா (ரலி) - திர்மிதீ

சொர்க்கவாசிகள் வாரத்தில் ஏழு நாட்களில் ஒவ்வொரு நாளும் தங்களின் உற்றார் உறவினர்களை சந்திப்பார்கள்
1. பிள்ளைகள் சனிக்கிழமையன்று தங்கள் பெற்றோரைச் சந்திப்பார்கள்
2. ஞாயிற்றுக்கிழமையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சந்திப்பார்கள்
3. திங்கட்கிழமையன்று மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களைச் சந்திப்பார்கள்
4. செவ்வாய்கிழமையன்று ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களைச் சந்திப்பார்கள்
5. புதன்கிழமையன்று நபிமார்களை தனது உம்மத்தினர் சந்திப்பார்கள்
6. வியாழன் அன்று உம்மத்தினரை நபிமார்கள் சந்திப்பார்கள்
7. வெள்ளிக்கிழமையில் சுவனவாசிகள் அனைவரும் தங்கள் இறைவனைச் சந்திப்பார்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்
ஆதாரம் : புகாரி முஸ்லிம்
அனஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:
"நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: சுவனத்தில் அங்காடி ஒன்றுள்ளது. சுவனவாசிகள் ஒவ்வொரு ஜும்ஆ நாளிலும் அங்கு வருவார்கள்
தென்றல் காற்றடித்து அவர்களின் முகங்களிலும் ஆடைகளிலும் சுவனத்துப் புழுதியை வாரிப்போடும். அதனால் அவர்கள் அதிக அழகையும் பிரகாசத்தையும் பெறுவார்கள்.

தங்கள் குடும்பத்தாரிடம் திரும்பிச் செல்வார்கள். மேலும் அவர்களிடம் கூறுவார்கள்: "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நாங்கள் வெளியே சென்ற பிறகு நீங்கள் அதிக அழகையும் பிரகாசத்தையும் பெற்று விட்டீர்கள் என்று!
அதற்கு அவர்கள் பதில் கூறுவார்கள்: அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நீங்களும் தான் இங்கிருந்து சென்ற பிறகு அதிக அழகையும் பிரகாசத்தையும் பெற்றுள்ளீர்கள்" (நூல்: முஸ்லிம்)

சுவனத்தில் வாயில்கள் திறக்கப்படுவது குறித்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் .
1. ஓரிறைக் கொள்கையுடன் மரணித்தவர்களுக்காக சுவன வாயில்கள் திறக்கப்படுதல் (முஸ்லிம்),
2. உழுச் செய்து முடித்து ஓதுகின்ற பிரார்த்தைனையின் பயனாக திறக்கப்படும் சுவன வாயில்கள் (புகாரி, முஸ்லிம்),
3. வாரந்தோறும் திங்கள், மற்றும் வியாழன் நாட்களில் சுவனத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன.

அல்லாஹ்வுக்கு இணைவைக்காத ஒவ்வொருக்கும் (விஷேச) மன்னிப்பு வழங்கப்படுகின்றது.
இருப்பினும், யாருக்கும், தனது சகோதரருக்கும் இடையில் குரோதம் காணப்படுகின்றதோ அவருக்கும் மன்னிப்பு நிறுத்தப்பட்டு, இவ்விருவரும் சமரசமாகும் வரை காத்திருங்கள், இவ்விருவரும் சமரசமாகும் வரை காத்திருங்கள், இவ்விருவரும் சமரசமாகும் வரை காத்திருங்கள் என்று கூறப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம், புகாரி).
ரமளான் வந்துவிட்டால் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படும், நகரத்தில் வாயில்கள் மூடப்படும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்).

இது ரமளான் மாதத்தை சிறப்பிக்கின்ற செய்தியாகும் .
சுவர்க்கத்தில் எப்போதும் ஒரு பாடல் ஒலித்துக்கொண்டே இருக்கும்
"நாங்கள் என்றும் வாழ்ந்து வருவோம்
நாங்கள் அழிந்து விடமாட்டோம்
நாங்கள் எப்பொழுதும் சுகபோகத்தில் இருப்போம்
நாங்கள் கவலை அடைய மாட்டோம்
நாங்கள் எப்பொழுதும் திருப்தியுடன் இருந்து வருவோம்"
என்று பாடிக்கொண்டிருப்பார்கள்
ர.ரா

Rahmath Rajakumaran
சுவனப் பதிவுகள் இன்னும் 10 பதிவுகள் இருக்கிறது .
அதற்கப்புறம் " ஜஹன்னம் " என்கிற நரகம் அது 15 பதிவுகள்
அதற்கப்புறம் "திருக்கல்யாணம் "
அதற்கப்புறம் " விருந்து " என்று ஆக இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் மொத்தம் 125 பதிவுகள் வரை வரலாம்.

சுவனவாசிகள் 01
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 83)



சுவனவாசிகளின் உடைகள் "ஸுந்துஸு இப்தப்றக்கு" என்னும் பட்டுகளில் நவரத்தினங்கள் பதித்து பலப்பல விதமாக இருக்கும். இந்த பட்டுடைகள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முத்து மண்டபத்துள் முளைத்திருக்கும் . ஒவ்வொரு மரம் நாள் ஒன்றிற்கு எழுபது விதமாகக் கொடுத்துக் கொண்டிருக்கும்.

ஆபரணங்கள் , பொன், வெள்ளி, நவரத்தினங்கள் இவைகளால் செய்யப்பட்டிருக்கும். இவைகளின் பிரகாசம் சூரியனையும் மங்கச் செய்யும்.
சுவனவாசிகள் பேசும் பாஷை அரபி.அரபி மொழி தெரியாதவர்களும் சரளமாக பேசுவார்கள். எல்லோர் கண்களிலும் சுர்மா இடப்பட்டிருக்கும் . சுர்மா இட்டு ஒரு தடவை உங்கள் கண்ணின் அழகை இப்போதே ரசியுங்கள் .

சுவனவாசிகளுக்கு நரை, திரை, மூப்பு, மலம் , சிறுநீர் , விந்து , நித்திரை, மயக்கம், மறதி, வெறுப்பு, அலுப்பு , அச்சம், கவலை, பொறாமை, நோய் ஆகியவைகள் எதுவும் இராது.
சுவனவாசிகளுக்கு ஒவ்வொருவரும் நூறு பேர்களுடைய பலம் உண்டாயிருக்கும் . ஆகையால் மானிடப் பெண்களில் எழுபது பேரும், ஹூருல் ஈன்களில் முப்பது பேரும் ஆக நூறுபேர்கள் அவர்களின் இன்பத்திற்காகவே கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு ஹூருல் ஈன்களின் மார்பிலும் அவருடைய கணவர் பெயர் பொறிக்கப்பட்டிருக்கும் சில சுவனவாசிகளுக்கு நூற்றுக்கும் அதிகமாக பெண்களும் ஹூருல் ஈன்களும் கொடுக்கப்படும். அன்றாடம் புதிது புதிதாகப் பெண்கள் கொடுக்கப்படுவார்கள்.
ஒவ்வொருவரும் துனியாவில் திருமணம் செய்திருந்த மனைவியை அவருக்கே கொடுக்கப்படும் .

துனியாவில் இரண்டு, மூன்று, நான்கு புருஷர்களுக்கு வாழ்க்கைப்பட்ட சுவனவாசியான பெண்ணுக்கு , தான் வாழ்க்கைப் பட்டவர்களில் எவர் மீது அதிகப்பிரியப்பட்டாளோ அவருடன் மட்டும் சேர்க்கப்படுவாள் .

ஆண், பெண் சுவனவாசிகள் எல்லோருமே ஜோடியாகவே அன்றி யாருமே தனியாக இருக்க மாட்டார்கள் .
இன்னும் அவர்களுக்கு இந்திரியம் இராது , புணர்ச்சி மனப் பிரியப்படி எல்லாம் உண்டாயிருக்கும் . புணர்ச்சியின் நிறைவில் இருவரும் இந்திரியத்திற்கு பதிலாக ஒரு வித நறுமணமுள்ள காற்று வெளிப்படுத்துவார்கள் .
இந்த நறுமணத்தால் ஒருவரை ஒருவர் சொக்கிப் போவார்கள்.
ஒரு சுவனவாசி ஒரே நேரத்தில் எல்லாப் பெண்களுடனும் புணரத் திராணி உள்ளவராக இருப்பார். பெண்களும் எத்தனை தரம் புணர்ந்தாலும் குமரித்தன்மையோடிருப்பார்கள் . பிள்ளை வேண்டுமானலும் , உடனே பிறந்து , வளர்ந்து , வாலிபமாய் விடும் .

மேற்படி கட்டுரை "ஸெய்யிது அப்துல் வஹ்ஹாபு ஆலிம் ஸாஹிபு எழுதிய தரீக்குல் ஜன்னா " என்கிற தமிழ் கிதாபில் உள்ளதை ஒரு வார்த்தை பிசாமல் அப்படியே உங்களுக்கு கொடுத்திருக்கிறேன் . உங்கள் விருப்பு வெறுப்பு எதுவாயினும் அன்னாரையேச் சேருமே அன்றி என்னை அல்ல .
ர.ரா

சுவனவாசிகள் ரசிக்கும் இசை கச்சேரி
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 84)



உலகிலுள்ள அத்தனை ராக தாளங்கள் எழுப்பும் இசைக்கருவிகளும் சுவனத்தில் இருக்கும் . இன்னும் இத்தனைக்கும் மேலான அதிகப்படியான இசைக்கருவிகளும் அங்கு உண்டு.
உலகிலுள்ள அத்தனை இசைக்கருவிகளும் ஏழு ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது என்றால், சுவனத்து இசைக்கருவிகள் எழுபது ஸ்வரங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம் .

இது போக அங்குள்ள மரங்களில் அநேக ராக தாளங்களுக்கென்றே அமைக்கப்பட்டு , கிளைகளிலும் , விழுதுகளிலும் துவாரங்கள் உள்ளதாக இருக்கும் . சுவனத்தென்றல் ஆடி அசைந்து வீசும் போது , மரம் அசைய அசைய காற்று மரத் துவாரங்களின் வழியே ஊடுருவி செல்லும் போது மனதை மயக்கும் அழகிய கீத நாதங்கள் இசைக்கப்படும் .
மேற்கண்ட காற்றின் இசையுடன் பறவைகள் சங்கீதம் பாடும் .அத்தோடு ஹூருல் ஈன்களோடு மலக்குமார்களும் சேர்ந்து பாடுவார்கள் .

இந்த சங்கீதங்கள் அனைத்தும் தஸ்பீஹு முதலியவைகளும் , குர்ஆனின் ஆயத்துக்களும், ஸபூர் வேத வாக்கியங்களுமாக இருக்கும்.

நபி தாவூது (அலை) அவர்களும் அங்கே சங்கீதக்காரர்களில் ஒருவராக இருப்பார்கள் .
இசையை ரசிப்பதன் மூலமோ உருவாக்குவதன் மூலமோ அதில் ஈடுபாடு காட்டுவது ஏற்புடையதல்ல என்றொரு கருத்து இஸ்லாமிய உலகில் இருக்கத்தான் செய்கிறது மறுக்கவில்லை .
இறைவனிடமிருந்து மனிதனை இசை தூரமாக்கி விடுகிறது என்றும இறைச் சிந்தனையை அது மறக்கடிக்க வைத்து விடுகிறது என்றும் சொல்லப்படுகிறது
இசையில் ஒருவன் தன்னையே மறக்க நேரிடுவதால் அது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வாதிடப்படுகிறது
இசை கூடாது என்றும் அழுத்தமாக சொல்பவர்கள் திருக்குர்ஆனில் இருந்தும் நபிமொழிகளிலிருந்தும ஆதாரங்கள் காட்டப்படுகிறது
இசை இறைவனுக்கு எதிரியாக இருக்க முடியுமா?

நான்கு வேதங்களில் ஒன்றான சபூர் வேதத்தை இசை வடிவில் அருளிய இறைவன் இசை உணர்வற்றவனாக இருப்பானா ? சொல்லுங்க
" மலைகளை நோக்கி நீங்கள் அவருடன் (தாவூத்) சேர்ந்து துதி செய்யுங்கள் என்று கட்டளை இட்டோம்
அவ்வாறே பறவைகளுக்கும் கட்டளையிட்டோம்
. . . . குர்ஆன் 34 : 10
என்று கூறி சபூர் வேதத்தை தாவூத் அலை அவர்கள் ஓத அதில் எல்லா ஜீவன்களோடு அஃறிணை வஸ்துகளும் திளைத்திருந்தன என்பதை அறிய முடிகிறது
நபி (ஸல்) அவர்களுக்கு வஹி சில சமயம் மணியடிப்பது போலவும் தேனீ ரீங்காரமிடுவது போலவும் வந்திருப்பதாக ஹதீஸ்களின் மூலம் அறிகிறோம்
மணி சப்தமும் தேனீ ரீங்காரமும் இசை வடிவம்தானே .என்ன சொல்றீங்க ?
ர.ரா

சுவனத்தின் சீதோஷ்ண பொழுதுகள்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 85)



சுவனத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகளெல்லாம் இல்லை. ஆகையால் இரவும் இல்லை. பகலும் இல்லை.
"அப்போ சுவனத்திற்கு வெளிச்சம் எங்கிருந்து வருகிறது?"
ஜன்னத்துல் பிரதௌஸ் என்கிற உயர்வான சுவனத்திற்கு நேர் மேலாக அல்லாஹு தஆலாவின் அர்ஷ் இருக்கிறது.

அர்ஷ் எப்போதுமே ஒளியால் இலங்கிக் கொண்டே இருக்கும். அர்ஷில் இருந்து வெளிவரும் ஒளி எட்டு சுவர்க்கத்திற்கும் ஊடுருவி பிரகாசிக்கும் . இந்த வெளிச்சம் துனியாவில் சூரியோதயத்திற்கு முன் உண்டாயிருக்கும் புத்தம் புது காலையின் பொன்னிற வேளை பொழுதாய் எப்போதுமே சுவர்க்கத்தின் பொழுதுகள் இலங்கிக் கொண்டே இருக்கும் .
" அப்போ நாழிகை குறிப்பும், நாட் குறிப்பும் வாரக் குறிப்பும் மாதக் குறிப்பும், வருஷக் குறிப்பும் இவைகளெல்லாம் கிடையாதா? "


" உண்டு அவைகள் இராக் குறிப்பு பகல் குறிப்பால் இவைகளை வைத்து புரிந்து கொள்ள முடியும். அதாவது சுவனத்து மாட மாளிகைகளின் வாயில்களும், ஜன்னற் கதவுகளும் , பட்டுத் திரைகளும் , தானாகத் திறந்திருக்கும் போது , அது பகல் என்றும் , தானாக மூடிக் கொள்ளும் போது , அது இரவு என்றும் எடுத்துக் கொண்டு, மேற்சொன்ன குறிப்புகளை வைத்து நிதானித்துக் கொள்வார்கள் .
சீதோஷ்ணமும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வாக இல்லாமல் ஒரே மாதிரி சமமாகவே இருக்கும்.

மேலும் துனியாவின் ஒரு நாள் பொழுது என்பது சூரியன் உதித்து ,மறைவதில் இருந்து முடிவு செய்யப்படுகிறது .

ஆனால் சுவனத்தில் சூரியன் இல்லை என்பதால் சுவனத்தின் ஒரு நாள் குறித்து குர்ஆனில் ...
நிச்சயமாக உங்களது இறைவனிடத்தில் ஒரு நாள் நீங்கள் எண்ணும் (உங்களுடைய) ஆயிரம் வருடங்களுக்குச் சமமாகும்.
(அல்குர்ஆன்: 22:47)

இப்படியும் ஒரு நாள் இருக்கலாம் . அல்லது கீழ்க்கண்ட வசனத்தின் படியும் இருக்கலாம்.
تَعْرُجُ الْمَلٰٓٮِٕكَةُ وَ الرُّوْحُ اِلَيْهِ فِىْ يَوْمٍ كَانَ مِقْدَارُهٗ خَمْسِيْنَ اَلْفَ سَنَةٍ
அந்நாளில் மலக்குகளும், ஜிப்ரயீலும் அவனிடம் போய்ச் சேருவார்கள். (அந்நாள்) ஐம்பதினாயிரம் வருடங்களுக்குச் சமமாக இருக்கும்.
(அல்குர்ஆன் : 70:4)
அல்லாஹு தஆலாவே மிக்க அறிந்தவன் .
ர.ரா

சுவனத்தின் சந்தை , கடை வீதிகள்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 86)



ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் சுவர்க்கத்து வாழ்க்கைக்கு அளவே இல்லை .மிக குறைந்த வசதிகள் பெற்ற சுவனவாசிகள் துனியாவைப் பார்க்கிலும் பத்து பங்கு அதிகமாகவே இருக்கும். கூடிய அளவை அல்லாஹு தஆலாவே அறிவான் .

அத்தனை பெரிய வாழ்க்கை ஒவ்வொரு சுவனவாசிக்கும் உண்டு. அதே நேரத்தில் அவர்களின் அந்தஸ்தையும் அல்லாஹு தஆலா உயர்த்தி வைப்பான்
அதாவது ஒவ்வொரு சுவனவாசியையும் மலக்குகள் கண்டு பேச வேண்டுமானால் கூட அந்த சுவனவாசியின் முன் அனுமதி பெற வேண்டும் .இவ்வித அதிகாரத்தை அல்லாஹு தஆலா சுவனவாசிகளுக்குக் கொடுப்பான்.

இன்னும் சுவனவாசிகள் ஒவ்வொருவரும் தம்முடன் சுவர்க்கம் புகுந்துள்ள பிதா , மாதாக்களையும் , பந்துக்களையும், நண்பர்களையும் , இஷ்டர்கையும் விரும்பிய போதெல்லாம் சந்தித்துக் கொண்டும் , சம்பாஷித்துக் கொண்டும் இருப்பார்கள்
ஒரு சுவனவாசி இன்னொரு சுவனவாசியை சந்திக்க நாடினால் தான் எந்த மாதிரி ஆசனத்தில் இருந்து பறந்து போக நினைக்கிறாரோ அந்த ஆசனத்தில் பறந்து போகலாம். அல்லது பறக்கும்

குதிரைகளை பயன்படுத்தலாம். இன்னும் எந்த மாதிரி வாகனத்தில் ஏறி என்ன விதமாக பயணிக்க விரும்புகிறாரோ அந்த மாதிரி பயணிக்கலாம் .
சுவனத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பெரிய பெரிய சந்தைகள் உருவாகி இருக்கும்.

உயர்ந்த பதவியுடையோர் முதல் தாழ்ந்த பதவியுடையோர் வரையுமுள்ள எல்லோரும் அந்த சந்தையில் வந்து கூடுவார்கள் .
அப்போது ஒருவரையொருவர் துன்யாவின் விஷயங்களைப் பற்றியும் , சுவர்க்கத்தின் அற்புத விஷயங்களைப் பற்றியும் வினவி பேசிக் கொள்வார்கள் .

அந்த சந்தையின் அலங்காரத்தையும் , அதன் அழகையும் , சிறப்பையும் வர்ணிக்க எவராலும் இயலாது.
அந்த மிகப் சந்தைக் கடைகளில் எல்லா விதச்சாமான்களும் உண்டு .அங்கு போன ஒவ்வொரு சுவனவாசியையும் மலக்குமார்கள் ,
" நீங்கள் துனியாவில் சந்தைக்குப் போய் கிரயங் கொடுத்தல்லவா வேண்டிய சாமான்களை வாங்குவீர்கள் இங்கு அப்படி அல்ல; உங்களுக்கு வேண்டிய சாமான்களை அல்லாஹு தஆலா எவ்வித கிரயமும் இல்லாமல் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம் "

யார் யார் எந்த பொருட்களை விருப்பமுடன் பார்த்தார்களோ அந்த சாமான்களை உடனே மலக்குமார்கள் எடுத்துக் கொண்டு அவர்கள் வீட்டில் கொண்டு வந்து கொடுப்பார்கள் .
இன்னும் அந்த சந்தையில் மானிட உருவங்களும் , சிறகுகளும் கிடைக்கும். சுவனவாசிகள் யார் யார் எந்த மாதிரியான மானிட உருவத்தை விரும்பினார்களோ அந்த உருவத்தைப் பெறுவார்கள் . அப்படியே சிறகுகளும் உண்டாகி விடும் .
சுவனத்து பறக்கும் உயிரினங்கள் கூட சுவனவாசிகள் பறப்பதைக் கண்டு வியப்புற்று பார்க்கும் .
அந்தச் சந்தையில் ஹூருல் ஈன்கள் திரண்டிருந்து சங்கீதம் பாடுவார்கள் அங்கு திரண்டிருக்கும் சுவனவாசிகள் அந்த கீத நாதங்களைக் கேட்டு ஆனந்த மடைந்து, காண்போரைக் கண்டும், சம்பாஷிப்பாருடன் சம்பாதித்தும் , விரும்பிய பொருட்களை அள்ளிக் கொண்டும் தங்கள் மாளிகைக்கு திரும்பி வருவார்கள்.
நபி (ஸல்) அவர்கள் நவின்றதாக ,ஹஜ்ரத் அனஸ் (ரலி) அறிவிக்கிறார்கள் :

" நிச்சயமாக சுவர்க்கத்தில் ஒரு கடைவீதி உள்ளது
ஒவ்வொரு ஜும்ஆ அன்றும் சுவர்க்கவாசிகள் அந்த கடைவீதிக்கு வருவார்கள் .அப்பொழுது வடக்குத் திசையிலிருந்து ஒரு காற்று வீசும் . அக்காற்று அவர்களின் முகங்களிலும் , ஆடைகளிலும் தவழ்ந்து நறுமணத்தை பரப்பும் .அதனால் அவர்களின் அழகும் ,பொலிவும் அதிகமாகும் .அதே நிலையில் அவர்கள் தங்களின் குடும்பத்தாரிடம் திரும்புவார்கள் .
அப்பொழுது அவர்கள் குடும்பத்தார்கள் , அல்லாஹ்வின் மீது ஆணையாக ! நிச்சயமாக உங்களின் அழகும் பொலிவும் அதிகமாகிவிட்டது என்பார்கள்.அதற்கு அவர்கள் , "அல்லாஹ்வின் மீது ஆணையாக எங்களுக்கு பின் உங்களின் அழகும், பொலிவும் கூட அதிகமாகிவிட்டது" என்பார்கள். (முஸ்லிம்)
ர.ரா

சுவனத்து வாசலில் மரித்த பிள்ளைகள்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 87)

இந்த பதிவு சுவனப்பதிவில் விடுபட்டு விட்டது .
முன் சொன்ன தடாகத்தில் குளித்து கரையேறிக்கும் உம்மத்துடன் சுவர்க்கம் புகுவதற்கு நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் சுவனத்தின் தலைவாயிலுக்கு வருவார்கள் .
அந்த வாசலில் பாரிய விருக்ஷத்தில் பிராயம் அடையாமல் இறந்த சிறுபிள்ளைகள் அனைத்தும் வந்து நிற்பார்கள் .
ஒவ்வொரு பிள்ளைகளும் கைகளில் சுவர்க்கத்து குடிப்புகளும் , பட்டாடைகளும் வைத்துக் கொண்டு ஷிராத் பாலங்கடந்து வருகிற தம் தம் பிதா மாதாக்களுக்குக் கொடுப்பதற்காக வழி பார்த்து காத்து நிற்பார்கள் . எல்லோரும் அங்கு வந்து சேர்ந்ததும் தம் தம் பெற்றோர்களுக்கு அப் பரிசுகளைக் கொடுத்து சுவர்க்கத்திற்குள் அழைத்துச் செல்லும்.
பிதா , மாதாக்களை வரக் காணாத பிள்ளைகள் சுவனத்திற்குள் செல்லாமல் பாலத்தைப் பார்த்தவாறே தேடி அழும் .

அந்த அழு குரலை நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் கேட்டு மலக்குகளைப் பார்த்து ,
"இந்தப் பிள்ளைகள் ஏன் அழுகிறது?"
" இப் பிள்ளைகளின் பிதா, மாதாக் வரக் காணாததால் அவர்களைத் தேடி அழுகிறார்கள் "
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் அந்தப் பிள்ளைகளைப் பார்த்து ,
"இன்ஷா அல்லாஹ் உங்களுக்காகவே உங்கள் பெற்றோர்கள் நாளைக்கு வந்து சேருவார்கள் " என்று கூறுவார்கள்.
அந்த பிள்ளைகள் சுவர்க்கத்தை ஏறெடுத்துப் பார்க்காமல் , தங்கள் தாயையும், தந்தையும் எதிர்ப்பார்த்து அந்த பாலத்தையே பார்த்துக் கொண்டு காத்து நிற்பார்கள் .
ர.ரா

சொர்க்கத்து சிறுவர்கள்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 88)



இந்தப் பதிவும் சுவனப்பதிவு பதிவில் விடுபட்டு விட்டது .
எல்லோரும் சுவர்க்கம் புகும் போது அங்குள்ள மலக்குமார்கள் எதிர்கொண்டு வந்து , "உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக ! உங்களுக்கு ஈடேற்றம் உண்டாவதாக ! " என்று கூறி ,
" நீங்கள் ஜெயம்பெற்றீர்கள் சுவர்க்கத்தில் நுழையுங்கள் சதாகாலமும் இங்குத் தரிபட்டுச் சுகித்திருங்கள் "
அப்போது சுவனத்து சிறுவர்கள் எதிர்கொண்டு வந்து ஸலாம் சொல்லி நன்மாராயம் கூறுவார்கள்.

اِلَّا قِيْلًا سَلٰمًا سَلٰمًا
ஆயினும், ஸலாம்! ஸலாம்! (சாந்தியும், சமாதானமும்) என்ற சப்தத்தையே செவியுறுவார்கள்.
(அல்குர்ஆன் : 56:26)

لَا يَسْمَعُوْنَ فِيْهَا لَـغْوًا اِلَّا سَلٰمًا‌ وَلَهُمْ رِزْقُهُمْ فِيْهَا بُكْرَةً وَّعَشِيًّا
(அவற்றில்) ஸலாம் என்பதைத் தவிர (ஸலாம் என்ற முகமனைத் தவிர) வீணான வார்த்தைகளைச் செவியுறார். அங்கு அவர்களுக்குக் காலையிலும் மாலையிலும் மிக்க மேலான உணவு அளிக்கப்படும். (அல்குர்ஆன் : 19:62)

அச்சிறுவர்கள் சுவனவாசிகளை அழைத்துக் கொண்டு , சுவனத்து அலங்காரத்தையும் , அற்புதத்தையும் ஒவ்வொன்றின் தனிதனிச் சிறப்புகளையும் விவரித்து விளக்கிக் காட்டுவார்கள் .
பின்பு ஒவ்வொருவருக்கும் நியமிக்கப் பட்டிருக்கும் ஹூருல் ஈன்களிடம் அந்தச் சிறுவர்கள் போய் உங்களுக்குரியவர் இன்னார் வந்து விட்டார் என்று தெரியப்படுத்த , அவர்கள் ஓடோடி வருவார்கள் . பின் சுவனத்து தலை வாசலில் வைத்து அவளுக்குரிய சுவனவாசியை சந்திப்பார்கள்.
பின் ஹூருல் ஈன்கள் அவர்களை அழைத்துக் கொண்டு அவரவர் மாளிகையில் நுழைவார்கள் . அந்த மாளிகையில் தயாராக இருக்கும் தங்கத்திலான, வெள்ளியிலான சாமான்களையும் , உணவு வகைகளையும், அதன் ஆடம்பர அழகையும் கண் குளிரக் கண்டு எல்லா புகழும் அல்லாஹுக்கே ! என்று சொல்லி அல்லாஹ்வை புகழ்வார்கள்.

நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களும் அவர்களுடைய உம்மத்துக்களாகிய நாமும் நமக்குரிய சுவனத்தில் தரிபட்டு இருப்போம்.
சுவனவாசிகள் மொத்தம் நூற்றி இருபது வகுப்புகளாக இருப்பார்கள். அந்த வகுப்பில் எண்பது வகுப்பினர்கள் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் வகுப்பினராகவும் , மீதி நாற்பது வகுப்பினர் மற்ற நபிமார்களின் உம்மத்துகளாக இருப்பார்கள்.
நல்லடியார்களுக்கு பரிசளிக்கப்படும் சுவனத்தின் அந்தஸ்தை எவருமே கற்பனை செய்ய முடியாதளவிற்கு மிகப் பிரமாண்டமாக இருக்கும் என்று அல்லாஹ் கூறுகின்றான்.
அவர்கள் செய்த நற்செயல்களுக்குக் கூலியாக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண் குளிர்ச்சியை (மறுமையின் பேரின்பத்தை) எந்த ஒரு ஆன்மாவும் அறிந்து கொள்ள முடியாது.
அல் குர்ஆன். (32 : 17)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
“நான் என் நல்லடியார்களுக்காக எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் தோன்றிராத இன்பங்களை (சொர்க்கத்தில்) தயார் படுத்தி வைத்துள்ளேன்” என்று கூறினான்.
(சொர்க்கத்தின் இன்பங்கள் குறித்து) உங்களுக்கு அல்லாஹ் அறிவித்திருப்பது சொற்பமே! என்று கூறி நபி(ஸல்) அவர்கள் (32:17) குர்ஆன் வசனத்தை ஓதினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி). நூல்: முஸ்லிம். 5438, 5439. 5440.
ர.ரா
குறிப்பு : சுவனப்பதிவுகள் இத்துடன் நிறைவு பெறுகிறது .

" ஜஹன்னம் " என்னும் நரகம் 01
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 89)



இன்று செவ்வாய்க்கிழமை . இது மாதிரியான ஒரு செவ்வாய்க்கிழமை அன்றுதான் நரகம் படைக்கப்பட்டது. அது வேதனைகள் அரசாட்சி செய்யும் கொடூரக் கோட்டை !
அக்கினிக்கென்று ஓர் உலகம் ஒன்று இருக்குமானால் அதுதான் நரகம் .அதன் தரை ஈயத்தினாலும் , கடினமான மதில் சுவர்கள் கந்தகத்தினாலும் , அதன் மேல் கூரை செம்பினாலும் , வாசற் கதவுகள் இரும்பினாலும் உண்டாக்கப்பட்டிருக்கும்.
அத்தனையிலும் நெருப்பு , சூடு, சூடு ,
மதில் சுவரின் கனம் நாற்பது வருஷப் பிரயாணத்தூரமுள்ளது. நரகம் முழுவதும் கரிய இருள் சூழ்ந்து கவிழ்ந்து மூடிக் கொண்டிருக்கும் . அதன் ஆழம் ஒரு பாறைக் கல்லை மேலிருந்து போட்டால் , எழுபது வருஷம் வரையும் அந்தக் கல் தரையில் விழுந்து தரிபடாமல் போய்க் கொண்டே இருக்கும்.
கற்பனை செய்ய முடிகிறதா ?
நரகம் ஒன்றின் மேல் ஒன்றாக ஏழு தட்டுகளை உடையது. அந்த ஏழு தட்டுகளைத்தான் ஏழு நரகம் என்பார்கள்

لَهَا سَبْعَةُ اَبْوَابٍ لِكُلِّ بَابٍ مِّنْهُمْ جُزْءٌ مَّقْسُوْمٌ
அந்நரகத்திற்கு ஏழு வாசல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு வாசலிலும் (செல்லக்கூடிய வகையில்) அவர்கள் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விடுவார்கள்.
(அல்குர்ஆன்: 15:44)


ஏழு நரகத்திற்கும் தனித்தனி பெயர்கள் உண்டு .பொதுவாக நரகத்தை ஜஹன்னம் என்றே குறிப்பிட்டாலும்
முதல் தட்டு நரகத்திற்கு பெயர்தான் "ஜஹன்னம் "
இரண்டாவது தட்டு நரகத்திற்கு "லலா "
மூன்றாவது தட்டு நரகத்திற்கு "ஸகர் "
நான்காவது தட்டு நரகத்திற்கு "ஹுத்தமா "
ஐந்தாவது தட்டு நரகத்திற்கு " ஜஹீம் "
ஆறாவது தட்டு நரகத்திற்கு " ஸயீறு "
ஏழாவது தட்டு நரகத்திற்கு " ஹாவியா "

இந்த ஏழு தட்டில் சிறியதுதான் முதல் தட்டான ஜஹன்னம் . இந்த சிறிய தட்டில் ஏழு வானங்களையும், ஏழு பூமிகளையும் தூக்கி வைத்தால் , அகன்ற சமுத்திரத்து நடுவில் ஒரு மோதிரம் வைத்தாற் போலிருக்கும். அந்த தட்டிலிருந்து ஒவ்வொரு தட்டும் ஒன்றுக்கொன்று பெரியதாக இருக்கும்.
وَمَاۤ اَدْرٰٮكَ مَا هِيَهْ
அந்த "ஹாவியா " இன்னதென்று (நபியே!) நீங்கள் அறிவீர்களா?
(அல்குர்ஆன்: 101:10)

نَارٌ حَامِيَةٌ
(அதுதான்) கனிந்து கொண்டிருக்கும் (நரக) நெருப்பாகும்.
(அல்குர்ஆன்: 101:11)
இன்னும் சொல்ல பயமாக இருக்கிறது !
ர.ரா

Rahmath Rajakumaran
31. இவருக்கு (அலீ(ரலி)க்கு) உதவுவதற்காகப் போய்க் கொண்டிருந்தேன். அப்போது அபூ பக்ரா(ரலி) என்னைச் சந்தித்து 'எங்கே செல்கிறீர்?' எனக் கேட்டார். நான் இவருக்கு உதவப் போகிறேன் என்றேன். அதற்கவர் 'நீர் திரும்பிச் செல்லும்; ஏனெனில், 'இரண்டு முஸ்லிம்கள் தம் வாட்களால் சண்டையிட்டால் அதில் கொன்றவர், கொல்லப்பட்டவர் இருவருமே நரகத்திற்குத்தான் செல்வார்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' அப்போது, 'இறைத்தூதர் அவர்களே! இவரோ கொலை செய்தவர்; (நரகத்திற்குச் செல்வது சரி) கொல்லப்பட்டவரின் நிலை என்ன? (அவர் ஏன் நரகம் செல்ல வேண்டும்?) என்று கேட்டதற்கு, 'அவர் அவரைக் கொல்ல வேண்டுமென்று பேராசை கொண்டிருந்தார்' என்று கூறினார்கள்' என கூறினார்' என அஹ்னஃப் இப்னு கைஸ் அறிவித்தார்.
ஸஹீஹ் புகாரி அத்தியாயம் : 2. ஈமான் எனும் இறைநம்பிக்கை

நரகத்து நெருப்பு மலக்குகள் 03
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 91)



நரகவாளிகளை வேதனை செய்யக் கணக்கற்ற மலக்குமார்கள் நெருப்பில் அங்கிருப்பார்கள் . சொல்லப்போனால் நெருப்புக்குள்ளே இருப்பார்கள் பார்க்க கணகடூரமாக விகாரமாக இருப்பார்கள் அவர்களுக்கு "ஜபானியா" என்று பெயர்.
அவர்கள் கைகளால் வேலை செய்வது போலக் கால்களாலும் வேலை செய்வார்கள். ஜபானியா மலக்குகள் தங்கள் கைகளினால் நரகவாளி இருபதினாயிரம் பேர்களையும் தங்கள்

கால்களினால் நரகவாளி இருபதினாயிரம் பேர்களையும் பிடித்து சுழற்றி எறியும் திராணியுள்ளவர்கள்.

ஜபானியா மலக்குகளின் கண்கள் மின்னலைப் போலவும், பற்கள் காளை மாட்டுக் கொம்பை போலவும், உதடுகள் கால் வரை தொங்கியும் , அக்கினி ஜுவாலை எரியும் வாயையும் , ஒன்றுக்கொன்று ஒரு வருஷ பிரயாண தூரமுள்ள புஜங்களையும் உடையவர்கள்.
ஜபானியா மலக்குகளின் நெஞ்சில் அணுவளவும் ஈனம் , இரக்கம் இராது.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا قُوْۤا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ نَارًا وَّقُوْدُهَا النَّاسُ وَالْحِجَارَةُ عَلَيْهَا مَلٰۤٮِٕكَةٌ غِلَاظٌ شِدَادٌ لَّا يَعْصُوْنَ اللّٰهَ مَاۤ اَمَرَهُمْ وَيَفْعَلُوْنَ مَا يُؤْمَرُوْنَ
நம்பிக்கையாளர்களே! நீங்கள் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதனுடைய எரிகட்டை, மனிதர்களும் கற்களுமாகும். அதில் கடின சித்தமுடைய பலசாலிகளான மலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் ஒரு சிறிதும் மாறுசெய்ய மாட்டார்கள். அவர்கள் (வேதனை செய்யுமாறு) தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே செய்து வருவார்கள்..
(அல்குர்ஆன்: 66:6)

அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹு தஆலாவே அறிவான்.
அவர்களுக்கு 18 தலைவர்கள் உண்டு. அந்த தலைவர்களுக்கும், மற்ற ஜபானியாக்களுக்கும் அதிபதி மலக்கு மாலிக் (அலை) ஆவார்கள் .
ஜபானியா மலக்குகளின் இரு கைகளிலும் இரண்டு தடி இருக்கும். அதனால் அடிபட்ட நரகவாளி எழுபதினாயிரம் வருஷப் பிரயாணத் தூரம் தரையிற் பதிந்து போவான்.
இன்னும் ஜபானியாக்களில் "அத்யாபீல் " என்ற மலக்கு ஒருவர் உண்டு. அவர் ஐநூறு வருஷப் பிராயண தூர உயரமுள்ளவர் .அவருக்கு ஏழாயிரம் தலைகள் இருக்கும். தலை ஒன்றிற்கு ஏழாயிரம் முகம் , முகம் ஒன்றிற்கு ஏழாயிரம் வாய்களும் , வாய் ஒன்றிற்கு ஏழாயிரம் பற்களும் ,ஒவ்வொரு பற்களும் ஒவ்வொரு மலை போல இருக்கும் .அப் பற்கள் ஒன்றோடொன்று அடிபட்டு எழும் சப்தம் எழுவான் , படுவான் வரையும் கேட்கும் .
இன்னும் அவருக்கு ஏழாயிரம் கைகள் இருக்கும். கை ஒன்றிற்கு ஏழாயிரம் விரல்கள் இருக்கும் . விரல் ஒன்றிற்கு எண்பது வருஷப் பிராயாணத்தூர நீளமுள்ள ஏழாயிரம் பாம்புகள் இருக்கும் .
அவர் வலது கையில் அக்கினித் தடி ஒன்றைப் பிடித்திருப்பார். அதன் தலைப்பிலும் ஏழாயிரம் பாம்புகள் இருக்கும் .
ஏழு வானத்தில் உள்ளவர்களும் ஏழு பூமியில் உள்ளவர்களும் ஒன்று கூடி நகர்த்தினாலும் அந்த இரும்புத்தடியை அசைக்க முடியாது.

وَلَهُمْ مَّقَامِعُ مِنْ حَدِيْدٍ
அவர்களுக்காக இரும்புச் சம்மட்டிகளுண்டு. (அதனைக் கொண்டு அவர்களை அடிக்கப்படும்.)
(அல்குர்ஆன் : 22:21)

ஜபானியா ஒவ்வொருவரிடமும் , பத்து லட்சம் ஓநாய்களும் , ஒவ்வொரு ஓநாய்களுக்குப் பத்து லட்சம் நாய்களும் , நாய் ஒன்றிற்கு பத்து லட்சம் சிங்கங்களும் இருக்கும்.
நரகத்தில் நீளமுள்ள பாம்புகள் , தேள்கள், திரளாய் மலிந்திருக்கும். அங்கு தடிகள் , சங்கிலிகள் இன்னுமுள்ள கருவிகள் எல்லாம் நெருப்பினால் உண்டாகி இருக்கும் . எவனெவன் எதைக் கொண்டு வேதனை செய்யப்படுகிறானோ அவனவனின் பெயர் அவைகளில் எழுதப்பட்டிருக்கும் .
(பாவம் செய்த) "ஜின்களைக் கொண்டும் மனிதர்களைக் கொண்டும் நிச்சயமாக நான் நரகத்தை நிரப்புவேன்" என்ற உங்கள் இறைவனின் வாக்கு நிறைவேறியே தீரும்.
(குர்ஆன் : 11:119)

நபி (ஸல்) அவர்கள்: "உங்கள் (உலக) நெருப்பு, நரக நெருப்பின் எழுபது பாகங்களிலிருந்து ஒரு பாகமேயாகும்" என்று கூறினார்கள்.
உடனே, " இறைத்தூதர் அவர்களே! இந்த உலக நெருப்பு (பாவம் செய்தவர்களை எரித்து) வேதனைப் படுத்த போதுமானதாயிற்றே!" என்று கேட்கப்பட்டது. அதற்க்கு நபி (ஸல்) அவர்கள், "(அப்படியல்ல) உலக நெருப்பை விட நரக நெருப்பு அறுபத்தொன்பது பாகங்கள் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.
இவற்றில் ஒவ்வொரு பாகமும் உலக நெருப்பின் வெப்பத்திற்கு சமமானதாகும்" என்றார்கள்.
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி)
நூல்; புஹாரி. 3265.

அல்லாஹ்வின் தூதர் அவர்களிடம் நபித்தோழர்கள் கேட்டபடி,

"இவ்வுலகில் உள்ள நெருப்பே மனிதனை சுட்டுப்பொசுக்க போதுமானதாகும், இப்படி இருக்க அறுபத்தொன்பது மடங்கு அதிகமுள்ள கொடும் நெருப்பின் தேவை என்ன?
உலகில் வாழும் மனிதர்களின் சராசரி உயரம் 5 அடி, எடை 80 கிலோ இருக்கிறார்கள். இந்தளவுள்ள மனிதர்களை நெருப்பில் இட்டு வேதனை செய்ய உலக நெருப்பு போதும். ஆனால் மறுமையில் எழுப்பப்பட்டு இறுதித் தீர்ப்புக்குப் பின் நரகம் செல்லும் நரகவாசிகளின் உடம்பு, பூமியில் இருந்தது போல் சராசரி ஐந்தடி உயரம் எண்பது கிலோ எடையில் இருக்காது.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (நரகத்தில்) இறை மறுப்பாளனின் “கடவாய்ப்பல்’ அல்லது “கோரைப்பல்’ உஹுத் மலையைப்
போன்றிருக்கும்.
அவனது தோலின் பருமன் மூன்று நாள் நடைப் பயணத் தொலைவுடையதாக இருக்கும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
நூல்: முஸ்லிம். 5479.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நரகத்தில் இறை மறுப்பாளனின் இரு தோள்களுக்கிடையே உள்ள தூரம், துரிதமாக வாகனத்தில் பயணிப்பவர் மூன்று நாட்கள் கடக்கும் தூரமாகும்.
இதை அபூஹுரைரரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: முஸ்லிம். 5480.

நரகவாசிகளின் உடல், கொடும் வெப்ப வேதனையை நன்கு ருசிப்பதற்க்காக அல்லாஹ்வால் பிரமாண்ட மாமிச மலையாக மாற்றப்பட்டே நரகில் தள்ளப்படுவார்கள். நரகில் உள்ள மாமிசமலை மனிதர்களுக்கு பூமியில் உள்ள வெப்பம் போதுமானதாக இருக்க முடியாது. காரணம் இவர்களின் தோலின் கனமே மூன்று நாள் பயண தொலைவு இருப்பதால் பூமியில் இருக்கும் நெருப்பை விட எழுபது மடங்கு கடும் சூடு கொண்ட நெருப்பு தேவையாக உள்ளது.
மேலும் சொர்க்க, நரகவாசிகளுக்கு மீண்டும் ஒரு மரணம் இல்லை. ஆகவே நரகவாசிகள் கொடும் நெருப்பால் சுடப்பட்டு பஸ்பமாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகவே மிக கனமான தோல் போர்த்தப்பட்டு, இறப்பில்லா நீடித்த வேதனை அனுபவித்துக்கொண்டே இருப்பார்கள். அவர்களின் தோல்கள் கருகி வலியுணர்ச்சி குறையும்போது மீண்டும் புதுத் தோல் மாற்றப்பட்டு வலி வேதனையை தொடர்ந்து உணர்ந்து கதறுவார்கள்.
மனிதன் தோலில்தான் வலி உணர்வு நரம்புகள் அமைந்துள்ளது. தோலில் உள்ள இந்த நரம்புகள் எரிந்து விட்டாலோ அல்லது அழுகி விட்டாலோ அவர்களால் வலியை உணர முடியாது
"எவர்கள் நம் சான்றுகளை மறுக்கின்றார்களோ அவர்களை நிச்சயம் நாம் நரகில் வீசி எறிவோம்! அவர்களுடைய உடலின் தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றிக்கொண்டே இருப்போம்; வேதனையை அவர்கள் நன்கு சுவைத்துக்கொண்டேயிருப்பதற்காக! திண்ணமாக அல்லாஹ் மிகையான ஆற்றல் உள்ளவனாகவும் நன்கு அறிந்தவனுமாகவும் இருக்கின்றான்.
–அல் குர்ஆன். 4:56.
ர.ரா
Rahmath Rajakumaran
சொர்க்கத்திலும், நரகத்திலும் எல்லா மனிதர்களும் ஜீவராசிகளும் எல்லாம் மிகப் பெரிய அளவில் இருக்கும் .
சுவனவாசிகள் எல்லோருமே நபி ஆதம் (அலை) அவர்களுடைய அறுபது முழம் உயரமும் , ஏழு முழம் கனமுமாக இருப்பார்கள் .
அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: (நரகத்தில்) இறை மறுப்பாளனின் “கடவாய்ப்பல்’ அல்லது “கோரைப்பல்’ உஹுத் மலையைப்
போன்றிருக்கும்.
அவனது தோலின் பருமன் மூன்று நாள் நடைப் பயணத் தொலைவுடையதாக இருக்கும். இதை அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.
நூல்: முஸ்லிம். 5479.
நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:
நரகத்தில் இறை மறுப்பாளனின் இரு தோள்களுக்கிடையே உள்ள தூரம், துரிதமாக வாகனத்தில் பயணிப்பவர் மூன்று நாட்கள் கடக்கும் தூரமாகும்.
இதை அபூஹுரைரரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நூல்: முஸ்லிம். 5480.
கூட்டி கழித்துப் பார்த்தால் கணக்கு சரியாகத்தான் வருது

நரகமும் , ஜின்களும் 04 .
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 92)



ஜின்கள் நெருப்பில் படைக்கப்பட்டிருப்பதால் , நரகமும் நெருப்பினால் உண்டாக்கப் பட்டிருப்பதால் ஜின்களை நரகத்தின் நெருப்பு தீண்டாதா ? தீண்டினாலும் ஜின்களுக்கு வேதனை இருக்காதா ? என்ற கேள்விகளை நண்பர் ஒருவர் கேட்டார்

அப்படிப் பார்த்தால் மனிதனை மண்ணில் படைக்கப்பட்டதால் அவன் இறந்த உடம்பை மண் அவனைத் தீண்டாமலா இருந்தது மண்ணோடு மண்ணாக மக்க வைக்கவில்லையா ?
ஒளிவீச்சி, நெருப்பு ,கதிர் வீச்சி, அலைகள் இவையெல்லாம் சூரியனின் வெள்ளோளியில் கலந்தே இருக்கிறது இது பற்றிய விபரம் மலக்குமார்கள் தொடரில் சொல்லி இருக்கிறேன் இருந்தாலும் இப்போதும் சொல்கிறேன் .

சூரியனின் ஒளியில் நாம் பார்க்கக் கூடிய வைலட் v , இன்டிகோ I , புளு B , கிரீன் G , எல்லோ Y , ஆரஞ்சு O , ரெட் R இவைகள் நாம் பார்க்கும் 0.00004 cm இருந்து 0.00007 cm வரை அளவீடுக்குள் இருப்பதால் நம்மால் பார்க்க முடிகிறது.
வைலட் நிறத்திற்கு மேலே அல்ட்ரா வைவட் , எக்ஸ்ரே கதிர், காமா கதிர், காஸ்மிக் கதிர் , இன்னும் அறியப்படாத கதிர்களும் உள்ளன

அதைப்போலவே ரெட் நிறத்திற்கு கீழே இன்ஃபரா ரெட் , மின் பொறி , ராடார் கதிர்கள், டெலிவிஷன் , குட்டையான ரேடியோ அலை , ரேடியோ அலை , நீளமான ரேடியோ அலை , இன்னும் அறியப்படாத கதிர் . . . . . . இவைகளில் ஏதோ ஒரு நெருப்புக்கதிரில் ஜின்கள் படைக்கப்பட்டிருக்கலாம் .
" ஜின்களையும் மனிதர்களையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன்"
குர்ஆன் (11 : 119)
"ஜின்களைக் கொடிய உஷ்ணமுள்ள நெருப்பிலிருந்து படைத்தோம் "
குர்ஆன் (15 : 27)
நரகின் எரிபொருளாக குர்ஆனில் இன்னொரு இடத்தில்
" மனிதர்களும் கற்களும் இரையாகின்ற நரக நெருப்புக்குப் பயந்து கொள்ளுங்கள் "
குர்ஆன் (2 : 24)
இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் கற்கள் என்பதை கந்தகக் கற்கள் என்று அக்கால விஞ்ஞானத்தின்படி சொல்லப்பட்டிருந்தாலும் , கந்தக கற்கள் சொற்ப காலமே வெப்பத்தை தரக்கூடியது . ஆனால் , அணுக்கதிரை தொடர்ந்து வீசச் செய்யும் யூரேனிய கற்கள் யுக யுகங்களாக நெருப்பைக் கொட்டக்கூடியது அட, அதன் சாம்பலிருந்து வெளிப்படும் கதிர் வீச்சே லட்சக்கணக்கான வருடங்களுக்கு இருந்து கொண்டே இருக்கும் .
நரக வாசிகள் என்றென்றும் யுக யுகங்களாக அதில் இருப்பதாக இறைவன் குறிப்பிடுகிறான்
சில நரகங்களின் நெருப்பு விநோத தன்மையைக் கொண்டது
" நபியே ! ஹுதமா என்றால் என்னவென்று நீங்கள் அறிவீர்களா ? அதுதான் அல்லாஹ் உடைய கட்டளையால் எரிக்கப்பட்ட நெருப்பு
அது உடல்களில் பட்டவுடன் உள்ளங்களில் பாய்ந்து விடும் நெருப்பு
(திருக்குர்ஆன் 104 : 5_9)

எக்ஸ்-ரே கதிர்வீச்சி கருவிலிருந்து எவ்வித வெளிச்சமும் வெளிவரவில்லை ஆனால் உடலில் நுழைந்து எலும்பை படம் பிடிக்கவில்லையா ? எக்ஸ்-ரே யும் ஓர் அணு கதிர்தான் .
அநேகமாக இந்த நரகத்தின் நெருப்பு அணுகதிர் வீச்சியின் நெருப்பாக இருக்கலாம். காரணம் அணுக்கதிர் வீச்சு உடலில் பட்டால் புற்று நோயோ இரத்தப் புற்று நோய் வரலாம் . இக்கதிர் மேலே தாக்கியதும் இரத்த சிவப்பணுக்களை தின்று விடும் .
யுரேனியத்தின் கதிர் வீச்சு இழக்க 704 மில்லியன் வருடங்கள் ஆகும்
எனவே ஜின்கள் நெருப்பில் படைக்கப்பட்டிருந்தாலும் , யுரேனியம் போன்ற அணுசக்தி வெளிப்படுத்தும் கதிர் வீச்சு தன்மை கொண்ட நெருப்பு நரகத்தில் இருக்கலாம் . எனவே ஜின்களுக்கும் கொடிய வேதனை தரக்கூடடியே நெருப்பு அவைகள் படைக்கப்பட்ட நெருப்பைக் காட்டிலும் கொடிய நெருப்பான அணுக்கதிர்வீச்சி நெருப்பு நரகத்தில் உண்டு .
ர. ரா

நரகவாசிகளின் உடுப்பு 05
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 93)



وَتَرَى الْمُجْرِمِيْنَ يَوْمَٮِٕذٍ مُّقَرَّنِيْنَ فِى الْاَصْفَادِ
அன்றி, குற்றவாளிகள் அனைவரும், அந்நாளில் விலங்கிடப்பட்டிருப்பதையும் நீங்கள் காண்பீர்கள்.
(அல்குர்ஆன்: 14:49)

سَرَابِيْلُهُمْ مِّنْ قَطِرَانٍ وَّتَغْشٰى وُجُوْهَهُمُ النَّارُۙ
அவர்களுடைய சட்டைகள் தாரால் செய்யப்பட்டிருக்கும். அவர்களுடைய முகத்தை நெருப்பு பொசுக்கும்.
(அல்குர்ஆன்: 14:50)

பெட்ரோலியத்தின் பொருட்களை பிரித்தெடுத்த பின் மிஞ்சி இருப்பதுதான் " தார் " இது பற்றிய குறிப்பு கி.பி 620 -ல் இறக்கப்பட்ட குர்ஆனில் இருந்ததை ஒட்டி பெட்ரோலியம் எப்போது எப்படி உலகிற்கு அறிமுகமான சங்கதியை தேடியதில் ....
இந்த பெட்ரோலிய எண்ணெய் வளங்களை உலகில் முதன் முதலில் கண்டறிந்தவர்கள் ஈராக்கியர்கள் என்னும் பண்டைய பாபிலோனியர்கள் ஆவர்.
பண்டைய பாபிலோனியர்கள் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தங்களது மண்ணில் வானுயர்ந்த கோபுரங்களை கட்டும்போது, கட்டிடத்தின் வலிமையை கருத்தில் கொண்டு கட்டிடத்தின் அஸ்திவாரச்சுவரை **(Foundation Wall)** நிலத்தில் சற்று ஆழத்திலிருந்து கட்டி எழுப்பினார்கள். அப்படி ஒரு சமயம் ஈராக்கிலுள்ள **Andericca (Near Babylon Province)** என்ற இடத்தில் ஒரு கட்டிடத்தின் கட்டுமானதிற்க்காக சற்று ஆழமாக குழி தோண்டியபோது கிடைத்ததுதான் இந்த கச்சா எண்ணெய் **(Crude oil).**
கச்சா எண்ணெய் சேர்த்து கட்டப்பட்ட சுவர்கள் கரையான்கள், எறும்புகள் மற்றும் பூச்சிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கொள்வதை தற்செயலாக ஒரு நாள் கண்டுபிடித்த பாபிலோனியர்கள் அதன் பின்னர் கச்சா எண்ணெய்யை வெகுநேரம் கொதிக்கவைத்து

வற்றச்செய்து கிடைத்த கூழ்மத்தை (நிலக்கீல் அல்லது தார் **Asphalt**) நிலத்திற்குள் மறையும் கட்டிடத்தின் அஸ்திவாரச் சுவர்களின் மீது சாயமாக (paint) பூசினார்கள்.

அதோடு கச்சா எண்ணையின் எரியும் திறனை கருத்தில் கொண்டு வெளிச்சத்தை உண்டாக்க தீபந்ததிற்க்குரிய எண்ணெய்யாகவும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதனை ஹீரோட்டஸ் **(Herodus** - கி.மு.484) மற்றும் டியோடோரஸ் **(Diodorus** - கி.மு. 60) என்ற இரு புகழ்பெற்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளில் ஆதாரத்துடன் தெரிவிக்கிறார்கள்.
குர்ஆன் இறங்கும் காலத்தில் தாரின் பயன்பாட்டை அக் கால மக்கள் நன்கு அறிந்தே இருந்தனர்
.
மேற்கண்ட வசனத்தில் "தார்" என்பதைக் குறிக்க மூலத்தில் ' கத்திரான்' என்னும் சொல் இடம்பெற்றுள்ளது.
கத்தாதா (ரஹ்) அவர்கள் , " அது எளிதில் தீ பற்றிக்கொள்ளக் கூடிய பொருளாகும்" என்று கூறியுள்ளார் .


تَلْفَحُ وُجُوْهَهُمُ النَّارُ وَهُمْ فِيْهَا كٰلِحُوْنَ
அவர்களுடைய முகங்களை (நரகத்தின்) நெருப்புப் பொசுக்கும். அவர்களுடைய (உதடுகளெல்லாம் வெந்து சுருண்டு) முகம் விகாரமாக இருக்கும்.
(அல்குர்ஆன்: 23:104)

தார் சட்டையில் பற்றிய தீ சட்டென முகத்தில் பற்றிக் கொள்ளும் .
ஒப்பாரி வைக்கும் பெண், தான் இறப்பதற்கு முன் பாவமன்னிப்புக் கோரி அதிலிருந்து மீளாவிட்டால், மறுமை நாளில் தாரால் ஆன நீளங்கியும் , சொறி சிரங்குச் சட்டையும் அணிந்தவளாக நிறுத்தப்படுவாள் . **முஸ்லிம் – முஸ்னது**

لَهُمْ مِّنْ جَهَنَّمَ مِهَادٌ وَّمِنْ فَوْقِهِمْ غَوَاشٍ وَكَذٰلِكَ نَجْزِى الظّٰلِمِيْنَ
நரகத்தில் அவர்களுக்கு (நெருப்பாலான) விரிப்புகளும் உண்டு. அவர்கள் மேல் போர்த்திக்கொள்வதற்கும் (நெருப்பாலான) போர்வைகள் உண்டு. அநியாயக்காரர்களை இவ்வாறே நாம் தண்டிப்போம்.
(அல்குர்ஆன்: 7:41)

'விரிப்புகள்" என்பதை குறிக்க "மிஹாத் " என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
இது தரையில் விரிக்கப்படும் விரிப்பை குறிக்கும் .
இதில் " போர்வைகள் " என்பதைக் குறிக்க " ஃகவாஷ் " எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது .இது மேனியில் போர்த்தப்படும் உரத்த துணிகளைக் குறிக்கிறது
ர.ரா

நரகவாசிகளின் உணவு 06
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 94)



நரகவாளி ஒவ்வொருவனும் மக்காவுக்கும் , மதீனாவுக்கும் இடையிலுள்ள தூரமான இடம் , அவன் உட்கார்ந்திருக்க போதாத அளவாய் அவன் பெருத்துப் போவான். இந்த பெருத்த உடலுக்கு எந்நேரமும் பசி அடங்காதிருப்பான் .

தேகம் பருத்து , வாயிலுள்ள பற்கள் மலைபோலாய் ஆனால் தொண்டைத் துவாரம் மட்டும் சிறியதாக இருக்கும். இதனால் அள்ளி அள்ளி எதைச் தின்றாலும் அது தொண்டையை விட்டு இறங்காது .

يَّتَجَرَّعُهٗ وَلَا يَكَادُ يُسِيْـغُهٗ وَيَاْتِيْهِ الْمَوْتُ مِنْ كُلِّ مَكَانٍ وَّمَا هُوَ بِمَيِّتٍ‌ وَمِنْ وَّرَآٮِٕهٖ عَذَابٌ غَلِيْظٌ
"அதனை அவர்கள் (மிகக் கஷ்டத்தோடு) சிறுகச் சிறுக விழுங்குவார்கள். எனினும், அது அவர்களுடைய தொண்டைகளில் இறங்காது; (விக்கிக்கொள்ளும்.) ஒவ்வொரு திசையிலிருந்தும் மரணமே அவர்களை நோக்கி வந்துகொண்டிருக்கும்; எனினும், அவர்கள் இறந்துவிட மாட்டார்கள். இதற்குப் பின் கடினமான வேதனையையும் அவர்கள் சந்திக்க நேரிடும் ". (அல்குர்ஆன்: 14:17)

நரகவாளி உணவு லறீகு என்னும் மரம். இது நரகத்தின் மிகப்பெரிய மரமாகும் .
اِنَّهَا شَجَرَةٌ تَخْرُجُ فِىْۤ اَصْلِ الْجَحِيْمِۙ
மெய்யாகவே அது நரகத்தின் அடித்தளத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு மரமாகும்.
(அல்குர்ஆன் : 37:64)

طَلْعُهَا كَاَنَّهٗ رُءُوْسُ الشَّيٰطِيْنِ
அதன் கிளைகள் ஷைத்தானின் தலைகளைப் போல் இருக்கும்.
(அல்குர்ஆன்: 37:65)

فَاِنَّهُمْ لَاٰكِلُوْنَ مِنْهَا فَمٰلِــــُٔوْنَ مِنْهَا الْبُطُوْنَ
நிச்சயமாக அவர்கள் (தங்கள் பசிக்கொடுமையினால்) அதனை புசிப்பார்கள்! இன்னும் அதிலிருந்தே (தங்கள்) வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பார்கள்.
(அல்குர்ஆன் : 37:66)

மேலும் "ஜக்கூம் " என்னும் (கள்ளி) மரத்திலிருந்தே நீங்கள் புசிப்பீர்கள். அதைக் கொண்டே வயிறுகளை நிரப்புவீர்கள் குர்ஆன் (56: 52,53)
மேலும் குடிப்பதற்கு கொதிக்கும் நீரும் , அவர்களின் தேகத்தில் இருந்து வடியும் ஊனீரும் கொடுக்கப்படும்

مِّنْ وَّرَآٮِٕهٖ جَهَـنَّمُ وَيُسْقٰى مِنْ مَّآءٍ صَدِيْدٍۙ
அவர்களுக்கு பின்புறம் நரகம்தான் இருக்கிறது. (அங்குதான் அவர்கள் செல்ல வேண்டும். நரகவாசிகளின் தேகத்திலிருந்து வடியும்) சீழ்தான் அவர்களுக்கு (நீராக)ப் புகட்டப்படும்.
(அல்குர்ஆன்: 14:16)

புலால் உண்ணும் தாவரங்களை நீங்கள் TV யில் பார்த்திருப்பீர்கள் . அழகான பூ விரிந்து மலர்ந்திருக்கும் வண்டோ , பூச்சியோ பூத்தேனை குடிக்க பூவுகக்குள்ளே இறங்கியதும் ,பட்டென்று அதன் இதழ்கள் மூடி பூச்சியை ஸ்வாஹே பண்ணுவது மாதிரி , நரகத்திலும் ஒரு மரம் இருக்கும் நரகவாளிகள் அந்த மரத்தை தின்பதற்கு அருகில் போனது , அதன் கிளைகள் சுற்றி வளைத்து நரகவாளியின் உடம்பின் தசைகளை அது கடித்து பிடுங்கி தின்னும் .
மிகுந்த தாகத்தில் கொதிக்கும் ஊனீ நீரை குடிக்கும் போது , அதன் வெப்பத்தால் முகத்தின் சதைகள் வெந்து , கழன்று அந்த கொதிக்கும் நீரிலே விழும். அப்படி வெந்த சதைகள் கழன்று விழுந்த பிறகு அடுத்து சதைகள் உடனே வளர்ந்து அது அடுத்த அதாபுக்கு தயாராகி விடும் .
ர.ரா

நரகத்து கொடிய வேதனை 07
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 95)



நரகவேதனை இருவகை . ஒன்று சூடு , மற்றொன்று குளிர் . சூட்டில் கிடக்கிறவன் குளிரில் கிடக்க நாடுவான்.
குளிரில் கிடக்கிறவன் சூட்டில் கிடக்க நாடுவான். ஆனால் இரண்டுமே மிகப் பெரிய அதாபுதான் .
நரகவாளிகள் ஒவ்வொருவனும் அக்கினிப் பெட்டிக்குள் ஆயிரம் வருஷமும், அக்கினிக் கிணற்றுக்குள் ஆயிரம் வருஷமும் , அறக்காய்ந்த ஊனீரில் ஆயிரம் வருஷமும், பந்தம் எரிவது போல எரிந்து ஆயிரம் வருஷமாக வேதனைப்படுவான்.
அப்போது ஒவ்வொருவதும் கண்ணீர் விட்டு ஆயிரம் வருஷமும் , அது வற்றி இரத்தம் விட்டு ஆயிரம் வருஷமும் , அதுவும் வற்றி, சீழ் விட்டு ஆயிரம் வருஷமும் சப்தமிட்டு அழுது ....
" மாலிக்கே !

وَنَادَوْا يٰمٰلِكُ لِيَقْضِ عَلَيْنَا رَبُّكَ‌ قَالَ اِنَّكُمْ مّٰكِثُوْنَ

(இந்நிலையில் அவர்கள் நரகத்தின் அதிபதியை நோக்கி) "மாலிக்கே! உங்களது இறைவன் எங்களுடைய காரியத்தை முடித்து விடவும். (மரணத்தின் மூலமாயினும் எங்களுக்கு விடுதலை கிடைக்கட்டும்)" என்று சப்தமிடுவார்கள். அதற்கவர் "(முடியாது!) நிச்சயமாக நீங்கள் இதே நிலைமையில் (வேதனையை அனுபவித்துக் கொண்டே மரணிக்காது) இருக்க வேண்டியதுதான்" என்று கூறுவார். (அல்குர்ஆன் : 43:77)

இப்படி ஆயிரமாயிரம் வருஷம் அலறினால் மாலிக் ஒரு தரம் திரும்பிப் பார்த்து, "அட, வழி கெட்டவனே .! உன் பிரச்சனை என்ன ? "
" என் பிரச்சனையை சொல்லி, என்னை ரட்சிக்க வேண்டுமென்றும் இனி ஒருதரம் இங்கு வரும்படி நான் வைத்துக் கொள்ள மாட்டேன் அல்லது என்னை மௌத்தாக்கி விடவாது செய்ய வேண்டும் " என்று முறையிட்டு அலறுவான்


" ஒவ்வொரு திசையிலிருந்தும் மரணமே அவர்களை நோக்கி வந்து கொண்டிருக்கும்; எனினும், அவர்கள் இறந்துவிட மாட்டார்கள். இதற்குப் பின் கடினமான வேதனையையும் அவர்கள் சந்திக்க நேரிடும் " (அல்குர்ஆன் : 14:17)
الَّذِىْ يَصْلَى النَّارَ الْكُبْرٰى
(எனினும்,) அவன் (நரகத்தின்)
பெரிய நெருப்பை அடைவான்.
(அல்குர்ஆன்: 87:12)

ثُمَّ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى
பின்னர், அதில் அவன் மரணிக்கவுமாட்டான்;
(சுகமாக) வாழவும் மாட்டான்.
(குர்ஆன் 87 : 13)
அதற்கு அவர்கள் , " நீங்கள் கேட்பது ஒருக்காலும் பலிக்காது , உனக்கு இங்கிருந்து மீள வகையில்லை. இப்படியே தரிப்பட்டிருப்பாய் " .

وَقَالُوْا رَبَّنَاۤ اِنَّاۤ اَطَعْنَا سَادَتَنَا وَكُبَرَآءَنَا فَاَضَلُّوْنَا السَّبِيْلَا
அன்றி "எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் எங்கள் தலைவர்களுக்கும், எங்கள் பெரியவர்களுக்கும் வழிப்பட்டோம். நாங்கள் தப்பான வழியில் செல்லும்படி அவர்கள் செய்து விட்டார்கள்.
(அல்குர்ஆன்: 33:67)

رَبَّنَاۤ اٰتِهِمْ ضِعْفَيْنِ مِنَ الْعَذَابِ وَالْعَنْهُمْ لَعْنًا كَبِيْرًا
(ஆகவே) எங்கள் இறைவனே! நீ அவர்களுக்கு இரு மடங்கு வேதனையைக் கொடுத்து, அவர்கள் மீது பெரிய சாபத்தைப் போடு" என்று கூறுவார்கள்.
(அல்குர்ஆன் :33:68)
தலைவர்கள் கவனிக்கவும் .
ர.ரா

நரகமும் , நபிகளாரின் உம்மத்தும் 08
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 96)



ஸிராத் பாலம் கடக்க முடியாத நபிகளாரின் உம்மத்துக்களில் சிலரை , ஜபானியாக்கள்
" நீங்கள் யாருடைய உம்மத்து? "
" நாங்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உம்மத்து என்று சொல்ல மறந்து போய், நாங்கள் குர்ஆனை சுமந்தவர்கள் "
"ஏன் நீங்கள் உங்கள் நபியுடன் பாலத்தை கடக்கவில்லை? " என்ற கேள்விக்கும் அதே பதிலைத்தான் கூறுவார்கள்

" நாங்கள் குர்ஆனை சுமந்தவர்கள் "
(காரணம் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களை தன்னுடன் ஒப்பிட்டு நம்மைப் போல் சாதாரண மனிதர்
தானே? நாமும் நிறைய அமல்கள் செய்திருக்குமே குர்ஆனையும் ஓதியிருக்கிறோமே ! என்று நபி (ஸல்) அவங்களை கண்ணியப்படுத்தாத அதிபுத்திசாலியான மூஃமீனில் பாவிகளாக இக் கூட்டத்தார் இருக்கலாம்)
அவர்களில் ஒவ்வொருவரையும் கடுங்கோபமும் , பெருந்தேகமும் கொண்ட ஜபானியாக்கள் நரகத்திற்கு இழுத்துப் போவார்கள் .

يَوْمَ يُسْحَبُوْنَ فِى النَّارِ عَلٰى وُجُوْهِهِمْ ذُوْقُوْا مَسَّ سَقَرَ
இவர்கள் நரகத்திற்கு முகங்குப்புற இழுத்துச் செல்லும் நாளில் இவர்களை நோக்கி "(உங்களை) நரக நெருப்பு பொசுக்குவதைச் சுவைத்துப் பாருங்கள்" என்று கூறப்படும். (அல்குர்ஆன் : 54:48)


மூஃமீனில் பாவியான இவர்களை நரகில் நுழைந்ததும் , நரகத்து அக்கினி மேடையில் நரகத்து அதிபர் மாலிக் (அலை) உட்கார்ந்திருந்து , வாசலில் நிற்கும் கூட்டத்தாரை பார்த்து ,
" நீங்கள் யாருடைய உம்மத்து? "
" நாங்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உம்மத்து என்று சொல்லாமல் " நாங்கள் குர்ஆனை சுமந்தவர்கள் " என்று அங்கேயும் அப்படியே சொல்வார்கள் .

" அந்த குர்ஆனில் அல்லாஹ்வுக்கும் அவனது நபிக்கும் மாறு செய்யாதீர் " என்று சொல்லவில்லையா? "
" ஆம் சொல்லப்பட்டிருந்தது. எங்களுக்கு தோஷித்தனம் மேலிட்டது .அதனால் நாங்கள் தோஷிகளானோம் "
(தோஷிகள் என்றால் என்ன? தெரியவில்லை எனக்கு)
" உங்கள் கை கால்களில் விலங்கு இல்லாமல் முகங்கள் கறுக்காமல் நல்ல லக்ஷ்ணத்துடன் இருக்கிறீர்களே அதென்ன? "
" நாங்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களின் உம்மத்தில் பாவிகள் "
அப்போது அல்லாஹு தஆலாவிடம் இருந்து மாலிக் (அலை) அவர்களுக்கு கட்டளை வரும் . அந்த கட்டளையில்

"பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் . மஹா மகோன்ன மிக்க மகிமையுள்ள அல்லாஹு தஆலா இடத்திலிருந்து நரகத்திற்கு அதிபதியாகிய மாலிக்குக்கு அனுப்பட்ட கட்டளையானது ,
முஹம்மது நபியுடைய உம்மத்தில் பாவிகளான ஒரு கூட்டத்தார் உம்மிடத்தில் வந்திருக்கிறார்கள். அவர்கள் சில பொழுதாவது தொழுதவர்கள் . ஆகையால் அவர்களது முகங்களை நெருப்பில் சுட்டெடுக்க வேண்டாம் . தொழுவதற்கு பள்ளிவாசலுக்கு நடந்தவர்கள் ஆகையால் காலில் விலங்கு இடவேண்டாம். என்னிடம் கையேந்தி துஆ செய்தவர்கள் ஆகையால் கையிலும் விலங்கிட வேண்டாம் .

நோன்பு நோற்றவர்கள் . ஆகையால் வயிற்றில் கள்ளிச் சோற்றையும் , சீழ் பிடித்த ஊன் நீரையும் கொடுக்க வேண்டாம் . தொழுகையில் ஸுஜூது செய்த அவர்களை முகங்குப்புற நரகிற்கு இழுத்து வர வேண்டாம் அவர்கள் காலால் நடந்து வரட்டும் " என்று கட்டளை எழுதப்பட்டிருக்கும் .
" ஏ தோஷிகளே ! நீங்கள் நரகத்திற்குள் நுழையுங்கள்"
" நாங்கள் செய்த குற்றங்களைப் பற்றிச் சற்று நேரம் நரக வாசல் இங்கிருந்து அழ வேண்டும்"
" அப்படியெல்லாம் இடங்கொடுக்க எனக்கு அதிகாரமில்லை "
உடனே அர்ஷிலிருந்து , "அவர்களை விட்டு விடும். அவர்களை ஏழு தட்டுகளில் நரகில் மேல் தட்டான ஜஹன்னத்தில் புகுத்தும் " என்று கட்டளை பிறக்கும்.
உடனே மாலிக் (அலை) அவர்கள் ஜபானியாக்களிடம் " இவர்களை இழுத்து ஜஹன்ன நரகில் பிடித்து தள்ளும் "
மூஃமீனின் பாவிகள் ஜஹன்னத்தில் நுழைந்ததும் , அங்கு நடக்கும் பயங்கரமான செயல்களைக் கண்டு வெருண்டு அலருவார்கள் .
உடனே நரகத்து அக்கினி நாக்கொன்று எல்லோரையும் சுற்றி வளைத்து இழுத்துக் கொண்டு போகும்.
ர.ரா

நரகமும் , நபிகளாரின் உம்மத்தும் 09
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 97)



அல்லாஹுு தஆலா நரகத்து அடிதட்டில் கிடக்கிற காபிர்களையும், மேல்தட்டில் இருக்கிற முஃமினான பாவிகளையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளும்படி அங்குள்ள பெரிய பெரிய ஜன்னல்களை திறந்து போட மாலிக் (அலை) அவர்களுக்கு கட்டளை இடுவான் .
நரகம் புகுந்த காபிர்கள் எல்லோரின் முகங்கள் கறுத்து, கண்கள் நீல நிறமாய், வாயின் வழியே அக்கினிச் சங்கிலியை விட்டு பின் துவாரத்தின் வழியே எடுத்து , இடதுகையைக் கழுத்திலும் , வலது கையை மார்பிலுமாக திணித்து முதுகுப் புறம் இழுக்கச் சேர்த்து கட்டி , கைகளில் தலைபூட்டி , கூடவே ஒவ்வொரு சைத்தானையும் அவனோடு பிணைத்துக் கட்டி முகங்குப்புறப் போட்டு பலவாறாக ஜபானியாக்கள் வேதனை செய்வார்கள் .

ثُمَّ الْجَحِيْمَ صَلُّوْهُ ۙ
அவனை நரகத்தில் தள்ளுங்கள் என்றும், (அல்குர்ஆன் : 69:31)

ثُمَّ فِىْ سِلْسِلَةٍ ذَرْعُهَا سَبْعُوْنَ ذِرَاعًا فَاسْلُكُوْهُ
எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள்" என்றும் (கூறுவோம்).
(அல்குர்ஆன்: 69:32)

இவ் வேதனையை முஃமினான பாவிகளும் , காபிர்களும்
ஒருவரையொருவர் பார்ப்பார்கள் .
அந்தக் காபிர்கள், முஃமீனான பாவிகளைப் பார்த்து ,
" நீங்கள் துன்யாவில் அல்லாஹுுதஆலா ஒருவன் என்றும் அவனையே வணங்கிக் கொண்டு , நாங்களே சுவர்க்கத்திற்கு உரியவர்கள் என்றும் அவனுக்கு இணை துணை வைத்தவர்கள் நரகத்திற்கு உரியவர்களென்றும் நீங்கள் சொன்னீர்களே, இப்போது அல்லாஹ் ஒருவனையே வணங்கின நீங்களும் , அவனுக்கு இணை துணை வைத்து வணங்கின நாங்களும் , சமமாகத்தானே இருக்கிறோம் . நீங்கள் கொண்டிருந்த ஈமானும், உங்களுடைய இஸ்லாமும் உங்களுக்கு பலன் தரவில்லையே " என்று பரிகாசம் செய்வார்கள் . அதற்கு
" முஃமீனில் பாவியான எங்களுடைய பாவங்கள் மிகைத்து விட்டது. அதனால் நாங்கள் இப்படியானோம் . அல்லாஹுுதஆலா ஏவின பிரகாரம் நாங்கள் நடந்திருந்தால் , எங்களுக்கு இந்தக் கதி நேரிடாது. ஆனாலும் நாங்கள் அவனுக்கு ஈமான் கொண்டவர்கள் . ஆகையால் இனி எங்களை அவன் இரக்ஷிப்பான் என்று நம்பி இருக்கிறோம் "
அவர்களது நம்பிக்கை வீண் போகாது .
ர.ரா

நரகமும் , நபிகளாரின் உம்மத்தும் 10
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 98)
" மாலிக்கே என்னுடைய ஹபீபு முஹம்மதுடைய உம்மத்தின் நரகத்தில் வேதனைப்படுகிறவர்களின் நிலைமை எப்படி? என்ன ? "

" யா ரப்பே! அவர்களுடைய சரீரத்தில் உள்ள தோல்களெல்லாம் வெந்து விரிந்து சதைகள் எல்லாம் தீய்ந்து கருகி நரம்புகள் எல்லாம் அறுந்து , உயிர் மாத்திரம் மீதம் இருக்கிறது "
"அவர்களுக்கு வேதனையை இலேகுபடுத்திவிட்டு, பரிகாசம் செய்த காபிர்களின் வேதனை அதிகப்படுத்தும் " என்று கட்டளை இடுவான்.

உடனே ஜபானியாக்களுக்கு மாலிக் (அலை) இக்கட்டளையைப் பிறப்பிக்க நெருப்பில் மட்டும் வேதனை செய்யப்பட்ட காபிர்கள் கொடிய பாம்புகள் முதலான விஷ ஜந்துக்களும்
புலி முதலிய விநோதமான துஷ்டமிருகங்களும் முன்னிலும் பல மடங்கு அவர்கள் மீது ஏவப்படும் .

اِنَّ لَدَيْنَاۤ اَنْكَالًا وَّجَحِيْمًا ۙ
நிச்சயமாக நம்மிடத்தில் (அவர்களுக்கு) விலங்குகளும் இருக்கின்றன; நரகமும் இருக்கின்றது.
(அல்குர்ஆன்: 73:12)

ஒரு மிருகமோ , விஷ ஜந்தோ கடித்தால் அதன் விஷம் உடலெங்கும் பரவி ஆயிரம் வருஷம் வரைக்கும் உடலில் கொதித்துக் கொண்டே இருக்கும் . சதைகள் இற்றிற்று விழும் . விழுந்தாலும் அப்போதுக்கப் போது மறுபடியும் உண்டாகி விடும்.
ர.ரா

நரகமும் , நபிகளாரின் உம்மத்தும் 11
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 99)



காபிர்கள் மீது நடத்தப்படும் நரக வேதனையைக் கண்டு முஃமீனான பாவிகள் அதிகமாக திகில் பிடித்து வெருண்டு கத்துவார்கள் . அதைக் கண்ட மாலிக் (அலை) அவர்கள் ,

"நீங்கள் ஈமான் கொண்ட ஷஹாதத்துக் கலிமாவை சொல்லுங்கள் "
கலிமா சொன்னதும் ."யா முஹம்மது , யாஅஹ்மது " என்று சப்தமிடுவார்கள்.
இந்தச் சப்தம் அல்லாஹ்வின் அர்ஷில் கேட்கும். அல்லாஹ் ஜிப்ரயீல் (அலை) அவர்களை மாலிக்கிடம் அனுப்பி வைப்பான் .
ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மாலிக்கிடம் நபி (ஸல்) அவர்களின் உம்மத்தில் பாவியானவர்களின் நரகத்து வாசலை திறக்கும்படியும், வேதனை இலகுப் படுத்தும்படியாகவும் அல்லாஹுவின் கட்டளை எடுத்துச் சொல்ல , ஜிப்ரயீல் (அலை) அவர்கள் முஃமீனான பாவிகளைப் பார்த்தும் அவர்கள் கருகின கொள்ளிக் கட்டைகளைப் போல் இருக்கக் கண்டும் ஜிப்ரயீல் (அலை) கதறி அழுவார்கள் .


ஜிப்ரயீல் (அலை) அவர்களைக் கண்டதும் நரக நெருப்பு தணிந்து போகும் . நரகவாசிகள் ஏன் நெருப்பு சுடவில்லை என்று பேசிக் கொண்டு அண்ணாந்து பார்ப்பார்கள் . ஜிப்ரயீல் நிற்பதைக் கண்டு , " நீங்கள் யார் ? "

அதற்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அவர்களுக்கு ஸலாம் சொல்லி, " நான் ஜிப்ரயீல் , உங்களுடைய பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கு வஹி கொண்டு வருபவன். உங்கள் வேதமான குர்ஆனை கொண்டு வந்து நபிகளாருக்கு கொடுத்தவன் "
உடனே அவர்கள் எல்லோரும் ஒருமித்து, "எங்களுக்கு உவப்பான ஜிப்ரயீலே ! எங்களை இந்த நரகம் படுத்தும் பாட்டை தாங்கள் பார்த்தீர்களா ? "

" ஆம் பார்த்தேன் " என்று ஜிப்ரயீல் ((அலை) அவர்கள் அழுதவர்களாய் இருப்பார்கள்
" எங்கள் நபி பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் எங்கே? "
" அவர்கள் சுவர்க்கத்தில் இருக்கிறார்கள். நீங்கள் நரகத்தில் வேதனைப்படுவது அவர்களுக்குத் தெரியாது , அதை அல்லாஹ்
அவர்களுக்கு மறைத்து விட்டான் . நீங்கள் நரகில் இருப்பது தெரிந்தால் அவர்கள் சுவர்க்கத்தில் தரித்திருக்க மாட்டார்கள் . நான் உங்கள் நபியிடம் போவேன் .உங்கள் நபியிடம் நீங்கள் சொல்ல வேண்டியதை என்னிடம் சொல்லுங்கள் " .

எங்கள் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கு எங்கள் ஸலாமை அவர்களுக்கு சொல்லி, நாங்கள் இந்நரகில் படும் வேதனையையும் , நரகில் உள்ள காபிர்கள் எங்களுடைய ஈமானைப் பற்றி பழிப்பதையும் எடுத்து கூறுங்கள் . நபியவர்களின் திருக் கடாச்சரத்தை காண ஆவல் கொண்டிருப்பதையும் எடுத்து கூறுங்கள் "
இதைக் கேட்ட ஜிப்ரயீல் (அலை) அவர்கள் கேவி கேவி அழுதவர்களாய் அல்லாஹுதஆலா சமுகம் வருவார்கள்.
அல்லாஹு தஆலா , " ஜிப்ரயீலே ! என் ஹபீப் முஹம்மதுடைய உம்மத்தின் பாவிகள் உம்மிடம் சொன்னது என்ன ? "
" தங்கள் நபிக்கு சொல்லும்படியாக செய்தி சொன்னார்கள் "
" அதை சொல்லியாகி விட்டதா? "
" இன்னும் சொல்லவில்லை. அதற்கு உன் உத்தரவு வேண்டும்."
" போய் சொல்லும் "
ர.ரா

நரகமும் , நபிகளாரின் உம்மத்தும் 12
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 100)



ஜிப்ரயீல் (அலை) அவர்கள் சுவர்க்கத்திற்கு வந்து " தூபா " என்னும் மரத்தடியில் ஆணி முத்தால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய கூடாரத்தில்
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுடைய சமுகத்திற்கு வந்து அழுது கொண்டு நிற்பார்கள்.
" ஜிப்ரயீலே! உம்மை அழச் செய்தது என்ன என்று கேட்பார்கள்.

" யா ரஸூல்லாஹ்! நான் பார்த்ததைத் தாங்கள் பார்ப்பீர்களானால் என்னைப் பார்க்கிலும் தாங்கள் அதிகமாக அழுவீர்கள் . தங்கள் உம்மத்தில் உள்ள ஒரு கூட்டத்தார் நரகத்தில் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் .அவர்கள் தங்களுக்கு ஸலாம் சொல்லி , எங்களுக்கு ஏற்பட்ட தீங்கு எவ்வளவு வலுப்பான தீங்கு என்றும் ,

' யா முஹம்மதே! யாமுஹம்மதே !
யா முஹம்மதே ! என்னும் சத்தமும் கேட்டுக் கொண்டே இருக்கிறது.
நபியவர்கள் தங்கள் காது தாழ்த்திக் கேட்பார்கள் . தன் பெயர் உச்சரிக்கப்படுவதை துல்லியமாக கேட்பார்கள் .

உடனே " யா உம்மத்தீ ...யா உம்மத்தீ ... என்று அலறி அடித்துக் கொண்டு விரைந்து எழுந்து அங்கிருந்து கண்ணீர் தாரை தாரையாயோட அழுதவர்களாய் அல்லாஹ்வின் அர்ஷ்க்கு வருவார்கள் .
வரும்பொழுது நபியவர்களைத் தொடர்ந்து , தூபா மரத்தின் அருகிலிருந்த ஸாலிஹானவர்களும், பிதா, மாதாக்களுக்கு முன்பு மௌத்தான பிள்ளைகளும் தங்கள் பெற்றோர்களைத் தேடி , நபிகளாருடன் புறப்பட்டு வருவார்கள் .
நபியவர்களின் பதறும் காட்சி தங்கள் உம்மத்து மீதிருக்கும் அன்பை நன்றாய் வெளிப்படுத்தும் .
128. ஒரே வாகனத்தின் மீது முஆது(ரலி) நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னே அமர்ந்திருக்கும் நிலையில்,
நபி(ஸல்) அவர்கள் 'முஆதே!' என்று அழைத்தார்கள். 'இதோ உள்ளேன்; இறைத்தூதர் அவர்களே! (கட்டுப்படுவதைப்) பெரும் பேறாகவும் கருதுகிறேன்' என்று முஆத்(ரலி) கூறினார்.
'முஆதே!' என்று என மீண்டும் நபி(ஸல்) அவர்கள் அழைத்தார்கள். 'இதோ உள்ளேன்; இறைத்தூதர் அவர்களே! (கட்டுப்படுவதைப்) பெரும் பேறாகவும் கருதுகிறேன்' என மீண்டும் முஆத்(ரலி) கூறினார்.
இவ்வாறு மூன்று முறை கூறப்பட்டது. பிறகு 'தன் உள்ளத்திலிருந்து உண்மையான எண்ணத்துடன் வணங்கி வழிபடுவதற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை என்றும், முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றும் உறுதியாக நம்பும் எவரையும் அல்லாஹ் நரகத்திற்குச் செல்ல விட மாட்டேன்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்.
அப்போது 'இறைத்தூதர் அவர்களே! இச்செய்தியை நான் மக்களுக்கு அறிவித்து விடலாமா? அவர்கள் மகிழ்ந்து போவார்களே!' என்று முஆத் கேட்டதற்கு 'அவ்வாறு நீர் அறிவிக்கும் அச்சமயத்தில் (இது மட்டும் போதுமே என்று) அவர்கள் அசட்டையாக இருந்துவிடுவார்கள்' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: என அனஸ் இப்னு மாலிக்(ரலி) அறிவித்தார்.
ஸஹீஹ் புகாரி
ர.ரா

(இத்துடன் நரகத்தின் பதிவுகள் முற்றுப் பெறுகிறது)

ஷபாஅத் 2 - மன்றாட்டம்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 101)

ஷபாஅத் 02 (மன்றாட்டம்) ;
ஷபாஅத் 01 (சிபாரிசு இத்தொடரின்
6 வது பதிவில் உள்ளது



ஷபாஅத் என்பது இரு வகைப்படும்
1) ஷபாஅத் குபுறா - சிபாரிசு
2) ஷபாஅத் ஸுஹுறா - மன்றாட்டம்

"ஷபாஅத் குபுறா " - சிபாரிசு என்பது மஹ்ஷரில் தடைபட்டு வருந்தும் படைப்புகளை சீக்கிரமாக விசாரிக்கவும்,
தங்கள் உம்மத்திலுள்ள மூஃமீனான சிலரைக் கேள்வி கணக்கில்லாமல் சுவர்க்கம் புகுதவும் , சிலருக்கு சுவர்க்க பதவியை அதிகப்படுத்தவும் ஷபாஅத் குபுறா என்ற சிபாரிசு செய்யப்படும்.
438. இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்:
'எனக்கு முன்னர் (நபிமார்கள்) யாருக்கும் கொடுக்கப்படாத ஐந்து விஷயங்கள் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

எதிரிகளுக்கும் எனக்குமிடையில் ஒரு மாத காலம் பயணம் செய்யும இடைவெளியிலிருந்தாலும் அவர்களின் உள்ளத்தில் பயம் ஏற்படுத்தப்படுவதன் மூலம் நான் உதவப்பட்டுள்ளேன்.

பூமி முழுவதும் சுத்தம் செய்யத்தக்கதாகவும் தொழுமிடமாகவும் எனக்கு ஆக்கப்பட்டுள்ளது. என்னுடைய சமுதாயத்தில் தொழுகையின் நேரத்தை அடைந்தவர் (தான் இருக்கும் இடத்தில்) தொழுது கொள்ளட்டும்!

போரில் கிடைக்கிற பொருள்கள் எனக்கு ஹலாலாக்கப்பட்டுள்ளன.
ஒவ்வொரு நபியும் தங்களின் சமூகத்திற்கு மட்டுமே நபியாக அனுப்பப்பட்டார்கள். ஆனால், நான் மனித இனம் முழுமைக்கும் நபியாக அனுப்பப்பட்டுள்ளேன். (மறுமையில் என்னுடைய உம்மத்துக்காக) சிபாரிசு செய்யும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளேன். என ஜாபிர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார். ஸஹீஹ் புகாரி

"ஷபாஅத் ஸுஹுறா " - மன்றாட்டம் என்பது வேறு நன்மை என்பது இல்லாது போய் அணுவளவு ஈமான் மாத்திரம் உள்ளவர்களாய் நரகம் புகுந்த மூஃமீனானவர்களை மீட்டிச் சுவர்க்கம் புகுத்தவும் இன்னும் நரகம் புகுதக் கட்டளைப் பெற்றவர்களை நரகம் புகுதாமல் .... இத்தகையோருக்காக மன்றாட்டம் செய்வது ஷபாஅத் ஸுஹுறா எனப்படும் .
இந்த அதிகார பதவிதான் **" மகாமன் மஹமூது "** என்று சொல்லப்படும் இது அல்லாஹ்தஆலா விடத்தில் மிக மிக உயர் பதவி . இது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கு மட்டுமே உரித்தானதாக அல்லாஹ்தஆலா வைத்துள்ளான் .

ஷபாஅத் என்ற மன்றாட்டம் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களும் , மற்ற நபிமார்களும், மன்றாடுவது அல்லாமல், அஸ்ஹாபுகள்,
ஷுஹதாக்கள் , அவ்வுலியாக்கள் , ஸாலிஹானவர்கள் , பெற்றோருக்கு முன் மௌத்தான சிறு பிள்ளைகள் இத்தகையோர்களும் மன்றாடுவார்கள் .
இவர்களைத் தவிர திருக்குர்ஆன் ஷரீப் , நோன்பு போன்றவைகளும் மன்றாடும்.
இவர்களில் ஒரு கூட்டத்தாருக்காக , குடும்பத்தாருக்காக , இஷ்டத்தாருக்காக மன்றாடுகிறவர்களும் இருப்பார்கள் இந்த மன்றாட்டம் அவரவர் அமலுக்குத் தக்கபடியே இருக்கும் .
ர.ரா

ஷபாஅத் 3 - மன்றாட்டம்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 102)



நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தன் உம்மத்துக்களில் பாவியானவர்களை நரகில் இருந்து வெளிக் கொண்டுவர, அல்லாஹு தஆலாவின் அர்ஷ்க்கு வருவார்கள் . கூடவே மற்ற நபிமார்களும் வருவார்கள்.

நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தங்கள் தலையை ஷுஜூது நிலையில் கிடத்தி, அவர்களும் , அவர்கள் அல்லாத மற்ற எவருமே, எந்தக் காலத்திலும் , ஒரு போதும் புகழ்ந்திராத புகழைக் கொண்டு அல்லாஹு தஆலாவை புகழ்வார்கள் .

உடனே அல்லாஹு தஆலா " என் ஹபீபே
முஹம்மதே ! தலையை உயர்த்தும் . நீர் விருப்பிதைக் கேளும் தருகிறேன். உமக்கு ஷபாஅத்தைக் கொடுத்தேன். ஷபாஅத்தைக் கொடுத்தேன் ஷபாஅத்துச் செய்யும் " .
"யா ரப்பே.... என் உம்மத்திலுள்ள ஒரு கூட்டத்தார் மீது உன் கட்டளையையும், தீர்ப்பையும் நிறைவேற்றி , அவர்களுக்கு நரகத்து வேதனையையும் கொடுத்து , அதையும் அவர்கள் அனுபவித்து விட்டார்கள். அவர்களை நரகில் இருந்து மீட்டு சுவர்க்கம் புகுதச் செய்ய வேண்டும்"
அல்லாஹு தஆலா ஜிப்ரயீலை அழைத்து, மாலிக்கிடம் போய் , நரகத்தில் கிடக்கிறவர்களில் யாருடைய இருதயத்தில் அணுவளவு ஈமான் இருக்கிறதோ , அவர்களையெல்லாம் நரகத்தை விட்டு வெளியேற்றும்படி சொல்லும் " .

فَمَنْ يَّعْمَلْ مِثْقَالَ ذَرَّةٍ خَيْرًا يَّرَهٗ
ஆகவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாரோ அவர், (அங்கு) அதனையும் கண்டுகொள்வார்.
(அல்குர்ஆன்: 99:7)
பிறகு நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களை அழைத்துக் கொண்டு, ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நரகத்திற்கு வருவார்கள். அப்போது நரகத்து அதிபர் மாலிக் (அலை) அவர்கள் , நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களைக் கண்டு எழுந்து நின்று மரியாதை செய்வார்கள்.

மாலிக்கிடம், " என்னுடைய உம்மத்தின் நிலை என்ன ? "
"அவர்கள் பட்ட அவஸ்தையை நான் என்ன சொல்வேன். அது இறை உத்தரவு அல்லவா " .
" நரகத்து வாசலை திறந்து அவர்கள் இருக்கும் தட்டின் மேல் மூடியை எடுத்து விடும் "
திறந்தது , மூடியை எடுத்ததும் அங்கிருப்பவர்கள் நபி (ஸல்) அவர்களைப் பார்த்து , "முஹம்மதே !முஹம்மதே !! எங்களை நரகத்து நெருப்பு பற்றிக் கொண்டு எங்கள் தோல்கள், சதைகள், எலும்புகள் எல்லாவற்றையும் எரித்து விட்டதே " என்று எல்லோரும் ஒருமித்து அழுவார்கள்.
அதற்கு நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் " நீங்கள் இப்படி நரகத்திற்குள் கிடந்து வேதனை செய்யப்பட்டது எனக்குத் தெரியாது என்று அனுதாபத்துடன் சொல்வார்கள் .
பிறகு அவர்கள் எல்லோரையும் நரகத்தை விட்டு வெளியே கொண்டு வருவார்கள் .
ர.ரா

ஷபாஅத் 4 - மன்றாட்டம்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 103)



நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் தங்கள் உம்மத்துக்களில் பாவியானவர்களை நரகில் இருந்து வெளிக் கொண்டு வந்ததும் , அவர்கள் எரிந்த கொள்ளிக் கட்டைகளைப் போல இருப்பார்கள் .

பெற்றோர்களுக்கு முன் மௌத்தான பிள்ளைகள் தங்கள் தங்கள் தாய் தந்தையார்களுக்கு கொடுப்பதற்காக பானங்களை கையில் வைத்துக் கொண்டு பெற்றோர்களைத் தேடுவார்கள்.
அப்பெற்றோர்களை நரக நெருப்பு தீண்டியதால் உடம்பு விகார ரூபத்தில் பயங்கரமாக இருக்கும் . இதனால் அடையாளம் காண முடியாமல் பிள்ளைகள் தவிப்பார்கள். சில பெற்றோர்கள் தங்களின் விகார ரூபத்தால் பிள்ளைகள் அருகில் போகாமல் தங்கள் பிள்ளைகளை தூரத்தில் இருந்து விழி கொட்டாமல் பார்த்துக் கொண்டே இருப்பார்கள் .
பிள்ளைகள் பானத்தை கையில் ஏந்திய வண்ணம் தங்கள் பெற்றோர்களைத் தேடி அழுவார்கள் .இந்த அழுகையை ஆற்றாமல் தாங்கள்தான் உங்கள் பெற்றோர்கள் என்று அருகில் வந்து அணைத்துக் கொள்ள வருவார்கள் .


பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் அருகில் போகும் போது , ' பிள்ளைகள் இவர்களா தம் பெற்றோர்கள் ' ... என சந்தேகப்படுவர்கள். பிள்ளைகளின் பெயர்களைக் கூறி அழைத்து , "நாங்கள்தான் உங்கள் பெற்றோர்கள் " என்று தங்களைத் தாங்களே அவமானப்பட்டு அறிமுகப்படுத்திக் கொள்வார்கள்.

பிறகு அவர்கள் எல்லோரையும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி " **நஹ்ருல் ஹயாத் "** என்னும் ஜீவ நதியில் கொண்டு போய் குளிக்கச் சொல்வார்கள் . அவர்கள் அந்த நதியில் முழ்கி குளித்ததும் , உள்ளுறுப்புகள் ,புற உறுப்புகளெல்லாம் பரிசுத்தமாகி முகங்கள் பூர்ணச் சந்திரனைப் போலப் பிரகாசிக்கும்.மலக்குகள் சுவனத்து பட்டாடைகளை கொண்டு வந்து உடுக்கச் சொல்வார்கள் . இருந்தாலும் ஒவ்வொருவருடைய நெற்றியிலும் , "நரகத்திலிருந்து மீட்சிப் பெற்றவர் " என்ற வாசகம் எழுதியே இருக்கும்.

நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் , எல்லோரையும் அர்ஷ்க்கு அழைத்துக் கொண்டு போய் அல்லாஹ்தஆலாவுக்கு சுஜூது செய்வார்கள் .
அல்லாஹ்தஆலா அவர்களைப் பார்த்து
"நீங்கள் நரகத்தை எப்படி கண்டீர்கள்?"
" யா ரப்பே! அது மஹா மஹா கொடிய இருப்பிடம் "

" என்னுடைய கட்டளையை மீறினவர்களுக்கு நான் கொடுக்கும் கூலி அதுதான். என் ஹபீபின் மன்றாட்டத்தைக் கொண்டும் , நீங்கள் ஏற்றுக் கொண்ட கலிமைக் கொண்டும் உங்களை நான் இரட்சித்தேன். இல்லாவிடில் நீங்கள் அங்கேயேதான் இருப்பீர்கள் . இப்போது நீங்கள் சுவார்க்கத்திற்கு போங்கள் " என்று உத்தரவு கொடுப்பான் .
நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் , அவர்களை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்கள் . அங்கே முன்னமே வந்த சுவார்க்கவாசிகள் , இவர்களின் நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் "நரகத்திலிருந்து மீட்சிப் பெற்றவர் " என்பதைப் பார்த்து , "நீங்கள் என்ன பாவம் செய்தீர்கள் " என்று கேட்பார்கள் .
துனியாவில் தாங்கள் செய்த பாவங்களைப் பற்றி கூறும் போதெல்லாம் வெட்கப்பட்டு கூனிக் குறுகுவார்கள் .
இதனால் அல்லாஹ்தஆலா விடம் ,
" யா ரப்பே...! எங்கள் நெற்றியில் எழுதப்பட்டிருக்கும் இந்த வாசகத்தினால் எங்களுக்கு ரொம்பவும் மானக்கேடாக இருக்கிறது .எனவே அந்த வாசகத்தை அழிந்து போகச் செய்வாயாக ! "
உடனே அல்லாஹ்தஆலா ஒரு மழையை அவர்கள் மீது பொழியச் செய்து அவ் வாசகத்தை அழியச் செய்வான்.
ர.ரா

ஷபாஅத் 5 - மன்றாட்டம்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 104)



மூஃமீனானவர்கள் எல்லோரும் சொர்க்கத்திலும் , பாவிகள் எல்லோரும் நரகத்திலும் தரிப்பாடான பிறகு மரணம் என்னும் மௌத்தை ஒரு செம்மறியாட்டின் உருவத்தில் கொணர்ந்து சொர்க்கத்திற்கும் , நரகத்திற்கும் மத்தியில் நிறுத்தும்படி கட்டளைப் பிறக்கும் .

மலக்குகள் சிலர் சொர்க்கவாதிகளைக் கூப்பிட்டு , அந்த ஆட்டைக் காண்பித்து ,
"சுவனவாதிகளே...! இதை நீங்கள் அறிவீர்களா ? "
"ஆம் அறிவோம். இது மௌத் என்னும் மரணம் . இதை நீங்கள் அறுத்து விடுங்கள் . அதனால் இனி எங்களுக்கு மௌத் வராமல் இருக்கட்டும் " என்பார்கள் சுவனவாதிகள் .
பிறகு நரகவாதிகளைக் கூப்பிட்டு , அந்த ஆட்டைக் காண்பித்து ,
"நரகவாதிகளே...! இதை நீங்கள் அறிவீர்களா ? "


"ஆம் அறிவோம் இது மௌத் என்னும் மரணம் இதை நீங்கள் அறுத்து விடாதீர்கள் .அதனால் இனி எங்களுக்கு மௌத் வரட்டும் . அது வந்து நாங்கள் மௌத்தானால் இந்த நரக வேதனையை விட்டு ஒழிவோமல்லவா " என்பார்கள் நரகவாதிகள்.

அல்லாஹு தஆலாவின் கட்டளைப்படி , அந்த செம்மறியாட்டு உருவத்தில் வந்திருக்கும் மௌத்தை அங்கேயே வைத்து , நபி யஹ்யா (அலை) அவர்கள் தங்கள் கையால் சொர்க்கவாதிகளும், நரகவாதிகளும் பாத்திருக்க அதை அறுத்து விடுவார்கள்.
அன்றிலிருந்து மௌத்து என்னும் மரணம் இல்லாமல் போகும். இனி எவருக்கும் மௌத்து வரவே வராது.
அப்போதே சொர்க்கவாதிகளைக் கூப்பிட்டு உங்களுக்கு இனி மௌத்து இல்லை. சதாகாலமும் யுகயுகங்களாக சொர்க்கத்தில் என்றென்றும் நீங்கள் வாழ்த்திருப்பீர்கள் என்றும்,
இதைப் போல நரகவாதிகளையும் கூப்பிட்டு, உங்களுக்கும் இனி மௌத்து என்பது இல்லவே இல்லை. சதாகாலமும் யுகயுகங்களாக நரகத்தில் நீங்கள் வேதனைப் பட்டுக் கொண்டே இருப்பீர்கள் என்றும்,

اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ لَا يَمُوْتُ فِيْهَا وَ لَا يَحْيٰى
உண்மையாகவே எவன் குற்றவாளியாகத் தன் இறைவனிடம் வருகின்றானோ அவனுக்கு நிச்சயமாக நரகம்தான் கூலியாகும். அதில் அவன் சாகவும் மாட்டான்; (சுகத்துடன்) வாழவும் மாட்டான். (வேதனையை அனுபவித்துக் கொண்டு குற்றுயிராகவே கிடப்பான்.)
(அல்குர்ஆன்: 20:74)

நரகத்து ஏழு வாசல்களும் , யாதொரு இல்லியிடுக்கு இல்லாமல் அடைக்கப்படும் . நரகவாளிகள் நரகத்திலும், சொர்க்கவாதிகள் சொர்க்கத்திலும் தரிபடுவார்கள் .
" அந்நாளில், நயவஞ்சக ஆண்களும் பெண்களும் நம்பிக்கை கொண்டவர்களை நோக்கி "நீங்கள் (முன் செல்லாது) எங்களுக்காகச் சிறிது தாமதியுங்கள். உங்களுடைய பிரகாசத்தைக் கொண்டு நாங்கள் பயனடைவோம்" என்று கூறுவார்கள்.
(அதற்கு அவர்களை நோக்கி "எங்கள் முன் நிற்காதீர்கள்.) நீங்கள் உங்கள் பின்புறம் சென்று (அங்குப்) பிரகாசத்தைத் தேடிக்கொள்ளுங்கள்" என்று கூறப்படும்.
அந்நேரத்தில், இவர்களுக்கும் அவர்களுக்கும் மத்தியில் ஒரு சுவர் எழுப்பப்பட்டுவிடும். அதற்கு வாசலும் இருக்கும். (நம்பிக்கை யாளர்கள் இருக்கக்கூடிய) அதன் உட்புறத்தில் (இறைவனின்) அருளும், அதன் வெளிப்புறத்தில் (பாவிகள் அனுபவிக்கக்கூடிய) அவனுடைய வேதனையுமிருக்கும்.
(அல்குர்ஆன்: 57:13)
ர.ரா
(ஷபாஅத்து பதிவு நிறைவு பெறுகிறது)

சொர்க்கத்தில் திருமணம் (உறுஸ்) 01
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 105)



" உறுஸ் " என்பது திருக்கல்யாணம்.
அது நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கு சொர்க்கத்தில் நடக்கும் விவாஹ மகோற்சவம் .
ஸாலிஹானவர்கள் எல்லோரும் சொர்க்கத்தில் குடிபுகுந்த பிற்பாடு , அவரவர்களுடைய தளங்களில் சுகித்துக் கொண்டிருக்கும் போது அல்லாஹு தஆலாவின் அர்ஷில் இருந்து ,
" ஓ... சொர்க்கவாசிகளே! நபிகள் நாயகம் ﷺ அவர்களுக்கும் மரியம், ஆஸியா என்னும் இரு பெண்களுக்கும் விவாஹம் நடைபெற இருப்பதால் , நீங்கள் எல்லோரும் நபிகள் நாயகம் ﷺ அவர்களுடைய சொந்த மாளிகைக்குள் வாருங்கள் " என்று ஒரு சப்தம் பிறக்கும் .
" நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு(ம் இரு பெண்களை) அல்லாஹ் உதாரணமாகக் கூறுகின்றான்.

(முதலாவது:) ஃபிர்அவ்னுடைய மனைவி (ஆஸியா). அவள் (தன் இறைவனை நோக்கி) "என் இறைவனே! உன்னிடத்தில் உள்ள சுவனபதியில் எனக்கு ஒரு வீட்டை அமைத்து, ஃபிர்அவ்னை விட்டும் அவனுடைய செயலை விட்டும் என்னை பாதுகாத்துக்கொள்" என்று பிரார்த்தனை செய்துகொண்டே இருந்தாள்.
(இரண்டாவது:) இம்ரானுடைய மகள் மர்யம். அவர் தன்னுடைய கற்பை பாதுகாத்துக்கொண்டார். ஆகவே, அவருடைய கர்ப்பத்தில் நம்முடைய ரூஹிலிருந்து ஊதினோம். அவர் தன் இறைவனின் வசனங்களையும், வேதங்களையும் உண்மையாக்கி வைத்ததுடன் (இறைவனுக்கு) முற்றிலும் வழிப்பட்டவராகவும் இருந்தார்.

(குர்ஆன் : 66:11, 12)
சொர்க்கவாதிகள் எல்லோரும் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களுடைய மாளிகை வாசலுக்கு வருகை தருவார்கள்.
அந்த மாளிகையானது சொர்க்கத்திலுள்ள எல்லா மாளிகைகளுக்கும் மேலானதும், அதிக அலங்காரமும் சிறப்பும் உள்ளதுமாய் , "ஹௌலுல் கௌதர் " என்னும் நதியின் ஆற்றங்கரையில் இருக்கும்.
அந்த மாளிகையிலுள்ள ஒரு சித்திரக் கூடத்திற்கு முன் அலங்காரமான பவளத்தினால் கடைந்து , நவரத்தினங்களையெல்லாம் பதித்த ஓர் அழகியமண்டபம் இருக்கும்.
அந்த மண்டபத்திற்குள் மஹ்மூது என்னும் பெயருடைய ஒரு யானை நிற்கும். அந்த யானையை சொர்க்கத்து அதிபதி ரிள்வான் என்னும் மலக்கு மிக அழகாக அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள் .
அந்த யானையினுடைய இரண்டு தந்தங்களில் நவரத்தினங்களினால் சித்திர வேலைகள் செய்து , அந்த யானையின் மீது ஒரு பலகைப் போடப்பட்டிருக்கும். அந்தப் பலகையின் மேல் வண்ண வண்ண விரிப்புகளும் , திண்டுகளும் உள்ள ஆசனங்களும் கணக்கே இல்லாமல் போடப்பட்டிருக்கும்.

இன்னும் அந்த யானையின் முதுகின் மேல் நடுவிலும் , வலமும், இடமும் ஆக மூன்று அவ்காக்கள் வைக்கப்பட்டிருக்கும். அவைகளின் அருகில் "லிவாவுல் ஹம்து " முதலான மூன்று கொடிகள் பறக்கும் .
ஜிப்ரயீல் (அலை) அவர்கள் முதல் அநேக மலக்குகளும் , ஹூருல் ஈன்களும், சொர்க்கத்து பணியாளர்களும் முதலியோர்கள் இருப்பார்கள் .
இன்னும் அவ்விடத்தில் பலவித ரத்தினங்களினாலும் , ஒளியினாலும் உண்டாக்கப்பட்ட மரவைகளும் , ஒவ்வொரு மரவைகளில் அநேக விதமான தின்பதார்த்தங்கள் வைக்கப்பட்ட பாத்திரங்களும்
பரத்தப்பட்டிருக்கும் .
சொர்க்கவாதிகள் எல்லோரும் மேற்படி மாளிகையின் வாசலுக்கு வந்தவுடன், அவர்களை உள்ளே வரும்படி அல்லாஹு தஆலா உத்திரவு பிறக்கும் .
உடனே எல்லோரும் அந்தப் பதார்த்தங்களை உண்டு பசியாறும்படி உத்திரவு பிறக்கும். அப்படியே எல்லோரும் பந்தி பந்தியாக இருந்து பசியாறுவார்கள் . பசியாறிய பின் எல்லோருக்கும் ஆடை ஆபரணங்கள் அணிவிக்கப்படும் .பரிமளங்கம் பூசிச் சந்தோஷமடைவார்கள்.
(தொடரும்)
ர.ரா

சொர்க்கத்தில் திருமணம் (உறுஸ்) 02
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 106)

اللّٰهُمَّ صَلَّى اللهُ عَلَى مُحَمَّدٍ عَدَدَ مَا ذَكَرَهُ
الذَّاكِرُونَ وَغَفَلَ عَنْ ذِكْرِهِ الْغَافِلُونَ

மலக்குமார்கள் , ஹூருல் ஈன்கள், சுவனவாசி புடைசூழ , நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்களை ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அந்த மஹ்மூது யானை மீது இருக்கும் நடு அவுதாவிலும், மரியம் (அலை) அவர்களை வலது புற அவுதாவிலும், ஆஸியா (அலை) அவர்களை இடது புற அவுதாவிலும் ஏற்றி உட்கார வைப்பார்கள் .

ஜிப்ரயீல் (அலை) அவர்கள் அந்த மஹ்மூது யானைக்கு பாகராக மஸ்தகத்தில் ஏறி உட்கார்ந்து கொள்ளுவார்கள் .
மீக்காயீல் (அலை) அவர்கள் அவுதாக்களுக்குப் பின் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள் .
அதன் பிறகு அல்லாஹு தஆலாவின் உத்திரவு பிரகாரம் அநேக நபிமார்களும் , நபி (ஸல்) அவர்கள் உட்பட அனைத்து நபிமார்களின் உம்மத்துகளும் , யானை கொம்பின் மேல் போடப்பட்டிருக்கும் பலகை மீதுள்ள ஆசனங்களுள் ஏறி உட்கார்ந்து கொள்வார்கள் .
இன்னும் எண்பத்தோராயிரம் நபிமார்களை ராஜவாக ஜோடித்து , ஒளியிலான குதிரைகள் மீது ஏறி அந்த யானையைச் சூழ்ந்து நிற்பார்கள் .

துனியாவில் திருமண ஊர்வலத்தை ஜான வாசம் என்பார்கள் .
அதாவது இது...ஜனங்கள் (மக்கள்) செறிந்து வாசம் செய்யும்(வாழும்) இடங்களினூடே திருமண ஊர்வலம் செல்லுமாதலால் 'ஜனவாசம்' திரிந்து "ஜானவாசம் " எனப்பட்டது
இவ்விதம் ஊர்கோலம் தயாராகி ஜான வாசம் போவது போல் எல்லா சொர்க்கமும் சுற்றுவார்கள் . பின் ஊர்வலம் ஹௌளுல் கௌதர் என்னும் நதிக்கரைக்கு வருவார்கள். அந் நதியின் அருகில் பூமியிலும் அறுபதினாயிரம் மடங்கு பெரிதான ஒரு குளம் உண்டாகி இருக்கும் .

அந்தக் குளக்கரையில் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் முதலான எல்லோரும் இறங்குவார்கள். அங்கு ஒரு விருந்து கொடுக்கப்படும் . விருந்துண்டு மகிழ்ந்திருக்கும் போது , அந்தக் குளத்தில் அநேக மாணிக்க கப்பல்கள் மிதந்து வரும்.

எல்லோரும் அக்கப்பல்களில் ஏறிக் கொள்வார்கள். ஏறியதும் அர்ஷுக்குக் கீழே ஒரு மேகம் கிளம்பி , அந்தக் கப்பல்களையெல்லாம் கவிழ்ந்து கொண்டு , கஸ்தூரி, கற்பூரம், அம்பர், ஆடையாபரணங்கள், ஹூருல் ஈன்கள் முதலான எல்லாவற்றையும் மழையாக வருஷித்துக் கொண்டிருக்கும்படி செய்யப்படும். அக்கப்பல்களில் இருந்தவாறே அந்தக் குளத்தைச் சுற்றி சுற்றி ஆனந்தமாய் விளையாடுவார்கள் .

பின் எல்லா கப்பல்களும் ,அக் குளத்தில் உள்ள பெரிய மீன் அருகில் போய் இருக்கும் .அந்த மீனுக்கு " ஜாஹிரு " என்று பெயர் . அந்த மீன் வயிற்றில் கற்பூரத்தினாலேயே ஒரு பட்டணம் உண்டாகி இருக்கும்.
அந்தப் பட்டணத்தில் துன்யாவின் விஸ்தீரணமுள்ள ஒரு மாளிகை இருக்கும் .
அல்லாஹு தஆலா அந்த மீனுக்குத் தலையை உயர்த்தி வாயைப் பிளக்கச் செய்வான் . கப்பல்களில் இருக்கிற நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் முதலான எல்லோரும் இந்த மீன் வாய்க்குள் நுழைந்து அந்தப் பட்டணம் போய் சேருவார்கள் .
நிக்காஹ்வும் சிறப்பாக நடந்தேறும்.

எல்லோரும் அல்லாஹு தஆலா நாடின காலம் வரையிலும் , அங்கேயே சுகித்துக் கொண்டிருந்து பிறகு அங்கிருந்து புறப்பட்டு சொர்க்கத்திலுள்ள அவரவர் தானங்களில் போய்ச் சேர்வார்கள் .
ர.ரா
அடுத்து "லியாபத் " என்னும் விருந்து

"லியாபத்து " என்னும் இறை விருந்து
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 107)



லியாபத்து என்பது விருந்து. அல்லாஹு தஆலா சொர்க்கத்திலுள்ள தன் அடியார்களுக்கு கொடுப்பது .
அல்லாஹு தஆலா இந்த விருந்து செய்ய நாடினபோது, ஜிப்ரயீல் (அலை) அவர்களை அழைத்து, " என்னுடைய ஹபீப் முஹம்மது நபி ﷺ அவர்களுக்கும், அவர்களுடைய உம்மத்துக்கும், மற்ற நபிமார்களுக்கும் அவரவர்களுடைய உம்மத்துக்களுக்கும் நான் ஒரு விருந்து கொடுக்கப் போறேன். அதற்காக நீர் ஹலீலத்துல் குதுஸியைத் தயார் செய்யும். அங்கே தான் விருந்து நடத்த வேண்டும் " .

உடனே ஜிப்ரயீல் (அலை) அவர்களும் , மற்ற மலக்குமார்களும், அந்த தானத்தை அலங்காரமாகத் தயார் செய்வார்கள் .

ஹலீலத்துல் குதுஸி என்பது ' அதன் ' என்னும் சொர்க்கத்திலுள்ள ஒரு தானம். அது செம்முத்தினால் படைக்கப்பட்டு , எல்லா சொர்க்கங்களிலும் உயர்ந்ததும், மேன்மையானதும் , அது கற்பனைக் கெட்டாத அலங்காரமானதமாகவும் இருக்கும். இது அல்லாஹு தஆலாவின் அர்ஷ்க்கு நேர் கீழ் இருக்கும்.

ஹலீலத்துல் குதுஸி தயாரானதும் நம் பெருமானார் நபிகள் நாயகம் ﷺ அவர்கள் முதற்கொண்டு 1,24,000 நபிமார்கள் , அவர்களுடைய உம்மத்துக்கள் அனைவரும் விருந்து உண்ண அழைத்து வரும்படி ஜிப்ரயீல் (அலை) அவர்களுக்கு உத்தரவு செய்வான் .

உடனே ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மேற்சொன்ன அத்தனை பேர்களையும் அழைப்பார்கள். எல்லோருமே தங்கள் தங்கள் வாகனங்களில் வந்து குவிந்துக் கொண்டே இருப்பார்கள்.
விருந்தாளிகள் விருந்து தானத்திற்கு வரும் வழியில் வெள்ளியினாலும் , பொன்னினாலும் , ரத்தினங்களினாலும் ஒன்றாகப் பட்டு ஓராயிரம் வருஷப் பிரயாணத் தூரம் முதல் பதினாயிரம் வருஷப் பிரயாணத் தூரம் வரையுள்ள அதிக அலங்கார முள்ள 10 மாளிகைகள் ஒன்றன் பின் ஒன்றாய் ஒரு நிமிடத்தில் கடந்து போவார்கள். இந்த 10 மாளிகைகள் யாருக்குரியது என்பது பற்றி விபரம் இல்லை .

பின்பு ஹலீலத்துல் குதுஸி என்கிற உன்னதமான மேல் மாடிகளும் விருக்ஷங்களும் , ஒரே ஒளிவாய்த் தோன்றும். எல்லோரும் அவைக் கண்டு களிப்புற்று அதிக ஆனந்தத்துடன் அங்கு வந்து சேர்வார்கள்.
ஹலீலத்துல் குதுஸி யில் அவரவர் வஸ்துக்கள் ஒவ்வொன்றிலும் அவரவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கும். அவைகள் மற்ற சுவர்க்கங்களில் உள்ள பொருட்களைக் காட்டிலும் ரொம்பவும் வித்தியாசமாக இருக்கும்.

எல்லோரும் அவரவர் பெயர் குறிப்பிட்ட ஆசனங்களில் உட்கார்ந்த பின் ஒவ்வொரு ஒடுக்கு கொண்ர்ந்து மலக்குகள் வைப்பார்கள் .
அந்த ஒவ்வொரு ஒடுக்களிலும் வெள்ளித் தட்டு 10 ம் , பொன்தட்டு 10 ம் , முத்து தட்டு 10 ம் , அகீக்குத் தட்டு 10 ம் , மாணிக்கத் தட்டு 10 ம், மரகதத்
தட்டு 10ம் , பவளத் தட்டு 10 ம் ஆக மொத்தம் 70 தட்டுகள் பரப்பி , ஒரு தங்கத்தால் அதை மெல்லிய பசும் பட்டினால் பொதித்து கட்டப்பட்டதாக இருக்கும் . அந்த உணவுகளின் மணம் இதுவரை எந்த மூக்கும் நுகர்ந்திராத வாடையில் உணவுகள் கமகமக்கும்.
அந்த 70 தட்டுகளில் ஒரு தட்டிற்கு 60 வித ருசியுள்ள பதார்த்தங்களாக ஆகாரங்கள் வைக்கப்பட்டு இருக்கும். அதுகளை அவரவர் விரும்பியபடி வேண்டிய மட்டும் புசிப்பார்கள்.
ஒவ்வொரு பிடி உணவும் ஒன்றுக்கொன்று அதிக ருசிகரமாக இருப்பதும் அல்லாமல், ஒரு பிடி உணவிலே துனியாவில் இருந்த சகல ருசியும் அதிலே அடங்கி விடும்.
இறை விருந்து உணவுகள் உண்ட பின் பொன்னினாலும், ரத்தினங்களினாலும் ஆன கெண்டிகளில் தண்ணீர், பால், தேன் , மது இவைகளை நிரப்பிக் கொணர்ந்து எல்லோரும் கொடுப்பார்கள். அதுகளை வேண்டிய மட்டும் வாங்கிக் குடித்துக் கொண்டிருப்பார்கள்.
அதன் பின் நவரத்தினங்கள். இழைத்த தங்கத் தாளங்களில் பழ வர்க்கங்களைப் பரப்பி , பசும் பட்டினால் மூடிக் கொண்ர்ந்து ஒவ்வொருக்கும் கொடுப்பார்கள் . அந்த பழங்களை அவர்கள் ....
" அவற்றிலிருந்து அவர்களுக்கு ஒரு கனி உணவாகக் கொடுக்கப்படும் போதெல்லாம், "முன்னர் இதைத்தான் நாங்கள் கொடுக்கபட்டோம்" எனக் கூறுவார்கள். அது (பார்வைக்கு) ஒரே விதமாகத் தோன்றக் கூடியாதாகயிருக்க அவர்கள் கொடுக்கப்பட்டார்கள். (ஆனால் அவை ருசியில் மாறுபட்டவையாக இருக்கும்).
(குர்ஆன் 2: 25)
பிறகு ஒவ்வொருவருக்கும் , பலவிதமான பட்டுகளும், ரத்னாபரணங்களும் கொணர்ந்து கொடுக்கப்படும். அதுகளை வாங்கி உடுத்தியும் ,அணிந்தும் எல்லோரும் தன்னை அலங்கரித்துக் கொள்வார்கள்.
அதன் பின் பரிமளம் பூசிக்கொள்ளும்படி கொணர்ந்து கொடுக்கப்படும். அதுகளையும் பூசிக்கொள்வார்கள்.
ஹூருல் ஈன்களின் பலவிதமான சங்கீதங்கள் பாடும்படி ஹூருல் ஈன்களுக்கு இறைத்கட்டளை பிறக்கும் . அப்படியே சங்கீதங்களை கேட்டு சுவனவாதிகள் ஆனந்த பரவசத்தில் மூழ்கி விடுவார்கள் .
ர.ரா
அடுத்து " லிகா " என்னும் இறை தரிசனம்

" லிகா " என்னும் தரிசனம்
(இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் 108)



" லிகா " என்பது தரிசனம் அது சுவர்க்கவாதிகள் அல்லாஹு தஆலாவைச் சுவர்க்கத்தில் தரிசிப்பது.
அந்த தரிசனம் சுவர்க்கத்திலுள்ள எல்லா இன்பானந்தங்களிலும், அதிக இன்பானந்தமாக இருக்கும். இந்த இன்பானந்தத்தைப் போல் எப்போதும் எங்கும் எதிலும் இராது.
இதற்கு முந்திய பதிவில் சொன்னபடி எல்லோரும் விருந்துண்டு கீத நாதங்கள் கேட்டு ஆனந்த பரவசமுற்றிருக்கும் போது, அல்லாஹு தஆலா அவர்களைப் பார்த்து ,

" என் அடியார்களே! உங்களுக்கு இனிமேல் வேண்டியது என்ன ? உங்கள் விருப்பத்தில் வேறு ஏதாவது உண்டா ? "
அதற்கு எல்லோரும் ஒருமித்து ,
" ஆம் உண்டு, எங்கள் ரப்பே.! இத்தனையும் எங்களுக்கு தந்த உன்னை நாங்கள் தரிசிக்க வேண்டியது ஒன்று மட்டுமே . எங்களுக்கு நீ அதையும் தந்தருள்வாயாக !"

எல்லோரும் இவ்விதம் சொன்னவுடன் "ஹக்கு " (படைத்தவன்) என்பதற்கும் , "கல்கு" (படைப்புகள்) என்பதற்கும் இடையில் இருக்கும் திரையை நீக்கப்படும் .
(சில கிதாபுகளில் 70 ஆயிரம் திரைகள் நீக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது)

உடனே ஒரு ஒப்பற்ற ஒளி பளீரென்று வீசிப் பிரகாசிக்கும் . அப்போது எல்லோரும் அல்லாஹு தஆலாவைப் பிரத்தியட்சமாய்த் தரிசிப்பார்கள் .
4851. ஜரீர் இப்னு அப்தில்லாஹ்(ரலி) அறிவித்தார்

ஓர் இரவில் நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்து கொண்டிருந்தோம். அப்போது அவர்கள் பதினான்காம் இரவின் முழுநிலவைக் கூர்ந்து நோக்கியபடி, 'இந்த நிலவை நீங்கள் நெருக்கடியின்றிக் காண்பது போல் உங்களுடைய இறைவனையும் காண்பீர்கள்.
எனவே, சூரியன் உதிக்கும் முன்னரும் சூரியன் மறையும் முன்னரும் தொழும் விஷயத்தில் (தூக்கம் போன்றவற்றால்) நீங்கள் மிகைக்கப்படாதிருக்க இயலுமானால் அதைச் செய்யுங்கள்' என்று கூறிவிட்டு,
'சூரியன் உதயமாகும் முன்னரும், மறையும் முன்னரும் உங்களுடைய இறைவனைப் புகழ்ந்து துதியுங்கள்' எனும் (திருக்குர்ஆன் 50:39 வது) வசனத்தை ஓதினார்கள்.
ஸஹீஹ் புகாரி

உடனே அல்லாஹு தஆலா அவர்களைப் பார்த்து ,
" நான் யார்? "
" நீதான் எங்கள் ரப்பு "

அவனின் அந்த ஒற்றை தரிசனத்தில் முந்நூறு வருஷம் வரையும் , அதே ஆனந்தத்தில் திளைத்து இருப்பார்கள் .

அப்போது அவர்களுக்கு சுவர்க்கம் கூட பெரியதாக தெரியாது .
பிறகு முன் நீக்கப்பட்ட திரையை மறுபடியும் திரையிடப்படும்.
அதன் பிறகு அவர்கள் எல்லோரும் அந்த ஹலீலத்துல் குதுஸியில் இருந்து சுவர்க்கத்திற்கு போகும்படி உத்தரவு வாகும்.

அவனைத் திரும்ப திரும்ப பார்க்க ஆசைப்படும் ஆத்மாக்கள் ஒவ்வொன்றும் சுவர்க்கம் செல்லாமல், அவன் உதயமான இடத்தையே உற்று நோக்கித் தேடும். தேடிக் கொண்டே அங்கேயே நிற்கும் .

" ஒவ்வொரு வெள்ளிக் கிழமையிலும் என் தரிசனம் உங்களுக்கு கிடைக்கும் "
என்ற உறுதி மொழி அல்லாஹு தஆலாவிடமிருந்து வெளியானதும் ,
ஹலீலத்துல் குதுஸியில் இருந்து அவரவர் சுவர்க்கத்திற்கு வந்து அவரவர் தானத்தில் தரிபட்டு சதாகாலமும் சுகித்திருப்பார்கள் .

இவ்வித இன்பச் சுகமான பரமானந்தத்தில் எல்லோரும் முழ்கி காலாகாலமும் வாழ்ந்திருப்பார்கள் .
ர.ரா

இத்துடன் " இஸ்லாமிய அடிப்படைக்
கோட்பாடுகள் " - என்ற தொடர் பதிவுகள் நிறைவு பெறுகிறது .
ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம்
ஸல்லல்லாஹு அலா முஹம்மது
யா ரப்பி ஸல்லி அலைஹி வஸ்ஸல்லம் .

இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்
ஜூன் 28-ல் "மரணத்திற்குப் பின் ஆன்மாக்களின் நிலை " என்று முதல் கட்டுரை ஆரம்பித்து , லிகா என்னும் இறை தரிசனத்தோடு 108 கட்டுரை தொடர் பதிவுகளாக சுமார் இரண்டு மாதங்களாக ஆகஸ்ட் 30 வரை எழுதியுள்ளேன்.



இப்பெரிய ஆய்வுக்கு நிறைய புத்தகங்களையும், கிதாபுகளையும் ஆய்வுக்குப் பயன்படுத்தி உள்னேன்.

1) FM இப்ராஹீம் ரப்பானி அவர்களால் வெளியிடப்பட்ட சுமார் 70க்கும் மேற்பட்ட அஹ்லெ சுன்னத் மாத இதழ்கள்.

2) அஷ்ஷைகு நாஸிரித்தின் அல்பானீ எழுதிய " இறப்பும் இறுதிச் சடங்கும் "

3) ஹாஜி.ஏ.எம் .அப்துல் சுக்கூர் எழுதிய "மௌத்தை மறவாதீர்கள் "

4) M.S.M அப்துல்லாஹ் (ரஹ்) எழுதிய "ஏகத்துவம் பற்றி அல்குர்ஆன் "

5) அல்லாமா கரீம்கனி (ரஹ்) படைப்புகள்

6) ஷாஹ் ஆமிரி சிஷ்த்தி காதிரி அவர்களால் எழுதப்பட்டு எஸ்பி ஃபசுலுத்தீன் அவர்களால் மொழி மாற்றம் செய்யப்பட்ட "இஸ்லாமிய ஆன்மீகக் கருவூலம் "

7) ஷெய்குனா உமர் வலிய்யுல் காஹிரி (ரலி) அவர்களால் எழுதப்பட்டு முஹம்மது ஜவாஹிர் ஹுஸைன் மன்பஈ அவர்களால் மொழி பெயர்த்த "அகமியம் பொங்கும் அல்லஃபல் அலிஃப்"

8) முஹம்மது பாக்கர் சாஹிப் ஆலிம் காதிரி எழுதிய " ஹிதாயதுல் அனாம் இலாஜியாரதில் அவுலியா இல் கிராம் "

9) முஹ்யித்தீன் இப்னு அறபி(ரஹ்) அவர்களால் "அஸ்ராருல் கல்வத் " என்கிற நூலை எழுதப்பட்டு, ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹழ்ரத் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்ட "கல்வத்தின் இரகசியங்கள்.

10) ஸெய்யிது அப்துல் வஹ்ஹாபு ஆலிம் ஸாஹிபு அவர்கள் எழுதப்பட்ட
" தரீக்குல் ஜன்னா "

11) சுஜாதா அவர்கள் எழுதிய
"கற்றதும் பெற்றதும் "

12, சுஜாதா அவர்கள் எழுதிய
"கி.பி 2000 க்கும் அப்பால் "

13) மற்றும் இணைய தளங்கள்

ர.ரா

NOTES:

DATE THIS BOOK WAS MADE 07-06-2021